வரு.74 இல. 25 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA


தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

2022 ஜுன் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
June 19 Sunday, 2022
24 பக்கங்கள் 80/-






24 சிறந்த வீரராக மெத்தியூஸ்



02 தனது மகனையே ஆற்றில் வீசி எறிந்த கொடூரத் தாய்!



07 வரிசைக்கு முடிவு எப்போது



03 20 தவறானது என்பது நிரூபணம்!

**உணவு பாதுகாப்புக்கு சரியான திட்டம்**

# நாட்டில் எவருமே பசியால் வாடக்கூடாது



**அதுவே எனது நிலைப்பாடு என்கிறார் பிரதமர்**

உணவு பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கான பொருத்தமான வேலைத்திட்டம் ஒன்றை தயாரித்து, எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கியுள்ளார். பிரதமர் அலுவலகத்தில் (17) நடைபெற்ற உணவு பாதுகாப்பு தொடர்பான குழுவின் கூட்டத்திலே 04

# சிறுவர் முதல் பெரியோரையும் தாக்கும் இன்ஃப்ளுவென்சா

**பரவல் அதிகரிப்பதால் அவதானமாக இருக்க கோரிக்கை**




புதிய இன்ஃப்ளுவென்ஸா வைரஸ் பெரியவர்கள் மற்றும் சிறுவர் மத்தியில் பரவல் அதிகரித்து வருவதாக சிறுவர் நோயியல் விசேட வைத்தியர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

நோயெதிர்ப்பு குறைபாடுள்ள சிறுவர்கள், 60 வயதுக்கு மேற்பட்ட பெரியவர்கள், நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் இன்ஃப்ளுவென்ஸா வைரஸால் பாதிக்கப்படலாமென்று அவர் கூறினார். காய்ச்சல், தலைவலி, 04

# பாடசாலைகளின் செயற்பாடுகள் இரு வாரத்துக்கு online மூலம்

**ஆகஸ்ட், டிசம்பரில் விடுமுறை இல்லை**




பாடசாலைகள் கற்றல், கற்பித்தல் மற்றும் அரச அலுவலக பணிகளை 02 வாரங்களுக்கு online மூலம் மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இந் நடவடிக்கை நாளை திங்கட்கிழமை முதல் அமுலாகவுள்ளதாகவும், இதற்கான சுற்றறிக்கை இன்று அல்லது நாளை வெளிவரவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே நேரம் பாடசாலைகளுக்கு அதிக விடுமுறை வழங்கப்பட்டு வருவதால் எதிர்வரும் ஆகஸ்ட், டிசம்பர் மாதங்களில் பாடசாலைகளுக்கு விடுமுறை 04

**அமைச்சர் டக்ளஸ் சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கு அனுமதி;**

# ஜூலை 01 முதல் பலாலி விமான நிலையம் மீண்டும் திறக்கப்படும்

**நேற்று யாழ்.சென்ற அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அறிவிப்பு**

- யாழ்.சென்ற அமைச்சர் நிமாலுக்கு அமைச்சர் டக்ளஸ், அங்கஜன் MP அமோக வரவேற்பு
- புலம் பெயர் தமிழர் தமது தாயகத்துக்கு நேரடியாக தரையிறங்கலாம் எனவும் அமைச்சர் தெரிவிப்பு

*யாழ். விசேட, பருத்தித்துறை விசேட நிருபர்கள்*

யாழ்ப்பாணம், பலாலி சர்வதேச விமான நிலையம் எதிர்வரும் ஜூலை 01 ஆம் திகதி தொடக்கம் தனது சேவையை ஆரம்பிக்குமென அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று பலாலியில் அறிவித்ததார். பலாலி விமான நிலையத்துக்கு சர்வதேச விமானங்களை வரவேற்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படுவதோடு, இந்தியா 04





# கொழும்பு நகர் பாடசாலைகள் நாளை முதல் ஒரு வாரத்துக்கு பூட்டு

**அடுத்த வாரத்திற்கான தீர்மானம் 25 ஆம் திகதி**

*லோரன்ஸ் செல்வநாயகம்*



நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடி நிலையை கருத்திற் கொண்டு நாளை திங்கட்கிழமை முதல் எதிர்வரும் ஒருவார காலத்திற்கு கொழும்பு நகரிலுள்ள அனைத்துப் பாடசாலைகளையும் மூடுவதற்கு தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எதிர்நோக்கும் போக்குவரத்து தொடர்பான அசௌகரியங்களை கவனத்திற் கொண்டே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக கல்வியமைச்சின் செயலாளர் 04

# கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் அதானி குழுமத்துக்கா?

**பொய்யான செய்தி என அமைச்சர் மறுப்பு**

*லொரன்ஸ் செல்வநாயகம்*



கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தை அதானி குழுமத்திற்கு வழங்கப்படுவதாக வெளியிடப்படும் கருத்துக்களில் எவ்வித உண்மைத் தன்மையுமில்லையென, துறைமுக, கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். அமைச்சில் 04



நாடளாவிய ரீதியில் இன்று முதல் எரிவாயு விநியோகிக்க முடிவு 04



GAS பிரச்சினைக்கு தீர்வு காண ஒன்றரை மாதமாவது செல்லும் 04

# களனி ஆற்றில் வீசப்பட்ட 05 வயது சிறுவனின் சடலம் கரையொதுங்கியது

**வென்னப்புவ – வைக்கால் கடற்கரையில் கண்டுபிடிப்பு**

*புத்தளம் விசேட நிருபர்*



சிலாபம் – வென்னப்புவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வைக்கால் கடற்கரையில் கரையொதுங்கியிருந்த சிறுவனின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது.


இச் சடலம், வத்தளை – கதிரான பாலத்திலிருந்து பெண் ஒருவரால் களனி ஆற்றில் 04

**புத்தளத்திலிருந்து மரவள்ளி ஏற்றிவந்த**

# ஆட்டோவுடன் பஸ் மோதி கோர விபத்து

**தந்தையும் மகனும் பலி; நீர்கொழும்பில் சம்பவம்**

*கற்பிட்டி தினகரன் விஷேட, புத்தளம் தினகரன் நிருபர்கள்*



புத்தளம் கொழும்பு பிரதான வீதியின் நீர்கொழும்பு பெரியமுல்ல பகுதியில் (17) நள்ளிரவு இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 04

**எங்கள் கருத்து...**

# யதார்த்தத்தை உணர்ந்து நெருக்கடியை எதிர்கொள்வோம்

ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் கண்டி இராச்சியத்தை 1815ம் ஆண்டு ஆங்கிலேய அரசு கைப்பற்றி முழு இலங்கையையும் பிரிட்டிஷ் முடிக்குரிய கொலினியாக இலங்கையை மாற்றிய பின்னர் இந்நாடு இவ்வளவு பெரிய பொருளாதார நெருக்கடிக்கு ஒரு போதும் ஆளானதில்லை. பிரெஞ்சு பேரரசுடன் போர், உலகளாவிய பொருளாதார வீழ்ச்சி, கோப்பிச் செய்கை சடுதியாக வீழ்ச்சியடைந்தமை, முதலாம் உலகப் போர், இரண்டாம் உலகப்போர் எனப் பல பொருளாதார நெருக்கடிகளை பிரிட்டிஷ் கொலனி ஆட்சி சந்தித்த போதும் இலங்கை மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்படாமல் ஆங்கிலேய அரசு பார்த்துக் கொண்டது.

ஆனால் நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் எழுபது ஆண்டுகளாக சுதேசிகள் இந்நாட்டை ஆண்டதன் பலன்களை நாம் இன்று வீதிகளில் காண்கிறோம். மக்கள் கொதித்துப் போய் நிர்வாகத்தை, தலைவர்களை, அரசியல்வாதிகளைத் திட்டித் தீர்க்கிறார்கள். மக்களின் ஆத்திரத்தை காலிமுகத்திடலில் நாம் பார்க்கிறோம். நாட்டின் பிரதமரே அடுத்துவரும் வாரங்கள் கடினமாக இருக்கும் என்றும் இலட்சக்கணக்கான குடிமக்கள் கடுமையாக பாதிக்கப்படவுள்ளார்கள் என்றும் கூறியுள்ளார். அரசு ஊழியர்கள் வீடுகளில் இருந்து பணியாற்றும்படி கூறியுள்ள அரசு இரண்டு வாரங்களுக்கு பாடசாலைகளையும் மூடியுள்ளது. மொத்ததில் இலங்கை குடிமக்கள் ஒட்டுமொத்தமாக வீதிக்கு வந்து விட்டார்கள்.

இன்று இதுதான் களயதார்த்தம். எனவே திட்டித் தீர்ப்பதா அல்லது யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டு 04

# 'மன்னார் - புத்தளம் பாதையை திறக்க நடவடிக்கை எடுங்கள்'

**பிரதமரிடம் ரிஷாட் எம்.பி வேண்டுகோள்**



மன்னார், புத்தளம் (எலுவன்குளம் ஊடான) பாதையை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் பதியுதீன் எம்.பி., பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான, உணவுப் பாதுகாப்பு 04

# கொழும்புக்கு சமைத்த உணவு மலையக மக்களுக்கு காணி

**பிரதமரிடம் மனோ MP கோரிக்கை**



கொழும்பு வாழ் மக்களுக்கு, ஒருவேளை சமைத்த உணவையும், பெருந்தோட்ட மக்களுக்கு காணிகளையும் வழங்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். உணவு நெருக்கடி தொடர்பில், பிரதமர் (17) நடத்திய 04

**யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள்;**

# கொடுப்பனவு இன்றி பணியாற்ற தீர்மானம்

**பொருளாதார நெருக்கடி தீர்வுக்கு முன்னுதாரணமாம்**


*யாழ்.விசேட நிருபர்*



யாழ் மாநகரசபை உறுப்பினர்கள் எவ்வித கொடுப்பனவும் இல்லாமல் பணியாற்றுவது தொடர்பில் எடுத்துக்காட்டும் விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. யாழ் மாநகர சபையின் 04

# டீசல் பெற வரிசையில் நின்ற பஸ் திருட்டு

**15 வயது மாணவர் இருவர் கைது**



ஹோமாகம, கலவிலவத்தை பிரதேச எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ்சொன்றை இரு மாணவர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 15 வயது இரு பாடசாலை மாணவர்களை சந்தேகத்தின் பேரில் ஹோமாகம பொலிஸார் கைது செய்துள்ளனர். 04

# ரயில் மேடைக்கிடையில் வீழ்ந்த இளைஞன் பலி

**ஒரு மணி நேரத்தின் பின் சடலம் மீட்பு**



மாத்தறை ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் (17) இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மாத்தறை ரயில் நிலையத்திலிருந்து பெலியத்த நோக்கி பயணித்த சாகரிகா ரயிலில் இந்த இளைஞன் ஏற முற்பட்டபோது ரயிலுக்கும் நடை மேடைக்குமிடையில் வீழ்ந்துள்ளார். 04

**சவூதியில் உயிரிழந்த நபர்;**

# மூன்று மாதங்களின் பின் நாட்டுக்கு வந்த சடலம்



சவூதி அரேபியாவில் பணிபுரிந்த போது மரணித்த ஒருவரின் சடலம் மூன்று மாதங்களின் பின்னர் நாட்டுக்கு வந்தடைந்துள்ளது.

மட்டக்களப்பு வாகரை பகுதியை சேர்ந்த ஒருவரின் சடலமே இவ்வாறு அனுப்பப்பட்டு உறவினர்களால் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

வாகரை பாடசாலை வீதியின் அருகில் வசிக்கும் வேதாரணியம் சுதாகாரன் (வயது 38) என்பவரின் சடலமே வாகரை மயானத்தில் கடந்த 16ஆம் திகதி 04

# IMF பிரதிநிதிகள் குழு நாளை இலங்கை வருகிறது

**நிதியமைச்சு அதிகாரிகளை சந்தித்துரையாடுவர்**




சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று நாளை (20) திங்கட்கிழமை இலங்கை வரவுள்ளதாக நிதியமைச்சு அறிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறப்படவுள்ள கடன் தொடர்பான கலந்துரையாடல்களை முன்னெடுத்துச் செல்லும் நோக்கிலேயே இக் குழு 04

# பெற்ற மனம் கல்லு பிள்ளை மனம் பித்து

# தனது மகனையே ஆற்றில் வீசி எறிந்த கொடூரத் தாய்!



## வளர்ப்பதற்கு சிரமமாக இருப்பதால் பிள்ளையுடன் தாயும் தற்கொலைக்கு முயற்சி!



வத்தளை பொலிஸ் பிரிவானது அதிக மக்கள் சனத்தொகையைக் கொண்ட பிரதேசமாகும். கடந்த செவ்வாய்க்கிழமை பொசோன் பௌர்ணமி தினத்தில் வத்தளை எலகந்த சந்தியில் தனியார் வங்கிக்கு முன்னால் மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்துள்ள இனந் தெரியாத துப்பாக்கிதாரிகள் இருவரால் 23 வயது இளைஞனை இலக்கு வைத்து துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

போதைப் பொருள் விற்பனையாளர்களுக்கு இடையில் இடம்பெறும் மோதல்களால் இந்தக் கொலை வத்தளை பிரதேசத்தில் இடம்பெற்று இரண்டு தினங்கள் கடந்த நிலையில் வத்தளை பொலிஸ் பிரிவில் மற்றொரு சோகச் சம்பவம் கடந்த வியாழனன்று இடம்பெற்றது.

சமூகம் எந்தளவுக்கு கொடூரமாகியிருக்கின்றது என்பதை இந்த சோகமான செய்தி பிரதிபலிக்கின்றது. 42 வயது நிரம்பிய தாய் தனது வயிற்றில் பிறந்த ஐந்து வயது நிரம்பிய சின்னஞ் சிறு மகனை களனி கங்கையில் வீசி எறிந்த துயரச் செய்திதான் அது. அந்தப் பெண் 15ம் திகதி இரவு வத்தளை ஹெந்தளை பிரதேசத்தையும், கொழும்பு மட்டக்குளி பிரதேசத்தையும் இணைக்கும் கதிரானை பாலத்திற்கு அருகில் தனது சிறிய மகனுடன் வந்தார். அப்போது நேரம் இரவு 7.20. அவளது மகனுக்கு வயது ஐந்து. ஊன்று கோலுடன் காணப்பட்ட அந்தப் பெண் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு திடீரென மனிதாபிமானமற்றவளைப் போன்று தனது பிள்ளையைத் தூக்கி களனி ஆற்றினுள் வீசியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து அப்பெண்ணும் களனி கங்கையினுள் பாய்வதற்கு முயற்சித்த போதும் அது சாத்தியமற்றுப் போனது. அவ்வீதியில் பயணித்துக் கொண்டிருந்த பிரதேசவாசிகளின் முயற்சியால் அந்தப் பெண்ணின் தற்கொலை முயற்சி தோல்வியடைந்தது. தனது பிள்ளையையும் ஆற்றில் வீசிவிட்டு, தானும் ஆற்றில் பாய்வதற்கு முயன்ற அப்பெண்ணைப் பிடித்துக் கொண்ட பிரதேசவாசிகள், அப்பெண்ணை ஹெந்தளை பிரதேசத்தில் அமைந்துள்ள கடற்படை மற்றும் பொலிஸ் சோதனைச் சாவடியில் ஒப்படைத்துள்ளதோடு, அப்பெண் மேற்கொண்ட குற்றச் செயல் பற்றியும் பிரதேசவாசிகள் பாதுகாப்புத் தரப்பினரிடம் விபரித்துள்ளனர். சோதனைச் சாவடியில் ஒப்படைக்கப்பட்ட பெண், தனது மகனை ஆற்றில் தான் வீசியெறிந்ததை ஏற்றுக் கொண்டுள்ளார். இதற்கிடையில் ஒரு பெண் தனது குழந்தையை ஆற்றில் விசி எறிந்து விட்டாள் என்ற செய்தி கேட்டு ஆத்திரமடைந்த மட்டக்குளி பிரதேச மக்கள் அங்கு வந்து பொலிஸ் சோதனைச் சாவடியினுள் வைத்தே அப்பெண்ணைத் தாக்குவதற்கு முயன்றுள்ளனர்.

ஆனால் அதனைத் தடுத்துக் கொண்ட பொலிஸார் அப்பெண்ணை வத்தளை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டனர். அதேநேரம் சிறிய மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்தி களனி ஆற்றினுள் வீசப்பட்ட சிறுவனைத் தேடும் பணியில் பொலிஸ் உயிர்காப்பு குழு, கடற்படை நீச்சல் குழுவுடன் இணைந்து பிரதேச மக்களும் ஈடுபட்டனர். எனினும் கடந்த வெள்ளிக்கிழமை வரையிலும் சிறுவனின் சடலத்தைக் கண்டு பிடிக்க முடியாமல் போயுள்ளது. களனி கங்கையின் இரு மருங்கிலும் விரிவான தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு சிறுவனைத் தேடும் பணிகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தக் குற்றச் செயலை மேற்கொண்டவர் திம்பிரிகஸ்யாய பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடைய பிரவிநாதன் ஞானகலா என்ற பெண்ணாகும். களனி ஆற்றில் நீருடன் கலந்து மறைந்து போனவர் ஐந்து வயதுடைய தஸ்மிக பிரபாஸ்வரனாகும். ஞானகலா இரண்டு தடவை திருமணம் முடித்தவர். அவரது முதல் கணவர் அவரை விட்டுப் பிரிந்து சென்றுள்ளார். அதன் பின்னர் அவர் இரண்டாவதாகத் திருமணம் செய்து கொண்டவரும் கடந்த வருடம் வாகன விபத்தொன்றில் உயிரிழந்துள்ளார். இப்பெண்ணின் இரு பிள்ளைகளுள் மூத்த மகன் அவளது முதலாவது திருமணத்தின் மூலம் பிறந்தவராகும்.

பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட ஞானகலா, வத்தளை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டு வத்தளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் சிலோகமகே தலைமையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இவ்வாறு தெரிவித்தார்.

"சேர்..... எனது கணவர் சில காலங்களுக்கு முன்னர் மரணித்து விட்டார்.... எனக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளனர்... என்னால் இந்த இரு பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்குவதற்கு வழிகள் இல்லை... மூத்த மகன் உறவினர் வீட்டில் இருக்கிறார்... சிறிய மகனுக்கு கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக சரியான சாப்பாடு கிடைக்கவில்லை...உணவு கொடுக்க என்னிடம் வசதியில்லை. இதனால்தான் நான் பிள்ளையை ஆற்றில் வீசிவிட்டு நானும் ஆற்றில் குதித்து தற்கொலை செய்து கொள்வதற்கு முயற்சித்தேன்... எனினும் அங்கு வந்த மக்கள் என்னை ஆற்றில் குதிக்க விடாமல் தடுத்து விட்டார்கள்... எனது மகன் போன இடத்திற்கே நானும் போக விரும்புகிறேன்...."

அந்தப் பெண் கூறும் விடயங்கள் துயர் மிக்கவை. எனினும் அநியாயமாக சின்னஞ் சிறு பிள்ளையின் வாழ்க்கையை அழிப்பதற்கு அவருக்கு உரிமை இல்லை. எந்தளவுக்கு தடைகள், பிரச்சினைகள் இருந்தாலும் வாழ்க்கையினை வெற்றி கொள்ள பாடுபட்டு முகங்கொடுக்க வேண்டியது ஒவ்வொரு மனிதனதும் பொறுப்பாகும். அவ்வாறில்லாமல் இதயமில்லாதவர்களைப் போன்று வாழ்க்கையை விட்டு தப்பிச் செல்வது முட்டாள்தமான செயலாகும். அப்பாவியான சின்னஞ் சிறுவனில் வாழ்வை அவ்வாறு பறிப்பதற்கு அச்சிறுவன் செய்த குற்றம்தான் என்ன?

இந்தக் குற்றச் செயலைச் செய்த பெண் ஒற்றைத் தலைவலி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அடிக்கடி அதிக கோபத்திற்கு உள்ளாவதாகவும் இந்தக் குற்றச் செயல் இடம்பெற்றதைத் தொடர்ந்து வத்தளை பொலிஸ் நிலையத்திற்கு வந்த அந்தப் பெண்ணின் மூத்த மகனும், சகோதரியும் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

அவள் அனேக சந்தர்ப்பங்களில் மூத்த பிள்ளையை விட இளைய மகன் மீதே அதிக பாசத்தைக் காட்டியுள்ளார். சில நாட்களாக அவள் வீட்டில் இருக்கும் போது மனவேதனையுடன் இருந்ததாகவும், அன்றிலிருந்து எவருடனும் பேசவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் கணவரின் மரணத்தின் பின்னர் இப்பெண் கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாகி அவதிப் பட்டுக் கொண்டிருந்ததாகவும் அவளது சகோதரி தெரிவித்துள்ளார். தனது சிறிய வயதில் தனது தாய் தனக்கு பெனடோல் மாத்திரைகளை தந்து கடலில் வீசுவதற்கு முயன்றதாகவும், அதன் பின்னர் தான் மாமியின் வீட்டில் வசிக்கச் சென்றதாகவும் அப்பெண்ணின் மூத்த மகன் மேலும் தெரிவித்தார்.

**அமில மலவிசூரிய**
தமிழில் எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)

# அகதிகளை பழைய படகுகளில் அழைத்துச் செல்லும் ஆட்கடத்தல்காரர்கள்



## அதிகாரிகள் கூறுவது என்ன?

இலங்கையின் கிழக்கு கடற்பரப்பில் கடற்படையினால் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கைகளின்போது, சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயற்சித்த 38 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்கள் ஜூன் 11 கைது செய்யப்பட்டதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

அம்பாறை பிரதேசத்தை அண்மித்த கடற்பரப்பில் சந்தேகத்திற்கிடமான படகொன்று பயணிப்பதை கடற்படையினர் அவதானித்துள்ளனர்.

இதையடுத்து, குறித்த படகு கடற்படை அதிகாரிகளினால் சுற்றி வளைக்கப்பட்டு, சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த படகில் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியா செல்ல முயற்சித்த 38 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படை தெரிவிக்கின்றது.

அத்துடன், ஆட்கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மேலும் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ள இந்த தருணத்தில், இலங்கையை விட்டு வெளியேறுவோரின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டில் கடந்த மே மாத இறுதி வரை 2,88,645 கடவுச்சீட்டுக்கள் (பாஸ்போர்ட்) விநியோகிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்கள தகவல்கள் தெரிவிக்கின்றன.

2021ம் ஆண்டு முழுவதும் 3,82,506 கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

எனினும், இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மாத்திரம் மூன்று லட்சத்தை அண்மித்த கடவுச்சீட்டுக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

அத்துடன், கடவுச்சீட்டுக்களை பெற்றுக்கொள்வதற்காக, குடிவரவு குடியகல்வு திணைக்கள வளாகத்தில் பெரும் எண்ணிக்கையிலானோர் தொடர்ந்தும் காத்திருப்பதை நாளாந்தம் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

இந்த ஆண்டில் மாத்திரம் சுமார் ஐந்து லட்சத்தை அண்மித்தோர் வெளிநாடுகளுக்கு செல்லக்கூடும் என அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்துள்ள நிலையில், வேலை வாய்ப்புகளை எதிர்பார்த்து வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை பல மடங்குகளாக அதிகரித்துள்ளன.

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் மாத்திரம் 1,20,000க்கும் அதிகமானோர் வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவிக்கின்றது. இந்த எண்ணிக்கையானது, கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 100 வீதம் அதிகரிப்பு என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. இலங்கையிலிருந்து தற்போது அதிகளவிலானோர் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செல்ல முயற்சித்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக, இந்த ஆண்டின் இதுவரையான காலம் வரை சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செல்ல முயற்சித்த சுமார் 300 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கேப்டன் இந்திக்க டி சில்வா தெரிவித்தார்.

ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்காக பாவனைக்கு உதவாத பழைய படகுகளே பயன்படுகின்றமை உறுதியாகியுள்ளதாக கடற்படை பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

"ஆட்கடத்தல்காரர்களே மக்களை தவறான வழிக்கு அழைத்துச் செல்வதாக உணர முடிகின்றது. மக்கள் கஷ்டத்தில் உள்ள இந்த சந்தர்ப்பத்தில், நல்லதொரு நாடு இருக்கின்றது என போலியாக அவர்களை தவறான வழிக்கு அழைத்துச் செல்ல முயற்சிக்கின்றனர். வெளிநாடுகளுக்கு பழைய படகுகளை பயன்படுத்தியே, இவர்கள் அழைத்துச் செல்லப்படுகின்றார்கள். அது மிகவும் அபாயகரமானது. அதுவே அச்சப்படக்கூடியதாக உள்ளது. பழைய படகுகளில் செல்லும் போது, கடல் சீற்றம் அடைந்தால், அனைத்தும் முடிந்து விடும். இந்த படகு வெளிநாட்டு கடல் எல்லைக்குள் சென்றதன் பின்னர், மீண்டும் ஆட்கடத்தல்காரர்களுக்கு கிடைப்பதில்லை. அதனால், பாவனைக்கு உதவாத பழைய படகுகளையே இதற்காக பயன்படுத்துகின்றனர்" என கடற்படை பேச்சாளர் தெரிவிக்கின்றார்.

சட்டவிரோதமான வெளிநாடுகளுக்கு செல்வோரை, அந்தந்த நாடுகள் உடனடியாக திருப்பி அனுப்பி வைக்கும் என கடற்படை ஊடகப் பேச்சாளர் கேப்டன் இந்திக்க டி சில்வா கூறுகின்றார்.

"இவ்வாறு வெளிநாடுகளுக்கு செல்வோரை, அந்த நாடு மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்பி விடும். இதனால், தேவையற்ற விதத்தில் பணத்தை வீண்விரயமாக்க வேண்டாம் என்றே கூற வேண்டியுள்ளது. இவ்வாறு செல்வோரை நாம் எப்படியாவது கைது செய்வோம். இல்லையென்றால், கடலில் செல்லும் போது, அவர்கள் உயிரிழக்கக் கூடும். அவர்களை பாதுகாக்க வேண்டும்" என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா சென்ற இரு குழுக்களை, அவுஸ்திரேலிய அரசாங்கம் அண்மையில் விமானம் மூலம் நாடு கடத்தியிருந்தது. 12 பேரை கொண்ட இலங்கையர்களை கடந்த மே மாதம் 24ம் திகதியும், 15 பேரை கொண்ட இலங்கையர்களை கடந்த 9ம் திகதியும் ஆஸ்திரேலிய அரசாங்கம் நாடு கடத்தியிருந்தது.

இதேவேளை, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு கடல் மார்க்கமாக சட்டவிரோதமான முறையில் செல்வதற்கு அதிகபட்சமாக சுமார் 10 லட்சம் இலங்கை ரூபாய், ஆட்கடத்தல்காரர்களினால் கோரப்பட்டு வருகின்றமை தொடர்பில் தகவல் கிடைக்கின்றது.

இவ்வாறு ஆட்கடத்தல்காரர்களுக்கு வழங்கப்படும் பணம் முழுமையாக வீண்விரயமாகும் எனவும், அந்த பணத்தை மீளப் பெற்றுக்கொள்ள முடியாது எனவும் அதிகாரிகள் குறிப்பிடுகின்றனர்.

இதனால், சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறு இலங்கை அதிகாரிகள், பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

**ஆ. கனகசூரியர்**

# கதிர்காம வரலாற்றில் முதல் தடவையாக சத்ரு சம்ஹார ஹோமம்

கதிர்காம வரலாற்றில் முதல் தடவையாக சத்ரு சம்ஹார ஹோமம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபக தலைவர் சிவசங்கர் ஜீ ஏற்பாட்டில் இந்த வரலாற்று ரீதியான ஹோமம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இலங்கை, இந்திய மண்ணிலிருந்து பிரபலமான வேதவிற்பன்னர்கள் நடாத்திய இவ் ஆறு மணி நேர வேள்வியில் கதிர்காமம் பஸ்நாயக்க நிலமே நிஷாந்த் குலசேகர கலந்து சிறப்பித்தார். திருமூலர் பெருமானின் குருவாணையின் கீழ், போகர் பெருமானின் அருளாசியோடு இது வரை கதிர்காம மண்ணிலே ஒரு வரலாறு காணாத நிகழ்வான முருக பெருமானின் அபூர்வ சக்திகளை பிரயோகிக்கும் அஸ்திர மந்திரங்களான முந்நூறு மந்திரங்களை கொண்டு பிரயோகிக்கும் "சத்ரு சம்ஹார ஹோமம்" கடந்த 13ம் திகதி திங்கட்கிழமை காலை கதிர்காம மண்ணில் தசநாயக்க நிலமே முன்னிலையில் உலக நன்மைக்காக நடைபெற்றது. சித்தர்களின் குரல் சமஸ்தான பிரதம சிவாசாரியர் மஹாதேவ ஸ்ரீ வத்சாங்க குருக்கள் தலைமையேற்று இந்த வேள்வியை நிகழ்த்தினார்.

(காரைதீவு குறூப் நிருபர் )









# 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் தவறு நடந்துள்ளமை ஆதாரத்துடன் நிரூபணம்!






## அமைச்சர் மனுஷ நாணயக்காரவுடன் சந்திப்பு

**'நாட்டின் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம். அரசியல் ஸ்திரத்தன்மையைக் கொண்டுவர 21ஆவது திருத்தம் நிறைவேற்றப் படுவது பிரதானம்' என்று தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவல்கள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் அவர் எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்துகொண்டார்.**

**கே: அரசியலமைப்புத் திருத்தங்களில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்கு முன்னுரிமை அளிக்குமாறு பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. நீங்கள் இது குறித்து கருத்துத் தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

*பதில்:* பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் இந்தக் கருத்தைக் கொண்டுள்ளார்கள் என நான் கருதவில்லை. அவர்களில் சிலருக்கு வெவ்வேறு கருத்துகள் இருக்கலாம். எவ்வாறாயினும், 21 ஆவது திருத்தத்தை கூடிய விரைவில் கொண்டு வருவதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார். அதனால்தான் நாங்களும் அரசுடன் கைகோர்த்தோம். இல்லையெனில், ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் இருந்தால், அவர் மட்டுமே இந்தப் பணியை நிறைவேற்ற முடியும். பாராளுமன்றத்திற்கு சில அதிகாரங்களை வழங்க வேண்டிய அவசியம் உள்ளது.

இது அரசியல் நெருக்கடியுடன் தொடர்புடையது என்பதால் இது வெறும் பொருளாதார நெருக்கடி அல்ல. நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டுமானால், இந்த அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணப்பட வேண்டும். அரசியல் ஸ்திரத்தன்மை இருந்தால் மட்டுமே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும். எனவே, 21ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்துடன் அதிகார சமநிலைக்கு செல்வது முக்கியம்.

**கே: 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் பாராளுமன்ற அதிகாரங்கள் பலவீனமடைந்துள்ளதனால் பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் முடக்கப்பட்டுள்ளதாகவும், நிறைவேற்று அதிகாரங்களுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

*பதில்:* 20 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 20ஆவது திருத்தச் சட்டத்தினால் பாராளுமன்றம் பலமற்ற நிலைக்குச் சென்றுவிட்டது என்ற எண்ணம் அனைவரிடமும் உள்ளது. அண்மைக் காலங்களில் பாராளுமன்றத்தில் பேசப்படும் எதுவும் பொருத்தமற்றதாக மாறி, ஜனாதிபதி ஒருதலைப்பட்சமான முடிவுகளை எடுக்கவே அது வழிவகுத்தது. அதன் விளைவாக கடந்த இரண்டு வருடங்களில் நடந்த சம்பவங்கள் பற்றி நாம் அறிவோம். 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் தவறு நடந்துள்ளது என்பது ஆதாரத்துடன் நிரூபிக்கப்பட்டுள்ளது.

அந்தத் தவறை சரி செய்ய வேண்டும். மறுபுறம், நாடு பொருளாதார ரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் தோல்வியடைந்துள்ளது. சட்டம் ஒழுங்கு நிலைமை மற்றும் நீதித்துறை எதிர்கொள்ளும் சில விஷயங்கள் தொடர்பான நிகழ்வுகள் இருந்தன. இது நீதித்துறையின் சுதந்திரத்தை இழக்கச் செய்துள்ளது. எனவே, நீதித்துறையின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவது இன்றியமையாதது.

**“அரசியல் ஸ்திரத்தன்மை இருந்தால் மட்டுமே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண முடியும்.எப்பொழுது எங்களின் கடன் தவணையை திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு நாடு மாறியதோ, அதன் பிறகு எந்தக் கடனையும் புதிதாகப் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. நமது வருமானத்தை விட செலவு அதிகமாகும் போது, டொலர் நெருக்கடியை நாம் எதிர்கொண்டோம்**

**கே: நாடு எதிர்நோக்கும் தற்போதைய நெருக்கடி நிலையை சமாளிக்கும் வகையில் 21ஆவது திருத்தச் சட்டம் இத்தருணத்தில் கொண்டு வரப்பட வேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?**

*பதில்:* 21 ஆவது திருத்தம் கண்டிப்பாக கொண்டு வரப்பட வேண்டும். இந்த செயல்முறையை யாரேனும் சீர்குலைக்க முயற்சித்தால், நாட்டில் எரியும் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் அவர்களுக்கு உண்மையான விருப்பம் இல்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்துவிடும்.

தற்போது, மக்களின் பட்டினி தொடர்பாக ஒரு பெரிய பிரச்சினை உள்ளது. மக்களால் பல்வேறு கோரிக்கைகளும் முன்வைக்கப்படுகின்றன. அந்த கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க வேண்டிய முக்கிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

**கே: 21 ஆவது திருத்தச் சட்டத்தை தோற்கடிக்க சதி இருப்பதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். இதனை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

*பதில்:* 21 ஆவது திருத்தச் சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதை சிலர் தோற்கடிக்க விரும்பலாம். தற்போது ஏழத்தாழ 65 எம்.பி.க்கள் எதிர்க்கட்சியாக தங்களை ஒருங்கிணைத்துள்ளனர். மேலும், 42 எம்.பி.க்கள் சுயேச்சையாக மாறியுள்ளனர். பாராளுமன்ற அதிகாரங்கள் மீண்டும் ஒருமுறை பலப்படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் அனைவரும் உள்ளனர். அதாவது எதிர்க்கட்சியில் உள்ள 107 எம்.பிக்கள் இந்த நடவடிக்கைக்கு ஆதரவு அளித்துள்ளனர்.

அரசாங்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவில் பாதிப் பேர் 21ஆவது திருத்தத்தை ஆதரித்தாலும் இந்தப் பிரச்சினை சீர் செய்யப்படும். அரசாங்கப் பாராளுமன்றக் குழுவில் பிளவு ஏற்படாது என்றும் அவர்கள் அனைவரும் பொதுவான ஒருமித்த கருத்தை எட்டுவார்கள் என்றும் நான் நினைக்கவில்லை. 21ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கட்சித் தலைவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டு இந்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது. அடுத்த வாரம் அந்தக் காட்சிகளை இறுதி செய்ய முடியும்.

**“20 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும். 20 ஆவது திருத்தச் சட்டத்தினால் பாராளுமன்றம் பலமற்ற நிலைக்குச் சென்று விட்டது என்ற எண்ணம் அனைவரிடமும் உள்ளது. பாராளுமன்றத்திற்கு சில அதிகாரங்களை வழங்க வேண்டியது அவசியம்”**

**கே: எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக கடந்த சில மாதங்களாக மக்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். அரசுக்கு எதிராக மக்கள் தங்கள் போராட்டங்களைத் தொடங்குவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமாக அமைந்தது. இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை வழங்க அரசாங்கம் தவறியது ஏன்?**

*பதில்:* டொலர் நெருக்கடிக்கான காரணத்தை நாம் அனைவரும் அறிவோம். கடந்த சில வருடங்களில் சில சம்பவங்கள் நிகழ்ந்தன மற்றும் சில நீண்டகால பிரச்சினைகள் இந்த நிலைமைக்கு வழிவகுத்தன. எப்பொழுது எங்களின் கடன் தவணையை திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு நாடு மாறியதோ, அதற்கு மேல் எந்தக் கடனையும் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நமது வருமானத்தை விட செலவு அதிகமாகும் போது, டொலர் நெருக்கடியை நாம் எதிர்கொண்டோம்என்பதுஇரகசியமல்ல.எரிபொருள் மற்றும் எரிவாயுவை இறக்குமதி செய்ய டொலர்களைக் கண்டுபிடிப்பது ஒரு பிரச்சினையாகி விட்டது. இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு கடன் பெறுதல், வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களிடமிருந்து பணம் பெறுதல், முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் உற்பத்தி மூலம் எமது ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பது போன்ற பல்வேறு தீர்வுகள் இருக்கலாம். தற்போது நமது ஏற்றுமதி வருமானமும் குறைந்துள்ளது.

வெளிநாட்டுப் பணம் பெறுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. சில அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் அமைப்புக்கள் இலங்கை புலம்பெயர்ந்தோர் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களை முறையான வழிகளில் பணம் அனுப்ப வேண்டாம் என்று கேட்டுக் கொண்டனர். சில அரசியல்வாதிகள் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை பணம் அனுப்பக் கூடாது என்று தூண்டினால், இங்குள்ள மக்கள் கடும் துன்பங்களுக்கு ஆளாக நேரிடும். (15ஆம் பக்கம் பார்க்க)




# நிவாரணம் பெறும் முறைமைக்கு அப்பால் சமூகத்தை கொண்டு செல்வது அவசியம்!

தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டு வந்த பொதுமக்கள் பாரிய மாற்றம் ஒன்றை எதிர்பார்த்தார்கள். மாற்றங்களின் மூலம் தங்களது பிள்ளைகளுக்கு நிம்மதியான நாடொன்று உருவாகும் என அவர்கள் நினைத்தார்கள்.

தற்போதுள்ள கட்டமைப்பு அந்த இலக்கை மிகவும் சிக்கலான இடத்துக்கு கொண்டு சென்றுள்ளது. தாமதிக்காமல் எடுக்கப்படும் முடிவுகளால் இலங்கையின் நிலைமையை உயர்ந்த மட்டத்திற்கு மாற்ற முடியும்.

இலங்கையின் தேசிய வருமானம் குறைந்துள்ளது, செலவு அதிகரித்துள்ளது. அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்துக்காக வருடம் ஒன்றுக்கு ஒரு ட்ரில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணம் தேவையாகும். அது இந்நாட்டின் தேசிய வருமானத்தில் நூற்றுக்கு 80 வீத அளவாகும். வருமானத்தில் நூற்றுக்கு 70 வீதத்துக்கும் அதிகமான தொகையை நாம் பெற்றுக் கொண்ட உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டியை செலுத்த செலவிடுகின்றோம். கடன் மற்றும் சம்பளத்தை கூட செலுத்த முடியாத வருமானம் இல்லாத நாட்டின் நிலைமை மகிழ்ச்சிகரமானதா?

நாட்டில் உயர்ந்த பணவீக்க வீதம் காணப்படுகின்றது. அந்நிய செலாவணி தட்டுப்பாடு நிலவுகின்றது. அத்தியாவசிய பொருட்களை விலைக்கு வாங்குவதற்கு கூட வருமானம் இல்லை என்பது இரகசியமான விடயமல்ல. சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி,போக்குவரத்து உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை எவ்வாறு மேற்கொள்வது?

விவசாயிகள் துயரத்தில் உள்ளார்கள். உற்பத்தி குறைவடைந்து, பொருட்களுக்குத் தட்டுப்பாடு காணப்படுவது பொருளாதாரத்தின் வீழ்ச்சியின் அளவை காட்டுகின்றது. கேள்வியை நிறைவேற்றுமளவுக்கு வளங்கள் இல்லாததோடு அது பொருட்களின் விலையேற்றத்துக்குக் காரணமாக அமைந்துள்ளது.

அந்நிய செலாவணியை பெறுவதற்கான துறைகள் பலவீனம் அடைந்துள்ளன. இலங்கைக்கு அந்நிய செலாவணி மூன்று முக்கிய வழிகளில் கிடைத்து வந்தது. அவை வெளிநாட்டு வேலைவாய்ப்பு, சுற்றுலாத் துறை, தைத்த ஆடை ஏற்றுமதி என்பவற்றினாலாகும். இத்துறைகளில் கிடைத்த செலாவணி குறைந்துள்ளது. உல்லாசப் பயணிகள் வருகை குறைந்துள்ளது. தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் சிறு ஏற்றுமதிப் பயிர்கள் உள்ளிட்ட பிரிவுகளால் கிடைத்த வெளிநாட்டு வருமானமும் வீழ்ச்சியடைந்துள்ளது.

பங்குச்சந்தை மற்றும் நேரடி வெளிநாட்டு முதலீடுகளை எதிர்பார்க்கும் நிலைமையில் நாடு இல்லை. தகவல் தொழில்நுட்ப பிரிவின் வளர்ச்சியின் மூலம் நன்மைகளைப் பெற முடியும். ஆனால் புதிய பிரவேசத்துக்கு முதலீடுகள் தேவை. புதிய முதலீடுகளை தடை செய்பவர்கள் அந்நிய செலாவணி பிரச்சினையைப் பற்றி கருத்தில் கொள்ளாதது ஏன்?

அழகான வார்த்தைகளால் எழுதப்பட்ட கொள்கைப் பிரகடனத்தை அனைத்து அரசாங்கங்களுமே மக்களிடம் முன்வைத்துள்ளன. சரியான சட்ட திட்டமொன்று இருந்திருந்தால் இன்று இலங்கை சொர்க்கபுரியாகியிருக்கும். மனித வளம் மிகவும் பெறுமதி வாய்ந்த முதலீடு என்பதை சுட்டிக்காட்ட வேண்டும். அன்று தொடக்கம் இன்றுவரை பின்பற்றிய தோல்வியடைந்த முறைகளால் இறுதியில் என்ன நடந்துள்ளது? நாடு திறமையானவர்களை இழந்துள்ளது. வெளிநாட்டு வேலைக்காக செல்பவர்கள் வேறு நாடுகளைச் சேர்ந்தவர்களை பணக்காரர்களாக்குகிறார்கள். அங்கு சம்பளத்தை வாங்கி திரும்பவும் நாட்டிற்கு வருகிறார்கள். பெரும்பாலான இளைஞர்களின் எண்ணம் வேறு நாடுகளுக்கு தப்பிச் சென்று வாழ்வதாகும்.

திறமையானவர்களை இழந்த சமூகத்தால் சிறந்த பலனை எதிர்பார்ப்பது நகைச்சுவையாகும். இலங்கைக்கும் பயணம் ஒன்றுண்டு. முதலாவதாக அடிப்படை கட்டமைப்பொன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும். மறுசீரமைப்பு அவசியம். நிபுணர்களின் ஒத்துழைப்பு அவசியமான காரணியாகும். தமிழ்நாட்டில் ஆட்சியை கைப்பற்றிய முதலமைச்சர் எம். கே .ஸ்டாலின் நோபல் பரிசு பெற்ற சர்வதேச பொருளாதார நிபுணர்கள் உள்ளிட்ட 5 பேரைக் கொண்ட ஆலோசனை சபை ஒன்றை நியமித்துள்ளார். தமிழ்நாடு அரசியல் பற்றி எமக்கு கருத்தொன்றுண்டு. ஆனால் பொருளாதார முறையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இந்தியாவின் அபிவிருத்தியில் தமிழ்நாடு பிராந்தியம் பாரிய சக்தியாகும்.

இலங்கை வறிய நாடல்ல. உணவுத் தட்டுப்பாட்டால் மக்கள் மரணமடைய மாட்டார்கள். படிப்படியாக முன்னேறி வந்துள்ள மக்கள் சமூகத்தை நிவாரணம் பெறும் முறைக்கு அப்பால் கொண்டு செல்ல வேண்டியது தலைவர்களின் பொறுப்பாகும். மக்கள் சிறந்த வாழ்க்கையை விரும்புகிறார்கள். பிள்ளைகளுக்கு உயர்கல்வி, சிறந்த போக்குவரத்து சேவை மற்றும் சிறந்த சுகாதார வசதிகள் தேவையாக உள்ளன. இந்தக் கட்டமைப்பை மாற்ற வேண்டும். அரசாங்கம் மாத்திரமல்ல, எதிர்க்கட்சி அரசியல் கட்சிகள் கூட தங்களது கொள்கையை மாற்றத்திற்கு உட்படுத்த வேண்டும்.

சமூக பொருளாதாரக் கட்டமைப்பில் பாரிய மாற்றங்கள் அவசியமாகும். பொருளாதாரத்தை இலகுவான மற்றும் செயல்திறன் மிக்கதாக மாற்ற வேண்டியது அவசியமாகும். வெளிநாட்டு, உள்நாட்டு முதலீடுகளை அதிகரிக்கும் பின்னணியை ஏற்படுத்த வேண்டும். அதன் மூலம் தொழில் முனைவு அதிகரிக்கப்படும். அதனால் உற்பத்தி அதிகரிக்கும் . உயர்தரத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்ள முடியும். போட்டித்தன்மையை ஏற்படுத்த வேண்டியதோடு உலகமயமாக்கலின் சவால்களுக்கு முகம் கொடுக்க சமூகத்தை வழி நடத்த வேண்டிய பொறுப்புள்ளது. சரியான கொள்கைகளை வகுத்து சட்டம் மற்றும் விதிமுறைகளை செயல்படுத்தும் போது பொருளாதாரத்தின் மீள்புரட்சியுடன் மக்கள் இணைவார்கள் என்ற நம்பிக்கை ஏற்படும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்** ...

# நெருக்கடிக்குள் கடுமையாக போராடும் இலங்கையின் பொருளாதாரம்

## இவ்வருடம் 7.8 வீதத்தால் வீழ்ச்சியடையும்

மின்சாரம், உணவு, எரிபொருள் தட்டுப்பாடுகளுடன் கடுமையாக போராடிக்கொண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரம் , இவ்வருடம் 7.8 வீதத்தினால் வீழ்ச்சியடையுமென உலக வங்கி தெரிவித்துள்ளது.

பொருளாதாரத்தை மோசமாக கையாண்டதன் காரணமாக இலங்கையின் வரலாற்றில் என்றும் இல்லாதவாறு அந்நியசெலாவணி முற்றாக முடிவடைந்துள்ளதால் உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக 2024ஆம் ஆண்டளவிலேயே இலங்கையின் பொருளாதார வளர்ச்சி சாதகமான நிலையை நோக்கி முன்னேறுமென உலக வங்கி தெரிவித்துள்ளது.

2023இல் இலங்கையின் பொருளாதாரம் 3.7வீதத்தினால் வீழ்ச்சியடையுமென உலக வங்கி தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுக் கடன்கொடுப்பனவு நிறுத்தப்பட்டமை உட்பட பல காரணங்களால் இலங்கையின் வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியடைந்துள்ளன. இலங்கையின் வளர்ச்சிக்கான சாத்தியக்கூறுகள் அதிகளவு நிச்சயமற்றவையாகவும், குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஆபத்தை கொண்டவையாகவும் காணப்படுகின்றதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை கடும் பொருளாதார



நெருக்கடிகளையும் அதிகரித்துவரும் அரசியல் நிலையற்ற தன்மையையும் எதிர்கொண்டுள்ளது, மின்துண்டிப்பு தொடர்கின்றது உணவு போன்ற அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

கடன் மறுசீரமைப்பு முயற்சிகள் மற்றும் நுண் பொருளாதார ஸ்திரதன்மையை மீளமைத்தல் ஆகிய நடவடிக்கைகளை அதிகாரிகள் தாமதப்படுத்தினால் பொருளாதார வீழ்ச்சி மேலும் மோசமடையலாமெனவும் உலக வங்கி எச்சரித்துள்ளது.

கடன்மறுசீரமைப்பு என்பது நிதி, புனர்வாழ்வு நடவடிக்கைகளை மீள ஆரம்பிப்பதற்கு மிகவும் அவசியமானதெனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது. நாளாந்தம் உணவுப்பொருட்களின் விலைகள் மிகவும் உயர்வது குறித்தும் அதன் காரணமாக வறியவர்கள் பாதிக்கப்படுவது குறித்தும் உலக வங்கி கவலை வெளியிட்டுள்ளது.

### மூன்று மாதங்களின் பின்...

அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இவர் சவூதி அரோபியாவில் பணிபுரிந்து வந்த சமயம் உடல் உபாதைக்குள்ளாகியுள்ளார். இவ்வருடம் மார்ச் மாதம் 26ஆம் திகதி மரணமடைந்திருந்தாரென உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

திருமணமாகாத இவர் கடந்த பத்தாண்டுகளாக சவூதி அரேபியாவிலேயே தொழில் வாய்ப்பை பெற்று பணியாற்றி வந்தவர் என்றும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

### ரயில் மேடைக்கிடையில்...

அதில் சிக்கிய இளைஞனை வெளியே எடுப்பதற்கு சுமார் ஒரு மணி நேரம் போராட வேண்டியிருந்தது. இருப்பினும் இளைஞனை உயிருடன் மீட்க முடியவில்லை. உயிரிழந்தவர் திக்வெல்ல வெவுருகன்னல பகுதியைச் சேர்ந்த ருசர விதானகே (23) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

### பாடசாலைகளின்...

வழங்காமல் அந்த காலப்பகுதியில் கற்பித்தலை மேற்கொள்ள கல்வியமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. '

### கொழும்பு நகர் பாடசாலைகள்....

எம். என். ரணசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, போக்குவரத்து சிக்கல்கள் காணப்படாத நாட்டின் ஏனைய பிரதேச பாடசாலைகளை கல்வி நடவடிக்கைக்காக திறப்பது தொடர்பில் அந்தந்த பாடசாலைகளில் அதிபர்கள் உரிய தீர்மானத்தை மேற்கொள்ள முடியும் என்றும் கல்வியமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை நகர்ப்புறங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்காக நாளை முதல் ஒரு வார காலத்திற்கு ஒன்லைன் மூலம் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஒன் லைன் மூலமான கற்பித்தல் நடைபெறும் பகல் வேளைகளில் மின் துண்டிப்பை மேற்கொள்ள வேண்டாமென பொது பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் எதிர்வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை கல்வி அமைச்சின் அதிகாரிகள் கூடி மீளாய்வு ஒன்றை மேற்கொண்டதன் பின்னர் உரிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(ஸ)

### கொடுப்பனவு...

கடந்த அமர்விலேயே இந்த விசேட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

நாட்டில் காணப்படும் தற்போதைய பொருளாதார நெருக்கடியில் உள்ளூராட்சி சபையின் உறுப்பினர்களுக்கு கொடுப்பனவு வழங்காததால் சபை கலைக்கப்படுகின்ற சூழல் ஏற்படுமானால் யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் எவ்வித கொடுப்பனவுமில்லாமல் பணியாற்றுவது என எடுத்துக்காட்டும் வகையில் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது.யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணனால் கொண்டுவரப்பட்ட இந்த பிரேரணைக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களான தர்சானந்த் மற்றும் நித்தியானந்தன் ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்த போதும் ஏனைய உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### IMF பிரதிநிதிகள் குழு...

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. அவர்கள் ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சின் அதிகாரிகள் மற்றும் மத்திய வங்கி அதிகாரிகளை சந்திக்கவுள்ளதாக நிதி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

### சிறுவர் முதல்...

சளி, மூக்கில் நீர்வடிதல், இருமல் மற்றும் பசியின்மை, சில சமயங்களில் வாந்தி போன்றவை இதன் அறிகுறிகளாகும்.

### கொழும்பு துறைமுகத்தின்....

நேற்றுமுன்தினம் (17) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்துள்ள அவர், கிழக்கு முனையத்தை, துறைமுக அதிகார சபையின் செலவில், அதற்கு உரித்தான முனையமாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கு அவசியமான பளுதூக்கி நிலைத்தாங்கிகளுக்காக, 278 மில்லியன் டொலர் செலவாகும்.

அதில் தற்போது 18 மில்லியன் டொலர் துறைமுக அதிகார சபையினால் உரிய விலைமனுக் கோரலுக்கு அமைய நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற பளுதூக்கி நிலைத்தாங்கிகளை நிறுவுவதற்காக ஒன்றரை ஆண்டுகாலம் எடுக்கும்.

அதேநேரம், முதற்கட்ட கொடுப்பனவாக 39 மில்லியன் டொலர் அளவில் அந்த நிறுவனத்துக்கு வழங்க வேண்டியுள்ளது. எனினும், தற்போதைய டொலர் நெருக்கடியால் அந்தக் கொடுப்பனவை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

எனினும், அதானி குழுமத்துக்கு கிழக்கு முனையத்தை வழங்குவதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கையல்ல என்று துறைமுக, கப்பல் துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

## இ.தொ.கா மாநில பிரதிநிதி தியாகராஜா காலமானார்

இலங்கை தொழிலார் காங்கிரஸின் களுத்துறை மாவட்ட, மாநில பிரதிநிதியாக சுமார் 40 வருடங்களாக கடமையாற்றி வந்த தொழிற் சங்கவாதி தியாகராஜா காலமானார்.



இவர் முன்னாள் ஆங்கில ஆசிரியருமாவார்.

அன்னார், ரவிநாத், திலிபன் ஆகியோரின் அன்பு தந்தையுமாவார். இறுதி கிரியைகள் நளை 20ஆம் திகதி மாலை நான்கு மணிக்கு புளத்சிங்கள தெஹிகாவில தகனசாலையில் தகனம் செய்யப்படவுள்ளது.

## நாடளாவிய ரீதியில் இன்று முதல் எரிவாயு விநியோகிக்க முடிவு

நாடு முழுவதும் இன்று முதல் மீண்டும் சமையல் எரிவாயுவை விநியோகிப்பதற்கு எதிர்ப்பார்த்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.



கெரவலப்பிட்டி தல்தியவத்தை கடற்பகுதியில் கடந்த 07 நாட்களாக நங்கூரமிட்டிருந்த எரிவாயு கப்பலுக்கான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதையடுத்தே லிட்ரோ நிறுவனம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

அத்துடன் 3.9 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டுள்ளதுடன் சுமார் 20 மில்லியன் ரூபா தாமத கட்டணமாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

## GAS பிரச்சினைக்கு தீர்வு காண ஒன்றரை மாதமாவது செல்லும்

நாட்டில் நிலவும் சமையில் எரிவாயு பிரச்சினைக்கு தற்காலிக தீர்வு காண இன்னும் ஒன்றரை மாதங்களாகுமென லிட்ரோ நிறுவனத்தின் புதிய தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.



சமையல் எரிவாயுவை இறக்குமதி செய்வதற்கு உரிய நடைமுறைகளுக்கு அமைய டொலர்களை விடுவிப்பது அவசியமெனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

### நாட்டில் எவருமே...

பிரதமர் இதனைக் கூறியுள்ளார்.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சியை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.

பிரதேச செயலாளர்களூடாக குழுக்களை அமைத்து, உணவு பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறு பிரதமர் இதன்போது ஆலோசனை வழங்கியுள்ளார்.

சுரேன் பட்டகொடவின் தலைமையிலான குழுவினூடாக உணவு பாதுகாப்பு தொடர்பில் தேவையான வேலைத்திட்டம் தயாரிக்கப்படுவதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

உணவு நெருக்கடியினால் எவரும் பசியோடு வாடக்கூடாது என்பதே தமது கொள்கையென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உணவு நெருக்கடி எதிர்காலத்தில் 04 மில்லியன் முதல் 05 மில்லியன் இலங்கையரை நேரடியாக பாதிக்கக்கூடியதாக இருந்தாலும், அதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

மீனவர் சமூகத்துக்கு உணவு, எரிவாயு மற்றும் எரிபொருள் வழங்குவதற்கு முன்னுரிமை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பிரதமர் பணிப்புரை விடுத்துள்ளார்.

### கொழும்புக்கு சமைத்த...

கூட்டத்தில், இந்தக் கோரிக்கையை விடுத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு வாழ் மக்களுக்கான சமைத்த உணவை கொழும்பு துறைமுகம் மற்றும் கொழும்பு மாநகர சமையல் அறைகள் ஊடாக இராணுவத்தினரால் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதற்கும் யோசனை முன்வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், பெருந்தோட்டங்களிலுள்ள வெற்றுக் காணிகளை பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்காக மலையக மக்களுக்கு வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

### களனி ஆற்றில்...

வீசப்பட்டதாகக் கூறப்படும் 05 வயது சிறுவனுயடையதுதான் என பொலிஸார் தெரிவித்தனர்.

வென்னப்புவவில் கரையொதுங்கிய சிறுவனின் புகைப்படத்தை சிறுவனது பாட்டியிடம் காண்பித்த பொலிஸார் அந்தச் சிறுவன்தான் என உறுதிப்படுத்திக் கொண்டனர். இதனையடுத்து சிறுவனின் பாட்டியையும் அழைத்துக் கொண்டு பொலிஸார் நேற்று சிறுவனின் சடலம் வைக்கப்பட்டுள்ள மாரவில ஆஸ்பத்திரிக்குச் சென்றுள்ளனர். கடந்த 15ஆம் திகதி வத்தளை – ஹெந்தல – கதிரான பாலத்துக்கு அருகில் களனி ஆற்றில் தனது ஐந்து வயது மகனை வீசிவிட்டு,தனது உயிரையும் மாய்த்துக்கொள்ள முற்பட்ட தாய் பிரதேசவாசிகளால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இதனையடுத்து, அவர் வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, ஆற்றில் வீசப்பட்ட சிறுவனை கண்டுபிடிக்க பொலிஸார், கடற்படை சுழியோடிகள் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர் எனினும் சடலத்தை அன்று கண்டுபிடிக்க முடியாமல் போனது.

### டீசல் பெற வரிசையில்...

சந்தேக நபர்கள் மத்தேகொட பிரதேசத்தில் வசிக்கும் பாடசாலை மாணவர்களென பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ் ஹோமாகமவில் ஓரிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த போது, பஸ்ஸின் சாரதி வயது குறைந்தவரென்பதை அங்கிருந்த ஒருவர் அவதானித்து அவரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளதா? எனக் கேட்டுள்ளார்.

அப்போது அவரிடம் சாரதி அனுமதிப்பத்திரம் இல்லையென்பது தெரிய வந்ததையடுத்து பஸ்ஸின் உரிமையாளருக்கு வேறொருவர் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, பஸ்ஸின் உரிமையாளர் பொலிஸாருடன் சம்பவ இடத்துக்குச் சென்று பஸ்ஸை கைப்பற்றியதுடன் சந்தேக நபர்களையும் அழைத்துச் சென்றனர்.

### 'மன்னார் புத்தளம்...

தொடர்பான கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கட்சித் தலைவர்களுக்கு விடுக்கப்பட்டிருந்த அழைப்பையடுத்து, (17) பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போதே அவர் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான பொருளாதார ரீதியான தொடர்புகளை ஏற்படுத்தும் நோக்கிலும் இப்பாதை ஊடாக அத்தியாவசிய தேவைகளை மக்கள் மேற்கொள்ள வேண்டியிருப்பதனாலும் மக்களின் பாவனைக்கேற்றவாறு இப்பாதையை புனரமைத்து மீள திறந்துவிடுமாறு பிரதமரிடம், ரிஷாட் எம்.பி கேட்டுக் கொண்டார். இந்தக் கூட்டத்தில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள், அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

### ஜூலை 01 முதல்...

உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த விமானங்கள் வருகை தருமென தான் எதிர்பார்ப்பதாகவும் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

குறிப்பாக புலம்பெயர் தமிழர்கள் தமது தாயகத்துக்கு நேரடியாக விமானத்திலேயே வருகை தர முடியுமெனவும் அமைச்சர் தெரிவித்தார். பலாலி விமான நிலையம் இனிமேல் பிராந்திய விமான நிலையமல்ல. இது ஒரு சர்வதேச விமான நிலையம். உலகத்தில் எந்தப் பகுதியிலிருந்தும் விமானங்கள் வரலாம்.அவர்கள் விரும்பின் வாடகைக்கமர்த்தப்பட்ட விமானங்களிலும் வரலாம். சவூதி அரேபியா, இந்தியா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகளிலிருந்தும் தங்களது தாயகத்துக்கு புலம்பெயர் தமிழர் வரலாம். இது அவர்கன் பிறந்த மண். அவர்கள் இங்கு வந்து முதலீகளையும் செய்யலாம்.

என்னிடம் அடிக்கடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அங்கஜன் இராமநாதனும் விமான நிலையத்தின் திறப்பு தொடர்பில் அடிக்கடி கேட்டுக் கொண்டே இருப்பார்கள். நான் இங்கு வந்து நேரடியாக கள நிலவரங்களை ஆராய்ந்த பின்னரே அதனை தீர்மானிக்க முடியும் இன்பதாலேயே இன்று வந்திருக்கிறேன்.

ஒரு சர்வதேச விமான நிலையத்துக்குண்டான அனைத்து அடிப்படை வசதிகளும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் 100 வீதம் இல்லாவிட்டாலும் திருப்திகரமாக இருக்கிறது.

இனவே ஜூலை 01 ஆம் திகதி வரை விமான நிலையத்தின் செயற்பாடுகளை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கிறேன் என்றார்.

யாழ்.பலாலி விமான நிலைய செயற்பாடுகள் 01 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகும் சந்தர்ப்பத்தில் வடக்கில் பல துறைகளில் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்படுமென்றும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்..

எனவே அடுத்த கட்ட நடவடிக்கைகள் முன்னெடுப்பது தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஆராயுமாறும் அமைச்சர் நிமால் கேட்டுக் கொண்டார் .

சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ஜீ.ஏ. சந்திரசிறி, யாழ்ப்பாணம் இந்திய துணை உயர்ஸ்தானிகர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், அமைச்சின் செயலாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவை டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் பொன்னாடை போர்த்தி வரவேற்றார். அமைச்சருடன் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் கொழும்பிலிருந்து வருகை தந்திருந்தார்.

யாழ்ப்பாணம் விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகம் ஆகியவற்றின் நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதை பிரதான நோக்கமாக கொண்டு அமைச்சரது விஜயம் அமைந்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்நிலையில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கஜன் இராமநாதன் உள்ளிட்ட குழுவினர் பலாலி விமான நிலையத்துக்கான கள விஜயத்தை மேற்கொண்டனர்.

பலாலி விமான நிலையத்தின் செயற்பாடுகள் குறித்து ஆராய்ந்த பின்னர் காங்கேசன்துறைக்கான கள விஜயத்திலும் கலந்து கொண்டார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அண்மையில் அமைச்சரவையில் பெறப்பட்ட அங்கீகாரத்துக்கமைவாக காங்கேசன்துறைக்கும் பாண்டிச்சேரிக்குமான கப்பல் சேவை ஆரம்பிப்பது குறித்தும் அமைச்சர் நிமால் ஆராய்ந்தார்.

இதனூடாக விரைவில் இந்தியாவுக்கான கப்பல் சேவை ஆரம்பிக்கப்படுமென்றும் அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டார்.

### ஆட்டோவுடன் பஸ்...

இருவர் உயிரிழந்துள்ளனர்.

புத்தளம் நூர்நகர் பகுதியைச் சேர்ந்த 57 வயதான முஹம்மது சமூன் மற்றும் அவரது 12 வயதான மகன் முஹம்மது ஹமாஸ் ஆகிய இருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

புத்தளத்திலிருந்து கொழும்பை நோக்கிச் சென்ற முச்சக்கர வண்டி ஒன்றும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் பயணிகள் பஸ்சொன்றும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது முச்சக்கர வண்டியை செலுத்திச் சென்ற தந்தையும், பின்னால் அமர்ந்திருந்த 12 வயதுடைய மகனும் படுகாயமடைந்து நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும், முச்சக்கர வண்டியை செலுத்திச் சென்ற நபர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், முச்சக்கர வண்டியின் பின்னால் இருந்த 12 வயதான சிறுவன் ஆபத்தான நிலையில் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதிலும், நேற்று (18) காலை அந்த சிறுவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

உயிரிழந்த தந்தை மற்றும் மகன் ஆகியோரது சடலங்கள் பிரேத பரிசோதனைக்காக நீர்கொழும்பு வைத்தியசாலையின் பிரேத அறையில் மைவக்கப்பட்டுள்ளதுடன், பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் பொலிஸார் கூறினர்.

இந்த விபத்தில் முச்சக்கர வண்டியின் முன் பக்கம் முழுமையாக சேதமடைந்துள்ளது. விபத்துடன் தொடர்புரைடய தனியார் பஸ்ஸின் சாரதி , விபத்தை ஏற்படுத்திவிட்டு அவ்விடத்தில் இருந்து தப்பிச் சென்று பொலிஸில் சரணடைந்துள்ளார். அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸார் மேலதிக விசாரணைகைள மேற்கொண்டு வருகின்றனர்.

விற்பனை செய்யும் நோக்கில் ஒருதொகை மரவள்ளிக் கிழங்குகளை ஏற்றிக்கொண்டு புத்தளத்திலிருந்து கொழும்புக்கு சென்ற போதே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மேற்படி இருவரும் இந்த பாரிய அனர்த்தத்திற்கு முகம் கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## எங்கள் கருத்து...

### யதார்த்தத்தை உணர்ந்து நெருக்கடியை எதிர்கொள்வோம்

சவால்களுக்கு முகம் கொடுப்பதா என்பதை மக்கள் தீர்மானித்தாக வேண்டும். பெரும்பாலானோர் இன்னும் கள யதார்த்தத்தை சரியாகப் புரிந்து கொண்ட மாதிரித் தெரியவில்லை. தமிழ் பேசும் சமூகம் இன்னும் திரைப்படம், தொலைக்காட்சி என்றும் இன்றைய வாழ்க்கையை இப்படியே தொடரலாம் என்றும் ஒரு கொண்டாட்ட மன நிலையில் நீடித்திருப்பதாகத் தெரிகிறது. பெரும்பான்மை இனத்தின் தவறுகளால் விளைந்த விளைவுகளை அனுபவிக்கிறார்கள் என்று வேடிக்கை பார்க்கும் நிலையையும் சில தருணங்களில் அவதானிக்க முடிகிறது.

ஆனால் கள யதார்த்தம் இதுவல்ல. ஒரு பேரலை எப்படி ஒரு இடத்தை ஒட்டுமொத்தமாக மூழ்கடிக்குமோ அவ்வாறே இந் நெருக்கடி நிலை அனைத்து மக்களையும் தாக்கப்போகிறது என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இது அரசியல் வாதிகளை தாக்கிப் பேசும் நேரம் அல்ல. இவற்றுக்கு நதி மூலம் ரிஷி மூலம் தேடுவதற்கான நேரமும் அல்ல. உண்மையைச் சொன்னால் இன்றைய நெருக்கடி நிலையை கையாள்வோருக்கு நாம் உதவுபவர்களாக இருப்பதே சரியான வழிமுறை. கொழும்பு மாநகரசபை மேயர் ரோசி சேனநாயக்க, கொழும்பில் கஞ்சித் தொட்டிகளைத் திறக்கவிருப்பதாகச் சொன்னபோது பலர் அதை புன்சிரிப்புடனே பார்த்தார்கள். அதன் உள் அர்த்தத்தை, சமையல் செய்ய முடியாத, வருமானம் தேட முடியாத சத்தான உணவுகளை உண்ண முடியாத ஒரு அபாயகரமான நிலையை பூரணமாக புரிந்து கொள்ள வேண்டும். தினசரி செய்திகளை வாசிப்போரும் கேட்போரும் அச் செய்திகள் சொல்லும் உண்மையான அர்த்தத்தை புரிந்து கொள்வது அவசியம்.

இந் நெருக்கடி நிலை தினம் தினம் உக்கிரம் பெற்று வருகிறது. முழு நாடும் முழுமையான ஒரு முடக்க நிலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது. பொருட்களை பெறுவதற்கான வரிசைகளில் பல மணித்தியாலங்களாக நிற்பவர்களில் இதுவரை 13பேர் மரணித்துள்ளனர். இந்த நிலை நம்மில் பலர் நினைப்பது போல அமெரிக்காவும், இந்தியாவும் ஜப்பானும் இலங்கைக்கு உதவ வந்ததும் மாறிவிடப் போவதில்லை.

எனவே, இது உள்ளவர்கள் இல்லாதோருடன் இருப்பதைப் பகிர வேண்டிய காலம். சிலர் பட்டினி கிடக்கும் போது அதைப் பார்த்தபடி நாம் நிறை உணவை உண்டு ஏப்பம் விடுவது தீய காரியம் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளவேண்டும். நெல்லும், அரிசியும், நிறைய பணமும் வைத்திருப்போர் அவற்றைப் பகிரவேண்டும். பகிரச் சொல்ல வேண்டும். பகிர்வை பகிரங்கப்படுத்தி ஏனையோரை ஊக்குவிக்க வேண்டும். பகிர்ந்து கொள்ளுங்கள் என்று போதனை செய்யாத மதமே கிடையாது. இது தான் இருப்பதை பகிர்ந்து கொள்ளுங்கள் என்ற போதனையை செயற்படுத்துவதற்கான காலம். எனவே பகிர்ந்து கொள்வோம். பகிர்வின் மூலம் நாம் இந்த நெருக்கடியை கடந்து செல்ல முடியும்.

# இலங்கை மத்திய வங்கி விடுக்கும் செய்தி

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA



## திறைசேரி உண்டியல்களில் மற்றும் முறிகளில்

### பாதுகாப்பான முதலீடுகளை வசதிப்படுத்துவதற்கு கிடைக்கப்பெறுகின்ற சேவைகள்

திறைசேரி உண்டியல்களிலும் முறிகளிலும் நீங்கள் மேற்கொள்கின்ற முதலீடு உங்களது உரிமம்பெற்ற வங்கி மூலமாகவோ அல்லது முதனிலை வணிகர் மூலமாகவோ இலங்கை மத்திய வங்கியால் பேணப்படும் மத்திய வைப்பக முறைமையில் உங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள பிணையங்கள் கணக்கில் உடனடியாகப் பதிவுசெய்யப்படுவதற்கு வேண்டப்பட்டுள்ளது.

உங்களது சொத்தாண்மைப் பதிவுகளின் செம்மையினை உறுதிசெய்வதற்கு இலங்கை மத்திய வங்கி பின்வரும் சேவைகளை இலவசமாக வழங்குகின்றது.

1. அதேநேர குறுந்தகவல் சேவை மற்றும் மின்னஞ்சல் அறிவித்தல்கள்

✓ செல்லுபடியான தொலைபேசி இலக்கத்தை/மின்னஞ்சல் முகவரியை உங்களது உரிமம்பெற்ற வங்கிக்கு அல்லது முதனிலை வணிகருக்கு வழங்கி பிணையங்களின் அசைவுகள் பற்றி உடனடியான/அதேநேர விழிப்பூட்டல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

2. காலமுறையான கூற்றுக்கள்

✓ மத்திய வைப்பக முறைமையில் பதிவுசெய்யப்பட்டவாறு உங்களது முதலீடுகள் மீதான அச்சிடப்பட்ட கூற்றுக்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்

- "கொடுக்கல்வாங்கல் தொகுப்பு" : நாட்காட்டி மாதகாலத்தில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களின் அட்டவணை
- "உரித்துக்களின் கூற்று" : யூன் 30 மற்றும் திசெம்பர் 31 அன்றுள்ளவாறு பிணையங்கள் நிலுவை
- "கொடுப்பனவுக் கூற்று" : செலுத்தப்பட்ட வட்டி அத்துடன்/அல்லது முதிர்ச்சிக் கொடுப்பனவுகள்

✓ மாற்றுவழியாக, இ-கூற்று வசதியுடன் பதிவுசெய்வதன் மூலம் மின்னஞ்சல் வாயிலாக கூற்றுக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

1. லங்காசெக்குயர்நெட் வசதி

✓ லங்காசெக்குயர்நெட் வசதியுடன் பதிவுசெய்வதன் மூலம் உங்களது பிணையங்கள் கணக்கு விபரங்களை இணையவழியில் பார்வையிடலாம்.

விண்ணப்பங்களுக்கு பிரவேசியுங்கள்
www.cbsl.gov.lk/government-securities/lankasecure-services

நீங்களாகவே பதிவுசெய்து தகவல்களை அறிந்திருங்கள்!

மேலதிக விபரங்களுக்கு உங்களது உரிமம்பெற்ற வங்கியை/முதனிலை வணிகரை அல்லது இலங்கை மத்திய வங்கியைத் தொடர்புகொள்ளவும்
11 2477278/ 011 2398867/ 011 2398740






# ஆர்வமுள்ளவர்களிடம் கோரும் ஏல முன்மொழிவு

**தகுதியுள்ள முதலீட்டாளர்கள் - பீப்பள்ஸ் டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிடெட்**

மக்கள் வங்கியின் முழு உரித்துடைய துணை நிறுவனமான பீப்பள்ஸ் டிரவல்ஸ் லிமிடெட்டினை கொள்வனவு செய்ய ஆர்வமுள்ளவர்களிடம் முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்துமாறு (EOI) மக்கள் வங்கி அழைப்பு விடுத்துள்ளது.

## பீப்பிள்ஸ் டிரவல்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

- மக்கள் வங்கியின் முழு உரித்துடைய துணை நிறுவனம்
- முன்னணி வெளிநாட்டு பயண முகவர் நிறுவனம்
- இந்திய மற்றும் ஐரோப்பிய சுற்றுப் பயணங்களுக்கான முக்கிய நிபுணத்துவம் பெற்ற ஒரு நிறுவனம்
- உள்நாட்டு பயணத் துறையில் 3 தசாப்த காலமாக வெற்றிகரமான செயற்பாடுகள்
- நாட்டின், இரண்டாவது பெரிய வங்கியின் ஆதரவு

ஏல முன்மொழிவுகள் 2022 ஜூலை 03க்குள் ஒரு சீல் செய்யப்பட்ட உறையில், முதலீட்டு வங்கி பிரிவு, மக்கள் வங்கியின் தலைமை அலுவலகம், 13வது மாடி, இல. 75, சேர் சித்தம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 எனும் முகவரியில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

மேலும் விபரங்களுக்கு, pbibu@peoplesbank.lk இல் தொடர்பு கொள்ளவும்

மக்கள் வங்கியில் வைப்பு செய்யும் வைப்புக்கள் அனைத்தும் இலங்கை வைப்பு காப்புறுதி திட்டத்தின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளது.

www.peoplesbank.lk 1961 PEOPLE'S BANK CALL CENTRE

PEOPLE'S BANK
Pride of the Nation


NLB
தேசிய லொத்தர் சபை

# தேசிய லொத்தர் சபையிடமிருந்து

## சுப்பர் பரிசு வெற்றியாளர்கள் பரிசுகளைப் பெற்றார்கள்!

லொத்தரின் முதன்மையான தேசிய லொத்தர் சபை வாடிக்கையாளர்களுக்கிடையில் அண்மையில் சுப்பர் பரிசினை வெற்றி பெற்றவர்களுக்கான காசோலைகளை 2022 ஜூன் 09 ஆம் திகதி வழங்கியது. இந்த வெற்றியாளர்களுக்கான பரிசுகள் தேசிய லொத்தர் சபையின் தலைவர் சட்டத்தரணி லலித் பியும் பெரேரா, மேலதிக பொது முகாமையாளர் சட்டத்தரணி சஞ்சீவ எதிரிசிங்க, பிரதம நிதியியல் அதிகாரி கலாநிதி ஹர்ஷ பண்டார உட்பட பிரதிப் பொது முகாமையாளர் மற்றும் உதவிப் பொது முகாமையாளர் ஆகியோரின் பங்கேற்றலுடன் வழங்கப்பட்டன. அன்றைய தினம் பின்வரும் வெற்றியாளர்கள் தங்களின் வெற்றிக்கான காசோலைகளை பெற்றுக்கொண்டதுடன், டிக்கட்டுகளை விற்பனை செய்த விற்பனை முகவர்களும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.



மெகா பவர் 1050 சீட்டிழுப்பு வாரத்தின் சுப்பர் பரிசை வெற்றிபெற்ற இராகமையைச் சேர்ந்த திருமதி.ஏ.எல்.எஸ்.டி. அமரசிங்க அவர்கள் மற்றும் அரங்கல விற்பனை முகவர் திரு.பி. சஜித் வாசனா அவர்கள்.



கொவிசெத 2986 சீட்டிழுப்பு வாரத்தின் சுப்பர் பரிசை வெற்றிபெற்ற வெல்லவயைச் சேர்ந்த திரு.எஸ்.எம்.பீ இரத்நாயக்க அவர்கள் மற்றும் வெல்லவ விற்பனை முகவர் திரு.ஷாந்தப்ரிய ரணசிங்ஹ அவர்கள்.




மஹஜன சம்பத 4710 சீட்டிழுப்பு வாரத்தின் சுப்பர் பரிசை வெற்றிபெற்ற மதுரங்குளியைச் சேர்ந்த திருமதி.ஏ.எச்.உம்மு சகிலா அவர்கள் மற்றும் மதுரங்குளி விற்பனை முகவர் திரு.ஏ.பீ.ஜயந்த சந்ரசேகர அவர்கள்.




மஹஜன சம்பத 4737 சீட்டிழுப்பு வாரத்தின் சுப்பர் பரிசை வெற்றிபெற்ற கிரிந்திவெலயைச் சேர்ந்த திரு.எம்.ஏ.எல்.ருக்மன் சிரிபால அவர்கள் மற்றும் கிரிந்திவெல விற்பனை முகவர் திரு.எல்.எச்.ஏ.சுமனசிரி அவர்கள்.



ராசி சுப பலன் 0070 சீட்டிழுப்பு வாரத்தின் சுப்பர் பரிசை வெற்றிபெற்ற மாலபேயைச் சேர்ந்த திரு.ரி.எஸ். இராஜபக்ஷ அவர்கள் மற்றும் மாலபே விற்பனை முகவர் திரு.கே.எல். நிஷாந்த அவர்கள்.



மெகாபவர் 1089 சீட்டிழுப்பு வாரத்தின் சுப்பர் பரிசை வெற்றிபெற்ற வெல்லம்பிட்டியைச் சேர்ந்த திரு.ஆர்.விக்ரமன் அவர்கள் மற்றும் கொச்சிகடை விற்பனை முகவர் திருமதி.தீபிக்கா தில்ருக்ஷி அவர்கள்.




மஹஜன சம்பத 4705 சீட்டிழுப்பு வாரத்தின் சுப்பர் பரிசை வெற்றிபெற்ற ஏராவூரைச் சேர்ந்த திருமதி.என்.எம்.சாரா உம்மா அவர்கள் மற்றும் வாழச்சேனை விற்பனை முகவர் திரு.ஜீ.உதயகுமார் அவர்கள்.



மெகா பவர் 1064 சீட்டிழுப்பு வாரத்தின் சுப்பர் பரிசை வெற்றிபெற்ற தெமட்டலுவையைச் சேர்ந்த திரு.டபிள்யூ.டி.என்.பீ.வீரசிங்ஹ அவர்கள் மற்றும் பெல்லந்தெனிய விற்பனை முகவர் திருமதி.ரி.டி.என்.தசநாயக்க அவர்கள்.

## வெற்றியாளர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகை

# ரூ.152,512,340.80

NLB
தேசிய லொத்தர் சபை

வாழ்வின் கனவுக்கு, அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

# உணவு நெருக்கடியை முறியடிக்கும் பசுமைப் புரட்சி நாட்டில் ஆரம்பம்!

**நாட்டில் தற்பொழுது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து உணவுப் பற்றாக்குறை ஏற்படக் கூடிய ஆபத்து குறித்து பரவான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியிருப்பதுடன், மக்கள் மத்தியிலும் உணவுப் பற்றாக்குறை தொடர்பான அச்சம் தொற்றிக் கொண்டுள்ளது.**

நீர்வளம், நிலவளம் நிறைந்த நாடாக இலங்கை காணப்பட்டாலும் உணவு உற்பத்தியில் தன்னிறைவு காணத் தவறியமையும், வெளிநாட்டு இறக்குமதியில் அதிகளவில் தங்கியிருந்தமையும் இந்த நிலைமைக்கான காரணங்களில் பிரதானமாக உள்ளது.

டொலர் பற்றாக்குறை காரணமாக போதியளவு அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைமை நாட்டுக்கு தற்போது ஏற்பட்டுள்ளது. இவ்வாறான பின்னணியிலேயே அனைத்து வீடுகளிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற வேலைத்திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இலங்கையைப் பொறுத்த வரையில் அடிப்படையில் இது ஒரு விவசாய நாடு. எமது நாட்டில் பண்டைய காலம் தொடக்கம் பல சகாப்தங்களாக விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் பிரதான பயிர்ச்செய்கையாக நெற்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

ஆரம்பம் தொட்டு சரியான முறையில் நாம் திட்டமிட்டு பயிர்ச்செய்கையை மேற்கொண்டிருந்தால் தற்பொழுது அரசியில் தன்னிறைவு கண்டிருக்க முடியும். குறிப்பாக 1970 களில் அப்போதைய சிறிமாவோ ஆட்சிக் காலத்தில் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

எனினும், அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் திறந்த பொருளாதாரக் கொள்கை காரணமாக விவசாய உற்பத்திகளில் காணப்பட்ட அக்கறை இறக்குமதிகளின் பக்கம் திரும்பியது. விவசாய உற்பத்திகளை மேற்கொள்வதை பார்க்கிலும் குறைந்த செலவில் இறக்குமதிகளை மேற்கொள்ள முடியும் என்பதால் உணவுப் பொருட்களின் இறக்குமதி அதிகரித்தது. இந்த நிலைமையே தற்பொழுதும் காணப்படுகிறது.

விவசாயம் மீது மக்களுக்கு இருந்த அக்கறை திசைதிருப்பப்பட்டது. விவசாயத்தை தரம் குறைந்த தொழிலாக பலரும் நினைக்கும் மனோபாவம் வளரத் தொடங்கியது. அதன் பலாபலன்களை நாடு தற்போது அனுபவிக்கும் நிலைமை உருவாகியுள்ளது.

நாடு திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றியிருந்தாலும் உரிய விவசாயக் கொள்கையை கடைப்பிடிக்கத் தவறிவிட்டது. அவ்வப்போது ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் விவசாயக் கொள்கையைக் கடைப்பிடித்திருந்தால் அரிசி மாத்திரமன்றி

## நீர் வளம், நிலவளம் மிகுந்த இலங்கையில், கடந்த கால அரசுகள் விவசாயப் பொருளாதாரத்தை அலட்சியப்படுத்தியதால் ஏற்பட்டுள்ள பாதக விளைவு!



பல்வேறு உணவுப் பொருட்களில் நாம் தன்னிறைவு அடைந்திருக்கலாம். அது மாத்திரமன்றி நகரமயமாக்கல் அதிகரித்திருப்பதால் பாரம்பரியமாக விவசாயம் மேற்கொண்டுவந்த பல குடும்பங்களின் இளையோர் நகர்ப்புறங்களை நோக்கி வேலைக்குச் சென்றமையால் போதிய ஆளணி இன்றி பல விளைநிலங்கள் கைவிடப்பட்டு தரிசு நிலங்களாகி விட்டன. இது தவிரவும் பல காணிகள் நிரப்பப்பட்டு கட்டடங்கள் அமைக்கப்பட்டன. இதனால் உணவு உற்பத்திக்கான காணிகள் இழக்கப்பட்டன.

அதேவேளை, அவ்வப்போது ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் அரசியல்வாதிகள் விவசாயத்தை ஊக்குவிக்கும் திட்டங்களுக்குப் பதிலாக அதிக தரகுப் பணத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இறக்குமதியை ஊக்குவிப்பதற்கே நடவடிக்கை எடுத்தனர். அவ்வப்போது கண்துடைப்புக்காக விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக இறக்குமதிக்கான வரிகளை அதிகரிக்கின்றோம் என அறிவிக்கப்பட்டாலும், நீண்டகாலத்தில் இதற்கான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இவ்வாறான பின்னணியில் தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது நடைமுறைப்படுத்திய சேதனப் பசளைகளை ஊக்குவிக்கும் கொள்கைத் திட்டம் சரியான பலனைத் தராமை விவசாயத் துறையில் பின்னடைவை ஏற்படுத்தியது.



### விவசாயத்தை ஊக்குவிப்பதில் அரசாங்கம் தீவிர கவனம்; அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் ஆராய்வு; அனைத்து அமைச்சுகளையும் ஒன்றிணைத்து உணவுப் பாதுகாப்புக்கான அமைச்சரவை உபகுழுவொன்றை அமைக்க வேண்டுமென அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) தீர்மானம்



இலங்கையில் அக்காலத்தில் நிலவிய தன்னிறைவுப் பொருளாதாரம்

பல தசாப்தங்களாக இரசாயனப் பசளைகள் பயன்படுத்தப்படுவதால் நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டது மாத்திரமன்றி, புற்றுநோய் போன்ற தொற்றா நோய்கள் மக்கள் மத்தியில் அதிகரித்தன.

அதேநேரம், இரசாயன உர இறக்குமதியில் பல்தேசிய நிறுவனங்கள் கொண்டுள்ள ஈடுபாடு காரணமாக இவற்றை ஊக்குவிக்கும் பிரசாரங்களை மேற்கொண்டன. இந்த நிலையில் திடீரென விதிக்கப்பட்ட இரசாயன உரத் தடையால் விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்பட்டனர். இதனால் அவர்களின் விளைச்சல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள உணவு நெருக்கடிக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

இரசாயன உரப் பாவனை கட்டுப்பாட்டை படிப்படியாக நீண்ட காலத் திட்டத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும் என்பதே பலரதும் கருத்தாக இருக்கின்றது. சரியான நடைமுறை ஆய்வுகள் இன்றி கொண்டு வரப்பட்ட இந்தக் கொள்கை பல சிக்கல்களை உருவாக்கியிருந்தது. தமது இந்த முடிவு தவறானது என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் ஏற்றுக் கொண்டிருந்தார். நிலைமையைச் சரிசெய்யும் நோக்கில் இரசாயன உர இறக்குமதிக்கான அனுமதி மீண்டும் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் எதிர்கால சந்ததியினரை கருத்தில் கொண்டு இரசாயன உரப் பயன்பாட்டைக் குறைத்து சேதனப் பசளைப் பயன்பாட்டை ஊக்குவிப்பது சிறந்த கொள்கையாக இருந்தாலும் நடைமுறையில் அதனை செயற்படுத்துவதில் தடைகள் காணப்பட்டன. இந்த நடைமுறையைப் படிப்படியாக செயற்படுத்தியிருந்தால் சிறந்த பலனைப் பெற்றிருக்க முடியும் என்பதுடன். குறுகிய காலத்தில் இதன் முழுமையான நன்மையைப் பெறுவது நடைமுறைச் சாத்தியமற்றதாகும்.

கொள்கை ரீதியில் எடுத்த தீர்மானத்தினால் ஏற்பட்ட விவசாய உற்பத்திப் பின்னடைவு ஒருபுறமிக்க, டொலர் பற்றாக்குறை மற்றும் பொருளாதார சிக்கல்கள் காரணமாக உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படுவதற்கான அபாயம் தோன்றியுள்ளது. இது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை தேவைக்கான அரிசி கையிருப்பில் உள்ளதாகவும், மக்கள் வீணாக அச்சம் கொள்ளத் தேவையில்லையெனவும் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்திருக்கிறார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

---

# இந்திய ஆதரவுகளை களங்கப்படுத்தும் தென்னிலங்கை அரசியல் சக்திகள்!

**இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து வைப்பதில் நரேந்திர மோடி தலைமையிலான இந்திய அரசாங்கம் பல்வேறு வழிகளிலும் தொடர்ந்தும் உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும், இந்தியாவின் நல்லெண்ணத்துக்கு விரோதமான கருத்துகளும் தென்னிலங்கை அரசியலில் ஆங்காங்கே வெளியிடப்பட்டு வருவதைக் காண முடிகின்றது.**



கச்சதீவைக் கைப்பற்றிக் கொள்வதற்கு இந்தியா முயற்சித்து வருவதாக சமீபத்தில் தென்னிலங்கை அரசியலில் உருவான கருத்து தற்போது ஓரளவு தணிந்து விட்டது. ஆனால் அதன் பிறகு மற்றொரு பரபரப்பு புதிதாக உருவெடுத்துள்ளது.

இலங்கையின் எரிசக்தி திட்டம் தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அழுத்தத்தின் பேரில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட்டதாக இலங்கை அதிகாரி ஒருவர் கூறியிருந்ததே அந்த சர்ச்சைக் கருத்தாகும். இக்கருத்து தொடர்பாக இந்தியாவின் அதானி குழுமம் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. இலங்கையின் எரிசக்தி திட்டம் தொடர்பான சர்ச்சை விடயத்தில் தாம் அதிருப்தி அடைந்துள்ளதாக அதானி குழுமம் வருத்தம் தெரிவித்திருந்தது.

இலங்கையில் முதலீடு செய்வதன் தமது நோக்கம், அண்டை நாடுகளின் தேவைகளை நிவர்த்தி செய்வதாகும் என்றும் தற்போது எழுப்பப்பட்டுள்ள சர்ச்சை காரணமாக தாம் ஏமாற்றமடைந்துள்ளதாகவும் அதானி குழுமம் தெரிவித்திருந்தது.

மன்னார் காற்றாலை திட்டம் தொடர்பில் இலங்கை மின்சார சபையின் முன்னாள் தலைவர் வெளியிட்டிருந்த கருத்தே சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. அதேசமயம் அக்கருத்தை தான் நிராகரிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ட்விட்டர் பதிவு ஒன்றின் ஊடாக தெரிவித்திருந்தார்.

எந்தவொரு நபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ அதனை வழங்குவதற்கான அங்கீகாரத்தை தான் வழங்கவில்லை என ஜனாதிபதி கூறியுள்ளார்.

அதேசமயம் கோப் குழுவின் முன்னிலையில் தான் தெரிவித்த அக்கருத்தை வாபஸ் பெற்றுக் கொள்வதாக இலங்கை மின்சார சபையின் தலைவராகவிருந்த எம்.எம்.சீ.பேர்டினாண்டோ தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மின்சாரசபை சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்த நிலையில், அதன் வேலைப்பளு காரணமாக, உணவு உட்கொள்ளாமல் செயற்பட்டமையினால் ஏற்பட்ட மனஅழுத்தத்தில் தன்னால் அவ்வாறான கருத்து வெளியிடப்பட்டதாக பேர்டினாண்டோ கூறியிருந்தார்.

இந்தக் கருத்தை வாபஸ் பெறும் தமது நிலைப்பாட்டிற்கு ஜனாதிபதி, விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் அல்லது இந்திய தூதரகத்தினால் அழுத்தம் விடுக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டிருந்தார்.

1989 மின்சாரச் சட்டத்தில் போட்டி ஏலத்தை நீக்கிய திருத்தத்தை பாராளுமன்றம் நிறைவேற்றிய ஒரு நாளுக்குப் பிறகு பொது விசாரணை நடைபெற்றது. அதானி ஒப்பந்தத்திற்கு இடமளிப்பதே திருத்தத்தை முன்வைப்பதற்கான முக்கிய காரணம் என்று எதிர்க்கட்சி குற்றம்சாட்டியது. 10 மெகாவாட் திறனுக்கு அப்பாற்பட்ட திட்டங்கள் போட்டி ஏலம் மூலம் மட்டுமே நடைபெற வேண்டும் என்று எதிர்க்கட்சி கோரியது.



அதானி

இலங்கை மின்சாரச் சட்டத்தில் திருத்தங்கள் மசோதாவுக்கு ஆதரவாக 120 பேரும் எதிராக 36 பேரும் வாக்களித்தனர். 13 எம்.பி.க்கள் வாக்கெடுப்பில் வாக்களிக்கவில்லை.

அதானி குழுமம் குஜராத்தின் அஹமதாபாத்தை தலைமையிடமாகக் கொண்ட ஒரு இந்திய பன்னாட்டு நிறுவனமாகும். இது 1988 ஆம் ஆண்டில் கவுதம் அதானி என்பவரால், முதன்மை நிறுவனமாக அதானி எண்டர்பிரைசஸ் லிமிடெட் (முன்பு அதானி எக்ஸ்போர்ட்ஸ் லிமிடெட்) நிறுவப்பட்டது. இதன் தலைவராக கவுதம் அதானி உள்ளார். தொழிலதிபர் கௌதம் அதானி தலைமையிலான அதானி குழுமத்திற்கு 500 மெகாவாட் மின் திட்டத்தை வழங்க வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பிரதமர் நரேந்திர மோடி அழுத்தம் கொடுத்ததாக கருத்துத் தெரவித்திருந்த பேர்டினாண்டோ பின்னர் தான் கூறியதை திரும்பப் பெற்றார். ஜனாதிபதியின் அலுவலகமும் இந்தக் குற்றச்சாட்டுகளை கடுமையாக மறுத்திருந்தது.

## இலங்கையின் எரிசக்தி திட்டம் தொடர்பில் பிரதமர் நரேந்திர மோடியை சம்பந்தப்படுத்தும் வீணான குற்றச்சாட்டினால் அதானி குழுமம் வேதனை

இந்திய தரப்பு உதவிகளை வழங்கி வருகின்ற போதிலும், இந்திய அரசின் மீது களங்கத்தை ஏற்படுத்தும் விதத்திலேயே இவ்வாறான கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

அதானி குழுமம் கடந்த சில வருடங்களாக இலங்கையில் தனது வணிகத்தை அதிகரித்து வருகிறது. இலங்கையில் மாத்திரமன்றி வேறு சில நாடுகளிலும் அதானி குழுமம் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்தை 51 சதவீத பங்குகளுடன் அபிவிருத்தி செய்வதற்கும் இயக்குவதற்கும் கடந்த ஆண்டு இந்நிறுவனம் ஒப்பந்தம் பெற்றது.

(15ஆம் பக்கம் பார்க்க)

எஸ்.சாரங்கன்...

**பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் மற்றும் சமையல் எரிவாயு போன்ற எரிபொருட்களுக்கான தட்டுப்பாடு நாட்டில் தொடர்ந்தும் காணப்படுகிறது. இவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்துக் கிடக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. டொலர் பற்றாக்குறை மற்றும் டொலரை கொள்வனவு செய்வதற்குத் தேவையான இலங்கை ரூபா போதியளவு இல்லாமை காரணமாக எரிபொருட்களைப் போதியளவு இறக்குமதி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.**



## சூரியப்படல், காற்றாலை மின்னுற்பத்திக்கான முன்மொழிவுகள் கிடப்பில் போடப்பட்டதால், இன்று ஒட்டுமொத்த நாடுமே நெருக்கடியில்!

### முன்னரை விட அதிக எரிபொருள் தற்போது இறக்குமதி;

# கியூ வரிசை இன்னுமே முடிவுக்கு வராதிருப்பதில் மர்மம் என்ன?

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

அது மாத்திரமன்றி இலங்கை தற்போது கடன்களை மீளச்செலுத்த முடியாத வங்குரோத்து நிலைக்குச் சென்றுள்ளது என்று தரப்படுத்தல் நிறுவனங்கள் அறிவித்தமையால், எரிபொருள் இறக்குமதி உள்ளிட்டவற்றுக்கு சர்வதேச வங்கிகளில் கடனுறுதிக் கடிதத்தை வழங்கி அவற்றின் அடிப்படையில் இறக்குமதி செய்ய முடியாத நிலைமை ஏற்பட்டது.

இதனால் எரிபொருள் கப்பல்களுக்கு நேரடியாக டொலர்களைச் செலுத்தியே எரிபொருளையோ அல்லது எரிவாயுவையோ இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. ஒவ்வொரு முறை எரிபொருளை இறக்குமதி செய்வதற்குத் தேவையான டொலர்களைத் திரட்டுவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சு கடுமையான பிரயத்தனம் எடுத்த வருகிறது.

தேவையான டொலர்களைத் திரட்டிக் கொடுத்தாலும் அவற்றைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான இலங்கை ரூபா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடமோ, இலங்கை மின்சார சபையிடமோ அல்லது லிற்றோ நிறுவனத்திடமோ இல்லையென இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அண்மையில் பாராளுமன்றத்துக்குத் தெரிவித்திருந்தார்.

இவ்வாறான பின்னணியில் மாதமொன்றுக்கு எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஏறத்தாழ 500 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகிறது.





## புதுப்பிக்கத்தக்க சக்திகளிலிருந்து மின்னுற்பத்தி செய்வதற்கு எதிரான முட்டுக்கட்டைகளாலேயே நாட்டில் இன்று பெரும் மின்சார நெருக்கடி!



இதனைத் திரட்டுவதற்கு கடுமையா சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருப்பதாக எரிசக்தி மின்வலு அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பெரும்பாலானவர்கள் தங்களது தேவைக்கு அதிகமாக சேகரிக்க முயற்சிப்பதால் எரிபொருளுக்கான கேள்வி அதிகரித்துள்ளது என்றும், தேவையற்ற விதத்தில் எரிபொருளை சேமிக்க வேண்டாம் என்றும் அமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாதாரணமாக வாகனமொன்றின் எரிபொருள் தாங்கியில் அரைப் பங்கு மாத்திரம் நிரப்புபவர்கள் தற்பொழுது முழுமையாக நிரப்புவதால் சராசரியான எரிபொருள் பாவனையை விட அதிகமானளவு எரிபொருள் பயன்படுத்தப்படுகிறது.

இதனால் வழமையாகப் பெற்றுக் கொள்ளும் எரிபொருள் அளவு போதுமானதாக இல்லை. உதாரணமாக ஒரு கப்பலில் பெற்றுக் கொள்ளும் எரிபொருள் முன்னர் ஒரு வாரத்துக்குப் போதுமானதாக இருந்தால், இது தற்பொழுது ஒரு சில நாட்களிலேயே முடிந்து விடுகிறது. இதனாலேயே எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நெரிசல் காணப்படுவதாக அமைச்சர் குறிப்பிடுகிறார்.

இலங்கையின் எரிபொருள் இறக்குமதியானது ஒப்பீட்டளவில் அதிகமானதாகவே காணப்படுகிறது. கடந்த பல வருடங்களாக இந்த நிலைமை நீடித்து வருகிறது. அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியுடன் ஒப்பிடுகையில் எரிபொருள் இறக்குமதிக்கான செலவு கூடுதலாக உள்ளது. கிடைக்கக் கூடிய தரவுகளின்படி, 2014 மற்றும் 2018 இற்கு இடையில், சராசரியாக ஆண்டுக்கு 3,269 மில்லியன் அமெரிக்க டொலர் எரிபொருள் இறக்குமதிக்காக செலவிடப்பட்டுள்ளது.

அதேநேரம், அத்தியாவசியப் பொருட்களான உணவு. பானங்கள், பால் உற்பத்திப் பொருட்கள் மற்றும் மருந்துகள் உள்ளிட்டவற்றின் இறக்குமதிக்கு 3,394 மில்லியன் அமெரிக்க டொலரும் செலவு செய்யப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையில் பார்க்கும் போது எங்களுடைய எரிபொருள் செலவீனம் ஏனைய அனைத்தையும் இறக்குமதி செய்ய நாம் செலவழிக்கும் தொகையை விட அதிகமாகும். எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றுக்கு 100 அமெரிக்க டொலர்களாக அதிகரித்து வருவதால், நமது எரிபொருள் கட்டணம் தானாகவே இரட்டிப்பாகும்.

இலங்கையின் எரிபொருள் பாவனையில் வீதிப் போக்குவரத்திலேயே 63 வீதமான எரிபொருள் பயன்படுத்தப்படுவதாக மொரட்டுவ பல்லைக்கழகத்தின் போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்துத் திணைக்களத்தின் சிரேஷ்ட பேராசிரியர் அமல் எஸ். குமாரகே தெரிவித்தார்.



தற்பொழுது நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியில் எரிபொருளுக்கான செலவைக் குறைப்பதற்கு வீதிப் போக்குவரத்துக்கான எரிபொருள் பாவனையை ஆகக் குறைந்தது 25 வீதமாவது குறைக்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், எரிபொருள் கொள்வனவு வீதம் அதிகமாக இருப்பதால் தொடர்ந்தும் அதற்கு மானியம் வழங்குவதில் எவ்வித பயனும் இல்லையென்றும், குறிப்பாக எரிபொருளில் அதிகமானளவு தனியாருக்கு சொந்தமான வாகனங்களுக்கே பயன்படுத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மற்றைய பொருட்களைப் போலல்லாமல், எரிபொருள் இறக்குமதியை கட்டுப்படுத்தவோ அல்லது பங்கிடவோ கூடாது. ஏனெனில் அது உற்பத்திக்கு அவசியமானது. உள்ளூர் விலைகள் உலக சந்தை விலைகளுடன் இணைக்கப்படுவதும் அவசியம். இருப்பினும், நுகர்வு ஊக்கமளிக்கும் மற்றும் மாற்றுப் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நியாயமான வரிக் கூறுகளுடன் இது செய்யப்பட வேண்டும்.

உற்பத்தித் திறனையோ வசதியையோ குறைக்காமல் குறைந்த எரிபொருள் பயன்பாட்டை மேம்படுத்த பல நாடுகள் இந்த வரியை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளன. இவற்றை முன்னுதாரணமாக எடுத்து இலங்கையிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம், கடந்த காலங்களில் வாகன இறக்குமதி அதிகரித்திருந்தமையும் எரிபொருள் தேவையைப் பன்மடங்கு அதிகரிக்கச் செய்துள்ளது. வாகன இறக்குமதியால் அந்நியச் செலாவணி நாட்டை விட்டுச் சென்றது மாத்திரமன்றி, வாகனங்களுக்குத் தேவையான எரிபொருளை இறக்குமதி செய்வதற்காகவும் பெருந் தொகையான டொலர்களை நாம் இழக்க வேண்டி ஏற்பட்டது.

இதற்கும் அப்பால் சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் உள்ளிட்ட பல தரப்பினருக்கு வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதிப் பத்திரம் வழங்குகிறது. இதனால் திறைசேரிக்குக் கிடைக்கும் வரி வருமானம் பெருமளவு இழக்கப்படுவது மாத்திரமன்றி, அவ்வாறு வழங்கப்படும் அனுமதிப் பத்திரத்தின் ஊடாக அதிகமான எரிபொருள் தேவையைக் கொண்ட வாகனங்கள் இறக்குமதி செய்யப்படுவதால் எரிபொருளுக்கான கேள்வியும் அதிகமாகவே காணப்படுகிறது.

எனவே, நாட்டின் நீண்டகாலத் தேவையைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் உரிய திட்டங்களை வகுத்து எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாதிருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இது இவ்விதமிருக்க, மின்சார உற்பத்திக்கும் எரிபொருள் பயன்பாடு அதிகரித்துள்ளது. இலங்கை பல வளங்களைக் கொண்ட நாடாக இருக்கின்ற போதும், மின்சார உற்பத்திக்கு அனைத்து வளங்களும் பயன்படுத்தப்பட்டதாக இல்லை.

ஆரம்ப காலத்தில் நீர்மின் உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டன. அதன் பின்னர் நுரைச்சோலையில் அனல் மின்நிலையம் அமைக்கப்பட்டது. இது தவிரவும் எரிபொருளைக் கொண்டு செயற்படக் கூடிய மின்பிறப்பாக்கி நிலையங்களே அதிகம் காணப்படுகின்றன. இந்த நிலைமைக்கு இலங்கை மின்சார சபையும் பொறுப்புக் கூற வேண்டும்.

கடந்த காலங்களில் புதுப்பிக்கத்தக்க சக்திகளைக் கொண்டு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான திட்டமுன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் மின்சார சபையின் தொழிற்சங்கங்கள் தடையாகக் காணப்பட்டன. குறிப்பாக மின்சார சபையின் பொறியியலாளர்கள் தொழிற்சங்கம் இதற்கு பிரதான முட்டுக்கட்டையாக இருந்தது.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் சூரிய ஒளியைப் பயன்படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டம் முன்மொழியப்பட்டு இதனை ஊக்குவிக்க குறைந்த வட்டியில் கடன் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. இருந்தபோதும் மின்சார சபையிடமிருந்து இதற்குப் போதிய ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை.

அது மாத்திரமன்றி மின்சாரத் தட்டுப்பாடு ஏற்பட்ட போது தனியார் நிறுவனங்களிடமிருந்த அவசர கொள்வனவுக்கான பரிந்துரைகளை அவர்கள் மேற்கொண்டனர். இதனைச் சற்று ஆழமாகப் பார்த்தால் தனியார் மின் உற்பத்தி நிலையங்களில் மின்சார சபையில் உள்ள பொறியியலாளர்களுக்கு மறைமுகமான தொடர்புகள் காணப்படுகின்றதா என்ற சந்தேகம் தோன்றுகின்றது.

அது மாத்திரமன்றி அவசர கொள்வனவின் போது விலைமனுக் கோரல் இல்லையென்பதால் தரகுப் பணமும் அவர்களுக்கு அதிகமாகக் கிடைக்கிறது என்ற குற்றச்சாட்டுகள் பல தரப்பாலும் சுமத்தப்படுகின்றன. இதனால் மாற்று வலுசக்தியைப் பயன்படுத்துவதில் அவர்கள் அக்கறை காண்பிக்கவில்லை என்கிறார்கள் நிபுணர்கள்.

புதுப்பிக்கத்தக்க சக்தி வலுவைப் பயன்படுத்தும் திட்டங்களை கொண்டு வருவதற்கு ஒவ்வொரு தடவையும் முயற்சித்த போதும் அதற்கு பல தடைகள் ஏற்படுத்தப்பட்டு தொழிற்சங்கப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வாறான நிலையில் கடந்த வாரம் இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்ட மூலம் திருத்தப்பட்டது. அதாவது இதுவரை காலமும் புதுப்பிக்கத்தக்க சக்தி (சோலார்) உற்பத்தியை மேற்கொள்வதற்கு கட்டுப்பாடு காணப்பட்டது.

இவ்வாறான நிலையில் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்ட திருத்தத்துக்கு அமைய எந்தவொரு தனியார் முதலீட்டாளரும் தேவையானளவு மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்க முடியும். இந்தத் திருத்தத்தின் மூலம் பல முதலீட்டாளர்கள் மின்சக்தித் துறையில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன.

எனவே, நாட்டின் நீண்டகாலப் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு கொள்கைகள் தயாரிக்கப்பட வேண்டியிருப்பதுடன், அரசியல்வாதிகள் மாத்திரமன்றி அரசாங்க அதிகாரிகளும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவது அவசியமாகிறது.

> **“நாட்டின் நீண்டகாலப் பயன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு கொள்கைகள் தயாரிக்கப்பட வேண்டியிருப்பதுடன், அரசியல்வாதிகள் மாத்திரமன்றி அரசாங்க அதிகாரிகளும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவது அவசியமாகிறது”**

# பெருந்தோட்ட தரிசு காணிகளை தோட்ட சமூகத்துக்கு பகிர்ந்தளிக்க வேண்டும்



## இது அனைத்து மலையகக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டிய தருணம்

நுவரெலியா தியாகு ...


ஆறுமுகன்


ஜீவன்


மனோ


ராதா


கிருஷ்ணன்

## விவசாயம் செய்யப்படும் தோட்டக் காணிகளை நிர்வாகம் மீளப்பெற முயற்சிக்கக் கூடாது!

இலங்கையில் மிக விரைவில் உணவு தட்டுப்பாடு அல்லது பஞ்சம் ஏற்படலாம் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டு வரும் சூழலில் இதற்காக அரசாங்கமும் தனியார் துறையினரும் இணைந்து செயற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமும் உள்ளது. இதற்காக அரசாங்கம் பல முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றது.

தரிசு நிலங்கள் அனைத்திலும் விவசாயம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட செயலாளர்கள் பிரதேச செயலாளர்களுக்கு அரசு அறிவித்தல் வழங்கியுள்ளது. இந்த அடிப்படையில் தற்பொழுது நாடு பூராகவும் பல விவசாய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இராணுவத்தினரும் இந்த விடயத்தில் மிகவும் வேகமாக செயற்பட்டு வருகின்றனர். இவ்வாறான ஒரு நிலையில் அரசாங்கத்தின் இத்தகைய பல திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகள் முட்டுக்கட்டையாக இருப்பது கடந்த சில மாதங்களாக பேசு பொருளாக மாறியிருக்கின்றது.

உதாரணத்துக்கு, மின்சார சபையில் சூரிய ஒளி மின்சாரத்தை பெற்றுக் கொள்வது தொடர்பாக சில உயர் அதிகாரிகள் முட்டுக்கட்டையாக இருப்பதாக பாராளுமன்றத்தில் கருத்து தெரிவித்துள்ளதைக் குறிப்பிடலாம். அது மாத்திரமன்றி சமையல் எரிவாயு கொள்வனவில் அதிகாரிகளின் முட்டுக்கட்டை, அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வரியை பெற்றுக் கொள்வதில் முட்டுக்கட்டை என அதிகாரிகளின் குறுக்கீடுகளை குறிப்பிடலாம்.

அண்மையில் ஹட்டன் வெலிஓயா தோட்டத்தில் கடந்த பல வருடங்களாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்ற வேலு ராமச்சந்திரன் என்பவரை அவருடைய விவசாய காணியை திரும்ப கையளிக்குமாறு பெருந்தோட்ட அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளரால் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. பெருந்தோட்ட தரிசு காணிகளை விவசாயத்துக்கு பயன்படுத்தும்படி அரசு ஒருபுறம் ஊக்குவிக்கும் அதே சமயம் இன்னொரு புறம் விவசாயம் செய்யப்படும் காணியை தரிசாக்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதை என்னவென்று புரிந்து கொள்வது? இது தொடர்பாக சில பிரமுகர்களிடம் பேசினோம்.

மலையக தொழிலாளர் முன்னணியின் உப தலைவர் கிருஷ்ணன்

அரசாங்கம் தரிசு மற்றும் கைவிடப்பட்ட காணிகளில் விவசாயத்தை மேற்கொள்ளுமாறு மக்களிடம் கோரிக்கை விடுக்கின்ற அதே சமயம் விவசாயத்தில் தற்பொழுது ஈடுபட்டுள்ள பெருந்தோட்டத்துறை சார்ந்த விவசாயிகளை தங்களுடைய நிலங்களில் இருந்து வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட சம்பவம் ஒன்று ஹட்டன் வெலிஓயா தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

ஹட்டன் வெலிஓயா பகுதியில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள இராமச்சந்திரன் என்பவருடைய விவசாய காணியை உடனடியாக தோட்ட அதிகாரியிடம் ஒப்படைக்குமாறு பெருந்தோட்ட அமைச்சின் முகாமைத்துவ பணிப்பாளர் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ஜே.எம்.சி. பிரிய தர்சனி கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

**அந்தக் கடிதத்தைப் பாருங்கள்.**

**வேலு ராமச்சந்திரன்**

**மேல் வெலிஓய பிரிவு வெலிஓய தோட்டம் ஹட்டன்.**

**1997 ஆம் ஆண்டு 29 இலக்க சட்டத்தின்படியும் 1992 ஆம் அண்டு 45 இலக்க சட்டத்தின்படியும் 1987 ஆம் ஆண்டு 50 இலக்க சட்டத்தின்படியும் 1983 ஆம் ஆண்டு 29 இலக்க சட்டத்தின்படியும் 1981 ஆம் ஆண்டு 58 இலக்க சட்டத்தின்படியும் திருத்தியமைக்கப்பட்ட 1979 ஆம் ஆண்டு 7 இலக்க சட்டத்தின்படியும் அரசாங்க காணிச்சட்டத்தின் 3 பிரிவிற்கு அமைய (அத்துமீறி இருப்பவர்களிடம் இருந்து மீள பெற்றுக் கொள்ளல்) வழங்கப்படும் அப்புறப்படுத்தலுக்கான அறிவித்தலாகும்.**

**அப்புறப்படுத்தலுக்கான அறிவித்தல்**

**அரசாங்கத்தின் காணிச் (மீள் பெற்றுக் கொள்ளல் தொடர்பில்) சட்டத்திற்கு அமைய அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஒருவர் இலங்கை அரசாங்கத்தின் அரச பெருந்தோட்ட நிறுவனத்தின் மற்றும் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையினால் நியமிக்கப்படடுள்ள அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி தொழில் அமைச்சின் பெருந்தோட்ட முகாமைத்துவ பணிப்பாளர் பிரிவின் பிரதி பணிப்பாளர் அதிகாரமளிக்கப்பட்ட ஜயவீர முதியான்சேலாகே சந்திரிகா பிரியதர்சனி ஆகிய நான் ஹட்டன் வெலிஓய தோட்டத்தின் மேல் வெலிஓய பிரிவில் வசிக்கும் வேலு ராமச்சந்திரன் ஆகிய நீங்கள் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைக்கு அமைய அரச காணியில் சட்டவிரோதமாக தங்கள் வசப்படுத்தியிருப்பதாக நான் கருத்தில் கொண்டு எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அரசாங்க காணச்சட்டத்தின் 3 பிரிவின் பிரகாரம்**

**(அ) குறித்த இடத்தில் தங்களுடன் வேறு எவரேனும் தங்கியிருப்பார்களாயின் அவர்களுடன் காணியை விட்டு வெளியேறுமாறும்**

**(ஆ) குறித்த இடத்தின் அதிகாரமளிக்கப்பட்ட உரித்துடையவரான வெலிஓயா தோட்டத்தின் தோட்ட அதிகாரியான வெத ஆராச்சிலாகே அஜித் பிரசன்ன பிரேமசந்திரவிடம் அல்லது அவரால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரிடம் 05.07.2022 திகதிக்கு முன்பதாக காணியை கையளிக்குமாறு வேலு ராமச்சந்திரன் ஆகிய உங்களுக்கு பணிக்கின்றேன்.**

**(ஒப்பம்)**


படம்: நுவரெலிய தினகரன் நிருபர்

எனவே அரசாங்கம் ஒரு புறத்தில் அனைத்து தரிசு நிலங்களையும் பகிர்ந்தளித்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பணிக்கின்றது. ஆனால் அதிகாரிகளோ இவ்வாறு கடிதம் அனுப்புகின்றார்கள். எனவே அரசாங்கத்தின் இந்த திட்டத்திற்கு அதிகாரிகள் முட்டுக்கட்டையாக இருக்கின்றார்களா? அல்லது விடயம் தெரியாமல் கொழும்பில் ஏ.சி அறையில் இருந்து கொண்டு தீர்மானம் எடுக்கின்றார்களா என்ற கேள்வியே எங்களிடம் எழுகின்றது.

இது தொடர்பாக வேலு ராமச்சந்திரனிடம் பேசினோம்.

நாங்கள் கடந்த 1979 ஆம் ஆண்டு முதல் அதாவது என்னுடைய தந்தையார் காலம் முதல் இந்த காணியில் விவசாயம் செய்து வருகின்றோம். இது வரையில் தோட்ட நிர்வாகமோ அல்லது வேறு நிறுவனங்களோ எங்களிடம் இந்த காணியை தோட்ட நிர்வாகத்திற்கு ஒப்படைக்குமாறு கடிதம் அனுப்பியது கிடையாது.

நான் மட்டுமல்ல, என்னைப் போன்ற பலரும் இந்த தோட்டத்தில் விவசாயத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்கள் யாருக்கும் எந்தவிதமான கடிதமும் வரவில்லை. எனவே என்னை தனிப்பட்ட முறையில் பழிவாங்குவதற்காக இதனை செய்திருக்கின்றார்களா? என்ற சந்தேகம் எழுகிறது.

நான் எக் காரணம் கொண்டும் இந்தக் காணியை கையளிக்கப் போவதில்லை. ஏனென்றால் தற்பொழுது இருக்கின்ற பொருளாதார கஷ்டங்களுக்கு அமைய எங்களால் குடும்பங்களை நடத்த முடியாது. நாங்கள் இந்த விவசாயத்தை நம்பியே வாழ்கின்றோம். இதற்கு சம்பந்தபட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுத்து எங்களுக்கு தொல்லை கொடுக்காமல் இருந்தாலே போதும். நான் இந்த காணி தொடர்பான பல ஆவணங்களையும் வைத்திருக்கின்றேன். எந்த காரணம் கொண்டும் இந்த விவசாய காணியை கையளிக்க முடியாது என்பது இவரது நிலைப்பாடு.

இதே சமயம் தரிசு காணி பகிர்ந்தளிப்பு தொடர்பாக பாராளுமன்றத்தில் இராதாகிருஷ்ணன் பேசியிருந்தார்.

அரசாங்கத்தின் அறிவித்தலுக்கு அமைய மலையகத்தில் இருக்கின்ற தரிசு நிலங்களை மலையக இளைஞர் யுவதிகளுக்கு பகிர்ந்தளித்து அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்து விவசாயத்தில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பத்தை அரசாங்கம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

மேலும் தற்பொழுது எற்பட்டுள்ள நிலையில் விலைவாசி அதிகரிப்பு வருமானக் குறைவு என்பன காரணமாக மலையக மக்கள் பெரிதும் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே இவ்வாறான ஒரு நிலையில் மலையகத்தில் இருக்கின்ற தரிசு நிலங்களை இங்குள்ளவர்களுக்கு பகிர்ந்தளித்து அதற்கான வாய்ப்பை எங்களுடைய மலையக இளைஞர் யுவதிகளுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

காணி பகிர்ந்தளிப்பு தொடர்பாக மலையகத் தலைவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்?

கடந்த மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தில் பல ஏக்கர் தரிசு காணிகள் மலையகத்தில் இருப்பதாகவும் அதனை மலையக இளைஞர்களுக்கு பகிர்ந்தளித்து விவசாயம் செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் எனவும் மறைந்த அமரர் ஆறுமுகன் தொண்டமான், இராதாகிருஷ்ணன், பழனி திகாம்பரம் உட்பட மலையக பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்தில் வலியுறுத்தியிருந்தார்கள்.

---

# மலையகத்தில் காணி உரிமையும் வேலை வாய்ப்பும்

# இளைஞர்களின் தன்னெழுச்சியை நாடி நிற்கிறது

பன். பாலா ...

இலங்கை வரலாற்றில் பெருமளவில் போராட்டங்களை நடாத்திய சமூகமாக மலையக சமூகமே காணப்படுகின்றது. இப்போராட்டங்கள் அனைத்துமே தொழில் சார்ந்த பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் வன்முறைகளுக்கு உட்படாத போராட்டங்கள். இவை யாவும் அஹிம்சை முறைமையை ஆதர்ஷமாக கொண்டிருந்தன. இதுதான் இதன் சிறப்பு.

அன்று இளைஞர்கள் தன்னெழுச்சிப் போராட்டங்களில் ஈடுபடவில்லை. மாறாக தமது தலைவர்களின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து ஒன்று திரண்டனர். தமது சக்தியை வெளிப்படுத்தினார்கள். ஆனால் இதே தலைமைகளின் தொலை நோக்கற்ற சில முடிவுகள் காரணமாக இளைஞர்களின் சக்தி மழுங்கடிக்கபடலாயின.

போராட்டங்கள் இரு வகைப்படும். ஒன்று உணர்வுபூர்வமானது. மற்றையது அறிவுபூர்வமானது. இந்த இரண்டு தன்மைகளையும் உள்வாங்கிக் கொண்டிருந்ததால்தான் பிரான்சியப் புரட்சியின் வெற்றி வரலாற்றுப் பதிவானது.

மலையக இளைஞர்களின் ஆக்கச் சக்தியை தமது அரசியல் தேவைகளுக்காக பயன்படுத்திக் கொள்ள முற்படும் மலையகத் தலைமைகள் அவர்களை விட்டில்பூச்சிகளாக வைத்துக் கொள்வதிலேயே நாட்டம் கொண்டுள்ளனர்.

இதனை புரிந்துகொண்ட நிலையிலேயே 1970களில் இளைஞர்களின் ஆற்றலை அடையாளம் கண்டு சுடர்விடச் செய்யும் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட சில புத்திஜீவிகள் மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம், மலையக இளைஞர் முன்னணி போன்ற அமைப்புகளை உருவாக்கினர். கற்ற இளைஞர் சமூகத்தினர் இந்த இளைஞர்கள் பால் ஈர்க்கப்பட்டனர். இந்த மாற்றம் பிரபுத்துவ தொழிற்சங்க தலைமைகளுக்குப் பிடிக்காத சங்கதியானது. இதன் பின்னணியில் இரா. சிவலிங்கம் போன்ற செயற்பாட்டாளர்கள் சட்டச் சிக்கல்களுக்கு உட்படுத்தப்பட்டனர். சிலர் சிறை சென்றார்கள்.

**'இளைஞர்கள் எழுச்சிபெற்றால் அது தமது இருப்புக்கு ஆப்பு வைத்துவிடும் என்னும் அச்சம் மலையகத் தலைமைகளுக்கு இன்னும் இருக்கவே செய்கின்றது'**

எது எப்படியாயினும் பிற்காலத்தில் கணிசமான அளவு புத்திஜீவிகள் உருவாக இவர்களின் பங்களிப்பே பாரிய வகிபாகத்தினைக் கொண்டிருந்தது. இயக்கம் சார்புபட்ட இலக்கிய பயணம் பல புத்திஜீவிகளை அடையாளம் காட்ட உதவின. சிறுகதைகள் கட்டுரைகள், கவிதைகள், சமூகம் சார்பிலான தகவல்கள், செய்திகள் வெளிவரலாயின. ஒரு வகையில் இது அரசியல் பின்புலம் சாராத போதும் சில தொழிற்சங்க தலைமைகளுக்கு தலைவலியைத் தந்தன.

மலையகத்தின் விடிவு பற்றி மட்டுமே விலைவாரியாக பேசிக்கொண்டிருந்த மலையகக் கட்சிகள் அதற்கான வேலைத்திட்டங்களை கொண்டிருக்கவில்லை. மேலும் இளைஞர்களின் பங்களிப்பு வாக்களிப்பதில் மட்டும் இருந்தால் போதும் என்ற நியதி உருவாக்கம் பெற்றது. இளைஞர்கள் எழுச்சிப் பெற்றால் அது தமது இருப்புக்கு ஆப்பு வைத்துவிடும் என்னும் அச்சம் மலையகத் தலைமைகளுக்கு இன்னும் இருக்கவே செய்கின்றது.

200 வருடகால வரலாறு கொண்ட பெருந்தோட்டத் தொழிற்துறை சாராத, சார விரும்பாத இளைஞர்களே இன்று மலையகத்தில் அதிகம். இதனால் வேலையில்லாப் பிரச்சினை தலைவிரித்தாடுகின்றது. கொழும்பு போன்ற பல இடங்களில் தொழில்புரிந்து வந்த பல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கோவிட் தொற்று காரணமாக தோட்டங்களுக்கே வந்து சேர்ந்தார்கள். தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலமைகளால் மீண்டும் பழைய வேலைகளுக்குத் திரும்ப முடியாதவர்களாக இருக்கின்றார்கள். தவிர இனி இங்கேயே தங்கி ஏதாவது தொழில் செய்வதே புத்திசாலித்தனமானது என்ற பல இளைஞர்கள் தீர்மானித்துவிட்டார்கள்.

இதனால் மலையகத்தில் வேலை வாய்ப்புக்கான அவசரத் தேவை இன்று ஏற்பட்டுள்ளது. ஆனால் துரதிர்ஸ்டவசமாக இதற்கான வேலைத்திட்டங்கள் எதுவுமே சங்க அரசியலில் இல்லை. கம்பனி தரப்பிடம் இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதற்கும் இல்லை. அரசாங்கத்திடமும் இல்லவே இல்லை. அதனால்தான் விவசாயம் செய்தாவது ஜீவனோபாயத்துக்கு வழிதேட மலையக இளைஞர்கள் தயாராகி விட்டார்கள். எனவேதான் பெருந்தோட்டத் தரிசு காணிகளைப் பகிர்ந்தளிக்கும்போது மலையக இளைஞர்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்னும் கோரிக்கை வலுப் பெறுகின்றது. இது தவிர்க்க முடியாத சங்கதி.

பெருந்தோட்ட சமூகம் தமது தேவைகளுக்காகவும் உரிமைகளுக்காகவும் அஹிம்சை வழியில் போராடுவதற்கே பழக்கப்பட்டிருப்பது நல்லதொரு விடயம். இதனை பலவீனம் என்று எண்ணுவது தவறு. இதேநேரம் இந்த இளைஞர்களின் சக்தியை கூட்டிணைப்பதற்கு எந்தவொரு அமைப்பு ரீதியிலான செயற்பாடுகளும் இல்லாதிருப்பது பெருங்குறைபாடேயாகும். ஆனால் அதற்கான அவசியம் இருக்கவே செய்கிறது.

மலையக இளைஞர்களைப் பற்றி பேசும்போது சுமார் 12 வருடங்களாக சிறைகளில் அரசியல் கைதிகளாக அடைப்பட்டுக் கிடக்கும் பெருந்தோட்ட இளைஞர் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. இவர்களில் பலர் குற்றவாளிகள் என குறிப்பிடப்படாமலே சிறைவாசம் அனுபவிக்கின்றனர். அடையாள அட்டை இல்லாத ஒரே காரணத்துக்காக கூட இவ்வாறு சிறைபட்டுள்ளவர்களும் இருப்பதாக தகவல்கள் இருக்கின்றன. சிறுசிறு குற்றம் மற்றும் சந்தேகம் காரணமாகக் கூட சிலர் சிறையில் இருக்கின்றார்கள். பொதுவாக குறைவான எண்ணிக்கையானோரே இவ்வாறு தண்டனை அனுபவித்தாலும் அவர்களும் மனிதர்களே. குற்றஞ்செய்யாவிட்டால் விடுதலை செய்யப்பட்டு சாராசரி மனித வாழ்க்கைக்கு திரும்புவதற்கு இவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டியதே மனிதாபிமானம்.

அரசியல் கைதிகள் என்னும் அடையாளத்தின் கீழ் இவர்கள் சிறையில் வாடும் நிலையில் இவர்களின் விடுதலை குறித்து மலையக அரசியல் பிரதிநிதிகள் போதிய கரிசனை காட்டுவதாகத் தெரியவில்லை. இப்பிரச்சினை அரசியல் ரீதியாக கையாளப்பட வேண்டியதே. யுத்தம் நிறைவடைந்து ஏறக்குறைய 13 வருடங்களாகி விட்ட போதிலும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் உரிய முன்னகர்வுகள் இடம்பெயர்வதாகத் தெரியவில்லை. இப்பிரச்சினை சட்டரீதிக்கு அப்பால் அரசியல் அழுத்தம் காரணமாகவே தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்படுவதாக பலரும் அபிப்பிராயப்படுகின்றார்கள்.

இதேநேரம் மலையக இளைஞர்களின் மௌனத்தை மலையகத் தலைமைகள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டு வாளாவிருக்கக் கூடாது. எந்தவொரு சமூகத்தினதும் அரண்களாக இளைஞர் சக்தியே மிளிர்கின்றது. இதனை புரிந்துக்கொள்ள வேண்டிய கடப்பாடு மலையக இளைஞர்களுக்கு உண்டு. எனவேதான் அவர்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டங்கள் தேவையாயுள்ளன. பெருந்தோட்டப் பிரதேசங்களை மையப்படுத்தி தொழில் பேட்டைகள் ஏற்படுத்தப்பட வேண்டியது முக்கியம். விவசாயம், சுயதொழில் முயற்சிகளுக்கான ஊக்குவிப்பு ஏற்பாடுகள் செய்வது அவசியமானது. இதற்கான காணிகள் இவர்களுக்கு பெற்றுத்தரப்பட வேண்டும்.

**'இளைஞர்கள் சமூக உணர்வுடன் அரசியலில் தம்மை இணைத்துக் கொள்வதே உசிதமானது. அதேநேரம் பரம்பரை பழக்கதோஷத்தாலோ, கவர்ச்சியினாலோ தனிமனித ஆராதனைக்கு இடம் கொடுத்து அடிவருடியாகி விடக்கூடாது'**

இன்றும்கூட இச்சமூகம் நாட்டுக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தருவதில் பங்களிப்பு வழங்கவே செய்கிறது. ஆனால் அதற்கான அங்கீகாரமோ, கௌரவமோ கிடைப்பது தான் இல்லை. இந்த பின்புலத்தை மாற்றியமைக்கக் கூடிய வல்லமை ஒன்றுபட்ட இளைஞர்கள் வசமே இருக்கின்றது. இளைஞர்கள் சமூக உணர்வுடன் அரசியலில் தம்மை இணைத்துக் கொள்வதே உசிதமானது. அதேநேரம் பரம்பரை பழக்க தோஷத்தாலோ, கவர்ச்சியினாலோ தனிமனித ஆராதனைக்கு இடம் கொடுத்து அடிவருடியாகி விடக்கூடாது.

தோட்ட மக்களின் சம்பள பிரச்சினைக்காக மலையக இளைஞர்கள் தலைநகரில் நடாத்திய தன்னெழுச்சிப் போராட்டம் நாட்டையே திரும்பிப் பார்க்க வைத்தது. இதை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது நல்லது. ஆனால் பெருந்தோட்ட இளைஞர்களில் பலர் தமது குடும்ப நலனோடு நின்று விடுவது ஆய்வு மூலம் தெரியவந்துள்ளது. சமூகப் பார்வைக்கு அப்பால் சுயநல சிந்தனையோடு முடங்கிப் போனால் அவர்களைப் பயன்படுத்தி அரசியல் செய்யும் சக்திகளுக்கு அதிக வசதியாகப் போய்விடும். இது சமூக மாற்றத்துக்கு நல்லதல்ல.

# இரண்டாக பிளக்குமா அ.தி.மு.க?

அருள் சத்தியநாதன்

அனைத்திந்திய அண்ணா தி.மு.க மிக விரைவில் இரண்டாகப் பிளந்து இரு தனிக் கட்சிகளாக இயங்கலாம் என்ற அச்சம் தொண்டர்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. எம்.ஜி.ஆர். ஆரம்பித்து ஜெயலலிதாவினால் வளர்த்தெடுக்கப்பட்ட இக் கட்சியின் எதிர்காலம் எப்படி அமையப்போகிறது என்பதை எதிர்க்கட்சிகள் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன.

அ.தி.மு.கவின் செயற்குழு மாநாடு எதிர்வரும் 23ம் திகதி நடைபெறவுள்ளது. சென்னையின் நடைபெறவுள்ள இக் கூட்டத்தில் அதிரடி முடிவுகள் எடுக்கப்பட்டு கட்சி பலப்படுத்தப்படும் என்று கட்சி முக்கியஸ்தர்கள் கருதுகின்றனர். இக் கட்சி எம்.ஜி.ஆரினால் 1972 அக்டோபர் 17ம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. எம்.ஜி.ஆர் அண்ணாவினால் அரசியலுக்கு ஈர்க்கப்பட்டவர். என் மடியில் ஒரு கனி வந்து விழுந்தது. அதை நான் எடுத்து என் இதயத்தில் வைத்துக் கொண்டேன். அது தான் இதயக்கனி என்று எம்.ஜி.ஆர் தனக்கு எவ்வளவு நெருக்கும் என்பதை உவமையாகச் சொல்லியிருந்தார் அறிஞர் அண்ணா. அவரும் அண்ணாவுக்கு விசுவாசமான உண்மைத் தம்பியாகவே கட்சியில் இருந்து வந்திருக்கிறார். அண்ணாவின் பெயரைத் தன் படங்களில் குறிப்பிடுவது, கட்சிக் கொடி, பெயரைப் பயன்படுத்துவது, கட்சிக் கொள்கைகளை பாடல் வரிகளில் கொண்டு வருதல் என்பனவெல்லாம் அண்ணா உயிருடன் இருக்கும் வரை தொடர்ந்தது. 1969 இல் அண்ணாவின் மறைவின் பின்னர் முதல்வராகப் பதவியேற்ற கலைஞர் கருணாநிதி பின்னர் ஆட்சியைக் கலைத்துவிட்டு 1971இல் சட்டசபைத் தேர்தலை நடத்தினார். அது தி.மு.கவுக்கு மிகப்பெரிய வெற்றியாக அமைந்தது. இனிமேல் தான் அசைக்கப்பட முடியாத தமிழகத் தலைவர் எனக் கருதிய கலைஞர் கருணாநிதி தான்தோன்றித்தனமாக நடந்து கொள்ள தலைப்பட்டதில் எம்.ஜி.ஆருக்கும் அவருக்கும் இடையிலான பிணக்கு முறுகலாக மாறி மோதலாக உருவெடுத்தது. ஒரு நீயா நானா மோதலே அ.தி.மு.க என்ற ஒரு கட்சியின் உதயத்துக்கு காரணமாக இருந்ததே தவிர வேறு எந்தக் கொள்கை கோட்பாட்டாலும் அல்ல.

எனவே அடிப்படையில் அ.தி.மு.க என்பது கருணாநிதி எதிர்ப்புக் கட்சியாகும். இதைத்தவிர இவ்விரு கட்சிகளுக்கு இடையில் பெரிய அளவில் வேறுபாடுகள் கிடையாது. எம்.ஜி.ஆரோ அதன் பின்னர் வந்த ஜெயலலிதாவோ அ.தி.மு.காவின் கொள்கைகள் இவைதான் என்று எதையும் உருவாக்கி வைக்கவில்லை. தற்போது, கருணாநிதி இல்லை. கட்சி எதற்காக உருவாக்கப்பட்டதோ அந்த அவசியம் தற்போது இல்லை என்ற அளவில் கருணாநிதியின் குடும்பத்தை எதிர்ப்பதை அது தன் இலட்சியமாகக் கொண்டுள்ளது. அ.தி.மு.கவின் பெரும் பலவீனம் இதுதான். தி.மு.கவுக்கு இந்தி எதிர்ப்பு, தமிழ் மொழிப் பற்று வளர்ப்பு, சமூக ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிரான கொள்கை, சமச்சீர் கல்விக் கொள்கை, இந்துத்துவா எதிர்ப்பு என விசேடமாகக் குறித்துச் சொல்லக்கூடிய கொள்கைகள் உள்ளன. அ.தி.மு.கவை எடுத்து கொண்டால் இவ்வாறான வித்தியாசமான எந்தக் கொள்கையையும் பார்க்க முடியவதில்லை. எம்.ஜி.ஆர். எமது கொள்கை அண்ணாயிசம் என்றார். ஆனால் இன்றளவும் அண்ணாயிசம் என்றால் என்ன என்பது எவருக்கும் தெரியாது. எம்.ஜி.ஆர் அண்ணாயிசத்துக்கு எந்த விளக்கமும் அளிக்கவில்லை.

எம்.ஜி.ஆரின் பின் வந்த ஜெயலலிதா கருணாநிதி வெறுப்பு அரசியலை வெற்றிகரமாகவே முன்னெடுத்தார். தமிழக அரசியலை தனி மனித கவர்ச்சி அரசியலாக அவரால் மாற்றியமைக்க முடிந்தது. இலங்கை சுதந்திரம் பெற்றது முதல் ஆட்சிகளைத் தீர்மானித்தது அரிசி அரசியலும் இனவாத அரசியலும் தான். அதேபோல தி.மு.கவை தமிழகத்தில் காலூன்றச் செய்தது இந்தித்திணிப்பு கொள்கையும் அதன் எதிர்விளைவாக தமிழகத்தில் எழுந்த தமிழ் உணர்வும்தான். அ.தி.மு.க தழைத்தோங்க கருணாநிதி எதிர்ப்பு அரசியல் உதவியதால் அவரது மறைவும் அதற்கு முன்னரேயே அக்கட்சியின் சுப்பர் ஸ்டார் ஜெயலலிதாவின் மறைவும் அ.தி.மு.கவை கடுமையாகப் பாதித்தது. மேலும் அக் கட்சியின் தலைவர்களாக தொண்டர்கள் மத்தியில் அதிக செல்வாக்கு செலுத்த முடியாத பன்னீர் செல்வம் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி இருவரும் நீடித்ததும் அதன் வீழ்ச்சிக்கு வழி கோலியது.

அ.தி.மு.க அதன் ஆரம்பத்தில் இருந்தே தனி மனிதரின் கவர்ச்சியால் மட்டுமே நடத்தப்பட்டு வந்துள்ள கட்சி. முதலில் எம்.ஜி.ஆரின் மயக்கத்தில் தொண்டர்களும் வாக்காளர்களும் கிறங்கிக் கிடந்தார்கள் என்றால் அவருக்குப் பின் வந்த ஜெயலலிதா விஷயத்திலும் இதுவே நடந்தது. அந்த மயக்கத்தை தொடர்ச்சியாக கட்சிக் கிண்ணத்தில் இட்டு நிரப்ப முடியாத தலைவர்களாக முதலில் ஓ. பன்னீர்செல்வமும் பின்னர் எடப்பாடி பழனிச்சாமியும் விளங்குவதால்தான் அ.தி.மு.க தொடர்ச்சியாக ஒரு தேக்க நிலையில் இருந்து வருகிறது. ஆட்சியில் உள்ள தி.மு.கவுக்கு சவால் விடுக்கும் வகையில் செயல்பட முடியாத ஸ்தம்பித நிலையை அக் கட்சியில் பார்க்க முடிகிறது.

எனினும் இன்றைக்கும் பெரிய கட்சியாகவும், தி.மு.கவுக்கு மாற்றாக விளங்கக் கூடிய கட்சியாகவும் அ.தி.மு.கவே விளங்கி வருகிறது. முழுத் தமிழ்நாடும், எல்லாக் கிராமங்களிலும் கிளைகளைக் கொண்ட கட்சியாக திகழ்ந்தாலும் அ.தி.மு.கவின் பெயர் ஊடகங்களில் அடிபடுவதில்லை. அப்படியே அடிப்பட்டாலும் மக்கள் மத்தியில் பாதிப்பை எதிர் விளைவுகளை ஏற்படுத்துவதாக இல்லை என்று சொல்லி விடலாம்.



## தனித்து விப்பட்டால் பன்னீர் சசிகலாவுடன் கை கோர்ப்பாரா?

## ஒற்றைத் தலைமைக்கு திரளும் ஆதரவால் ஓங்கும் எப்பாடி அலை

அ.தி.மு.கவுடன் ஒப்பிடும்போது தமிழக பா.ஜ.க ஒரு வளராத கட்சி. தனித்து இயங்க முடியாத, திராவிட மண்ணில் வேர்பிடிப்பதற்காக போராடும் கட்சி. ஆனால் இன்று அண்ணாமலையின் தலைமையில் தமிழ்நாடு பா.ஜ.க பேசப்படும் கட்சியாகவும் தி.மு.கவுக்கு குடைச்சல் கொடுக்கும் கட்சியாக பேசப்படும் வகையிலும் அக் கட்சி செயல்பட்டு வருகிறது. தமிழக அரசுக்கு எதிராக ஏதாவது ஒரு பிரச்சினையை அண்ணாமலை கிளப்பிக் கொண்டே இருக்கிறார்.

பா.ஜ.கவுக்கு நான்கு சட்ட மன்ற ஆசனங்கள் உள்ளன. கடந்த சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் பாஜக கட்டாயக் கூட்டை வைத்துக் கொண்டது. செஞ்சோற்றுக் கடனுக்காக, அதாவது எடப்பாடி பன்னீர் ஆட்சி கவிழாமல் மோடியவர்கள் பார்த்துக் கொண்டதற்காக, வேண்டா வெறுப்பாக இக்கூட்டணியை அ.தி.மு.க தலைமை வைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. அ.தி.மு.கவின் செல்வாக்கினால் நான்கு இடங்களை கைப்பற்றிக் கொண்ட பா.ஜ.க, இன்று அக் கூட்டணியில் இருந்து வெளியேறியதோடல்லாமல் அ.தி.மு.கவை விமர்சிக்கவும் செய்கிறது. பா.ஜ.க மக்களுக்கு சேவை செய்யும் ஒரு கட்சியாக இருப்பதால்தான் தமிழகத்தின் மூன்றாவது பெரிய கட்சியாக எம்மால் விளங்க முடிகிறது என்று அண்ணாமலையார் மார்தட்டவும் செய்கிறார். அண்ணாமலையின் கூற்றுகள் சில சமயம் மிகைப்படுத்தலாகவும், சிறுபிள்ளைத்தனமாகவும் உள்ளதை தமிழக மக்கள் அறிவார்கள். ஆனால் பா.ஜ.க. தமிழகத் தலைவர் அண்ணாமலை பேசப்படும் நபராகவும், அடிக்கடி ஊடகங்களில் குறிப்பிடப்படுபவராகவும், பலம் பொருந்திய தி.மு.க அரசுக்கு குடைச்சல் கொடுப்பவராகவும் திகழ்கிறார். தி.மு.க அமைச்சர்கள் மீது ஊழல் புகார் படிக்கிறார். அவரது குற்றச்சாட்டுகளுக்கு இரண்டு தி.மு.க அமைச்சர்கள் அடிக்கடி விளக்கமும் மறுப்பு அளித்துக் கொண்டிருக்கிறார்கள். இவை அனைத்தும் தமிழக பா.ஜ.க. வேகமாக இயங்கிக் கொண்டிருப்பது போலவும், தி.மு.கவுக்கு சவால்விடும் அளவுக்கு வளர்ந்துவிட்டது போலவும் ஒரு தோற்றத்தை அண்ணாமலையார் தமிழகத்தில் உருவாக்கி வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் சொந்தமாக காலூன்ற முடியாத ஒரு பா.ஜ.க தன் பிரசார தந்திரங்கள் மற்றும் அணுகுமுறைகள் ஊடாக தன்னைமுக்கிய கட்சியாக வெளிப்படுத்த முடிகிறது என்றால் பலம் பொருந்திய அ.தி.மு.க எவ்வளவு வேகமாகவும், தந்திரமாகவும் இயங்க வேண்டும்! ஆனால் அ.தி.மு.க இரண்டு தோணிகளில் கால் வைத்தமாதிரி இரட்டைத் தலைமை முறையை வைத்துக் கொண்டு தூங்கி வழிந்து கொண்டிருக்கிறது. அ.தி.மு.கவின் இரட்டைத் தலைவர்களான எடப்பாடி பழனிச்சாமியும் ஓ. பன்னீர் செல்வமும் தமக்குடையே அதிகாரப் போட்டியை தீவிரப்படுத்தி யாருக்கு கட்சியில் அதிக செல்வாக்கு என்பதில் தீவிரம் காட்டிக் கொண்டிருப்பதால் சிறப்பான எதிர்க்கட்சியாக செயல்பட முடியாத ஒரு நிலை அ.தி.மு.கவுக்கு ஏற்பட்டிருக்கிறது. இது ஆளும் தி.மு.கவுக்கு வாய்ப்பான காலம்தான். அ.தி.மு.க தலைமை ஆற்ற வேண்டியவற்றை அண்ணாமலையார் செய்து கொண்டிருப்பதாகவும் கொள்ள முடியும்.

இதே சமயம் எதிர்வரும் 23ம் திகதி சென்னையில் திட்டமிட்டபடி அ.தி.மு.க பொதுக் குழு மற்றும் செயற்குழு கூட்டம் நடத்தப்படுமா என்பதில் இழுபறி நிலையே காணப்படுகிறது. இக் கூட்டம் நடத்தப்படக் கூடாது எனக் கோரும் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. பொதுக் குழுவில் எவை எல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்ற பட்டியல் ஒரு புறமிருக்க, அ.தி.மு.கவுக்கு ஒற்றைத் தலைமை அவசியமா அல்லது இரட்டைத்தலைமை அவசியமா? என்ற கேள்வியே பெரிதாக எழப்போகிறது என்பதால் தான் எடப்பாடித் தரப்பும் பன்னீர் செல்வம் தரப்பும் தீவிர பேச்சு வார்த்தைகளிலும், மாவட்டச் செயலாளர்களை வளைப்பதிலும் ஈடுபட்டுள்ளன.

அ.தி.மு.கவின் வீழ்ச்சிக்கு இரட்டைத் தலைமையே காரணம் என்பது அக் கட்சியில் பரவலாகக் காணப்படும் கருத்தாகும். தி.மு.கவுக்கு எதிராக போதுமான அளவுக்கு செயற்படாமலும், பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையாலேயே விமர்சிக்கப்படும் அளவுக்கு சிறுமை அடைந்ததற்கும் இரட்டைத் தலைமையே காரணம் எனக் கட்சிப் பிரமுகர்கள் கருதுகின்றனர். எனவே இரட்டைத் தலைமை என்பதை கட்சி யாப்பில் இருந்து நீக்கிவிட்டு தலைவர், செயலாளர் என்ற பழைய முறையை மீள் அறிமுகம் செய்ய வேண்டும் என்று கட்சி நிர்வாகிகளும் மாவட்டச் செயலாளர்களும் கருதுகின்றனர். இரட்டைத் தலைமை நீடிக்கும் வரை அது சசிகலாவுக்கு வாய்ப்பானதாகவே இருக்கும் என்பது மற்றொரு காரணம்.

ஆனால் இங்கே கேள்வி, யார் கட்சியின் தலைவராகப் போகிறவர் என்பது தான்! இன்றைய நிலவரப்படி, 23ம் திகதி கூட்டத்தில் யாரைத் தலைவராகத் தெரிவு செய்வது என்பது வாக்கெடுப்புக்கு விடப்படுமானால் பெரும்பாலும் வெற்றி பெறப்போகிறவர் எடப்பாடி பழனிச்சாமியாகவே இருக்கப்போகிறார். எடப்பாடியுடனான பன்னீர் செல்வத்தின் இதுவரையிலான நேரடி மோதல்களில் தொடர்ந்தும் எடப்பாடியாரே வெற்றி பெற்று வந்துள்ளார். மாவட்டச் செயலாளர் மத்தியிலும் எடப்பாடியாருக்கே செல்வாக்கு நிலவுகிறது. பன்னீர் செல்வத்திடம் இல்லாத ஒரு தோற்றத் கவர்ச்சியும், சமாளித்துப் போகின்ற தன்மையும், தொண்டர்களை கையாளத் தெரிந்த சூட்சுமமும் எடப்பாடிக்கு கைவந்த கலை என்பது உண்மையே. பன்னீர் செல்வத்தின் பாணி தொண்டர்களிடம் பெரிதாக எடுபடுவதில்லை.

எனவே, இக்கூட்டம் நடைபெற்று ஒற்றைத் தலைமைதான் வேண்டும் என்ற கோரிக்கை ஏற்கப்பட்டால், எடப்பாடியாருக்கே வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. அவ்வாறு நிகழுமானால் பன்னீர் செல்வத்தின் நிலை, எதிர்காலம், என்னவாகும்? எடப்பாடியாரின் கீழ் ஒரு கட்சி முக்கியஸ்தராகக் காலம் கழிப்பாரா அல்லது தன்னுடைய ஆதரவாளர்களை அழைத்துக் கொண்டு தனிக்கட்சி அமைத்து சசிகலாவுடன் கூட்டு வைத்துக் கொள்வாரா? இது பன்னீர் செல்வத்தின் அரசியல் வாழ்க்கைக்கு வைக்கப்படும் வேட்டாக அமையலாம். எனவே அவர் ஏதாவது செய்தாக வேண்டும். கடைசி முயற்சியாக. பன்னீர் செல்வம் என்ன செய்யப் போகிறார் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



# மக்கள் மனங்களில் என்றும் நிறைந்த முக்காலமும் அறிந்த மனிதர் டட்லி

**நான் டட்லி சேனநாயக்கவை முதன் முதல் 1970 ஆம் ஆண்டிலேயே சந்தித்தேன். டட்லி சேனநாயக்கவின் "தேசிய அரசு" தோல்வியடைந்த சந்தர்ப்பத்தில் நான் உள்ளிட்ட கொழும்பு ஆனந்தா கல்லூரி மாணவர்கள் சிலரும் அவரை "வுட்லண்ட்ஸ்" தனியார் இல்லத்தில் சந்தித்தோம்.**

அவ்வேளையில் ஆனந்தாவில் கம்யூனிஸ்ட், லங்கா சமசமாஜ கட்சி,ஜே. வி .பி வகுப்புகளுக்கு செல்லும் மாணவர்கள் இருந்தார்கள். அந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாத நாம் "ஜனநாயக மாணவர் அமைப்பு" என்னும் அமைப்பை உருவாக்கி இருந்தோம். எமது கொள்கைகளுடன் இணைந்த கட்சியாக கருதிய ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கத்தில் நாம் டட்லி சேனநாயக்கவை சந்தித்தோம். நாம் எமது வேண்டுகோளை அவர் முன் வைத்தோம். எமது கோரிக்கைக்கு அவர் இவ்வாறு பதிலளித்தார். "நீங்கள் தற்போது பாடசாலைக்கு செல்லும் வயதில் உள்ளவர்கள். இப்போதே அரசியலில் ஈடுபட வேண்டாம். நன்றாக படியுங்கள். பல்கலைக்கழகம் சென்று வந்த பின்னர் அரசியலில் ஈடுபடலாம். நாம் உங்களுக்கு அவ்வேளையில் நல்ல சந்தர்ப்பத்தை பெற்றுத் தருகின்றோம்."

அந்த வார்த்தைகளில் இருந்து அவருடைய நம்பகத்தன்மை, நேர்மை தெளிவாக புரியும். தனது அரசியல் லாபம் கருதி மாணவர்களை பகடைக்காய்களாக்க அவர் தயாரில்லை. அவரின் பதிலால் பின்வாங்காத நாம் எமது கருத்தை தீவிரமாக அவர் முன் வைத்தோம்.

"நீங்கள் இந்த நிலைப்பாட்டில் இருந்தால் வெகு விரைவில் இந்த நாடு கம்யூனிஸ்ட் நாடாக மாறிவிடும். அடிப்படைவாத அரசியல் சக்திகள் பாடசாலைக்குள் நுழைந்து வகுப்புகளை நடத்தி இளம் மாணவர்களை மூளைச் சலவை செய்து வருகின்றன.

நாம் முன் வைத்த விடயங்களின் தீவிரத்தை அவர் புரிந்துகொண்டார்."சரி எனக்கு இரண்டு வாரங்கள் அவகாசம் தாருங்கள் நான் யோசனை செய்து உங்களை மீண்டும் சந்திக்கிறேன்" என கூறினார்.

இரண்டு வாரங்கள் முடிவடைவதற்கு முன்னரே எமக்கு அவரிடமிருந்து அழைப்பு கிடைத்தது. இம்முறை அவரை சந்திக்க வேறு சிலரையும் அவர் அழைத்திருந்தார். ஆரம்ப சந்திப்பில் அவர்களுடனிருந்த கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைமை செயலாளர் ஜினதாச நியதபாலவுடன் பேராசிரியர் திலக் ரத்னகார, ஜே .ஆர் .பி சூரிய பெரும மற்றும் இளம் பல்கலைக்கழக விரிவுரையாளரான கருணாசேன கொடித்துவக்கு ஆகியோரும் அவருடன் இருந்தார்கள். "நீங்கள் கூறிய விடயம் குறித்து நாம் சிந்தித்தோம். நாம் கட்சியாக மாணவர் அமைப்பு ஒன்றை ஆரம்பிக்க மாட்டோம். ஆனால் நீங்கள் ஆரம்பித்துள்ள ஜனநாயக மாணவர் அமைப்புக்கு உதவி செய்ய முடிவு செய்துள்ளோம். அதன்படி கட்சி சார்பில் இந்த நான்குபேரையும் உங்களுக்கு தேவையான வழிகாட்டுதல்களையும் உதவிகளையும் அளிப்பதற்காக நியமித்துள்ளோம்."



அன்று டட்லி சேனநாயக்கவுடன் ஏற்படுத்திக்கொண்ட தொடர்பு நீண்ட அரசியல் பயணமாக ஆரம்பமாகியது. இன்றும் எனது அரசியல் வாழ்க்கையில் எடுத்துக்காட்டான பாத்திரமாக எனது தந்தையும் டட்லி சேனநாயக்கவுமே உள்ளார்கள். அவரது எளிமை, எளிமையான வாழ்க்கை, தேசத்தின் மீது, நாட்டு மக்கள் மீது கொண்ட அன்பு, நேர்மை மற்றும் கருணை ஆகியவற்றில் நாட்டு மக்கள் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர்.

இளம் அரசியல்வாதியாக இலங்கைக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்ட டட்லி சேனநாயக்கவும் அவரது நண்பரான ஜே.ஆர் .ஜயவர்தனவும் இரண்டாம் உலகப் போரின் போது பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு எதிராக ஜப்பானுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டை முன்னெடுத்தார்கள்.

சுதந்திர இலங்கையில் முதலாவது விவசாய மற்றும் காணி அமைச்சராக நியமிக்கப்பட்ட டட்லி சேனாநாயக்கவுக்கு முதல் சவால் இலங்கைக்கு முதலாவது பல்நோக்கு திட்டமான கல்லோயா பல்நோக்கு திட்டத்தை ஆரம்பித்து வைப்பதாகும். கல்லோயா திட்டத்தின் கீழ் இலங்கையில் அதுவரை அமைக்கப்படாத பாரிய நீர்த்தேக்கமான ஏக்கர் அடி 770,000 நீர் கொள்ளளவு கொண்ட இங்கினியாகல சேனாநாயக்க சமுத்திரம் அமைக்கப்பட்டு 120,000 ஏக்கர் வயல் காணிகளில் பெரும் போகத்தை தொடர்ந்து செய்யக்கூடிய நீர்ப்பாசன வசதி அதன் மூலம் கிடைத்தது.

பிரதேசத்துக்கு தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காகவும் நீர் மின்சார உற்பத்தி நிலையம் ஒன்றும் அதன் கீழ் அமைக்கப்பட்டதோடு சீனி தொழிற்சாலை உள்ளிட்ட கைத்தொழில் அபிவிருத்திக்கும் அடித்தளம் இடப்பட்டதோடு அத்திட்டத்தின் மூலமே அம்பாறை மாவட்டம் அதிகளவு நெல் உற்பத்தி செய்யும் மாவட்டமாக மாறியது.

கல்லோயா திட்டத்தை தவிர 1948 ஆம் ஆண்டு முதல் வரவு செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்ட 6 வருட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் உடவளவை பல்நோக்கு திட்டத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இரண்டாவதாக 1947 தொடக்கம்1952 காலப்பகுதியில் விவசாய ஆராய்ச்சி நிறுவனங்கள் மகா இலுப்பல்லம,அம்பாறை ,போம்புவல,கந்தளாய் போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட தோடு பதலேகொட மத்திய அரிசி ஆய்வு நிறுவனமும் ஆரம்பிக்கப்பட்டது. இன்று இந்த நிறுவனங்கள் மூலமே உயர்ந்த தரமான விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது.

1956 இனவாத கலவரத்தின் பின்னர் தேசிய ஐக்கியத்தை மீளக் கட்டியெழுப்ப தேசிய அரசை உருவாக்கினார். இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக பெடரல் கட்சியையும், தமிழ் சங்கத்தையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் போன்ற தமிழ் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து தமிழ் கட்சிகளும் அதில் அடங்கியிருந்தன. இலங்கையில் மார்க்சியத்தின் தந்தை என அழைக்கப்படும் பிலிப் குணவர்தனவும், ஜே.ஆர். ஜெயவர்தனவும் இலங்கையில் மாத்திரமன்றி தெற்காசியாவிலும் திறந்த பொருளாதார சீர்திருத்தங்களை முதன்முதலில் அறிமுகப்படுத்தினார்கள். இன்றைய சிங்கள அடிப்படைவாத அரசியலின் அடையாளமாக கருதப்பட்ட கே. எம் .பி ராஜரத்ன மற்றும் குசுமா ராஜரத்ன ஆகியோரையும் தன்னுடைய ஆட்சியில் டட்லி சேனநாயக்க இணைத்துக்கொண்டார். அனைத்து அடிப்படைவாத கருத்துக்களைக் கொண்ட அவர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொண்டு ஐந்து வருடங்கள் தனது ஆட்சியை நடத்தி சென்றது எதனைக் காட்டுகின்றது என்றால் டட்லி சேனநாயக்காவின் முதிர்ச்சியையும் நடுநிலையான அனுபவமிக்க நம்பிக்கையான குணத்தையும் காட்டுகின்றது.


டட்லி சேனநாயக்கவின் பொருளாதாரக் கொள்கைகள் சந்தைப் போட்டியை எதிர் கொள்ள முடியாத விவசாயிகள் உட்பட, சிறு வியாபாரிகள், பணம் இல்லாத வறிய மக்களை அரச உதவியுடன் பாதுகாக்கும் வகையில் நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கையை டட்லி சேனநாயக்காவின் பொருளாதார கொள்கையில் தெளிவாக காணக்கூடியதாக இருந்தது. அவரின் பொருளாதாரக் கொள்கைகள் மூலம் தெளிவாக தெரிவது என்னவென்றால் லிபரல் ஜனநாயகவாதியாக அல்லாமல் சமூக ஜனநாயகவாதியாவே அவர் அறியப்பட்டார். திறந்த பொருளாதார சக்திகளுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தாலும் அந்த போட்டித்தன்மை மூலம் பின்னடைவை சந்திக்கும் பிரிவினரை பாதுகாப்பதற்காகவும் பாதுகாப்பு விதிமுறைகளை அறிமுகம் செய்து மக்களை நேசித்த அரசியல்வாதியாவார்.

டட்லி சேனநாயக்க தொடர்பாக இன்னும் ஒரு கதை ஞாபகத்தில் உள்ளது. இதனை கூறியவர் இன்றும் எம்முடன் வாழ்ந்து கொண்டிருப்பவரான கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு ஆவார்.

ஒரு முறை கருணாசேன கொடிதுவக்கு கைத்தொழில் அமைச்சராக இருந்த வேளையில் சுகவீனமுற்றிருந்த பிலிப் குணவர்தனவை பார்க்கச் சென்றார். அவ் வேளையில் பிலிப் குணவர்த்தன டட்லி சேனநாயக்கவுடன் இருந்த நட்பை ஞாபகப்படுத்தி இருந்தார்.

"கரு டட்லி என்பவர் உன்னதமான மனிதர் அதேபோன்று சிரேஷ்ட மக்கள் தலைவர் அவருடன் நான் மிகக் குறுகிய காலமே பணியாற்றி இருந்தேன்.

(15ஆம் பக்கம் பார்க்க)



இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் (MP) ...
தமிழில்: வீ.ஆர்.வயலட்

# கவிதை என்பது...!

கவிதை, அது
காலத்தின் கண்ணாடி
கவிதையால் – நீ
நற்கருத்துக்களை வை
மக்கள் முன்னாடி
கவிதை,
கல்லுக்குள் இருக்கும்
ஈரத்தையும்
கருத்தினில் காட்டும் கருவி
கவிதை,
பூவிதழால்
கலங்கிடும்
இதயத்தை வருடிடும்
இனிய பரவசம்
கவிதை,
போராட்ட வீரனின்
போர் வாள்
புரட்சியாளர்களின்
உரிமைக் குரல்
அரசியல் வாதியின்
ஆயுதம்
ஆட்சியாளர்களின்
அதிகாரம்
தீயதை தீய்க்கும் தீ.
கவிதை,
பூவுக்குள் இருக்கும்
பூகம்பத்தையும் காட்டும்
பூகம்பத்தில்புதையும்
புதையலையும்
வெளிக் கொணரும்
கவிதை,
தீமைகளை
தூள்தூளாக்கும்
வெடிமருந்து!
அக்கிரமத்தை
அழித்தொழிக்கும்
அணுகுண்டு!
கவிதை,
பசிக்கு உணவு
நோய்க்கு மருந்து
கவலைக்குக் கண்ணீர்
களிப்புக்குப் பன்னீர்
கவிதை,
காரிருளில் வெளிச்சம்
கன மழையில் குடை
கடும் வெயிலில் நிழல்
கோடையில் மழை
இரவில் கதிரவன்
பகலில் சந்திரன்
கவிதை,
காதலை வளர்க்கும்
கல்யாணத்தை வரவேற்கும்
தம்பதிகளைவாழ்த்தும்
தலை சிறந்து வாழ
தனிவழி சொல்லும்
கவிதை,
அன்போடு வருடிச்செல்லும்
தென்றல் காற்று
அராஜகத்தை
அடித்து நொறுக்கும்
சூறாவளி
கவிதை,
கனக்கும்இதயத்துக்கு கனிவு
தகிக்கும்ஜூவாலையில் தணிவு
கற்கும் மாணவருக்கு பணிவு
வெற்றி வீரனுக்கு துணிவு
எதை வாசித்தால்
சிந்தனை சிலிர்த்து
நற்கருத்துக்கள்பிறக்குமோ
அது கவிதை!
எதைப்படித்தால்
நற்பண்புகள் வளர்ந்து
பாசம் பிறக்குமோ
அது கவிதை!
எது அதர்மத்தை அழித்து
தர்மத்தை வளர்க்குமோ
அது கவிதை!
கவிதை, அது
காலத்தின் கண்ணாடி
கவிதையால் – நீ
நற்கருத்துக்களை வை
மக்கள் முன்னாடி



இலக்கியச் செம்மல், கலாபூஷணம்
சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ்

# கொழும்பு–யாழ்ப்பாணம் புதிய ரயில் சேவை



ஆ.கனகசூரியர்...

**நமது நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி மிக்க, கால கட்டத்தில் நாடளாவிய ரீதியில் பொதுப் போக்குவரத்து சேவைகளும் வெகுவாகப் பாதிப்படைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. எரிபொருள் பற்றாக்குறையே இத்தகைய நிலைமைக்கு காரணம் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். இந்த நிலையில் பொதுமக்கள் தங்கள் பயன்பாட்டுக்கு ரயில் போக்குவரத்தை அதிகளவில் நாடிவருவதும் குறிப்பிடத்தக்க செய்தியாகும். தெருவில் பயணிக்கும் போக்குவரத்து வாகனங்களைவிட ரயில் குறைந்தளவு கட்டணத்துடன் ஒரே தடவையில் அதிகமான பயணிகளை ஏற்றிச்செல்லும் வசதியை கொண்டிருப்பது சிறப்புக்குரியது.**

இவ்வேளையில் இலங்கை ரயில்வே திணைக்களம் பொதுமக்களின் நலன்கருதி கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு புதிய வார இறுதி ரயில் சேவையொன்றை நேற்று முன்தினம் (17ஆம் திகதி) ஆரம்பித்திருப்பது பலரது பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. இது தொடர்பாக யாழ்ப்பாணம் ரயில் நிலைய பிரதம அதிபர் தி. பிரதீபன், ஊடகவியலாளர் சந்திப்பின் போது "தற்போதுள்ள பொருளாதார நெருக்கடியினை கருத்தில் கொண்டு புதிய இரவுநேர நகர்சேர் கடுகதி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இதற்கான ஒரு வழிக் கட்டணமாக 2800/= ரூபா அறவிடப்படும். பயணிகள் முன்பதிவு செய்துகொண்டு பயணத்தை மேற்கொள்ள வேண்டும். இன்றைய காலகட்டத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் என நம்புகிறோம்" என்று தெரிவித்திருக்கிறார்.

முற்றிலும் குளிரூட்டப்பட்ட மேற்படி நகர்சேர் கடுகதி ரயில் பத்து பெட்டிகளுடன் 520 ஆசனங்களையும் கொண்டது. இது ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் இரவு 10.00 மணிக்கு கல்கிசை ரயில் நிலையத்திலிருந்து புறப்படும். தெஹிவல, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி ஆகிய ரயில் நிலையங்களில் தரித்து நின்று பயணிகளை ஏற்றிக்கொண்டு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தை இரவு 10.25 மணிக்கு சென்றடையும். பின்னர் அங்கிருந்து 10.30க்கு புறப்படும். மட்டுப்படுத்தப்பட்ட சில ரயில் நிலையங்களில் மட்டும் நிறுத்தப்படுவதுடன் அதிகாலை 5.25மணிக்கு யாழ். ரயில் நிலையத்தையும் 5.55க்கு காங்கேசன்துறை ரயில் நிலையத்தையும் சென்றடையும்.

இந்து நகர்சேர் கடுகதி ரயில் மீண்டும் ஞாயிற்றுக்கிழமை இரவு 10.00 மணிக்கு காங்கேசன் துறை ரயில் நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும். இரவு மணி 10.25க்கு யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை சென்றடைந்து புறப்படும். இரவு 12.40 மணி அளவில் வவுனியா வந்தடையும் அதிகாலை 5.25மணிக்கு கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தையும், காலை மணி 5.55க்கு கல்கிசை ரயில் நிலையத்தையும் சென்றடையும்.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பல ரயில்கள் சேவையில் ஈடுபட்டுவந்த நிலையில் கொரோனா பெருந்தொற்று காலத்தில் ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. இதற்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு அதிகாலை 4.00 மணிக்கு சிறிதேவி கடுகதி ரயில், காலை 6.10மணிக்கு உத்தரதேவி ரயில் காலை மணி 9.45க்கு யாழ்தேவி ரயில், இரவு தபால் ரயில் என்பன நாளாந்தம் சேவையில் ஈடுபட்டிருந்தன. அதுபோலவே கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கும் அதே ரயில் சேவைகள் தினமும் இடம் பெற்றுவந்தன. அத்துடன் தினமும் அதிகாலையில் கொழும்பிலிருந்து புறப்படும் குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயில் நண்பகல் யாழ்ப்பாணத்தை வந்தடைந்து, மீண்டும் பகல் 1.45 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பை நோக்கி பயணத்தை ஆரம்பிக்கும்.

இப்போது யாழ்தேவி, உத்தரதேவி குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ஆகிய மூன்று ரயில் சேவைகள் மட்டுமே நாளாந்தம் இடம் பெற்றுவருகின்றன. குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி ரயிலும், யாழ்தேவி ரயிலும் கல்கிசையிலிருந்து காங்கேசன் துறை வரைக்கும், உத்தரதேவி ரயில் கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன் துறைவரைக்கும் சேவையை மேற்கொள்கின்றன. இப்போது வார இறுதி புதிய ரயில் சேவையும் இதனுடன் இணைந்துள்ளது.

இலங்கை ரயில் சேவை வரலாற்றில் 1956ஆம் ஆண்டு ஒரு மறுமலர்ச்சி காலமாக அமைந்திருந்தது. நீராவி என்ஜின்களுடன் டீசல் என்ஜின்களும் பயன்பாட்டுக்கு வந்தன அப்போது ரயில்வே பொது முகாமையாளராகப் பதவி வகித்த பி.டி. ரம்பாலா என்பவரின் ஆலோசனைக்கு அமைய டீசல் என்ஜினைப் பயன்படுத்தி மூன்று புதிய கடுகதி சேவைகள் ஏககாலததில் ஆரம்பிக்கப்பட்டன.

(15ஆம் பக்கம் பார்க்க)

# இப்போதைக்கு என்னதான் முடிவு இப் போதைக்கு...?

(கடந்த 14.06.2022 வகவம் ஒலி, ஒளித்தொகுப்பிலிருந்து....)

பெண் குழந்தை பெற்றெடுத்த பெற்றோரெல்லாம்
பெரும் பீதி யோடுள்ளார்! போதை வஸ்த்தால்
கண்ணிழந்த காமுகர்கள் கொடூர மாகக்
குழந்தைகளைக் கொல்லுகின்றார்! தேசம்... நாசம்!

மண்ணிலிருந்து மாபாத கக்குற் றங்கள்
மதுபோதை யால்வந்த விபரீதங்கள்!
புண்ணியமாய்ப் போகுமையா போதை வஸ்த்தைப்
பூண்டோடு ஒழிப்பதற்கு முன்வாருங்கள்!

சிங்களமோ கிறிஸ்தவமோ தமிழ், முஸ்லீமோ...
சிறுவர்கள்! செல்லங்கள்! நம்செல் வங்கள்!
இங்கவரைச் சிதைப்போரை இலங்கை யர்நாம்
இன்றொன்றாய்ச் சேர்ந்தொழித்தல் சமூகத் தேவை!

நங்கி, மகள், பேத்திகளும் நாச மாகும்
நாட்டு நிகழ் காலநிலை ஆக மோசம்!
பொங்கி யெழ வேண்டுமிதற் காக நாமே!
பொறுப் பற்றுப் போய்விட்டால் தொடரும் தீமை!

சாராயம் குடு, கஞ்சா ஐஸ் என் றிந்தத்
தலைக்கேறும் போதையினால் மிருக மாகிக்
கூராயு தங்கொண்டு குரூர மாகக்
குழந்தைகளின் உயிர்குடிக்கும் அரக்கர் கூட்டம்!

பேராபத் தில்லிருந்து தேசங் காக்கப்
பின்வருவோர் அவசரமாய் முன்வாருங்கள்!
பேராயர் மத குருமார், குருக்க ளோடு
மௌலவிமார், தலைவர்கள் பொலிஸாரோடு!

எங்கேயோ எவருக்கோ.... நமக்கெற்கு
எனுமெண்ண மிங்கெவர்க்கு மிப்போ தில்லை!
பங்கமெவர்க் கென்றாலும் பங்கு கொண்டார்!
பதாகையுடன் போராடிப் பாதை நின்றார்!

சங்கடங்கள் இல்லாமல் சந்தோ ஷம்மாய்...
துயரகன்று சகலருமே சுதந்திரம்மாய்
மங்களமாய் வாழ்ந்திடத்தான் மிகவிருப்பம்! மது
மயக்கமிலா நாடுவரின் வாழ்வு சொர்க்கம்!

வெளிநாடு தாய்போனாள்! வெறியில் தந்தை
வீட்டுக்குள் மகளுக்கே எமனாய்ப் போனார்!
கிளிப்பேடு பூனைக்கு இரையாய்ப் போகும்...
ஜீரணிக்க வியலாத கதைகள் நூறு!

விழிப்போடு நாமெல்லாம் போதை வஸ்த்தை
விரட்டுவதற் கொன்றிணைந்தால் முடிவு கிட்டும்!
வெளிப்பாடு வெறும்பேச்சில் முடிந்திடாமல்...
விரைவாகச் செயற்பட்டால் விடிவு கிட்டும்!

கிண்ணியா அமீர் அலி...

# உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல் மூலம் வன பாதுகாப்பை ஊக்குவித்தல்




## இலங்கையில் வடக்கின் விலைமதிப்பற்ற இயற்கை வளங்களின் சிறந்த முகாமைத்துவத்தை உறுதிப்படுத்துகிறது...

By Ridmi de Silva of Ecosystem Conservation and Management Project

வெப்பமண்டலக் காடுகள், வற்றாத நதிகள், சதுப்பு நிலங்களைக் கொண்ட பல்வேறு சுற்றுச்சூழல் கட்டமைப்புகள் மற்றும் கடற்கரை சுற்றுச்சூழல்.... ஆகியவை எமது நாடு இயற்கை அழகுடைய பூமியின் கொடை என்பதற்கு ஆதாரம்.

மனிதச் செயற்பாடு காரணமாக நாளுக்கு நாள் தேய்ந்து வரும் இயற்கை அழகின் கொடையை பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவதற்கு, ESCAMP எனும் சுற்றுச்சூழல் அமைப்புகள் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ திட்டத்தின் மூலம் முக்கிய அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

காலத்துக்குக் காலம் நிர்மாணிக்கப்பட்ட குளங்கள் மற்றும் பண்டைய மன்னர்களால் நிர்மாணிக்கப்பட்ட முழுமையான நீர்ப்பாசன கட்டமைப்பினால், இலங்கையின் வடக்கு பிராந்தியத்துக்கு முக்கிய பெறுமதி கிடைத்திருப்பதோடு, வடக்கின் தாகத்தை போக்குகின்ற நீர்ப்பாசன வளமாகவும் இந்த குளக்கட்டமைப்பு உள்ளது.

அதேபோன்று, வன்னி காட்டு நிலப் பகுதியின் நான்கில் மூன்று அளவு பகுதியில் பரந்திருக்கும் மறைப்புப் போன்ற அழகான காட்டுப் பகுதி, வடக்கு ஓமந்தை தொடக்கம் பரந்தன் ஊடாக 180,000 ஹெக்டெயார் அளவு பரந்துள்ளது. அதேபோன்று கடற்கரை எல்லை கிழக்குத் தொடக்கம் மேற்கை இணைக்கிறது. இந்த வன்னிக் காடு விரிவான முறையில் மூன்று வகையில் பிரிந்துள்ளது.

எவ்வாறாயினும், 20 ஆம் நூற்றாண்டில் கட்டுப் பகுதிக்கு உள்ள அச்சுறுத்தல்கள் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மக்கள்தொகை மற்றும் நீண்ட காலப் போர் காரணமாக குறிப்பிடத்தக்க காட்டுப் பகுதிகள் அழிக்கப்பட்டது மற்றும் ஆக்கிரமிப்புகள் இடம்பெற்றிருப்பதோடு, சட்டவிரோத மரம் வெட்டல் மற்றும் சேனைப் பயிர்ச்செய்கை, மணல் மற்றும் களிமண் அகழ்தல், குப்பைகளை அகற்றல், காட்டுத்தீ, விரகு சேகரிப்பது, யானைகளால் ஏற்படும் சேதங்கள் மற்றும் மாடுகளுக்காக புற்கள்... ஆகிய காரணங்கள் பலதும் அதிகரித்து வரும் அழிவுக்கு வழிவகுத்துள்ளன.













அதேபோன்று புதிய குடியேற்றங்கள், உட்கட்டமைப்பு வசதிகளின் மேம்பாடு மற்றும் இராணுவ முகாம்கள் அமைத்தல் காரணமாக போருக்குப் பின்னரான காட்டின் அழிவும் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. வட மாகாணத்தின் மனித வாழ்வுக்கு போன்று இயற்கை வளங்களுக்கு இவ்வாறான அழிவு ஒன்று ஏற்படுவதற்கு முப்பது ஆண்டுகள் நீடித்த போரும் காரணமாக உள்ளது. போருக்குப் பின்னரான காலத்தில் பஞ்சத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு தமது இருப்புக்காக சாத்தியமான மாற்றுத் தீர்வுகள் அவசியமாக உள்ளன. பயனுள்ள துறைசார் செயற்பாடு ஒன்றை நிறுவுதல் மற்றும் அவ்வாறு வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்காக வாழ்க்கை வழிகாட்டல் ஒன்றை உருவாக்குவதற்காக வலுவான குழு ஒன்றுடன் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் சேவைகளை வரிவுபடுத்தல், பலப்படுத்தப்பட்டிருப்பது இவ்வாறான பின்னணியிலாகும்.

வடக்கில் சிங்கள மற்றும் தமிழ் மக்களிடையே பிணைப்பை பலப்படுத்துவதற்கு அபிவிருத்தி செயற்பாடுகளின் வெளிப்பாடு ஒருங்கிணைக்கப்பட்டதோடு, பிராந்தியத்தின் பேண்தகு அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்துள்ளது. வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கோணத்தில் பார்க்கும்போது, வட மாகாணத்தில் இருந்த பிரதான சவாலாக துறைசார் மட்டத்திலான செயற்பாட்டுக்கு தங்குமிடம், அலுவலகம், போக்குவரத்து, தொடர்பாடல் மற்றும் வேறு உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற போதுமான வசதிகள் இல்லாமையாகும்.


வடக்கு காடுகளில் பயனுள்ள முகாமைத்துவத்திற்காக, போதுமான பணிக் குழு ஒன்று இல்லாதிருப்பதும் சிக்கலானதாக இருந்தது. பல்வேறு அமைப்புகள் மூலம் காட்டு நிலங்களில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகள் காரணமாக வடக்கின் வனப் பாதுகாப்புக்கு ஒருசில தடங்கல்கள் ஏற்பட்டன. காட்டுப் பகுதிக்கு தற்காலிக அனுமதி மற்றும் காட்டுப் பகுதிக்கு மீள்குடியேற்றுவதும் அவதானிக்கப்பட்டுள்ளது. போருக்குப் பின்னரான வேலையின்மை, வசதிகளில் குறைபாடு மற்றும் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பில் சில தரப்புகளின் பிற்போக்கான பார்வை காரணமாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் தீவிர பஞ்ச நிலை வனப் பாதுகாப்பின் தவறுகள் அதிகரிப்பதில் நேரடி தாக்கம் செலுத்தியது. காடுகளை வெட்டவெளியாக்குவது மற்றும் வெடிப்புகள் போன்று பதுங்கு குழிகள் மற்றும் முகாம்கள் அமைப்பதன் விளைவாக அந்தக் காலப்பகுதியில் வட மாகாணத்தின் காடுகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது.

எவ்வாறாயினும், காலத்தின் போக்கில் மனிதனால் உருவாக்கப்பட்ட சவால்களில் இன்று முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. போர்க் காலத்தில் வடக்கில் காடுகளை பாதுகாப்பதில் பாரதூரமான சிக்கல்கள் ஏற்பட்டதோடு, துறைசார் அதிகாரிகளின் பற்றாக்குறை வனப் பாதுகாப்பு வட்டத்தில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. அவர்களுக்கு அலுவலகம் மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்பட்டிருக்கும் குறைந்த அளவான வசதிகளின் கீழ் வனப் பாதுகாப்பு அதிகாரிகள் மூலம் உயிரை பணயம் வைத்து மிக முக்கியமான வன பாதுகாப்புப் பணிகளை மேற்கொண்டு வந்தனர். அவர்களின் பாதுகாப்பு செயற்பாடுகள் காரணமாக மோசமான அழிவு ஒன்று ஏற்படாதபோதும், குறிப்பாக முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி காடுகளை பராமரிப்பதற்கு ஓய்வுபெற்ற வன அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், இந்தப் பிராந்தியத்தில் காடுகளின் அழிவு காரணமாக மோதல் இடம்பெற்ற காலத்தில் தரம் குறைந்திருப்பது தெளிவாகிறது. போர் முடிவில், விவசாய காடு வளர்ப்பை அடிப்படையாகக் கொண்ட வருவாய் வாய்ப்பு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் மக்கள் காடு வளர்ப்பு திட்டம் (CFP) என காடு வளர்ப்பு சார்ந்த செயற்பாடுகள் 2012இல் வன்னியில் மேற்கொள்ளப்பட்டது. கிளிநொச்சி மற்றும் பூநகரியில் காடு வளர்ப்பு செயற்பாடு இன ரீதியான அழுத்தங்களை போக்குவதற்கு உதவியதோடு, அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகள் தடங்கல் இன்றி இடம்பெறுவதற்கு வசதியாக இருந்தது.

தற்போது, புதிதாக சேர்க்கப்பட்ட வன பாதுகாப்பு அதிகாரிகளின் வருகையுடன் வடக்கு வனப் பாதுகாப்பு செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஒன்றை பார்க்க முடிகிறது. என்றாலும், தவறான தொடர்பாடலுக்கு பதிலளித்தல் மற்றும் தவறாக வழிநடத்தப்பட்ட தமிழ் இளைஞர்களுக்கு உதவுவது ஆரம்பக் கட்டத்தில் தீர்க்கமான பணியாக இருந்தது. வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலம் பயனுள்ள திட்டப் பணிகளுக்காக தயாரிக்கப்பட்ட வலுவான முகாமைத்துவ முறைமை ஒன்றின் மூலம், அதற்கு அப்பால் சாதகமான வகையில் வெளிப்பட்டுள்ளது.

மோதலின் முடிவில் காடு வளர்ப்பு சார்ந்த செயற்பாடுகள் புத்துயிரூட்டும் ஒன்றாக இருந்தது. அது அறிவுபூர்வமான முதலீடாகும். வடக்கு மாகாணத்தில் 12 காலாண்டுகள் மற்றும் அலுவலக வசதிகளை மேம்படுத்துவதற்காக ESCAMP மூலம் 90 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. இதில் வன பாதுகாப்பு மற்றும் மக்கள் அபிவிருத்தியை பலப்படுத்துவதோடு, வலுவான தொடர்புகளை கட்டியெழுப்பி சுற்றியுள்ள மக்களுக்கு வனப் பாதுகாப்பு பணிகளுக்காக வாய்ப்பை வழங்குதற்கு, வன பாதுகாப்பு அதிகாரிகளுக்கு பயனுள்ள வகையில் பணியாற்றுவதற்காக உயர் தரத்திலான சேவை வாய்ப்பு மற்றும் பாதுகாப்பான மற்றும் சுத்தமான தங்குமிடத்தை உறுதி செய்ய வேண்டும். அதேபோன்று, பிராந்திய அதிகாரிகளுக்காக வசிப்பிடங்களை நிர்மாணிப்பதற்கும் இந்தத் திட்ட உதவி வழங்கியுள்ளது.

**நிகழ்வைக் காண QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**



வனஜீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம்

வன பாதுகாப்பு திணைக்களம்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ திட்டம்

இது தான், நீங்கள் எமக்கு எழுத வேண்டிய முகவரி:
ESCAMP திட்டப் பணிப்பாளர்,
இலக்கம் 82, ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல.
escamp.pd@gmail.com

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# முடக்கத்துக்கு மத்தியிலும் ஒளிக் கீற்றுக்காக காத்திருக்கும் மக்கள்







**இப்படியொரு நிலை வரப்போகிறது என்று 2014ஆம் ஆண்டிலிருந்தே இலங்கையின் பொருளியல் அறிஞர்கள் அரசாங்கத்தை எச்சரித்திருந்தனர். 2019 ஆட்சி மாற்றத்தின் பின்னர் கடன் தரமிடல் நிறுவனங்கள் தொடர்ச்சியாகவே இலங்கையின் கடன் நிலைபேறுடையதாக இல்லை என்று எச்சரிக்கை விடுத்து தொடர்ந்து தரமிறக்கம் செய்து வந்தன**

இலங்கையின் எரிபொருள் நெருக்கடி தீவிரமடைந்து அடுத்த கட்டங்களை நோக்கி நகர்கிறது. எரிபொருள் நிரப்பு நிலையங்களில் கையிருப்புகள் தீர்ந்துபோன பின்னரும் வாகனங்கள் அடுத்த எரிபொருள் பௌசர்கள் வருமட்டும் மிக நீண்ட வரிசைகளில் காத்து நிற்கின்றன. சிலவேளைகளில் நாட்கணக்கில் அவ்வாறு காத்திருக்க வேண்டியுள்ளது.

இவ்வாறான ஒரு நிலை லிபியா மற்றும் லெபனான் போன்ற நாடுகளில் ஏற்பட்டமையை சர்வதேச ஊடகங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டின. இப்போது இலங்கை அவ்வாறான ஒரு தீவிர எரி பொருள் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. வரி சையில் நிற்கும் வாகனச் சாரதிகள் தமக்கிடையில் சில ஏற்பாடுகளைச் செய்து கொண்டு ஷிப்ட் அடிப்ப டையில் ஒருவர் வரிசையில் நிற்க மற்றவர் தத்தமது அலுவல்களை முடிக்கச் சென்றுவரும் நிலையை காண முடிகிறது. வேறுசிலர் வாகனங்களை வரிசை யில் விட்டுவிட்டு தமது வேலைத்தலங்களுக்கு செல் வதையும் அவதானிக்க முடிகிறது.

கையிருப்பில் உள்ள எரிபொருளைப் பகிர்ந் தளிக்க துறைசார்ந்த அமைச்சு மென்பொருள் ஒன்றை அறிமுகப்படுத்தி எந்தெந்த எரிபொருள் நிலையங்களுக்கு குறித்த நாளில் எரிபொருள் விநி யோகம் நடைபெறும் என்பதை மக்களுக்கு அறி விக்க நடவடிக்கை எடுத்துள்ளது. ஆயினும் தொடர்ச் சியாக எரிபொருள் நிலையங்களுக்கு முன்னால் வாகனங்கள் காத்துக்கிடப்பதால் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விநியோகிக்கப்படும் எரிபொருள் ஒருசில மணிநேரங்களிலேயே தீர்ந்து போவதால் தொடர்ந் தும் வரிசைகள் நீடிக்கின்றன.

இப்போது நாட்டிலுள்ள பெரும்பாலான எரிபொ ருள் நிலையங்களில் எரிபொருள் கையிருப்புகள் இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் வாரம் இன்னுமொரு முப்பதாயிரம் பீப்பாய் எரி பொருளை இறக்குமதி செய்ய கடன் கடிதம் திறக்கப் பட்டுள்ளதாகவும் எதிர்வரும் வாரத்தில் அக்கப்பல் இலங்கைக்கு வரும் எனவும் கூறப்பட்டுள்ளது.

எனினும் இத்தொகைகள் நாட்டின் எரிபொருள் கேள்வியை சமாளிப்பதற்கு எவ்வகையிலும் போது மானதாக இருக்காது. போதியளவு டீசல் விநியோ கிக்கப்படாத காரணத்தினால் தனியார் பேருந்து சேவைகள் முடங்கும் அபாய நிலை உருவாகியுள் ளது. தனிப்பட்ட வாகனங்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளைப் பயன்படுத்துவதற்கான செலவுகள் எகிறியுள்ள நிலையில் பேருந்துச் சேவைகளையும் ரயில் போக்குவரத்தையும் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதனால் வங்காள தேசத்தில் பயணம் செய்வ தைப்போன்று பயணிகள் ரயில் பெட்டிகளின் மேல் ஏறி பயணிக்கும் அவலத்தையும் காண முடிந்தது. இந்நிலையில் பொதுப் போக்குவரத்தும் முடங்குமா யின் நாடு இயல்பாகவே முடங்கிப்போகும் நிலை ஏற்படும்.

எதிர்வரும் வாரம் பாடசாலைகள் உள்ளிட்ட நிறுவ னங்களுக்கு ஒன்லைன் மூலம் செயற்படுமாறு அறி வுறுத்தப்பட்டுள்ளது. நாட்டின் எரிபொருள் நெருக்க டியைக் கையாளப் போதுமான நிதி இல்லாமையே இந்த நிலை தொடரக் காரணம்.

இந்தியக் கடனுதவியின் கீழ் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான நிதி தீர்ந்து போயுள்ள நிலையில் அடுத்துவரும் வாரங்களில் எரிபொருள் தேவையை எவ்வாறு நாடு சமாளிக்கப்போகிறது என்பது தெரியவில்லை. எண்ணெய் வளமிக்க வளைகுடா நாடுகளிடம் உதவிபெறவேண்டும் என்று இப்போது யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திலுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகள் மேற்படி நாடுகளுடன் உதவி பற்றிப் பேசலாம். ஆயினும் இந்த நாட்டின் முஸ்லிம்கள் கடந்த காலங் களில் எதிர்நோக்கிய பிரச்சினைகள் குறித்து அந்த நாடுகள் நிச்சயம் அறிந்திருக்கும். எனவே இந்த முயற்சி எந்தளவு தூரம் வெற்றியளிக்கும் என்பதை இப்போதே கூறமுடியாது.

இலங்கைக்கு ஐக்கிய அமெரிக்காவின் ஆதரவு எப்போதும் உண்டு என அந்நாடு கூறியுள்ளது டன் சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றுடன் இலங்கை மேற்கொள்ளும் தொழில்நுட்ப ரீதியான விடயங்களைக் கையாள ஆறு மில்லியன் டொலர் களை நிதி உதவியாக வழங்கியுள்ளது. இவற்றை எரிபொருள் நெருக்கடிக்குப் பயன்படுத்த முடியாது.

இலங்கையின் தற்போதைய நெருக்கடிகள் மத்தி யிலே ஓரளவுக்கேனும் சுமுக நிலையை ஏற்படுத்த வேண்டுமாயின் குறைந்த பட்சம் 5 அல்லது 6 பில் லியன் அமெரிக்க டொலர்கள் தேவை. இத்தகைய ஒரு பெருந்தொகையை இப்போது இலங்கையால் நிச்சயமாகத் திரட்ட முடியாது. எனவே நட்பு நாடுக ளிடம் கடன் வாங்கித்தான் அன்றாட வாழ்க்கையை தொடர வேண்டியிருக்கும்.

இப்படியொரு நிலை வரப்போகிறது என்று 2014ஆம் ஆண்டிலிருந்தே இலங்கையின் பொரு ளியல் அறிஞர்கள் அரசாங்கத்தை எச்சரித்திருந் தனர். 2019 ஆட்சி மாற்றத்தின் பின்னர் கடன் தரமிடல் நிறுவனங்கள் தொடர்ச்சியாகவே இலங் கையின் கடன் நிலைபேறுடையதாக இல்லை என்று எச்சரிக்கை விடுத்து தொடர்ந்து தரமிறக்கம் செய்து வந்தன. ஒவ்வொரு தடவை தரமிறக்கம் செய்யபோ தும் அரசாங்கம் அதனைக்கடுமையாக எதிர்த்ததே யன்றி அந்த எச்சரிக்கையின் பாரதூரத்தன்மையை சற்றேனும் கவனத்திற் கொள்ளவில்லை.

இப்போது வங்குரோத்து நிலையை அடைந்த பின்னர் உலக சந்தையில் கடன்பெற முடியாத நிலையில் நாடுகளிடம் கையேந்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. நிச்சயமாக இந்த நிலைமை எதிர்பாராத உள்நாட்டு வெளிநாட்டு அதிர்ச்சிகளால் உருவாகியதல்ல. முன்கூட்டியே முன்னெச்சரிக்கை சமிக்ஞைகள் விடுக்கப்பட்டபோது அவற்றையெல் லாம் விட்டேத்தியாக ஒதுக்கிவிட்டு அதிகாரத் தடிப்பு டன் செயற்பட்ட அரசியல்வாதிகளினதும் அதிகாரிக ளினதும் அஞ்ஞானத்தால் விளைந்த ஒன்றாகும்.

கோரோணா கொள்ளை நோய், உக்ரைனிய யுத்தம் போன்றன நிலைமையை மோசமாக்க உதவினவேயன்றி அவை மூலக்காரணிகளல்ல. இப்போது IMF இன் உதவிகள் வருவதற்கான பேச்சு வார்த்தைகள் இடம் பெற்று வந்தபோதும் பணம் வந் துசேர இன்னும் காலமெடுக்கும். அதுவரை எப்படி இலங்கை நாட்களைக் கடத்தப்போகிறது பணத்தை எவ்வாறு தேடப் போகிறது என்பதே இப்போதுள்ள முக்கியமான கேள்வி. மறுபுறம் IMF நிதியுதவிகள் வழங்கினாலும் அவை இலங்கையின் நெருக்கடிக ளைத் தீர்க்கப்போதுமானவையல்ல. மாறாக கடன் தரமிடல் நிறுவனங்கள் இலங்கை யின் நிலைமையைத் தரமுயர்த்த அது உதவும். அதற்கு முன்னால் இலங்கை ஏற்கெனவே பெற்றுள்ள கடன்களை எவ்வாறு மீளச்செ லுத்தப் போகிறது என்ற பொறி முறையை இலங்கை கூறவேண் டும் அதனை IMF ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு இலங்கைக்குக் கடன் கொடுத்துள்ளவர்களும் ஒத் துக்கொள்ள வேண்டும்.

இவையெல்லாம் நடந்து முடிய மாதக்கணக்காகும். அதுவரையில் என்ன நடக்கப்போகிறது? இந்திய நிதி மற்றும் பொருளுதவிகள் உரியகாலத்தில் கிடைத்தபடியி னால் இவ்வளவுகாலமும் சமாளிக்க முடிந்தது. ஆனால் இவையும் மீளச் செலுத்தப்பட வேண்டிய கடன்களே.

இலங்கையின் பொருளாதாரம் மீட்சி பெற வேண்டுமாயின் மூன்று விடயங்களில் மீட்சி பெற வேண்டும். ஒன்று, இலங்கையின் சுற்றுலாத்துறை வழமைக்குத் திரும்ப வேண்டும் இரண்டு, வெளிநா டுகளில் பணியாற்றும் இலங்கையர்களின் பண அனுப்பல்கள் அதிகரிக்க வேண்டும். மூன்று, இலங் கைக்குள் வெளிநாட்டு முதலீடுகள் அதிகளவில் உள் வரவேண்டும்.

கொவிட் நோய் நிலைமைகள் கட்டுப்பட்டுள்ள போதிலும் எரிபொருள் நெருக்கடிகள் காரணமாக நாடு மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் கவர்வது கடினம். ஓய்வு தேடி வருபவர்கள் இங்குள்ள கஷ்டங்களைக் கண்டு ரசிக்கப்போவதில்லை. மறுபுறம் ஆட்சிமாற்றம் ஏற்படும் வரை இலங்கைக்குப் பணம் அனுப்பப் போவதில்லை என வெளிநாடுகளில் வாழும் பெரும் பான்மை இன இலங்கையர்கள் வெளிப்படையாக அறிவித்துள்ளனர். சிறுபான்மைச் சமூகத்தினர் மதில்மேல் பூனைகளாக உள்ளனர்.

பொருளாதார நெருக்கடிகளில் சிக்கி சின்னாபின் னப்பட்டு சீரழியும் ஒரு நாட்டில் அதற்குக் காரணமா னவர்கள் அதிகாரத்தில் இருக்கும் வரை வெளிநாட்டு முதலீடுகள் நாட்டுக்குள் வரப்போவதில்லை. இலங் கையின் வழமையான நட்பு நாடுகள் எல்லாமே உதவத் தயாராக இருப்பதாக அறிவித்துள்ளன. ஆனால் பைசா எதுவும் நகரவில்லை. கூட்டிக் கழித் துப்பார்க்கும் போது எல்லோருமே ஏதோ ஒரு சம்ப வத்திற்காகக் காத்திருப்பதாகத் தோன்றுகிறது. அது நிகழாதவரையில் எதுவும் நடக்கப்போவதில்லை.



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# பலமடையும் இந்திய–வியட்நாம் பாதுகாப்பு நெருக்கடிக்குள்ளாகும் சீன–இந்திய உறவு?

இந்தியாவின் கிழக்கு நோக்கிய பார்வை எனும் கொள்கையை முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் காலம் முதல் இந்தியா கடைப்பிடித்து வருகிறது. இந்தியாவின் ஆட்சியாளர்கள் அதனை பொருளதாதார நலனுக்கானதா கவும் சீனாவை எதிர்கொள்வதற்கானதா கவும் வடிவமைத்திருந்தனர். குறிப்பாக இந்தியா, தென் கிழக்காசியா மற்றும் கிழக்காசிய நாடுகளுடன் நெருக்கமான அரசியல் பொருளாதார, வர்த்தக, இராணுவ உறவை இதனூடாக உருவாக்கியது. இது சீனாவின் இந்து சமுத்திரம் நோக்கிய முத்துமாலைத் திட்டத்திற்கு எதிரானதாக வடிவமைக்கப்ப ட்டாலும் இந்தியாவின் பொருளாதாரத்தில் பாரிய வாய்ப்புக்களை தந்த திட்டமாக அமைந்துள்ளது.

இதன் விளைவாக தென் கிழக்காசிய, கிழக்காசிய மற்றும் பசுபிக் விளிம்பு நாடு களுடனான இந்தியாவின் பொருளாதார வர்த்தகம் வளர்ச்சியடைந்துள்ளது. அது மட்டுமல்ல இந்தியா தென் சீனக்கடல் விவ காரத்தில் சீனாவை எதிர்க்கும் நாடுகளுடன் நெருக்கமான உறவை வைத்துள்ளது. அதில் இராணுவ ரீதியான பரிமாற்றமும் உள்ளடங் குகிறது. குறிப்பாக இராணுவ ரீதியில் ஆயுத தளபாடங்கள், பயிற்சிகள், போர் ஒத்திகை கள் என பல விடயங்களை வியட்நாம் தாய் லாந்து பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளுடன் இந்தியா மேற்கொண்டு வருகிறது. இக்கட் டுரையும் இந்திய பாதுகாப்பு அமைச்சரது வியட்நாம் விஜயம் ஏற்படுத்தியுள்ள விளை வுகளை தேடுவதாக அமையந்துள்ளது.

முதலாவது, இந்தியாவும் வியட்நாமும் 15.06.2022 இல் கூட்டு ஆவணம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளன. 2030 ஆண்டிற்குள் இரு தரப்பு பாதுகாப்பு உறவுகளை பலப்ப டுத்தும் நோக்கில் அத்தகைய உடன்பாட் டில் கையெழுத்திட்டுள்ளன. அவ்வாறே இரு நாட்டு இராணுவத் தளங்களை பரஸ் பரம் பயன்படுத்திக் கொள்ளவும் ஆயுத தள பாடங்களை பழுதுபார்க்கவும் மீள் நிரப்புச் செய்யும் வாய்ப்பளிக்கும் விதத் தில் அவ்வுடன்படிக்கை இறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் வியட்நாம் பாது காப்பு அமைச்சர் ஜெனரல் பான் வான் ஜியாங் ஆகியோருக்கு இடையே இவ்வுடன்படிக்கை எட்டப்பட்டுள்ளது. இரு நாடு களுக்குமான நெருக்கம் பாது காப்பு மற்றும் பாதுகாப்பு ஒத்துழைப்புசார் நெருக்கம் இந்தோபசுபிக் பிராந்தியத்தின் உறுதித்தன்மைக்கு ஒரு முக்கிய காரணியாக அமையும் என இந்திய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.



இரண்டாவது, வியட்நாமு டன் நீண்ட உறவை கொண் டுள்ள இந்தியா வியட்நாமின் இராணுவ ரீதியான ஒத்துழைப் பிற்கு முக்கியத்துவம் அளித் துவருகிறது. இராணுவ விட யங்களை கடந்து அரசியல் உரையாடல்களும் மூலோபாய உரையாடல்களும் இருநாட் டுக்கும் இடையில் 2022 இல் நிகழ்ந்துள்ளது. இருநாட்டுக் குமான உரையாடலில் தென் மற்றும் கிழக்கு சீனக்கடல் சார்ந் தும் அதன் அமைதி சார்ந்தும் அதிக புரிதலும் உடன்பாடான உரையாடல்களும் நிகழ்ந்துள் ளன. வியட்நாமின் 1982 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அமையத்தின் பிரகடனத்தின் பிரகாரம் கிழக்கு மற்றும் தென் சீனக்கடல் விவகாரத்தை கையாள வேண்டும் என்ற உலக நாடுகளுக்கான விண் ணப்பத்தை ஏற்றுள்ள இந்தியா, வியட்நாம் சீன கடல் விவகாரம் சமாதான பூர்வமாக தீர்க்கப்பட வேண்டும் என்பதை முன்மொ ழிந்துள்ளது.

மூன்றாவது, இரு நாட்டுக்குமான உறவா னது மூலோபாய ரீதியில் சீனாவை கையா ளுவதாகவே அமைந்துள்ளது. அதற்கான தந்திரோபாயங்களையே இரு நாடுகளும் தமக்கிடையேயான உறவின் மூலம் ஏற் படுத்திக் கொள்ள முனைகின்றன. குறிப் பாக சீனாவின் இந்து சமுத்திரம் நோக்கிய நகர்வுக்கு பதிலளிக்கும் விதத்தில் தென் சீனக்கடல் மற்றும் கிழக்கு சீனக் கடலில் இந்தியாவின் கப்பல்களையும் போர் ஒத் திகைகளையும் மேற்கொள்வதன் மூலம் தடுக்க முடியுமென இந்தியா கணிப்பிட்டு செயல்படுகிறது. ஏறக்குறைய சீனா இந்தி யாவை தனது நட்பு நாடுகிளின் துறைமு கங்களாலும் தரைவழிப் போக்குவரத்தா லும் சுற்றி வளைத்துள்ளதாகவே உள்ளது. பாகிஸ்தானின் குவாடர் துறைமுகம் முதல் மலாக்கா நீரிணை வரை கடலாலும் பாகிஸ் தான் கராச்சி நகர் முதல் அமைக்கப்பட்ட ஹெறஹெராம் நெருஞ்சாலை ஊடான தீபெத் வரையான தரை வழியாக இந்தி யாவை சீனா சுற்றிவளைத்துள்ளதாகவே காணப்படுகிறது. இதற்கு பதிலாகவே கிழக்கு நோக்கிய பார்வையை இந்தியா வடிவமைத்தது. அதற்குள் அரசியலை மட் டுமன்றி பொருளாதாரத்தையும் இராணுவத் தையும் கலாசார உறவையும் இந்தியா உள் ளடக்கியிருந்தமை கவனத்திற்குரியதாகும். அதன் ஓரங்கமாகவே வியட்நாம் இந்திய உறவு அமைந்துள்ளது.

நான்காவது, சமகாலத்தில் இந் தியாவின் இந்துசமுத்திரம் சார்ந் தும் சீனாவின் தென் மற்றும் கிழக்கு சீனக் கடல் சார்ந்துமே முதன்மைப்படுத்தப்படுகிறது. உலக வர்த்தகத்திலும் கப்பல் போக்குவரத்திலும் முதன்மை யான கடல்களாக விளங்கும் இரு கடல்களும் இந்தோ பசுபிக் பிராந்தியத்திற்குள் அமைந் துள்ளன. அதனாலேயே இரு கடல் பகுதியும் சார்ந்தும் அதிக முக்கியத்துவம் உடைய தாகவும் மூலோபாய ரீதியில் தனித்துவம் வாய்ந்ததாகவும் அமைந்துள்ளன. இந்தியாவின் அணுகுமுறையைக் காட்டிலும் வியட்நாமின் அணுகுமுறை விசேடமாதானதாக அமைந்துள் ளது. குறிப்பாக இந்தியாவூடாக சர்வதேச மட்டத்தில் தென் சீன மற்றும் கிழக்கு சீன கடல் விவகாரத்தை கையாளுவதே பிரதான நோக்கமாக வியட்நாம் கொண்டுள்ளது. அதே நேரம் இந்திய இராணுவ உறவை வலுப்படுத்துவதன் மூலம் பிராந்திய பாதுகாப்பினையும் ஒத்துழைப்பினையும் அதிகப்ப டுத்த முடியுமென வியட்நாம் கருதுகிறது. இரு நாட்டுக்கு மான தந்திரோபாய ரீதியில் இராணு வலிமையை அதிகரிப் பது அவசியமானதென வியட் நாம் பாதுகாப்பு அமைச்சர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

ஐந்தாவது, இந்தியாவைப் பொறுத்த வரை ரஷ்ய, உக்ரைன் போருக்கு பின்னர் எழுந்துள்ள நெருக்கடியை கையாளுவதும் சீனாவுக்கு எதிரான சக்திகளுடன் உறவைப் பலப்படுத்துவதும் அவசியமானதாகவே தெரிகிறது. குறிப்பாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் இந்தோபசுபிக் ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு சார்ந்தே அதிக விடயங் களை ஊடகங்களுக்கு பரிமாறியுள்ளார். எனவே இந்தோபசுபிக் என்ற பிராந்திய சமுத்திரம் சார்ந்தே வியட்நாம் உறவை இந்தியா கட்டமைக்க முனைகிறது. அது மட்டுமன்றி இந்தியாவின் ஆயுத தளபாடங் களும் கடற்படை ஒத்திகைகளும் வியட்நா முடன் தொடர்ச்சியானதாக மேற்கொண்டு வருகிறது. இரு நாடுகளுக்கும் இடையில் கடல் சார்ந்து அதிக உடன்பாடுகள் கடந்த காலத்தில் எட்டப்பட்டுள்ளன. குறிப்பாக எண்ணெய் ஆய்வு நீர் மீள்சுளர்ச்சிக்கான கருத்திட்டங்கள் கடல்பாதுகாப்பு ஒத்து ழைப்புக்கள் என தென் மற்றும் கிழக்கு சீனக் கடலை மையப்படுத்தி நிகழ்ந்துவருகிறது.

ஆறாவது, பொருளாதார அடிப்படையில் நோக்கினால் இரு நாட்டுக்குமான உறவைக் கடந்து ஆசியான் அமைப்பு சார்ந்து இந்தியா வின் பங்களிப்பு அதிகமானதாகவே உள்ளது. இந்தியாவைப் பொறுத்தவரை ஆசியான் நாடுகளை நோக்கி தனது சந்தையை விஸ் தரிப்பதும் பொருளாதார ரீதியில் நெருக்க மான உறவை உருவாக்குவதுமே பிரதான நோக்கமாக அமைந்துள்ளது. வியட்நாம் மட்டுமல்ல கிழக்கு மற்றும் தென் கிழக்கு ஆசிய நாடுகளுடனான பொருளாதா உறவி லேயே இந்தியாவின் பொருளாதார எழுச்சி முக்கியத்துவம் பெற்றது. ஆசிய உற்பத்தி கள் ஆசியாவுக்குள்ளேயே அதிக நிலைத்தி ருப்பையும் ஆயுளையும் கொண்டிருக்கும் என்ற எண்ணத்தைக் கடந்து சந்தைத் தன் மையைப் பேணும் என்பதையும் உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

எனவே இரு நாடுகளுகளுக்குமிடையி லான நட்புறவானது மீளவும் சீன இந்திய முரண்பாட்டை வலுவாக்குமா என்ற சந்தே கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக ரஷ்ய உக்ரைன் போருக்கு பின்னர் சீனா இந்தியா ரஷ்யா மேற்கு நாடுகளுக்கு எதிராக மட் டுமல்ல தமக்கிடையேயும் நெருக்கமான உறவை ஏற்படுத்திவருவதைக் காணமுடிகி றது.

இதற்கான நகர்வுகளை இந்தியா வியட் நாம் உறவு பாதிக்குமாக அமைந்தால் அது மேற்குலகத்திற்கு இலாபகாரமானதாகவே அமையும். அதற்கான வாய்ப்புக்கள் அதி கமாகவே தெரிகிறது. காரணம் இலங்கை யிலும் சீன, அமெரிக்க நட்பு பலமானதாக அமைந்திருப்பதுடன் இரு தூதுவர்களும் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை எட்டும் விதத்தில் கூட்டாக செயல் பட தீர்மானித்தமை நிகழ்ந்துள்ளது. அவ்வாறே வியட்நாம் இந்திய பாதுகாப்ப உறவு வலுவானதாக காணப்படுகிறது. எப்போதும் உலக அரசியலானது ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தே காணப்படும். ஆனால் தற்போதைய சூழலானது நலன்க ளால் கட்டமைக்கப்பட்டிருப்பதனால், அது இடம்மாறி அமையவும் மீள கட்டமைக்கப் படவும் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளது. எதுவானாலும் வியட்நாம் இந்திய உறவு மூலோபாய ரீதியில் சீனாவுக்கு எதிரானதா கவே காணப்படுகிறது.

## வாழ்வாதாரமா சேதாரமா 227



தமிழ்க் கவி பேசுகின்றார்

செய்ததால் முன்புறம் பாரை வளைத்து செய்யப்பட்ட மிதி வண்டிகள் பாவனைக்கு வந்தன எனினும் பெண்கள் அயிரத்து தொளாயிரத்து அறுபதுகளின் ஆரம்பத்தில் தான் தெருக்களில் மிதிவண்டி ஓடியதை காண முடிந்தது.

முழுமையாக மிதிவண்டிகளின் பாவனை அதன் தேவை உணரப்பட்டது போர் நடந்த மண்ணில்தான். வவுனியா, மன்னார் போன்ற இடங்களிலிருந்து யாழ்ப்பாணம் செல்வோர் காடுகள் வழியாக மிதி வண்டியில்தான் பயணம் செய்தனர். வவுனியாவின் ஓரக்கிராமமான பூவரசன் குளத்திலிருந்து பின்புறக் காடுகளின் ஊடாக யாழ்ப்பாணம் செல்வோம். இரணை இலுப்பைக் குளம், விளாத்திக்குளம் சின்ன வலயன்கட்டு மூன்றுமுறிப்பு பனங்காமம் துணுக்காய் கோட்டைகட்டியகுளம், ஆம்பலப்பெருமாள்சந்தி. கந்தபுரம் நஞ்சுண்டகாடு வழியே முற்கொம்பன், நல்லூர் பூநகரி, வாடியடி, கேரதீவு, சங்குப்பிட்டி வழியே கிளாலிக்கடலை படகில் கடந்து, தனங்கிழப்பு வழியாக சாவகச்சேரி யாழ்ப்பாணம்.

அப்படியே மன்னார் ஆண்டான்குளம் இலுப்பைக்கடவை விடத்தல்தீவு மருதமடு பாலம்பிட்டி கடந்து முள்ளிக்குளம் வழியேயோ அல்லது வெள்ளாங்குளம்' முழங்காவில் வழியாக

எனவே பாதுகாப்பான இடத்தை அடைந்ததும் சுமையுடன் நிற்கும் மிதிவண்டிக்கு காத்திரமான தடிகளை முட்டுக் கொடுத்து நிறுத்திவிட்டு இரவு ஓய்வெடுப்பார். ஓய்வென்றால் தூக்கமில்லை. தூங்கினால் பொருட்கள் களவு போய்விடும். அப்படி தூங்கிய ஒருவருடைய மிதி வண்டியின் முன் சக்கரத்தையே திருடர்கள் கழற்றிக் கொண்டு போன சம்பவம் உண்டு.

சைக்கிள்களுக்கு உதிரிப்பாகங்கள் இல்லை ரயர் ரியூப் என்பன கிடையாது ஒவ்வொரு மிதி வண்டியும் தன் இறுதிப்பயன்பாடுவரை உழைத்தன. சைக்கிள் ரியூப்பிற்குள் வைக்கோலை அடைந்து சைக்கிளோடினார்கள். இந்தக்காலத்தில்தான் சைக்கிள் ஓடுவதையே நிராகரித்து வாழ்ந்த ஏராளமான பெண்கள் சைக்கிளோட்டக் கற்றார்கள். ஐம்பது வயது கடந்த பெண்கள்கூட மிதிவண்டி ஓடக்கற்றனர். அவர்களை ஏற்றிப்பறிக்கும் ஆட்களைத் தேட வேண்டிய அவசியத்தை அவர்கள் குறைத்தார்கள். எந்த வாகனங்களும் இல்லாத பிரதான வீதிகளில் வயது முதிர்ந்த பெண்கள் நிலாக்காலங்களில் மிதிவண்டி ஓடக்கற்றார்கள். இப்படி மிதி வண்டிகளே பாரஊர்திகளைப்போல நிரம்ப பொருட்களை கொண்டு வருவதை தவிர்க்க மிதி வண்டிகளை கட்டுப்பாடற்ற பகுதிகளிலிருந்து

# வாழ்வியல் ஆதாரங்களை ஆடம்பரத்தில் தொலைத்தோம் தெருவிலே நிற்கிறோம்!

பாண்டியன்குளத்தில் வீட்டிலேயே சைக்கிள் திருத்தும் ஒருவருக்கு வந்த தொலை பேசி அழைப்பு,

'கலோ, நான் பாட்ஸ் கடையில தான் நிக்கிறன் என்னென்ன வேணும் எண்டு ஒருக்கா சொல்லுங்க நான் எழுதிறன்.'

' ரெண்டு றிம், போல்ஸ், பெடல் சோடி, அ...பிறிவீல் ஒண்டு, கொட்டப்பின், பிரேக்கட்டை ரெண்டு சோடி , ங்... கம்பியள் எழுவத்திரண்டு. அப்பிடியே பைக்கற்றில வரும். மற்றது கிறீசும், வாங்குங்க செயினும் மறக்காம,'

கேட்டுக்கொண்டிருந்த நான் 'உதுக்கு புது சைக்கிள் வாங்கிரலாமே'

'போனமாசம் வந்தவா அப்ப நான் உதைத்தான் சொன்னன். அவா காசை ரெடி பண்ணிக் கொண்டர அதுக்குள்ள மருமோளுக்கு குழந்தை கிடைச்சிட்டுதாம். காசு சிலவாப் போச்சு. .அப்ப சைக்கிளும் முப்பதாயிரம்தான். இப்ப போய் விலை கேட்டா ஆறுவதாயிரமாம்' பின்ன பழைய பாரில புதுசா சைக்கிளக் கொளுவப் போறா' என்றார் கடைக்காரர்.

'இருந்தாலும் பரவாயில்லை சைக்கிளுக்கு அப்பப்ப காத்தடிக்கிற பெச் ஒட்டுற சிலவைத் தவிர வேற வராது தானே அது தன்பாட்டில ஓடும்.'



சைக்கிளுக்கு நாங்கள் வைத்த தமிழ் பெயர் மிதிவண்டி. துவிச்சக்கரவண்டி என்ற சமஸ்கிருதச் சொல் இரு சக்கரம் எனப்படும். துவி என்றால் இரண்டு. இரண்டு பாசைகளை அறிந்த அதை மொழி பெயர்த்தவர்களை 'துவி பாஷா'என குறித்தாலும் அது மருவி துபாஷ் என வழங்கியதையும் நினைவிற் கொள்க. நாங்கள் மிதிவண்டிப் புராணம் பற்றி பார்ப்போம். இந்த துவிச்சக்கர வண்டி முதன்முதலில் மரத்தால் செய்யப்பட்டு அது பல பேருடைய கைவண்ணங்களால் மாற்றமடைந்து ஈற்றில் ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்துநாலாம் ஆண்டுதான் இப்போதுள்ள வடிவத்தை பெற்றதாக கூறப்படுகிறது. அண்மையில் ஒரு நாட்டில் பெரும்பாலானவர்கள் மிதிவண்டிகளிலேயே பயணம் செய்கிறார்கள் என முகநூலில் படித்தேன். எப்படி அமெரிக்கா விட்டுவைத்தது என்று தெரியவில்லை.

பிரித்தானியர் ஆட்சி செய்த காலத்தில் இலங்கையில் காணப்பட்ட மிதிவண்டி றலி நிறுவனத்தினதாகும். பின் புறம் பூட்டப்பெற்ற பெரிய இரும்புக்கரியருடன் தாக்கமான ஸ்பிரிங் பொருத்திய ஸ்ராண்ட்டும் உயரமான தோற்றமும் கொண்டது ஆண்களுக்கானது.

பெரும் தனக்காரர்களிடம் மட்டும் மிதி வண்டி வைத்திருக்க முடிந்தது. மேலும் அதை செலுத்த பயிற்சி தேவைப்பட்டதால் அவர்களும் பெரிதாக அதை பாவனையில் வைத்திருக்கவில்லை. ஒரு ஊருக்கு ஓரிரு சைக்கிள்கள் இருந்தன. பெண்களது ஆடைகள் மிதிவண்டியில் உட்கார தடை

பூநகரி வந்தே போவார்கள். தனியாக புறப்படும் மிதிவண்டிகள் தாமாகவே வேறு வேறு பயணிகளுடன் குழுவாகிவிடும். பயங்கரமான ஆனைக்காடு, இருண்ட வனம் சேறும் சகதியும் குடிநீரே இல்லாத தரிசுகளும் இருந்தாலும் அச்சமற்ற பயணங்கள் மகிழ்ச்சியானவையாக இருந்தன. ஒவ்வொரு மிதிவண்டியிலும் ஒரு காத்தடிக்கும் பம்பி. ஒட்டுவதற்குரிய உபகரணங்கள் கட்டாயம் இருக்கும். அப்படியான சந்தர்ப்பம் வாய்ப்பது குறைவு.

வடபகுதி மக்களுக்காக வாரந்தோறும் நாற்பது ஐம்பது லொறிகளே உணவையும் வேறு பொருட்களையும் சுமந்து வந்தன. மீதமுள்ள பொருட்களை மிதிவண்டிகள் சுமந்தன. ஒரு மிதி வண்டியில் முன் பாரில் ஒரு சீனி மூடை, பின்கரியரில் ஒரு மா மூடை கூடவே வேறு பொருட்கள் அடங்கிய சாக்குகள். சீற்றின் இரு புறமும் தொங்க விடப்பட்ட எண்ணைக்கலங்கள் மூச்சுப்பிடித்து தள்ளிக் கொண்டு வரும் மக்களை தாண்டிக்குளம் கடந்ததுமே அந்தப் பொருட்களுக்காக கெஞ்சுவோர் அதிகம். அவர் எதோவகையில் போருடன் தொடர்பு பட்டோ படுத்தப்பட்டோ நகரத்துக்கு போக முடியாதவர்கள். இவ்வளவு கஷ்டப்பட்டு காவலரணைக் கடந்தவரால் தொடர்ந்து மிதிவண்டி ஓடமுடியாது.

இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடாது என ஒரு புதிய விதியை சிறீலங்கா அரசாங்கம் போட்டது. எனவே மிதி வண்டிகளை போராளிகளின் பிரதேசம் கடந்து சூனியப்பிரதேசம் எனப்படும் கொலைவலயத்துள் படுக்க வைத்துவிட்டு பயணிகள் நகருக்குள் சென்று, தலைச் சுமையாக பொருட்களை கூலியாள் வைத்தும் சுமந்து வந்து மிதிவண்டிகளில் மாற்றினர்.. அதற்கும் ஒரு பெரும் கொடுமையாக நூற்றுக்கணக்கான மிதிவண்டிகள் போடப்பட்டிருந்த இடத்தில் எறிகணை வீழ்ந்து அத்தனை மிதிவண்டிகளும் தீயில் கருகி பரிதாபமாக எரிந்து போயின. மக்கள் கண்ணீர்விட்டுகதறினர்.

எமது துயர் போக்கிய மிதிவண்டிகளின் காலத்தை நாம் கடந்தாலும் ஒவ்வொரு இடப்பெயர்வுகளிலும் பல்லாயிரக்கணக்கான மக்களின் சுமைதாங்கியாக இருந்த மிதிவண்டிகளை நாம் கைவிட்டபோது.... கொஞ்சம்கூடக் கவலைப்படவில்லை. அப்போது எம்மிடம் ஒழுங்கான வீதிகள்கூடக் கிடையாது. இன்று அந்நியச் சந்தைகளின் நுகர்வோராகி எண்ணைக்கும் டீசலுக்கும் வரிசையில் நிற்கும் பரிதாப நிலையை எண்ணிப்பாருங்கள்.

எங்களுக்காக வீதிகளையும் மின்சாரத்தையும் தந்தவர்கள் எல்லாம் அபிவிருத்திக்காக என்றார்கள். எங்கே உந்துருளிகளும், கார்களும், தொலைக்காட்சிப்பெட்டி சலவைமெசின் ஏ.சீ. இவைகளிலெல்லாம் மக்களின் பொருளாதாரம் வளர்ந்திருக்கிறதா? விரல்விட்டு எண்ணக்கூடிய மிகச்சிலர் உந்துருளிகளில் தொழில் செய்கிறார்கள். தாளையடியிலிருந்து அதிகாலையில் பெட்டியில் மீன்வாங்கி அதை கிளிநொச்சிப்பகுதிகளில் வீட்டுக்கு வீடு விற்றவர் இன்று பெரிய முதலாளி. ஆனால் அவருடைய மகனுக்கு ஒரு கிலோமீட்டர் கூட மிதிவண்டி ஓட முடியாது. வாழ்க்கையின் ஆதாரங்களை வெறும் ஆடம்பரத்தில் தொலைத்துவிட்டு தெருவிலே நிற்கிற பேதமை இருக்கிறதே...வருத்தமாக இருக்கிறது..

# தமிழருவி த.சிவகுமாரனுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வழங்கிக் கௌரவித்தது







யாழ் இந்துக்கல்லூரியின் புகழ் பூத்த பழையமாணவனும் முன்னாள் ஆசிரியருமான தமிழருவி சிவகுமாரன் அவரது மேன்மை மிக்க பன்முகப் பணிகளுக்காக 'வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் கொழும்பு இந்துக்கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சொல்லாடல் நிகழ்ச்சியில் இவ்விருது அவருக்கு வழங்கப்பட்டது.

# அரங்கேற்றம்

தமிழின் பெருமை கூறும் ஐம்பெருங் காப்பியங்களை நடனத்தின் மார்க்க உருப்படியாக அமைத்து அரங்கேற்ற நிகழ்வாக முதன் முறை நிகழ்த்தப்படவுள்ளது. அபிநயக்ஷேத்திரா நடனப்பள்ளி இயக்குனர் திவ்யா சுஜேனின் தயாரிப்பில், மகாகவி சுப்பிரமணிய பாரதியின் கொள்ளுப்பேரன் இசை மேதை டாக்டர் ராஜ்குமார் பாரதியின் இசை தயாரிப்பில் சொக்கர் பிரவீன், நிவேதிதா கணேசன் ஆகியோரின் அரகேற்ற நிகழ்வு 25/06/2022 மாலை 5.30 மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

டாக்டர் ராஜ்குமார் பாரதி முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பிக்க, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் உமா மகேஸ்வரன் தலைமை விருந்தினராகவும், சி. விஜயசிங், லலிதா ரவீந்திரராசா, க. மணிமார்பன், ரா. ஸ்ரீதர் ஆகிய ஹட்டன் மற்றும் கொழும்பைச் சேர்ந்த பிரபல பாடசாலை அதிபர்கள் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். நவரச நிருத்திய நர்த்தனாலயா இயக்குனர் ராணி சுலோச்சனா சிறப்பு விருந்தினராக வருகை தரவுள்ளார்.




நடன ஆக்கம்
'கலாசூரி'
திவ்யா சுஜேன்

இசை ஆக்கம்
டாக்டர் ராஜ்குமார் பாரதி
மகாகவி சுப்பிரமணிய பாரதியின் கொள்ளுப் பேரன் (இந்தியா)



# லண்டன் பி.பி.சி. நடத்திய போட்டியில் இலங்கை மாணவனுக்குப் பரிசு




சமீபத்தில் இளைஞர்களிடையே 'அதிசயமான (பூமி) சுற்று வட்டப் பாதை சவால்கள்' எனும் தலைப்பில் லண்டன் புளூபீற்றர்ஸ் பி.பி.சி ஒரு போட்டி நடாத்தியது. பூமியில் மாசுக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த எதிர்கால விண்கலங்களை எவ்வாறு உபயோகப்படுத்தலாம் எனும் விடயம் பற்றி போட்டியாளர்கள் தங்கள் புதிய திட்டக் கருவூலங்களை எழுதி அனுப்ப வேண்டும் என்பதே இப்போட்டியாகும்.

'விலங்குகளைக் கண்காணிக்கும் வலைப்பின்னல்' எனும் தலைப்பில் விலங்குகள் காலத்திற்கு காலம் எவ்வாறு இடம் பெயர்கின்றன. இதை காலநிலை மாற்றம் எவ்வாறு பாதிக்கின்றது? மேலும் காலநிலை மாற்றத்தை கட்டுப்படுத்துவதில் எதிர்கால விண்கலங்களின் உபயோகம் என்ன? எனும் விடயங்கள் பற்றி சுதாகரன் அக்ஷயன் தனது எண்ணக் கருவை விபரமாகச் சித்திரித்து எழுதி அனுப்பியிருந்தார்.

உலகளாவிய ரீதியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் எழுதி அனுப்பிய பதிலை ஆராய்ந்த பி.பி.சி. மிக அழகாக, ஆழமாகப் பதிலை எழுதிய அக்ஷயனின் கருத்துக்களைச் சிறந்தது எனத் தெரிவு செய்து பரிசளித்தது.

முதல் பத்து வெற்றியாளர்களில் ஒருவராக அக்ஷயன் தெரிவுசெய்யப்பட்டார்.

இவரது நாமம் பொறிக்கப்பட்ட தகடு இங்கிலாந்திலிருந்து ஏவப்படும் விண்கலத்தில் வைக்கப்பட்டு விண்வெளிக்கு அனுப்படும் எனும் பெருமையினையும் பெற்றார்.

பத்து வயது நிரம்பிய அக்ஷயன், இலங்கையில் பிறந்த பொறியியலாளர் சுதாகரன், டாக்டர் மாலதி ஆகியோரின் சிரேஷ்ட புதல்வனாவார்.

தகவல்
எஸ்.பேராசிரியன்.






## தனிமையானவன்

அஜி அஜந்தன்
மருக்காரம்பளை
வவுனியா

நான்
தனித்திருக்கின்றேன் என்
ஒவ்வொரு இரவிலும்
என்னோடு சேர்ந்து
எனக்காய் சபிக்கப்பட்டது
இந்தத் தனிமை
ஒன்று மட்டுமே

எந்தன்
விழிகளின் வழி
சிதறிக்கிடக்கும்
கண்ணீர்த்துளிகளும்
கனதியாய் நீளும் இந்த
கணங்களின் ரணங்களும்
உங்களுக்கு ஒருபோதும்
தெரியப்போவதில்லை

அடடா
இந்தத் தனிமை
எத்தனை அழகானது
எந்தன்
மனச்சுவரோரம் மலரும்
எண்ணங்களுக்கு
வண்ணம் பூசிச்செல்லும்
இந்தத் தனிமையை மட்டும்
என்னை விட்டு
எவராலும் பிரித்துவிட முடிவ
தில்லை

அன்பாய் கதை பேசி
ஆசை முத்தமிட்டு என்னை
அள்ளி அணைத்திட
அன்னை இருப்பதையும்

கன்னத்தோடு
கன்னம் சேர்த்து
காதில் வந்தே பல
கதைகள் கூறும்
காதலி ஒருத்தி என்
கண்ணெதிரே இருப்பதையும்

தோளில் சாய்ந்தே
தொலைதூரம் செல்ல
தோழன் ஒருத்தன் என்
கூடவே இருப்பதாகவும்

எந்தன்
வண்ணக்கனவுகளிற்கு
வாசமூட்டிச்செல்லும்
இந்தத் தனிமையை மட்டும்
என்னை விட்டு எவராலும்
பிரித்துவிட முடிவதில்லை

தன்னந்தனி நடந்து
தள்ளாடி விழுந்து
தனக்குள் சிரித்து
தடுமாறி நின்று
கண்கள் இரண்டிலும்
கண்ணீர் வடிய
காலம் கடக்கின்ற
யாருமற்ற எனக்கு
தனிமை அத்தனை
அழகுடையதே

கருகி வீழும்
இலையொன்றின்
சருகு போல
இயங்க மறுக்கும் என்
இதய வாசலில்
இசை மீட்டிக் கொண்டிருக்கிறது
இந்த தனிமை

உள்ளத்துக்குள்
உறங்கிக்கிடக்கும்
உணர்வுகளை சுமந்து கொண்டு
உயரப்பறக்கும் இந்த
ஊமைக்குருவியின் ஓலம்
தனிமை ஒன்றை தவிர
வேறு யாருக்கும்
தெரிவதில்லை

ஊமைக்குருவியது
உயரப் பறந்தாலும் அதன்
உணர்வுச் சிறகுகள்
உதிராது ஒருபோதும்..

நான்
தனித்திருக்கின்றேன் என்
ஒவ்வொரு இரவிலும்
என்னோடு சேர்ந்து
எனக்காய் சபிக்கப்பட்டது
இந்தத் தனிமை
ஒன்று மட்டுமே

## தேவராய் ஆவோம்

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

அன்பு பாசம் அரவணைக்குமே உலகில்
வம்பு வேண்டாம் வஞ்சகம் கூடாது
தன்னலம் இல்லாமையே தரணியில் ஓங்கும்
என்னாளும் இதை எண்ணிடல் வேண்டும்

அன்பிலார் மனதில் ஆணவம் தோன்றும்
துன்பம் மிகுந்து துவளக் கூடும்
நன்மை வேண்டின் நற்குணம் நாடு
நன்னயம் ஒன்றே நாளும் வேண்டும்

நேசத்தின் சக்தி நேர்த்தியாய் வென்றிடும்
நீசம் அகற்றி நீடூழி வாழ்ந்திடும்
பாசத்தை ஊற்றிப் பழகிடும் மனிதரே
தேசத்தில் தோன்றிட்ட தேவராய் ஆனோர்

## ஊன்றுகோலாய் உருமாறிடு....

நுஸ்ரத் மஹ்ரூப்
மாதம்பை

நாளைகளுக்குமாய்
உணவுதேடி சேமிக்கும்
எறும்புபோல் நானும்
வாழ்ந்திட ஆசைதான்....

நாலாபுறமும் நாதியற்று
நாலுபேர் காண்கையில்
நான் மட்டும் எப்படி
நாளைகளுக்காய் சேமிப்பது...

நாளைக்கான சேமிப்பை
நாளு பேரிற்கு பகிர்ந்தளித்து
நான்கு வதனங்கள்
நன்றியோடு நம்மைப் பார்க்கையில்
நன்றி சொல்லி என் கண்கள்
வானுயருதே...

நம் பொறுப்பில்லா
நாளைகளை எண்ணி
நாம் ஏன் நடுங்கனும்...
நம் கையில்
நாலுபணமிருந்தால்
நாலு பேரிற்கு நாம்
நல்லது செய்திடுவோம்....

நாடியது நமக்குக் கிடைத்திட
நம் உள்ளம் நாடுவது போல்....
நம்பிக்கை கொடுப்போம்
நம்மாலான
நாலு உள்ளங்களுக்கு....

அல்லும் பகலும்
அயராது உழைத்தாலும்...
அள்ளி உண்ண முடியாத
அசௌகரியமான காலத்தில்
அப்பாவி மக்கள்..

பெருங் குடல்கள்
வெறுங் குடல்களாய்
நித்திரை கொள்வது
நிலைக்கக் கூடாது...

வெறும் மேனியில்
வெயில் பட வாழ்வது
வேறு துணியில்லாததால் என
யாரும் சொல்லிடக் கூடாது....

ஜனனங்கள் எல்லாம்
மரணங்களில் தானே முடிவுறும்...
வாழ்விலது ஒரு தடவை தானே...
ஆனால் இன்றோ....
தினம் தினம் வாழ்வதற்காய்
நிதம் நிதம் மரணிக்கனுமே...

உயிர் வாழ்ந்திடத்தானே
ஒவ்வொரு ஆத்மாவும்
ஓடியோடித் திரியுது...
ஊன்றுகோலாய் மாறிவிடு
உன் முன்னாலுள்ள
ஓரிருவருக்கேனும்...

## கைமாறு

சியாதா

படபடத்து சிறகடித்து
மலர் மீது அமர்ந்து
தேன் குடிக்கும் தேனீயின்
கைமாறு கண்டு வியக்கிறேன்

தனக்கு உணவாய் தேன் பெற்று
கைமாறாய்
மலருக்கு மகரந்தம் சேர்த்து
மரத்துக்கு நன்மை செய்வது போல

எனக்கு இழைக்கப்படும் நலவுகளுக்கு
அதை விட சிறந்த ஒன்றை
கைமாறாய் வழங்கிட
ஆசை கொள்கிறேன்

## உனது கையில் ஒரு புது உலகம்...!

ஷெல்லிதாசன்..
திருகோணமலை...

ஆம்பல் நறுமண மலர்களெல்லாம்
ஆதவன் வருமுன்னே இதழ்விரித்து
காலைப் பொழுதை வரவேற்று
காட்சி கொடுக்கும் அழகைப்பார்

குருவி கொக்கு காகங்கள்
குயில்கள் மயில்கள் ஈறாக
மதியம் வரைக்கும் ஒருபோதும்
உறங்கிக் கிடந்தது கிடையாது

தட்டி எழுப்ப யாருமின்றி
தானாய் அவைகள் விழித்தெழுந்து
இறகு அடித்து வானத்தில்
கான மிசைத்து பறப்பதைப்பார்

மனிதப் பிறவி எடுத்துவந்த
மாண்பு படைத்த இளையவனே
மதியம் வரைக்கும் நீ தூங்கி
மகிமை இழந்து போவதுமேன்?

தூக்கம் சோம்பலை வடம்பிடித்து
துக்கத்தை உனக்கு பரிசளிக்கும்
ஆக்கச் செயலை அது அழித்து
அருமை வாழ்வை சீரழிக்கும்

இயற்கை கற்றுத் தருகின்ற
இனிய பாடத்தை நீகற்று
தூக்கம் கலைத்து அதிகாலை
துள்ளி எழுந்து வெளியேவா!

ஊக்கம் உனது காலடியை
கேட்டு வந்து காத்திருக்கும்
ஊரும் உலகும் உன்கையில்
தானாய் வந்து புன்னகைக்கும்..!

## வேர் விட்ட வரிசைகள்

எம்.எம்.எம்.நகீபு
சாய்ந்தமருது.

தெருவோர மரங்களாகவே
மனிதர்கள்
நடப்பட்டிருக்கின்றார்கள்
மண்ணென்ணெய் வரிசையாக

ஒரு லீட்டராவது
கிடைக்குமா? என்ற
ஆதங்கத்தின் வேர்கள்தான்
இந்த மரங்களை
நாட்கணக்கில் வாரக்கணக்கில்
நிற்பாட்டிவைத்திருக்கின்றது

இவர்களின்
கால் இடுப்பு
முதுகுக்கிளைகளின்
வலியின்
வேதனைக் காற்றின்
முறையீடுகள்
மாதங்களின் மேசையில்
புறக்கணிக்கப்பட்டே
கிடக்கின்றன

சிலமரங்கள்
கைக் குழந்தைகளை
தூக்கிவைத்தபடி
காய்த்தும் இருக்கின்றன
முதுமைவயதடைந்துபோய்
முறிந்தும் விழுகின்றன

பகலின் வெயிலும்
இரவின் பனித்துளிகளுமே
இந்த மரங்களுக்கு
பசளைகளாகின்றன

இங்கே
இனமதமொழிபேதமற்ற
மனிதர்கள் சிலர் வந்து
இந்த மரங்களின்
தாகத்தின் அடியில்
இலவசமாக
போத்தல் தண்ணீரை ஊற்றுவதை
தேசத்தின்
முழுமையான நிலப்பரப்பும்
எப்போது பருகும்?

ரூபாய்களான
இந்த மனித மரங்கள்
டொலர்களாக துளிர்க்கும் வரை
அடுப்படி நிலங்களில்
குந்தியிருக்கின்றது
காத்திருப்புவிதைகள்
வேர்களை தேடி!

## உண்மைகள்

இணுவில் வாகீசன்

வெளிநாட்டுசுயம்வரம்
நிராகரிக்கப்பட்டது
இருபதை கடந்த மணமகள்

மணமகன் பதிவுகள்
நிராகரிக்கப்பட்டன
தொழில் வெளிநாடில்லை

மணமகன் சம்மதம்
மணமகள் சம்மதம்
சம்மதமில்லை ஜாதகம்

தந்தையின் சேமிப்பு
இன்னொருவர் பெயரில்
சீதனம்

மணமுறிவு பத்திரத்துடன்
திருமணம்
சீதனமில்லாத மணமகள்



## நினைவுகளுக்குள் நீந்தும் மனசு

இர்ஷாத் இமாமுதீன்

நினைவுகளை
அள்ளி என் முழுதும்
பூசிக்கொள்கிறேன்

சில நினைவுகள்
எத்தனை அழகானது
ஒரு புத்தம் புது மலர்போல

அது ஓர் பனித்துளியின்
ஈரத்திற்கும் சமனானது

என்னை எனக்குள்ளே
தேடும்போதும்கூட
நினைவுகளின்
நதிகளிலேயே அலாதியாக
என்னை அள்ளிப்
பருகிக் கொள்கிறேன்

நினைவுகள்
வாழ்வின் நிழல்கள் மட்டுமல்ல
அவை காலத்தின்
அற்புதமான
பொக்கிஷங்கள்

சுவடுகள் என்பது
சுவர்க்கத்துப் பாதைபோல
பவித்ரமானது

நினைவுகள்
ஒரு ஜீவ நதி
அள்ள அள்ள
குறைவுபடாதது

நினைவுகள்
நிரம்பி வழியும்
விசித்திர சமுத்திரம்

தாயினதும்
தந்தையினதும்
கைபிடித்து
தத்தித் தத்தி
நடக்கிறது
அந்த நினைவுகள்

பாடசாலை
பை சுமந்து
பனி மலரில்
மனம் புதைத்துக் கிடக்கிறது
அந்த நினைவுகள்

புத்தகத்திற்குள்
மயிலிறகு வைத்து
பத்திரப்படுத்தி
அழகு பார்க்கிறது
அந்த நினைவுகள்

தொட்டிலிற்குள்ளிருந்து
தலை நீட்டி
எட்டிப்பார்க்கும்
குழந்தைத்தனமிக்கது
அந்த அழகிய நினைவுகள்

வெளிரிப்போகாத
மனதுடைய
கலப்படமற்ற
சின்ன வயது
நண்பனின்
அன்பை பிரித்துப்
படிக்கத்துடிக்கும்
அந்த நினைவுகள்

எங்கோ அலைந்து
எங்கேயெல்லாமோ
தேடி அநாதரவற்று அலைகிறது
சில நினைவுகள்


கற்புப் பறிபோனதை
சொல்லாமல் மறைக்கும்
கன்னிப் பெண்ணின்
மனமாய் சில
நினைவுகள்

பொத்தி வைத்த
மல்லிகை மொட்டாய்
சில நினைவுகள்

கிராமத்துப் பையனின்
அறுந்துபோன
பட்டமாய்
அந்தரத்தில்
சில நினைவுகள்

இன்னும்
சொல்ல முடியாமலே
சில நினைவுகள்

இப்படி எல்லோருக்குள்ளும்
பல நினைவுகள்



## கண்ணீர்

வரக்காமுறையூர் ராசிக்

கவலைகளை
கழுவிச் செல்லும்
ஜீவ ஊற்று
சிலருக்கு
ஆனந்தத்தின் வெளிப்பாடு
ஆனால் பலருக்கு
சோகத்தின் குறியீடு
பெண்களுக்கு
உபாயம்
ஏழைகளுக்கோ
ஜீவனோபாயம்
பச்சோந்தி
மனிதர்களின் பலம்
பாசப் பிறவிகளின்
பலவீனம்
ஊமைகளின் மொழி
அதனால்தான்
நிறைய மனிதர்களால்
புரிந்துகொள்ளப்படுவதில்லை
சிசுக்களின் பாஷை
அதனால்தான்
அம்மாக்கள் மட்டுமே
புரிந்துகொள்கிறார்கள்
இது ஏழைகளின் ஏரி
இதற்குள்தான்
அவர்கள்
வாழ்க்கைப் படகோட்டுகிறார்கள்
இதனால்தான்
வறுமைப் வெள்ளம்
அத்து மீறும் போது
இவர்களின்
வருங்கால வாழ்க்கை
இங்கேயே மூழ்கடிக்கப்படுகிறது
பிறக்கும் போதும்
இறக்கும் போதும்
தாய்க்கு மட்டுமே
ஆத்மார்த்தமாய் சுரக்கும்
அடுத்தவர் சிந்தினால்
ஆனந்தமாய் இருக்கும்
தனக்குள் பெருக்கெடுத்தால்
தத்துவம் புரியும்
அடித்தாலும் வரும்
அணைத்தாலும் வரும்
கவலையிலும் வரும்
களிப்பிலும் வரும்
துடைக்கும் கைகளுக்கே
துளியின் அர்த்தம் புரியும்

துடைப்பதற்கு
ஒரு கை இருந்தால்
பல துளிகள் தேனாகும்
அடைப்பதற்கு
ஆள் இல்லை எனில்
சிறு துளி கூட விஷமாகும்
கண்ணீர்
வரமா....?
சாபமா....?
வாழ்ந்து பாருங்கள் புரியும்

## மறுக்கப்படும் மானிட நேசம்

குப்பிளான் குமரன்

மானிடர் யாவரும்
ஏக்கத்துடன் ஓடுகின்றனர்
அமைதியைத் தேடி
மண்மீது வாழ்வதில்
சஞ்சலங்கள் எத்தனை

அத்தனைக்கும் காரணம்
அறிவீரோ யாது என்று
மனிதனாய் பிறந்தபின்
உணர்வு தெரிந்த நாளிலிருந்து
மற்றவர் நேசத்திற்காய்
ஏங்குகின்றான் மானிடன்

தேடும் மானிட நேசம்
மனிதனுக்கு எங்கும்
மறுக்கப்படுகின்றது
மறுக்கப்பட்ட நேசத்திற்காய்



ஏங்கி ஏங்கி வருந்துகிறான்

இறுதியில் நடந்தது என்ன
அவனின் நிஜமான வளர்ச்சி
குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது

## ஒழுக்கமே உயர்வு

"ஏரூர்க்கவி"
எச்.எம்.எம்.றசீம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

நறுமணப் பூக்களிலொரு
நற் சுகந்தமென
நிறையறிவில் விலைமதியா
முத்தைக் கண்டேன்,

பண்பிலுயர் அன்பாளனாய்,
பார்மெச்சிடக் குணவாளனாய்
கனிவானதோர்
கடமையெழிலெனக் குவித்தான்

நம்பிக்கை, நாணயம்
நன்கறிந்தவன்,
நல்லவையே நினைந்து
நாடிச் செயல் புரிபவனாம்

மனிதத்தை மதித்ததால்
மண்ணாளப் பெற்றவன்,
மன்னிக்கும் மனப்பாங்கிலொரு
மாசற்றவன்

அகப்புறத் தூய்மையில்
அத்தனையும் பெற்றிருக்கிறான்,
எண்ணச் செயல்களிலொரு
ஏகலைவாணனாம்

செல்வச் செருக்கில்
சித்தி எய்தவில்லையவன்,
சாந்தி, சாமாதானமே வேண்டும்
சரித்திரத் தலைவன்

உள்ளவையெல்லாம் ஈந்திடும்
உள்ளத்தில் வல்லளவன்,
காந்தியின் அஹிம்சை வழிக்
கர்ம வீரனவன்

அப்பழுக்கில்லாத மனிதத்தில்
தப்பேதும் செய்யாதவன்,
காரணம் கேட்டேன்
கட்டுப்பாட்டுக்குள் வளர்ந்தவனாம்

## மக்கள் மனங்களில்... (10ஆம் பக்கத் தொடர்)

இன்று அவருடன் வேலை செய்யாத நாட்கள் எனது வாழ்க்கையில் வீணான காலம் என்று எண்ணுகின்றேன். அவருடன் இன்னும் அதிக காலம் பணியாற்றியிருந்தால் இதைவிட அதிகமாக பெரும் சேவையை செய்திருக்கலாம்". இடதுசாரி அரசியலின் இலங்கையில் பெரும் தூணாக விளங்கிய பிலிப் குணவர்த்தன டட்லி சேனாநாயக்க தொடர்பாக அவ்வாறான நற்சான்றினை வழங்கினார்.

## 20 ஆவது திருத்த... (03ஆம் பக்கத் தொடர்)

மக்கள் துன்பப்பட வேண்டும் என்று விரும்புபவர்கள், புலம் பெயர்ந்த இலங்கையர்களை தவறாக வழிநடத்தும் பிரசாரத்தை மேற்கொள்கின்றனர். இதன் விளைவாக, நாடு ஒரு கடுமையான பிரச்சினையை எதிர்கொண்டுள்ளது. அதை வரிசைப் படுத்துவது எளிதானது அல்ல. எனவே, இந்த நிலைமையை இயல்பு நிலைக்கு மாற்ற சிறிது காலம் எடுக்கும்.

**கே: அண்மையில் வற் வரி மற்றும் பல வரிகள் அதிகரிக்கப்பட்ட நிலையில், நுகர்வோர் பொருட்களின் விலையேற்றம் காரணமாக மக்கள் கடும் இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: இது நமது உள்ளூர் வருமானத்தை அதிகரிக்கும், டொலர் வருமானத்தை அல்ல. உள்நாட்டில், பல்வேறு வரிச் சலுகைகள் வழங்கியதால், அரசாங்கத்தின் வருமானம் கிட்டத்தட்ட 40 சதவீதம் சரிந்தது. உலகில் இது போன்ற வரிச்சலுகையை வழங்கிய வேறு எந்த நாடுகளையும் கண்டுபிடிப்பது கடினம். மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் நமது வரி வீதங்கள் ஒப்பீட்டளவில் குறைவு. ஆனால் இங்கு மக்களின் உணவுப் பொருட்களில் இருந்து வரி விதிக்கப்படுகிறது. நடுத்தர மற்றும் பெரிய வணிகர்களிடம் இருந்து அதிக நேரடி வரிகளை வசூலிக்கும் முறையை அதிகரிக்க வேண்டும். இந்த நேரடி வரிகளை அதிகரிப்பதில் தவறில்லை. இதனால், உணவுப் பொருட்களின் விலை உயரலாம். இருப்பினும், இந்த உணவுப் பொருட்களின் விலைகள் முக்கியமாக அதிகரித்த வரிகளால் அல்ல, மாறாக உயர் பணவீக்கம் மற்றும் ரூபாயின் மதிப்பு சரிவினால் முக்கியமாக அதிகரித்துள்ளது.

## கொழும்பு-யாழ்ப்பாணம் புதிய... (10ஆம் பக்கத் தொடர்)

கொழும்பு கோட்டையிலிருந்து வடபகுதிக்கு யாழ்தேவி என்ற பெயரிலும் தென் பகுதிக்கு ருகுணுதேவி என்ற பெயரிலும், மலையத்திற்கு உடரட்ட மெனிக்கே என்ற பெயரிலும் 'அன்புகொண்ட மூன்று சகோதரிகள்' (Lovely Three Sisters) என்ற மகுடத்தின் கீழ் 1956 ஏப்ரல் 23ஆம் திகதியன்று மூன்று கடுகதி ரயில் சேவைகளும் அறிமுகமாகின.

இதனைத் தொடர்ந்து காலப்போக்கில் நாடளாவிய ரீதியில் ரயில் சேவைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. அந்தவகையில் வடபகுதிக்கு உத்தரதேவி என்றபெயரில் மற்றுமொரு ரயில்சேவை ஆரம்பிக்கப்பட்டது. 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் முறிகண்டி என்ற இடத்தில் யாழ்தேவி ரயிலுக்கு ஏற்பட்ட அனர்த்தம் காரணமாக வடபகுதிக்கான சகல ரயில் சேவைகளும் வவுனியாவுடன் இடை நிறுத்தப்பட்டன.

2009ஆம் ஆண்டு உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த நிலையில் வவுனியாவிலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதை இலங்கை அரசாங்கத்தின் ஏற்பாட்டில், இந்திய ரயில்வே அமைச்சின் நிர்வாகத்திலுள்ள 'இர்க்கொன்' நிறுவனத்தின் உதவியுடன் புனரமைக்கப்பட்டது. 2011ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வவுனியாவிலிருந்து தாண்டிக்குளம் வரையிலான ரயில் பாதை சீரமைக்கப்பட்டு ரயில் சேவை இடம்பெற்றது.

இதனைத் தொடர்ந்து கட்டம் கட்டமாக ரயில் பாதை திருத்தப்பட்டு 2011 மே மாதத்திலிருந்து ஓமந்தை வரையும், 2013 செப்டம்பர் மாத்திலிருந்து பளை வரையும் ரயில் சேவை நீடிக்கப்பட்டது. பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் பாதை புனரமைக்கப்பட்டதன் பின்னர் 2014 அக்டோபர் 13ஆம் திகதியிலிருந்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான நேரடி ரயில் சேவை ஆரம்பமானது.

இதன் பின்னரே காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதை சீர்செய்யப்பட்டு கொழும்பு காங்கேசன்துறை ரயில் சேவை இடம்பெறத் தொடங்கியது.

## உணவு நெருக்கடியை முறியடிக்கும்... (06ஆம் பக்கத் தொடர்)

அது மாத்திரமன்றி உணவுப் பிரச்சினை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை விசேட கூட்டமொன்று நடைபெற்றது. அனைத்துக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சின் அதிகாரிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் உணவுத் தட்டுப்பாட்டை தவிர்ப்பது குறித்து பல விடயங்கள் ஆராயப்பட்டன.

அதேவேளை, பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிலும் உணவு நெருக்கடி குறித்த விடயம் கலந்துரையாடப்பட்டது. நாட்டில் நிலவும் உணவுப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அனைத்து அமைச்சுக்களையும் ஒன்றிணைத்து உணவுப் பாதுகாப்புக்கான அமைச்சரவை உபகுழுவொன்றை அமைக்க வேண்டுமென அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவில் (கோபா குழு) தீர்மானிக்கப்பட்டது.

தற்போதைய உணவு நெருக்கடியைச் சமாளிப்பதற்குப் பொறுப்பான அனைத்து நிறுவனங்களையும் ஒன்றிணைத்து, விரைவான முடிவுகளை எடுப்பதற்கும், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பின்பற்றுவதற்கும், எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பதற்கும் இந்தக் குழுவை அமைப்பது முக்கியம் என குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர்.

இது இவ்விதமிருக்க, வீடுகளில் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் நோக்கிலும், தற்போதைய எரிபொருள் தட்டுப்பாட்டைக் கவனத்தில் கொண்டும் அரசாங்க ஊழியர்களுக்கு மேலதிகமாக ஒரு நாள் விடுமுறை வழங்கும் அமைச்சரவைப் பத்திரத்துக்கும் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அரசாங்க ஊழியர்கள் மாத்திரமன்றி நாட்டில் உள்ள அனைத்து மக்களும் தமக்கு முடியுமானளவு உணவுப் பயிர்களை வளர்ப்பது அனைவருக்கும் நன்மை பயக்கும் விடயமாக அமையும்.

## இந்திய ஆதரவுகளை... (06ஆம் பக்கத் தொடர்)

கடந்த மார்ச் மாதம் அதானி குழுமம் இரண்டு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மின் திட்டங்களுக்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டது. அதில் ஒன்று மன்னாரிலும் மற்றொன்று இலங்கையின் வடக்குப் பகுதியில் பூநகரியிலும் அமைக்கப்பட உள்ளன. இலங்கையின் இன்றைய மின்சார நெருக்கடியைப் பொறுத்தவரை சூரிய சக்தி மற்றும் காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களை நாடுவதே சிறந்ததாகும் என்பதே நிபுணர்களின் கருத்தாகும்.

இலங்கையில் தற்போது மோசமான முறையில் எரிபொருள் பற்றாக்குறை நிலவுகின்றது. இந்தியா கடந்த ஜனவரி முதல் அண்டை நாடான இலங்கைக்கு கடனாகவும் பணப் பரிமாற்றங்கள் மற்றும் பிற வழிமுறைகள் மூலம் 3 பில்லியன் அமெரிக்க டொலர் உதவியை வழங்கியுள்ளது.

இது ஒருபுறமிருக்க இலங்கை மின்சார சபையின் தலைவராகவிருந்த பேர்டினாண்டோ சர்ச்சைக் கருத்துக்குப் பின்னர் பதவி விலகினார் என்பது குறிப்பிடத்தக்கது.

சர்ச்சைக் கருத்து தொடர்பில் இந்தியாவின் அதானி குழுமம் கருத்துத் தெரிவிக்கும் போது, "பெறுமதிமிக்க அயல்நாட்டின் தேவைகளை நிறைவேற்றுவதே எங்கள் முதலீட்டின் நோக்கம் ஆகும். பொறுப்புணர்வுள்ள பெருநிறுவனம் என்ற அடிப்படையில் எங்கள் தேசங்கள் எப்போதும் பகிர்ந்து கொண்டுள்ள இணைந்த செயற்பாட்டின் முக்கியமான அம்சமாக நாங்கள் இதனை கருதுகின்றோம்" எனக் குறிப்பிட்டிருந்தது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி உண்மையிலேயே மிகவும் மோசமான நிலைமைக்குச் சென்றுள்ளதென்பது வெளிப்படையான விடயமாகும். இந்தியாவின் உதவிகளை தொடர்ந்தும் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைமையிலேயே இலங்கை தற்போது உள்ளது. இந்நிலையில் இந்தியாவின் மனிதாபிமான உதவிகளைக் கொச்சைப்படுத்தும் விதத்தில் தென்னிலங்கை அரசியலில் கருத்துகள் வெளியிடப்படுவது எவ்வித்திலும் உகந்ததல்ல.


# விலைமனுக்களுக்கான அழைப்பு

# மக்கள் வங்கி

**கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, இல-67 இல் மக்கள் வங்கி கட்டிடத்தின் புதுப்பித்தல்**

**ஒப்பந்த இல - 026/ 2022**

கீழே விபரிக்கப்பட்டவாறு கொழும்பு 2, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, இல. 67 இல் மக்கள் வங்கி கட்டிடத்திற்கான உத்தேச புதுப்பித்தலுக்காக தகைமையும், தகுதியும் கொண்ட விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை, கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, இல. 75, மக்கள் வங்கி பொறியியல் சேவைகள் திணைக்களம், கட்டிட பொறியியல் தலைவர் அழைக்கின்றார். அத்துடன் மதிப்பிடப்பட்ட செலவு கிட்டத்தட்ட ரூபா 31.35 மில்லியன் (VAT தவிர்த்து) அடித்தளத்திலுள்ள நீர்க்கசிவு மற்றும் முழுமையான கழிப்பறை புதுப்பித்தல்கள் போலவே கட்டிடத்தின் பழுதடைந்த கட்டமைப்பு உறுப்புக்களின் திருத்தத்தை உத்தேச புதுப்பித்தல் உள்ளடக்கியுள்ளது.

01. நிர்மாண காலம் 150 நாட்களாகும்.
02. விலைமனுக்கள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் ஊடாக நடத்தப்படும்.
03. ஒப்பந்தங்கள் வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம் பெறாது இருப்பதுடன் கீழ்க்காணும் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும்.

    கட்டிட நிர்மாணத் துறையில் தரம் C5 அல்லது அதற்கு மேல் நிர்மாண உற்பத்தி அபிவிருத்தி அதிகார சபை (CIDA) இல் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
04. ஒப்பந்தங்கள் வழங்கப்படுவதற்கு தகைமை பெறுவதற்கு கீழ்க்காணும் தகைமை தேவைப்பாடுகளும் உள்ளடக்கப்படுகின்றன.
    - அ) கடந்த 5 ஆண்டுகளில் நிர்மாண வேலைகளின் செயற்பாட்டு வருடாந்த சராசரி புரள்வு குறைந்த பட்சம் 48 மில்லியன் ரூபாவாகும் (ரூ. 48,000,000.00)
    - ஆ) சமமான தன்மையுடனான ஒரு நிர்மாணத் திட்டத்திற்கான ஓர் பிரதான ஒப்பந்தக்காரராக திருப்திகரமாக நிறைவேற்றிய அனுபவம் மற்றும் சிக்கலான திட்டபெறுமதி குறைந்த பட்சம் ரூ. 30 மில்லியன் மற்றும் 05 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும் அல்லது கடந்த ஐந்து ஆண்டுகளில் ஓர் தகுதிகாண் கால எல்லைக்குள் ஓர் உயர் திட்டப் பெறுமதியை பூர்த்தி செய்திருத்தல்.
    - இ) திரவச் சொத்துக்களின் குறைந்தபட்ச தொகை மற்றும்/ அல்லது கடன் வசதிகளின் திட்டம் சுழலும் கோட்டைக் குறிப்பிடுகிறது. அத்துடன் இந்த ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற எந்த முற்பணக் கொடுப்பனவுகளையும் தவிர்த்து ரூபா 8.0 மில்லியனுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, இல. 75, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம், 6ஆம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களம், கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. 0112481373 பெக்ஸ் - 011-2341591) மற்றும் 2022.06.22 முதல் 2022.07.12 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை சாதாரண வேலை நாட்களில் விலைமனு ஆவணங்களைப் பரீசிலிக்கலாம்.
6. ஓர் மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா எட்டாயிரம் (ரூ. 8,000.00) செலுத்துவதன் பேரில் 2022.06.22 முதல் 2022.07.12 மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மேற்படி முகவரியில் உள்ள கட்டிட பொறியியல் சேவைகள் தலைவருக்கு ஓர் எழுத்துமூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களால் ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம். கட்டணம் செலுத்தும் முறை காசாக இருக்கும்.
7. நகல்களுடனான பொறியிடப்பட்ட விலைமனுக்களை தாங்கும் கடித உறையின் இடது பக்க "மேல் மூலையில் கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, இல. 67, மக்கள் வங்கி கட்டிடத்தின் உத்தேச புதுப்பித்தல்கள்" என்று குறிப்பிட்டு கொழும்பு 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்த, இல. 75, இல் உள்ள மக்கள் வங்கி தலைமையகத்தின் 6ஆம் மாடியில், பொறியியல் சேவைகள் திணைக்களம், கட்டிட பொறியியல் சேவைகள் தலைவரின் அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் வைப்பிலிடலாம் அல்லது 2022.07.14ம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன் அவரை அடையுமாறு மேற்படி முகவரியில் பொறியியல் சேவைகள் திணைக்களம் கட்டிட பொறியியல் சேவைகள், தலைவருக்கு முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் மூடப்பட்டவுடன் உடனடியாக சமுகமளிக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2022.10.13ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
9. மக்கள் வங்கியைத் தவிர இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் ஓர் நம்பகமான வர்த்தக வங்கியிலிருந்து மாத்திரம் பெற்றுக்கொள்ளப்படும். இலங்கை ரூபா மூன்று இலட்சம் (ரூபா 300,000.00) இன் ஓர் விலைமனுப்பிணையை எல்லா விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது 2022.11.10ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
10. விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் 2022.07.04ம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு 02, தலைமையகம், மக்கள் வங்கி, 6ஆம் மாடி, பொறியியல் சேவைகள் திணைக்களத்தில் நடைபெறும்.

**கட்டிட பொறியியல் சேவைகளின் தலைவர்,**
**பொறியியல் சேவைகள் திணைக்களம்,**
**6ஆம் மாடி, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம்,**
**இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

மக்கள் வங்கி
PEOPLE'S BANK
www.peoplesbank.lk



திகதி 14.06.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 4786
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,740,740.00
ஆங்கில எழுத்து B வெற்றி இலக்கங்கள் 5 4 5 2 9 8
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,631,523.40

**ராசீ சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 0097
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 5,130,620.00
இலக்கினம் கன்னி வெற்றி இலக்கங்கள் 07 21 30 53
விசேட இலக்கினம் கன்னி
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,502,485.40

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 818
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,159,640.00
வெற்றி இலக்கினம் M வெற்றி இலக்கங்கள் 34 42 58 64
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 114,791,505.60

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 1266
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,653,280.00
வெற்றி இலக்கினம் தனுசு வெற்றி இலக்கங்கள் 6 5 6 2 6 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,872,978.00

**கொவிசெத** Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3030
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,028,360.00
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 21 25 32 76
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 60,831,168.80

**கோடி 25+ Mega POWER மெகா பவர்**
சீட்டிழுப்பு இலக்கம் 1136
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,944,620.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 256,875,934.00
ஆங்கில எழுத்து D சுப்பர் நம்பர் 02 வெற்றி எண்கள் 02 04 34 65
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01



# ஒப்பந்தம் (டெண்டர்) ஊடாக வாகன விற்பனை

සියපත ෆිනෑන්ස්
சியபத பினான்ஸ்
Siyapatha Finance
( Finance Company of Sampath Bank Group )
*Company No. P.B 917 PQ*

| வாகன இல. | வகை மற்றும் மாதிரி | விபரம் | யார்ட் |
|---|---|---|---|
| **மோட்டார் கார்** | | | |
| KI-6xxx | CHERY QQ 0.8L AMT 2W | 2006, 812CC, CHINA, PETROL, GREEN | D |
| 13-7xxx | MITSUBISHI A171A | 1983, 1400CC, JAPAN, PETROL, GREEN | D |
| NW CAU-1xxx | FORD FI ESTA CAR | 2015, 1500CC, PETROL, THAILAND, MIDNIGHT SKY | A |
| 301-8xxx | MITSUBISHI PAJERO JR | 1996, 1090CC, JAPAN, PETROL, SILVER | A |
| KC-3xxx | PERODUA KELLISA EZ A | 2003, 989CC, JAPAN, PETROL, SILVER | D |
| KI-0xxx | MICRO SSANGYONG ACTYON SUV 200XDI | 2009, 1998CC, SRILANKA, DIESEL, CYBERGRAY | D |
| 64-7xxx | MAZDA Q GDFP | 1991, 1990CC, JAPAN, DIESEL, METLIC GREEN | A |
| 18-2xxx | HYUNDAI EXCEL 1.5 LS | 1992, 1468CC, KORIA, PETROL, WHITE | A |
| CAB-6xxx | TOYOTA DAA ZVW30 | 2013, 1790CC, JAPAN, PETROL/ELE, BLACK | A |
| **டுவெல் பேப்பர்ஸ்** | | | |
| 53-6xxx | MAZDA BONGO BROWNY | 1990, 2180CC, DIESEL, JAPAN, WHITE BLUE | B |
| PI-6xxx | SUZUKI - EVERY, HBD-DA17V | 2015, 650CC, JAPAN, PETROL, WHITE | B |
| WP PY 2xxx | MAHINDRA BMT PLUS VX | 2014, 2523CC, INDIA, DIESEL, WHITE | C |
| PF-3xxx | DAIHATSU LE S320V | 2007, 650CC, JAPAN, PETROL, WHITE | A |
| 62-6xxx | NISSAN CARAVAN | 1993, 2660CC, JAPAN, DIESEL, WHITE | B |
| DAH-2xxx | TATA SUPER ACE TRUCK WITH FSLB-BSIV | 2019, 1396CC, INDIA, DIESEL, WHITE | D |
| WP HW-2xxx | MAZDA BONGO | 1998, 2490CC, JAPAN, DIESEL, WHITE | B |
| **முச்சக்கர வண்டி / மோட்டார் சைக்கிள்** | | | |
| SP YR-3xxx | BAJAJ RE 205 | 2011, 198CC, INDIA, PETROL, RED | A |
| CP AAG-8xxx | BAJAJ RE 205 | 2013, 198CC, INDIA, PETROL, BLACK | A |
| NW-QU-5xxx | Bajaj 4S | 2009, 173CC, INDIA, PETROL, BLACK | D |
| WP AAW-0xxx | BAJAJ RE | 2014, 198CC, INDIA, PETROL, GREEN | A |
| WP AAO 9xxx | BAJAJ RE | 2014, 198CC, INDIA, PETROL, GREEN | A |
| CP YQ-6xxx | BAJAJ RE 205 | 2011, 198CC, INDIA, PETROL, RED | D |
| SG-GS-0xxx | Bajaj Auto | 2002, 145CC, INDIA, PETROL, GREEN | D |
| CP YS-9xxx | BAJAJ RE 205 | 2011, 198CC, INDIA, PETROL, GREEN | D |
| NW HJ-2xxx | BAJAJ AUTO RE2 | 2003, 150CC, INDIA, PETROL, RED | D |
| NW AAB-2xxx | BAJAJ RE 205 | 2012, 198CC, INDIA, PETROL, RED | A |
| WP QJ-8xxx | BAJAJ 3W | 2007, 173CC, INDIA, PETROL, NEPTUNE BLUE | A |
| SP YM-5xxx | ATUL SHAKTHI | 2011, 395CC, INDIA, DIESEL, YELLOW | A |
| QO-2xxx | BAJAJ AUTO AR4S | 2008, 173CC, INDIA, PETROL, GREEN, | D |
| CP AAK-4xxx | BAJAJ RE 205 | 2013, 198CC, INDIA, PETROL, RED | A |
| CP AAO-6xxx | BAJAJ RE | 2014, 198CC, INDIA, PETROL, RED | D |
| WP YW-0xxx | BAJAJ RE 205 | 2012, 198CC, INDIA, PETROL, GREEN | A |
| WP QM- 0xxx | BAJAJ AUTO AR4S | 2007, 173CC, INDIA, PETROL, NEPTUNE BLUE | A |
| EP BIH-8xxx | HONDA NAVI APDR | 2017, 109CC, INDIA, PETROL, GREEN | D |
| **மோட்டார் லொறி மற்றும் பஸ்** | | | |
| RF-0xxx | MAHINDRA 595 DI | 2016, 2523CC, DIESEL, INDIA, RED | C |
| 16ATT-000xxx | YANMAR AW70G | 2015, JAPAN, DIESEL | C |
| NC RD-1xxx | MAHINDRA 575 | 2012, 2730CC, DIESEL, INDIA, RED | D |
| UP LE-3xxx | JAC OPEN HFC | 2006, 3168CC, INDIA, DIESEL, RED | D |
| SG LM-9xxx | FOTON BJ | 2016, 2770CC, CHINA, DIESEL, WHITE BLACK | B |
| Zh20161114xxx | DNXIA GRAND - V | 2016, CHINA, DIESEL | C |
| 48-8xxx | TOYOTA U-BU87 | 1991, 3660CC, JAPAN, DIESEL, WHITE | D |
| LF-2xxx | ISUZU CXZ71J (CONCRETE PUMP) | 1991, 16600CC, JAPAN, DIESEL, BLUE SILVER | B |

**மேலே குறிப்பிட்ட வாகனங்களை பரீசீலிக்கும் இடம்:**

**முற்றம் "A"**
இல. 01, ஸ்ரீ மஹா விஹார வீதி,
பாமன்கட, தெஹிவளை.
(ஸ்ரீ மஹா விஹாரயின் உள்ளே)
விசாரணை: 0117 209 358
ஸ்ரீலால் - 076 573 1397, சுரன்ஜித் - 076 324 1184

**முற்றம் "B"**
இல. 344, ஸ்ரீ மங்கலவத்த,
மம்பே, பிலியந்தல.
ஸ்ரீலால் - 076 573 1397
சுரன்ஜித் - 076 324 1184

**முற்றம் "C"**
12வது மைல்கல்,
கல்முனை வீதி,
வலதபிடிய, அம்பாறை.
தமித் 0769 665 224
அநுர 0762 775 942

**முற்றம் "D"**
இல. 516, பிரிவென சந்தி,
குருநாகல வீதி, தம்புள்ளை.
சரித் 0762 092187

ஒப்பந்த பத்திரங்களின் மீள செலுத்தப்படாத கட்டணமான ரூ. 400/- ஐ செலுத்தி ஒப்பந்த விண்ணப்பத்தை வாகன முற்றத்திலிருந்து பெறலாம். (பூரணப்படுத்தப்படாத அல்லது தவறான வடிவத்தில் இருக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

**2022 ஜூன் 19 (ஞாயிறு) முதல் ஜூன் 23ம் திகதி (வியாழன்) வரை**
**மு.ப. 8.30-பி.ப. 5.00 வரை (இரு தினங்களும் உட்பட)**

**2022 ஜூன் 23ம் திகதி பி.ப. 5.00 மணிக்கு டெண்டர் மூடப்படும்**

விசாரனைகள்: தலைமை - மீள்பெறுகை,
**சியபத்த பினான்ஸ் பீஎல்சீ,**
இல. 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08.
தொலைபேசி: 011 7 605 605 நீட்சி. 1804

JEBZ

எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தல் இன்றி ஏலவிற்பனையிலிருந்து விலக்கி கொள்ள கம்பனிக்கு உரிமையுண்டு

## தந்தையர் தின சிறப்பு சிறுகதை

# அப்பாவின் பேனா

மழை சட சடவென பெய்துகொண்டிருந்தது. அகல்யா வீட்டையே இரண்டாக்கி எதையோ தேடிக் கொண்டிருந்தாள். பல மணித்தியாலங்கள் தேடியும் கிடைக்கவில்லை.

"காலையில இருந்து எத தேடிக்கிட்டிருக்க? பாரு மழை வேறு பெய்யுது. இதுல வேற நீ வீட்டையே இரண்டாக்கி வச்சிருக்க" அகல்யாவின் அம்மா கேட்டாள். "கொஞ்சம் நேரம் பேசாம இருப்பியா..." அகல்யா கோபத்துடன் எகிறினாள். "என்னானுதானே கேட்கிறேன்.. சொன்னா என்ன கொறஞ்சா போயிருவா".. "ஐயோ அம்மா... ஆமா கொறஞ்சுதான் போயிடுவேன் இப்போ போதுமா?" "அத்தை அவ எதவேனுமானாலும் தேடிக்கட்டும் நீங்க சும்மா இருங்க" அது அகல்யாவின் கணவர் கிஷோர். அகல்யா அரசு பாடசாலை ஒன்றில் ஆசிரியையாக பணியாற்றுகிறாள். அவள் வசிக்கும் தோட்டத்திலேயே பாடசாலை அமைந்திருந்தது. கிஷோர் அவரும் அரசாங்க தொழில். வெளியிடம். விடுமுறை நாட்களில் தான் வீடு வருவார். இருவருக்கும் திருமணமாகி பல வருடங்கள் ஆகியும் குழந்தை பேறு இல்லை. அகல்யாவுக்கு இது மனவருத்தத்தை தந்தாலும் குடும்ப வாழ்க்கை சந்தோசமாகவே அமைந்தது. அவளுக்கு ஏற்றால் போலவே அவள் கணவா் கிஷோரும். "டீச்சா் டீச்சா்".. இது கீர்த்திகா, அகல்யா வீட்டிற்கு அயல்வீடு. அவள் கற்பிக்கும் பாடசாலையில் தரம் பத்தில் கற்கின்றாள். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்த இவளுக்கு அவர்களுடைய முகம்கூட தெரியாது. அவருடைய தாத்தா பாட்டியின் அரவணைப்பு அவளை பக்குவமாய் படிப்பில் கவனம் செலுத்தவைத்தது. படிப்பில் கெட்டிக்காரி. அகல்யா என்றால் இவளுக்கு ஒரு தனி பிரியமும் கூட இருந்தது. "வா.. கீர்த்தி! உள்ள வா".. அகல்யா அழைத்தாள். "என்ன டீச்சர்.. ஒரே டென்சனா இருக்கீங்க போல.. கீர்த்திகா கேட்டாள். "உங்க டீச்சரோட மூளை காணாமல் போயிடிச்சாம் காலையில இருந்து அத தான் தேடிகிட்டு இருக்காங்க.." கிஷோர் சிரித்துக்கொண்டே சொல்லவே, "உண்மையா டீச்சர்?" கீர்த்தி விளையாட்டுத்தனமாய் கேட்டாள், "உனக்கு இப்ப தெரிந்தே ஆகணுமா?.. ம்.. சொல்லு.. கொஞ்சம் கோபத்தோடு அகல்யா. "என்னானு சொல்லுங்க... டீச்சர் நானும் தேடிப் பார்க்கிறேனே".. கீர்த்திகா உதவிக்கு வந்தாள். நீங்க வேற கீர்த்திகா.. அத தான் நானும் அவங்க அம்மாவும் காலையில இருந்து கேட்டுக்கிட்டிருக்கோம்.." கிஷோர் கீர்த்தியிடம் கூறினார். அகல்யா சலிப்போடு கதிரையில் அமர்ந்தாள். கீர்த்தி அவளருகே செல்ல, "அது ஒரு பேனா.. கீர்த்தி" அகல்யா பொறுமையோடு சொன்னாள். "பேனாவா?... கொஞ்சம் வியப்புடன் கீர்த்தி கேள்வி எழுப்பினாள். கிஷோர் மௌனமாய் சிரித்த படி

"பேனா.. தானே வேற ஒண்ணு வாங்கிக்கலாம். முதல்ல என்னோட டிரஸ் எல்லாம் ரெடி பண்ணி வைங்க. இரண்டு மணி பஸ் ஏறினா தான் போய்ச்சேற நேரம் சரியா இருக்கும்" அகல்யா ஏக்கத்தோடு எழும்பிச் சென்றாள். கீர்த்தியும் வீடு புறப்பட்டாள்.

மறுநாள் பாடசாலை முடிந்து அகல்யாவும் கீர்த்தியும் நடைப் பயணமாக வீடு திரும்பிக் கொண்டிருந்தா்கள். அகல்யா வேகமாக நடக்க. கீர்த்தி பேசத் தலைப்பட்டாள்.

"ஏன் டீச்சர்.. என்னைக்கும் இல்லாமா இவ்வளவு வேகமா நடக்கிறீங்க?

"ஒண்ணும் இல்ல" சட்டென்று பதில் சொன்னாள் அகல்யா.

"ஒண்ணும் இல்லையா"? சொல்லுங்க டீச்சர் என்ன பிரச்சினை?" கீர்த்தி பரிதாபத்தோடு கேட்டாள். "அந்த பேனாவ தேடணும்" ஆறு வருசமா எவ்வளவு பத்திரமா வச்சிருந்தேன் தெரியுமா?.. எங்க போனிச்சேனு தெரியல?.... அகல்யா வெறுமையோடு சொன்னாள். கீர்த்தி சற்று மௌனமானாள். வீடு நெருங்கியிருந்தது. "சரி கீர்த்தி டிரஸ் மாத்திட்டு முகம் கழுவீட்டு வா.. எங்க வீட்ல சாப்பிடாம். அகல்யா சொல்ல கீர்த்தி தலையசைத்தாள். இரண்டு நாட்கள் கழிந்தன. வழமை போலவே பாடசாலை முடிய அகல்யாவும் கீர்த்தியும் திரும்பிக் கொண்டிருந்தார்கள். "டீச்சர் நேற்று பேப்பர்ல கதை ஒண்ணு படிச்சேன்". சொல்லவா? கீர்த்தி ஆரம்பித்தாள். சற்றுநேர மௌனத்துக்கு பின்.

"இன்னிக்கு வேனாம். அந்த பேனா காணாமல் போனதிலிருந்து எனக்கு மூடே சரியில்ல.. இப்போ கத கேட்கிற அளவுக்கு எனக்கு மைண்டும் இல்ல". கீர்த்திக்கு கதை படித்தல் என்றால் கொள்ளைப் பிரியம். தான் படித்த கதைகளை யாரிடமாவது சொல்லுவது வழக்கம். அதற்கு அகல்யாவிடமிருந்து தாராளமாய் இடம் கிடைத்தது. அவள் வாசித்த கதைகளை சொல்லும்போது ஒரு அழகான தொனியும் நேரில் பார்த்த ஒரு சம்பவம் போலவும் இருக்கும். அது அகல்யாவுக்கும் பிடிக்கும். அகல்யாவிற்கு மட்டுமா, அவளுடைய கணவரும் அப்படிதான். வார இறுதி நாட்களில் வாரபத்திரிகைகளை அகல்யாவும் கிஷோரும் வாங்கிக் கொடுப்பார்கள். இதற்காகவே கீர்த்தி ஞாயிற்றுக்கிழமைகளில் இவர்களோடு டவுன் வரை சென்று வருவாள். சில நேரங்களில் இவர்களுக்கு குழந்தை இல்லாத குறையைகூட கதை சொல்லியே தீர்த்து வைப்பாள் கீர்த்தி. ஆம் அகல்யாவின் அயல் வீடு என்பதால் சிறு வயதிலிருந்தே ஒரு பிணைப்பு இருக்கவே செய்தது.

"ஏன் டீச்சர் அந்த பேனாவில அப்படி என்ன தான் இருக்கு? சாதாரண ஒரு பேனாதானே" கீர்த்தி மெல்லமாய் கேட்டாள்.

"அது என் அப்பா கடைசியா எனக்கு கொடுத்தது. இப்ப அவர் இறந்து ஆறு வருசம் கிட்ட ஆகிடுச்சி... அப்பா நினைவு வாரப்போ அத எடுத்து பார்த்துக்குவேன். மனசுக்கு ஆறுதலா இருக்கும்! அவ்வளவு ஏன் எங்களுக்கு இன்னும் குழந்த பாக்கியம் இல்ல. அதக்கூட அந்த பேனா கிட்டதான் சொல்லி அழுவேன். நான் அத எடுத்து பார்த்தா பார்த்துட்டு வேற எங்கயும் வைக்க மாட்டேன். ஹேன்ட்பேக்லதான் வழமையா வைப்பேன்" இடையில் நிறுத்திக் கொண்டாள் அகல்யா. சில மாதங்கள் கழிந்தன. அன்று ஞாயிற்றுக் கிழமை. கிஷோரும் வீடு வந்திருந்தார். கீர்த்தி அகல்யா வீட்டினுள் வேகமாய் நுழைந்தாள் "டீச்சர் டவுன் போகலையா? கீர்த்தி ஆவலுடன் கேட்டாள். "என்ன நீ வந்ததும் வராததுமா டவுன் போகலையானு கேட்குற?..... "பேப்பர் வாங்கதான் டீச்சர்.." கீர்த்தி மெதுவாக பதில் சொன்னாள். "இன்னைக்கு டவுன்போகல. நேற்று வரும்போதே வீட்டுக்குத் தேவையானதை வாங்கி வந்துட்டேன்" கிஷோர் சொல்ல முகம் வாடிப்போனது கீர்த்திகாவிற்கு.

"என்ன கீர்த்தி கதை ஒன்னும் இல்லையா? கிஷோர் கேட்க கீர்த்திகா மௌனமாய் இருந்தாள். இடையில் அகல்யா நுழைந்தாள். "என்னங்க நீங்க" பாருங்க அவ முகமே வாடி போயிரிச்சி" இன்னும் அரை மணித்தியாலத்துல டவுன் போவோம் ஓகே வா? அவரு விளையாட்டுக்குச் சொன்னாரு. நீ ரெடியாகு.." "டீச்சர் நா.. ரெடியா தான் வந்திருக்கேன்.." கீர்த்தி மெல்லிய சிரிப்போடு சொன்னாள். சிறிது நேரத்தில் புறப்பட்டார்கள். இது திரும்பிவரும் நேரம். பஸ் வண்டியை விட்டிறங்கி சிறிது நேரம் நடந்து வரவேண்டும் வீடு நெருங்க. மூவருமாய் நடக்க ஆரம்பித்தார்கள். "டீச்சர் பேப்பர்ல ஒரு கதை இருக்கு சொல்லவா?.... ஆசையோடு கேட்டாள் கீர்த்தி.

"ம்... சொல்லிக்கிட்டு வாங்க நடந்துக்கிட்டே கேட்போம்". கிஜோர் சொல்ல, கதை சொல்ல ஆரம்பித்தாள் கீர்த்தி. அவள் கதை சொல்லிக் கொண்டு வரும்போதே இடையில் குறுக்கிட்டாள் அகல்யா. "போதும் கதைய நிறுத்தீட்டு சும்மா வாரீயா?..." கிஷோர் பேச்சுக் கொடுத்தார். "என்ன நீங்க அவ பாட்டுல கதை சொல்லிட்டு வாரா உங்களுக்கு என்னவாம்?...."

"ம்.. எனக்கு பொறாமையா இருக்கு" அகல்யா கோபத்தோடு சொன்னாள். "அவங்க இருக்கட்டும் நீங்க சொல்லுங்க நான் கேட்கு றேன்" கிஷோர் தட்டிக் கொடுத்தார். மீண்டும் குறுக்கிட்டாள் அகல்யா. "ஐயோ..! அது பேப்பர்ல வந்த கதையில்லைங்க.. என்னோடு காணாம போன பேனாவையும் என்னையும் பத்தி என்கிட்டயே கேட்டுட்டு அத கதை மாதிரி சொல்லிக்கிட்டு வாரங்க உங்ககிட்ட.." "இல்ல டீச்சர் நா கதையத்தான் சொல்றேன்.." கீர்த்திகா சொன்னாள். கையில் கொண்டு வந்த பொதியை கீழே வைத்துவிட்டு, "பேசாம வான்னா கேட்க மாட்டியா நீ கதை சொன்னது போதும் வாய மூடிகிட்டு வா" என்றவாறு கீர்த்திகாவின் காதை பிடித்து திறுக அவள் "அம்மா.." என்று சத்தமிட சட்டென கையை எடுத்துக் கொண்டாள் அகல்யா. "நீங்க என்னா இவ்வளவு கோபப் படுறீங்க.. அவ சொன்னா சொல்லிட்டு போகட்டும் அவளும் நம்ம பிள்ளை மாதிரி தானே.." கிஷோர் சொல்ல தொடர்ந்தாள் அகல்யா. "யார் இல்லைன்னு சொன்னது? நீங்க சொல்றது உண்மைதான். இவ சின்ன வயசுல என்னோட தாவணியைப் பிடிச்சிகிட்டு அம்மா.. அம்மான்னு சுற்றிச் சுற்றி வருவாள். இப்போதும் அப்படித்தான். ஒரே வித்தியாசம் அப்போ அம்மா இப்போ டீச்சர். "இப்போ இது இல்லைங்க பிரச்சினை.... அந்த பேனாவ காணலைன்னு எனக்கு எவ்வளவு கஷ்டமா இருக்கு தெரியுமா? அதையே ஞாபக படுத்திக்கிட்டு இவ கதை சொல்லிக்கிட்டு வந்தா கோபம் வராதா என்ன.." "இல்ல டீச்சர் நா உண்மையதான் சொல்றேன் இந்தா பாருங்க பேப்பர்ல வந்துருக்கு..." கீர்த்திகா மீண்டும் சொல்ல பெருமூச்சு விட்டாள் அகல்யா. அவதான் சொல்றாளே பேப்பர்ல வந்திருக்குன்னு" கிஷோஷ் சொல்ல.. "என்னங்க நீங்க என்னா சின்ன பிள்ளையா? நாம மூணு பேருமாதானே கடையில பேப்பர் வாங்கினோம். பஸ்லையும் வந்தோம்.. இவ பேப்பர எடுத்து ரெண்டே ரெண்டு பக்கத்த தான் திருப்பி பார்த்தா.. ஒரு தாள் புள்ளா வந்திருக்க கதைய ஒரு செக்கனுல வாசித்து எங்ககிட்ட சொல்ல முடியுமாங்க.. யோசித்து பாருங்க.." சொல்லிக் கொண்டே போனாள் அகல்யா.

"இந்த கதைய எழுதுனதே நான் தான் டீச்சர்.." அழுத்தமாய் கீர்த்தி சொல்ல. அருகில் வந்தாள் அகல்யா. "இந்தா பாருங்க இங்க செல்வி. எஸ். கீர்த்திகானு என்னோட பெயரும் நம்ம ஸ்கூல் பெயரும் இருக்கு ஆர்வத்தோடு காட்டினாள் கீர்த்திகா. அந்த பெயரோடு சேர்த்து கதையின் அச்சிடப்பட்டிருந்த கடைசி வரியும் அகல்யாவின் மனதில் தாராளமாய் பதிவு கொண்டது. மிகுதி கதையை சொல்லி முடிக்கவும் வீடு வரவும் நேரம் சரியாக இருந்தது. கிஷோரும் அகல்யாவும் பத்திரிகையை வாங்கி கதையை வாசித்துப் பார்த்தா்கள். கீத்திகாவிற்கு பாராட்டுகளும் சொன்னார்கள்.

மாலையானது. அகல்யா எதையோ யோசித்தபடி வாசலில் அமர்ந்திருந்தாள். கீர்த்திகா அருகில் வரவே அவள் முகத்தைப் பார்த்தபடி "எப்படிமா?.. இந்த சின்ன வயசுல இவ்வளவு அழகா ஒரு கதையை ஆரம்பித்து அர்த்தமுள்ளதா முடிச்சிவச்சிருக்க.. அதும் பேப்பர்ல பிரசுரமாகிற அளவுக்கு. என்னால எல்லாம் இப்படி எழுத முடியாதும்மா!"

"அது சரி, யார் உனக்கு அவ்வளவு தைரியம் கொடுத்தது. "அதுவா டீச்சர் ஒரு பேனா தான்.." "பேனாவா.." வியப்புடன் கேட்டாள் அகல்யா. கையிலிருந்த ஒரு பேனையை நீட்டினாள் கீர்த்திகா. அது அகல்யாவின் காணமற்போன பேனை.

"உங்க பேனாவை நான்தான் டீச்சர் எடுத்தேன். இத திரும்ப கொடுத்துரலாம்னு நிறைய தடவ கொண்டுவந்தேன். ஆனா, இத எடுத்தது நான்தானு தெரிஞ்சி என்னோட பேசாம போயிட்டா. அந்த பயத்துலதான் உங்ககிட்ட கொடுக்காம விட்டுட்டேன்" "ஆனா, இந்த பேனா என்கிட்ட இருக்கும் வரைக்கும் ஒரே உறுத்தலாவே இருந்திச்சி. இத வச்சி ஏதாவது ஒன்ன சாதிச்ச பிறகு உங்ககிட்ட கொடுத்தா நீங்க கோபபட்டாலும் என்னோட பேசாம இருக்க மாட்டீங்கங்கிற ஒரு நம்பிக்க வர... யோசிச்சி பாாக்கிறப்போதான் உங்க பேனாவை வைத்தே இந்த பேனாவுடைய கதைய எழுதலாம்னு தோணிச்சி. ரெண்டு வாரமா ட்ரை பண்ணி எழுதி வாரமஞ்சரிக்கு தபால்ல அனுப்பி வைச்சேன் டீச்சர்". நான் கூட நம்பல டீச்சர் பெரிய பெரிய எழுத்தாளர்களோட கதைகள் பிரசுரமாகிற ஒரு பத்திரிகையில இந்தக் கதையும் பிரசுரமாகும்னு.. "ஸொரி டீச்சர்..." "ஏன் ஸொரி சொல்ற?..." "என்ன இருந்தாலும் கேட்காம எடுக்கிறது திருட்டு தானே!.." "இல்லம்மா நீ அத திருடல" "இல்ல டீச்சர் நான்தான் அதை திருட்டுத்தனமா எடுத்தேன். பிழை என்மேல தான்" "சொன்னா புரிஞ்சிக்க.. கீர்த்தி" அகல்யா ஆறுதல்படுத்த நினைத்தாள். "இங்க வந்து உட்காரு.. நீ அத திருடலனு எனக்கு நல்லா தெரியும்" "நீ எழுதுன கதையில உள்ள கடைசி வரி நினைவிருக்கா.." "நான் அந்தப் பேனையை திருடவில்லை. யாரோ என்னை எடுக்க வைத்தார்கள். அது யார் என்பது தான் இன்னும் எனக்குப் புரியவில்லை. அது தான் உண்மை.." "என் அப்பாவோட ஆசைதான் உன்னை அதை எடுக்க தூண்டி விட்டிருக்கு"

"எனக்கு புரியல டீச்சர்" கீர்த்தி கூற. அகல்யா தொடர்ந்தாள். "என் அப்பாவுக்கு எழுத படிக்க தெரியாது. தோட்டத்துலதான் வேலை செய்தாரு. இந்தப் பேனாவ என் கிட்ட கொடுக்கும்போது அவர் ஒண்ணுமே சொல்லாம தான் கொடுத்தாரு. அவர் சொல்லாட்டியும். அப்போ அவர் மனசுலையும் ஏதவாது ஒரு நம்பிக்க இருந்திருக்கும் தானே! நான் இதை வச்சி எதையாவது சாதிக்கணும்னு. ஆனா நான் இத அப்பா கொடுத்த ஒரு பரிசு இல்லாட்டி ஒரு நினைவு பொருளாதான் பார்த்தேனே ஒழிய இதுல ஏதாவது சாதிக்கணும்னு நினைச்சிக்கூட பார்க்கல. அப்பாவோட ஆசையையும் நிறைவேற்றல. இப்போ உன்ன வச்சி அவரோட ஆசையை நிறைவேற்றிக்கிட்டாரு..! "இப்ப புரியுதா நீ இந்த பேனாவை திருடலனு ஏன் சொன்னேன்னு" இந்த பேனாவோட பெறுமதியே எனக்கு இப்பதான் புரியிது.. முழு உலகமே இன்னைக்கு தந்தையர் தினத்த கொண்டாடிக்கிட்டிருக்காங்க. எல்லோரும் தன் அப்பாமார்களுக்கு ஏதவது ஒரு பரிசு வாங்கி கொடுத்திருப்பாங்க. எனக்கு அந்த வாய்ப்பு இல்லாட்டியும் பாரு. என் அப்பா எனக்கு ஒரு பெரிய பரிசே கொடுத்திருக்காரு" "என்ன பரிசு டீச்சர் அது?" கீர்த்தி செல்லமாய் கேட்டாள். "அப்போ இந்த பேனாவை மட்டும் தான் எனக்கு கொடுத்தாரு. இப்ப இந்த பேனாவோட சேர்த்து எங்களுக்கு ஒரு மகளையும் பரிசா கொடுத்திருக்கிறாரு இல்ல.." "நீங்க என்ன சொன்னாலும் நான் செய்தது பிழை தானே டீச்சர். இதுல இப்ப மையும் இல்ல! கீர்த்திகா அழுதுகொண்டே சொன்னாள். "எங்க இதுல மை இல்ல? அதற்கு மையாகத்தான் நீ கிடைச்சிட்டாயே" என்று மனதுக்குள் எண்ணியபடியே. அவள் கண்களில் வழிந்த நீரினை துடைக்க மனமில்லாதவளாய் கீர்த்தியை கட்டி அணைத்துக் கொண்டாள். அந்த அணைப்பிலும் தாய் மகளின் பாசம் குறைவின்றி இணைந்திருந்தது.

பா. விஜயபல்லவன் ...



## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 28

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | | 02 | 03 | ■ | 04 | | 05 |
| | ■ | 06 | | | | ■ | |
| | ■ | 07 | | ■ | 08 | | |
| | ■ | 09 | | 10 | | ■ | ■ |
| ■ | 11 | ■ | ■ | | ■ | 12 | ■ |
| 13 | | ■ | 14 | | 15 | | 16 |
| 17 | | 18 | ■ | 19 | | | |
| 20 | | | | | ■ | | 21 |

திரு/திருமதி.செல்வி ..........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..........................................
..........................................
..........................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 28
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல:- 28

**இடமிருந்து வலம்**

*(01) பட்டம் மட்டுமல்ல, இப்போது இதுவும் உயர்ந்து செல்கிறது.*
*(04) மிகைப்படுத்தப்பட்ட சுத்தப்பொய்.*
*(06) கடிதம்.*
*(07) குதிரை.*
*(08) கருணை, அருள். (குழம்பியுள்ளது)*
*(09) பிச்சை. (குழம்பியுள்ளது)*
*(13) உலகம்.*
*(14) இதுவும் நெற்றியில் அணிவதுதான்.*
*(17) ஒருவகை வாழை இனம்.*
*(19) எழுத்து அல்லது பேச்சு விடயமொன்றுக்கு இடப்படும் பொருட்பெயர்.*
*(20) ஒரு கருமத்தை செய்வதில் மிகுந்த திறமையுடையவன். (குழம்பியுள்ளது)*
*(21) பழமையை தவிர்த்து ஆரம்பிப்பது.*

**மேலிருந்து கீழ்**

*(01) எதிர்பாராத வகையில் சேதத்தையோ, துன்பத்தையோ ஏற்படுத்தும் செயல்.*
*(02) இளமை.*
*(03) இந்தக் குன்று இலங்கையின் பாரம்பரியமிக்க நினைவுச் சின்னம்.*
*(04) சீனி தயாரிப்புக்குரிய மூலப்பொருள். (தலைகீழ்)*
*(05) உபயோகமற்றவை என கழிக்கப்பட்டவைகள்.*
*(10) இளவேனில். (குழம்பியுள்ளது)*
*(11) பிரதிநிதிகளை வாக்களித்து தேர்ந்தெடுக்கும் நிகழ்வு.*
*(12) அழகு.*
*(13) யானையைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பவன்.*
*(15) சிரசு.*
*(16) தேங்காய் மட்டையிலிருந்து பெறப்படுவது. கயிறு திரிக்கலாம். (குழம்பியுள்ளது)*
*(18) வேதனை தரும் உணர்வு. (தலைகீழ்)*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 27

### விடைகள்

இடமிருந்து வலம்

*(1) சுந்தரம் (5) சிலை (6) சுகம் (8) கவசம் (9) புத்தி (10) மன்மதன் (13) கர்வம் (15) சதா (16) மான் (17) காலி (18) வானரம் (20) அம்மை (21) தரிசனம்*

மேலிருந்து கீழ்

*(1) சுயம்பு (2) தலைவன் (3) ரசிகன் (4) காம்பு (6) சுத்தம் (7) கதிர்காமம் (11) மகன் (12) நிதானம் (14) வலிமை (15) சவாரி (16) மானம் (19) தர*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 25

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**சி. தமயந்தி,**
357, பொதுஜய மாவத்தை,
அங்குலானை,
மொறட்டுவை.

**இரண்டாம் பரிசு**
**எச்.எம்.எம். தாஹா,**
இல. 66, 2ம் கட்டை,
உடவெல, பசறை வீதி,
பதுளை.

**மூன்றாம் பரிசு**
**எம். சுப்ரமணியம்,**
இல. 07, பாடசாலை வீதி,
ஜெயந்திபுரம்,
மட்டக்களப்பு.

### பாராட்டு பெறுவோர்

**1. எஸ். தமிழ்மலர்,**
127, புதிய சோமநாதர் வீதி,
பாண்டிருப்பு 18.
கல்முனை.

**2. ஆர். கீர்த்தனா,**
பனான, மாதெனிய
வரகாபொல.

**3. எஸ். சத்தியவதனி,**
பிரதான வீதி,
பாலமுனை, மண்டூர்.

**4. எம்.ரி.எச். மிஹ்ரியா,**
390, ஏ.கே.எம். வீதி,
ஏறாவூர், மட்டக்களப்பு.

**5. எம்.வி.எப். பஸீனா,**
இல. 71, மரிக்கார் வீதி,
களுத்துறை தெற்கு,
களுத்துறை.

**6. ஏ. செபஸ்டியான்,**
இல. 24/2, உடுப்பிட்டிய,
உக்குவளை.

**7. எப்.ஆர்.ஏ. ஷகூர்,**
145, குன்னேப்பான மடிகே,
மடவள பஸார்.

**8. எம்.எச்.எம். பாஸி,**
இல. 02, கும்புக்கந்துறை,
ரஜவெல்ல.

**9. எம். கோகிலாதேவி,**
ஹல்கொல்ல,
பராகட்டுவ.

★ ★ ★






# மார்க்சிய மனித நேய இலக்கிய ஆளுமை

# செ. கணேசலிங்கன்

'இலங்கைத் தமிழ் நாவல் 1885இல் சித்திலெப்பையின் அஸன்பேயுடைய சரித்திரம் முதலாக வளர்ச்சி பெற்றுவந்துள்ளது என்பது பொதுவான வரலாறு. ஆயினும் இலங்கையில் தமிழ்ச் சமூக நாவலின் வரலாறு எழுத்தாளர் செ. கணேசலிங்கனின் நீண்ட பயணம் (1965) என்ற நாவலுடனேயே முறையாக ஆரம்பிக்கிறது. நாவல் துறையில் தொடர்ந்து சடங்கு (1966), செவ்வானம் (1967) தரையும் தாரகையும் (1968) போர்க்கோலம் (1969)வரை தரமான நாவல்களை அவர் தந்துள்ளார்' என குறிப்பிட்டுள்ளார் கலாநிதி துரை மனோகரன் (ஞானம் இதழ் 42. பக்கம் 13)

செ.கணேசலிங்கன், 1950ஆம் ஆண்டு 'மன்னிப்பு' எனும் சிறுகதையை எழுதியதன் மூலம் இலக்கிய உலகுக்கு அறிமுகமானவர். இவரது படைப்புகளாக 63 நாவல்களும் 9 சிறுகதைத் தொகுதிகளும் 11 சிறுவர் நாவல்களும் 20 கட்டுரை நூல்களும் வெளிவந்துள்ளன.

மாணவப்பருவத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களில் ஒருவரான கார்த்திகேயனின் தொடர்பு, டொமினிக் ஜீவா ஊடாக கணேசலிங்கனுக்கு ஏற்பட்டது. அத்தொடர்பு செ.கணேசலிங்கனை மார்க்சிஸ்ட் சிந்தனையுடையவராக்கியது. மார்க்சிய பொருள்முதல்வாத சிந்தனையால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். மார்க்சிய தத்துவத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு கற்றறிந்தார். மார்க்ஸியக் கருத்தியலின் பின்னணியில் அவரது இலக்கியப்படைப்புகள் அமைந்தன.

சுதந்திரன், தினகரன், புதுமை இலக்கியம், சாந்தி, சரஸ்வதி, தாமரை முதலான இதழ்களில் சிறுகதைகள் எழுதியுள்ளார். இவரது, 'சாயம்' என்ற சிறுகதை இலங்கை சிறுகதை தொகுப்பில் இடம்பெற்று, அத்தொகுப்பு ரஷ்ய மொழியில் வெளியிடப்பட்டது. இவருடைய சிறுகதைகள் சில ஆங்கில, ரஷ்ய, மலையாள மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இவரது நீண்ட பயணம் என்ற நாவல் 1966இல் வெளிவந்தது. வர்க்க முரண்பாடுகள் கூர்மையடையத் தொடங்கிய ஒரு காலகட்டத்தில், நிலப்பிரபுத்துவத்தின் சுரண்டல்களுக்கு உட்பட்டு, உரிமைகள் மறுக்கப்பட்ட அடிநிலை மக்களின் அவலமான நிலையைச் சித்தரித்து, அந்த மக்களை எழுச்சியுறச் செய்யும் விதமாக ' நீண்ட பயணம் ' நாவல் விளங்கியது. இந்த நாவலுக்கு இலங்கை அரசு 1966ஆம் ஆண்டுக்குரிய சாகித்திய மண்டலப் பரிசு வழங்கியது. இந்த நாவலுக்குப் பின் சடங்கு என்ற நாவலையும் செவ்வானம் என்ற நாவலையும் எழுதினார். செவ்வானம் நாவல் பேராசிரியர் கைலாசபதியின் முன்னுரையுடன் வெளிவந்தது. இந்த மூன்று நாவல்களும் முப்பரிமாண நாவல்கள் என கைலாசபதி குறிப்பிட்டுள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைய மையமாக வைத்து, இளமையின் கீதம், பொய்மையின் நிழலில், விலங்கில்லா அடிமைகள், ஒரு மண்ணின் கதை, வதையின் கதை, அந்நிய மனிதர்கள், வன்முறை வடுக்கள், அயலவர்கள், ஈனத்தொழில், இலட்சியக் கனவுகள் முதலிய நாவல்களை எழுதியுள்ளார்.

இவரது பல நாவல்களில், பெண்விடுதலை மற்றும் பெண்ணியச் சிந்தனைகள் மிக ஆழமாகவும் தெளிவாகவும் விவாதிக்கப்பட்டுள்ளன. ஒரு பெண்ணின் கதை, ஒரு குடும்பத்தின் கதை, இரண்டாவது சாதி, நீ ஒரு பெண், கவர்ச்சிக் கலையின் மறுபக்கம், குடும்பச் சிறையில், நான்கு சுவர்களுக்குள், புதிய சந்தையில், நரகமும் சொர்க்கமும் ஆகிய நாவல்களில் பெண்கள் எதிர்கொள்ளும் பன்முகப்பட்ட அழுத்தங்கள், பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்துள்ளார்.

செ.கணேசலிங்கன் எழுதிய 'தேன் பறிப்போர்' என்ற நாவல் Bitter Honey என்ற மகுடத்தில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இவர், இலங்கையில் யாழ்ப்பாணம் அருகில் உள்ள உரும்பிராய் என்னும் கிராமத்தில் 09.03.1928 அன்று, க. செல்லையா இராசம்மா தம்பதியரின் இரண்டாவது மகனாகப் பிறந்தார்.

கணேசலிங்கன் தமது ஆரம்பக் கல்வியை உரும்பிராய் கிராமத்தில் உள்ள தமிழ்ப் பாடசாலையில் ஆறாவது வகுப்புவரை பயின்றார். பின்னர், 1940களில் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் சேர்ந்து எச்.எஸ்.சி. பயின்று சிறப்பாகத் தேர்ச்சி பெற்றார். இவர் கல்வியில் மிகத் திறமை பெற்ற மாணவராக விளங்கியதால் சிறப்பு வகுப்பேற்றம் (Double Promotion) செய்யப்பட்டார். மேலும், இவர் லண்டன் மெட்ரிகுலேசன் தேர்விலும் தேர்ச்சியடைந்தார். நாள்தோறும் காலையில் விவசாய வேலைகளைச் செய்த பின்னர், கல்லூரிக்கு நடந்தே சென்று படித்தார்.

அக்காலகட்டத்தில் தனது கிராமத்தில் 'மகாத்மா காங்கிரஸ்' என்னும் சங்கத்தை அமைத்து அதன் செயலாளராகப் பணியாற்றினார். அச்சங்கத்தின் மூலம் தீண்டாமை ஒழிப்புக்காகவும், கோவில்களில் அனைத்துச் சாதி மக்களும் வழிபட உரிமை வேண்டும் என்பதற்காகவும் கோவில்களில் பலியிடுவதற்கு எதிராகவும் பரப்புரையில் ஈடுபட்டார்.


1950ஆம் ஆண்டு இலங்கை அரசின் பாதுகாப்புத்துறையில் எழுத்தாளராக பணியில் சேர்ந்த கணேசலிங்கன், திருகோணமலை மற்றும் கொழும்பு ஆகிய நகரங்களில் 1981ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

கொழும்பில் 1956ஆம் ஆண்டு உலக சமாதான மாநாடு நடைபெற்றது. அம் மாநாட்டிற்கு உலகப் புகழ்பெற்ற சிலி நாட்டுக் கவிஞர் பாப்லே நெருடா வருகை புரிந்தார். அவரை இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கொழும்பில் பிரதான வீதியில் உள்ள மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றிட ஏற்பாடு செய்தது. அக்கூட்டத்திற்கு செ.கணேசலிங்கன் தலைமை தாங்கினார் என்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

இவரது கட்டுரைத் தொகுதிகள் மார்க்சியப் பார்வையினை அடிப்படையாகக் கொண்டவை. இவை, கலை, இலக்கியம், பெண் விடுதலை, பெண்ணியச் சிந்தனை, பழந்தமிழ் இலக்கியம், சமயம், உளவியல், பயண அனுபவங்கள் எனப் பல்வேறு பிரச்சனைகளை மார்க்சியப் பார்வையில் ஆராய்கின்றன.

நவீனத்துவமும் தமிழகமும், பகவத் கீதையும் திருக்குறளும், கனவுகளின் விளக்கம், குறள் கூறும் பாலியல் கோட்பாடு, மாக்கியவல்லியும் வள்ளுவரும், பெண்ணியப் பார்வையில் திருக்குறள், சித்தர் சித்தாந்தமும் சூபிசமும், அர்த்த சாஸ்திரமும்




திருக்குறளும் முதலிய ஆய்வு நூல்களையும் தமிழுலகிற்கு படைத்தளித்துள்ளார்.

உலக அதிசயங்கள், உலகச் சமயங்கள், உலகை மேம்படுத்திய சிந்தனையாளர்கள், உலக மகாகாவியங்கள் கூறும் கதைகள், புதிய ஈசாப் கதைகள், சிறுவர்க்கான சிந்தனைக் கதைகள் முதலிய நூல்களை சிறுவர்களுக்காகப் படைத்துள்ளார். ஈழத்துச் சிறுவர் இலக்கிய வளர்ச்சியில் செ. கணேசலிங்கனுக்கு முக்கிய இடமுண்டு என்பது இலக்கிய ஆய்வாளர்களின் கருத்தாகும்.

'திரும்பிப் பார்க்கிறேன்' என்ற சுயசரிதை நூலையும், சில பயணக் குறிப்புகள்–அமெரிக்கா, இங்கிலாந்து என்ற பயண நூலையும் எழுதியுள்ளார்.

பொதுவுடைமைச் சித்தாந்தத்தை தெளிவாகவும், எளிமையாகவும் விளக்கும் விதத்தில், சாதாரணமானவர்களும் படித்து புரிந்து கொள்ளும் வகையில் குமரனுக்கு கடிதங்கள், குந்தவிக்கு கடிதங்கள், எனும் தொகுதிகளை எழுதி வெளியிட்டுள்ளார்.

ஈழத்து இதழியல் வளர்ச்சியில் செ.கணேசலிங்கனுக்கு முக்கிய இடமுண்டு. இவரது 'குமரன்' இதழ் 1979ஆம் ஆண்டு முதல் வெளிவந்தது. 'குமரன்' இதழ், அரசியல், சமூக, பொருளாதார, கலாசார, பன்னாட்டு இதழாக வெளிவந்தது. கலை இலக்கிய குறிப்புகள், கேள்வி பதில்கள், கவிதைகள், துணுக்குகள், கட்டுரைகள், சிறுகதைகள், இலக்கிய உலகில் – எனப் பல பகுதிகள் இதழில் இடம்பெற்றிருந்தன. மேலும், உலகப் புகழ்பெற்ற பிறமொழிக் கதைகள், மார்க்சிய கட்டுரைகள், மார்க்சிய நோக்கிலான இலக்கிய விமர்சனக் கட்டுரைகள், கலை இலக்கியம் குறித்த கட்டுரைகள் வெளியிடப்பட்டன. இச்சஞ்சிகையின் 77 இதழ்களும் பின்னர் தொகுப்பு நூலாக வெளிவந்துள்ளது.

இவர், குமரன் பதிப்பகம் மூலம் நூற்றுக்கணக்கான நூல்களை தமிழ்நாட்டிலும், கொழும்பிலும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

இவரது நாவல்கள் தமிழகத்திலும், இலங்கையிலும் இருபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் எம்.பில் ஆய்வு, முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டு பட்டப்படிப்பை நிறைவு செய்துள்ளனர்.

இவரது 'மரணத்தின் நிழலில்' என்னும் நாவலுக்கு 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு பரிசு வழங்கிச் சிறப்பித்தது. மலேசிய பல்கலைக் கழகத்தில் பட்டப்படிப்பிற்கு ஒரு பாடநூலாக 'சடங்கு' நாவல் வைக்கப்பட்டுள்ளது. 'அயலவர்கள்' நாவல் சென்னைப் பல்கலைக் கழக முதுகலைப் பட்டப்படிப்பிற்கு பாடநூலாக வைக்கப்பட்டுள்ளது.

செ.கணேசலிங்கன் 1960ஆம் ஆண்டு மீனாம்பாள் என்பவரைத் தமது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். இவர்களுக்கு குந்தவி, குமரன், மான்விழி என மூன்று பிள்ளைகள்.

கணேசலிங்கன் 1980களின் பிற்பகுதியிலிருந்து தமிழகத்தில் சென்னை நகரில் வசித்து வந்தார். இவர் தமிழகத்திற்கு புலம்பெயர்ந்த பின்னர் The Hindu என்ற ஆங்கில நாளிதழில் புத்தக மதிப்புரைகள் எழுதியுள்ளார்.

ஈரோடு தமிழ் இலக்கியப் பேரவை அறக்கட்டளையின் 45ஆம் ஆண்டு விழாவில் (15.3.2008), இவருக்கு எஸ்கேஎம் இலக்கிய விருது அளித்துக் கௌரவிக்கப்பட்டது.




## 32 இப்போதே சிக்க மாட்டானாம் கொலைகாரன் இன்னும் மூன்று மாதங்கள் போதுமாம்

சிறிது நேரத்திற்குப் பிறகு, சரண்யா பேசினாள்.

"கவலைப்படாதீங்க... அதை என்னால் செய்ய முடியும். இப்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்றால் என்னிடம் சொன்னது அப்படியே பொலிஸில் போய் சொல்லுங்கள்!"

"ஐயையோ...! அதுமட்டும் என்னால் முடியாது அக்கா!" ஒருவித பாவனையுடன் சொன்னாள் பிரியதர்சினி.

"ஏன்... தர்சினி... பொலிசுக்கு போவதற்கு உங்களுக்கு பயமாக இருக்கிறதா?"

"ஆமாம்... உண்மையான காரணமும் அதுதான்! உங்களுக்கு தெரியாது அக்கா கடந்த சில நாட்களாக பொலிஸார் கெம்பசுக்கும், எங்கள் ஒஸ்டலுக்கும் வந்து தீபன் தீபிகாவின் மரணத்தைப் பற்றி விசாரித்துக் கொண்டே இருக்கிறார்கள். எனக்கும் தீபனுக்கும் இடையில் ஏதோ தொடர்பிருக்கிறதென்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்! ஆனாலும் எங்கள் இருவருக்கும் தான் தெரியும் அது என்ன மாதிரியான தொடர்பென்று. இது தற்கொலை அல்ல கொலை என்று தெரிந்த பிறகு கெம்பசில் இருக்கும் ஒவ்வொருவரும் ஒரு விதமாகத்தான் என்னைப் பார்க்கிறார்கள். என்னைக் கண்டதும் கூடி கூடி என்னவோ பேசிக்கொள்கிறார்கள். சிலர் என் அருகில் செல்லும் போது நக்கல் அடிப்பார்கள். "தீபன் தீபிகாவின் கொலைக்காரன் இந்த கெம்பசுக்குள்ளேயே இருக்கிறாள். ஆனாலும் பொலிஸாருக்கும் தெரியவில்லை" என்றும் பலர் என் காது படவே பேசுவார்கள்! நிலைமை இப்படி இருக்கும் போது நான் எப்படி அக்கா பொலிஸுக்குப் போவது? எப்போது வந்து என்னையும் கொண்டு போவார்களே" என்று நான் பயந்துபோய் இருக்கிறேன்! அதனால்தான் உங்கள் ஆலோசனை எனக்கு தேவை என்று நான் சொன்னேன்!"

அவள் இப்படி சொன்னதும், உண்மையிலேயே அவள் மீது சரண்யாவுக்கு ஓர் அனுதாபம் ஏற்பட்டது!

அன்று இரவே வீட்டை விட்டு வெளியே வந்து,

துப்பறியும் இன்ஸ்பெக்டர் இன்பராஜுடன் பேசினாள்.

பிரியதர்சனியைப் பற்றிய தகவல்களை அவனிடம் சொன்னாள்.

அவனின் ஆலோசனை படி,

பிரியதர்ஷினிக்கு உதவி செய்வதற்கு முடிவு செய்தாள்.

"ம்... தர்சினி... உங்களைப் பற்றிய செய்தியை எல்லாம் அண்ணாவிடம் சொன்னேன். எல்லாவற்றையும் அவர் பார்த்துக் கொள்வதாகச் சொன்னார். அதனால் இனி நீங்கள் கவலைப்படமால் தூங்குங்கள்!" அன்று இரவு படுக்கைக்குச் செல்லும் போது,

சரண்யா சொன்னாள்!

"ஐயோ அக்கா உங்களுக்கு கோடி புண்ணியம் கெடைக்கட்டும்!" என்று சொல்லிவிட்டு தூங்கச் சென்றாள்.

கடந்த இரண்டு வாரங்களாக,

பிரசன்னா கொழும்பிலேயே இருக்கவில்லை.

மதுமிதாவிடம் கூட அலைபேசியில் பேசிக்கொண்டிருந்தான்.

ஆனாலும்,

இன்று,

அவனுடைய அலுவலகத்திற்கு வர வேண்டிய ஒரு தேவை ஏற்பட்டது.

வியாபாரம் சம்பந்தமாக சில வர்த்தகர்களுடன் ஒரு மீட்டிங் ஏற்பாடு பண்ணியிருந்தார்கள்.

அதில் கலந்து கொள்வதற்காகத்தான், பிரசன்னா அவசரமாக அழைக்கப்பட்டிருந்தான்.

மாலை மூன்று மணிக்குத் தான் மீட்டிங் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆனாலும்,

பிரசன்னா காலையிலேயே வந்து விட்டான்.

அதற்குக் காரணமும் இருந்தது.

"ம்... நீங்கள் நினைக்கும் அதே காரணம்தான்!"

ஆமாம்,

மதுமிதாவை சந்திப்பதற்காகத் தான்! வழமைபோல்,

காலையிலேயே,

இருவரும் கோல்பேஸ் ஓட்டலில் சந்தித்தார்கள்.

ஆனாலும்,

என்று அங்கு வழக்கத்தைவிட அதிகமாக இருந்ததினால்,

இதற்குமுன்பு போன,

"பியோ கார்டன்" ஓட்டலுக்கே போனார்கள்.

அன்று வந்து அமர்ந்து கொண்ட அதே சிமெண்டு பெஞ்சில் அமர்ந்து கொண்டார்கள்!'

"ம்... எப்படி இருக்கீங்க மது?"

"ம்... உங்கள் புண்ணியத்தில் எனது செலவில் இருக்கிறேன் பிரசன்னா?"

"என்னது எனது புண்ணியத்திலா, ஏன் நீங்கள் புண்ணியம் செய்யவில்லையா...?"

"இல்லை பிரசன்னா எனது மனதில் உள்ள பிரச்சினைகளுக்கு நீங்கள் தீர்வொன்றை பெற்றுத் தருவதாக கூறியதினால் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன்...!"

"ஓ... அதுவும் அப்படியா எந்த பிரச்சினையும் இல்லை... கண்டதும் நான் உங்களுக்கு உதவி செய்வேன். ஆனாலும் உங்களுக்கு இருக்கும் பிரச்சினைகளில் ஒன்றை மட்டும் தான் சொன்னீர்கள்... மற்ற பிரச்சினை எனை மது?"

"அந்தக்கதை எனது வாழ்கையின் ஒரு பகுதி... அதைக் கேட்க

நீங்க விரும்புறீங்களா பிரசன்னா?"

"ஏன் இல்லாமல்... உங்கள் வாழ்க்கைக்கதை என்றால் அதில் நிறையவே சுவாரஸ்யமான சம்பவங்கள் நிறைந்திருக்குமே!"

"எனது வாழ்க்கை கதையில் சுவாரஸ்யமான சம்பவங்கள் இருக்கவேண்டுமானால் நான் மீண்டும் பிறந்து வர வேண்டும் பிரசன்னா?"

"ஓ... அப்படியானால் அது சோகம் நிறைந்த கதையாகத்தான் இருக்க வேண்டும். சரி... உங்கள் கதையை சொல்லுங்களேன் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்!"

"நான் பள்ளி செல்லும் காலத்தில் இருந்தே எனது தோழிகளாக இருந்தவர்கள் ஜீவிதாவும் தீபிகாவும் தான் அந்த நாட்களில் இருந்தே தீபிகா நன்றாக படிப்பாள்! அந்த நாட்களில் எனக்கும் தீபிகாவிற்கும் நல்ல நண்பனாக இருந்தவன் தீபன். தீபனும் தீபிகாவைப் போல் நன்றாகவே படிப்பான். தீபன் எங்கள் இருவரையும் விட மூன்று வயது மூத்தவன்.

"தீபனை முதலில் காதலித்தவள் நான் தான்!"

"ம்... இந்தா வருகிறேதே சுவாரஸ்யம்!" இடையில் புகுந்தான் பிரசன்னா.

(இளமை வளரும்)

## கொலைகாரனைக் கண்டுபிடித்தால் பரிசு!

கொல்லுவதோ இளமை தொடர்கதையை வாசித்துக் கொண்டு வரும் வாசகர்களுக்கு ஓர் இன்ப அதிர்ச்சி.

ஆமாம்,

இந்த துப்பறியும் கதையில் கொலைகாரன் யார் என்று கண்டு பிடித்து எழுதும் வாசகர்களில் மூன்று பேருக்கு நம் நாட்டு எழுத்தாளர்களின் விலை மதிப்புள்ள நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

நீங்கள் செய்ய வேண்டியது கொலைகாரன் யார் என்று கண்டுபிடித்து எழுதி அனுப்புவது மட்டும்தான். ஒருவர் ஒரு பதிலை மட்டும்தான் எழுதமுடியும்.

**கொலைகாரனை கண்டுபிடியுங்கள்; நூல்களை பரிசாக வெல்லுங்கள்**

அனுப்பவேண்டிய முகவரி:

**கொல்லுவதோ இளமை**

தினகரன் வாரமஞ்சரி லேக்ஹவுஸ்

கொழும்பு10.



# Rhoda மின் சைக்கிள்களுக்கு வங்கிச் சேவை வசதிகளை வழங்கும் செலான் வங்கி

பங்காளர்களின் வளர்ச்சியின் “செயற்படுத்தும் பங்காளர்” எனும் தனது உறுதி மொழிக்கு மேலும் வலுச்சேர்க்கும் வகையில், செலான் வங்கி, Rhoda Life பிரைவட் லிமிடெட் உடன் பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் முதலாவது மின் ஸ்மார்ட் சைக்கிள் வடிவமைப்பாளரும், உற்பத்தியாளருமான Rhoda இந்தப் பங்காண்மையினூடாக, உள்நாட்டு புத்தாக்கமான பிரயாணத் தீர்வாக அமைந்துள்ள Rhoda நிறுவனத்துக்கு பல வங்கிச் சேவை வசதிகளையும், வலையமைப்பு வாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தொழில்முயற்சியாண்மை மற்றும் சிறிய நடுத்தரளவு வியாபாரங்கள் போன்றவற்றின் விருத்திக்கு முக்கியத்துவமளிக்கப்பட வேண்டும் என்பதில் செலான் வங்கி உறுதியாக உள்ளதுடன், இவற்றை ஊக்குவிப்பதனூடாக தேசிய பொருளாதாரத்துக்கு பெருமளவு பங்களிப்பை பெற்றுக் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

இந்தப் பங்காண்மை தொடர்பில் செலான் வங்கியின் சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகள் பிரிவின் உதவி



பொது முகாமையாளர் காமிக டி சில்வா கருத்துத் தெரிவிக்கையில், “சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகள் மற்றும் தொழில்முயற்சியாளர்களை ஊக்குவித்து வலுவூட்டுவது எமது பிரதான நோக்கமாக அமைந்துள்ளது.

தனியார் வங்கிப் பிரிவில் மூன்றாவது மாபெரும் பங்களிப்பாளராக செலான் அமைந்திருந்ததுடன், கொவிட் தொற்றுப் பரவல் காணப்பட்ட காலப்பகுதியில் சிறிய நடுத்தரளவு தொழில்முயற்சியாண்மைகளுக்கு ஆதரவளித்ததுடன், இந்தத் துறைகளில் எமது திட்டங்களை தொடர்ந்திருந்தோம். Rhoda உடன் கைகோர்ப்பது என்பது எமக்கு முக்கியமான மைல்கல்லாக அமைந்திருப்பதுடன், எமது வாடிக்கையாளர்களுக்கான செலான் வங்கியின் உறுதிமொழியை பூர்த்தி செய்து, இந்தப் பயணத்தில் நீங்கள் தனித்திருப்பதில்லை என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது. உங்களின் வங்கி எனும் வகையில், உங்களுடன் செலான் வங்கி இணைந்திருக்கும் என்பதுடன், உங்களின் முழு ஆற்றலையும் வெளிப்படுத்த உதவியாக அமைந்திருக்கும். சவால்களுக்குட்படுத்தும் மனநிலையை நாம் வரவேற்பதுடன், உங்கள் வியாபார முயற்சிக்கு பொருத்தமான கட்டமைப்புக்கு ஆதரவளிப்போம்.” என்றார்.

# கண்டல் தாவர பாதுகாப்பு பணிகளில் கைகோர்த்துள்ள CDB



கண்டல் தாவரங்களை பாதுகாக்கும் பணிகளை முன்னெடுக்கும் வகையில் இரு முக்கிய பங்காண்மைகளை சிட்டிசன்ஸ் டிவலப்மன்ட் பிஸ்னஸ் ஃபினான்ஸ் பிஎல்சி (CDB) ஏற்படுத்தியுள்ளது. தனது கூட்டாண்மை நிலைபேறாண்மை நிகழ்ச்சி நிரலுக்கு மேலும் வலுச் சேர்க்கும் வகையில் இந்த பங்காண்மைகளை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிலைபேறாண்மை நிலையம் மற்றும் இலங்கை உயிரியல் பரம்பல் நிலையம் ஆகியவற்றுடன் இந்த இரு உடன்படிக்கைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

CDB இன் நிலைபேறாண்மை நிகழ்ச்சி நிரல் என்பது ஐக்கிய நாடுகளின் நிலைபேறாண்மை அபிவிருத்தி இலக்குகள் 17 இல் 7 உடன் பொருந்தும் வகையில் அமைந்துள்ளது. தனது நிலைபேறாண்மை அர்ப்பணிப்புகள் பாதுகாத்தல் மற்றும் உயிரியல் பரம்பல் ஆகியன முக்கியத்துவம் வாய்ந்த அங்கங்களாக நிறுவனம் கருதுகின்றது. இதில் கண்டல் தாவர பாதுகாப்பு என்பது தொடர்பில் அதிகளவு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதை இனங்கண்டு, தம்மை அர்ப்பணித்துள்ளது.

இலங்கையின் ஆறு ரம்சார் ஈரநிலப் பகுதிகளில் ஒன்றாக ஆனவிழுந்தாவ காப்பகப் பகுதி அமைந்துள்ளது. 1,397 ஹெக்டெயர் பரப்பில் பரந்து காணப்படுவதுடன், கண்டல்காடுகள், கரையோர உப்புநீர் சூழல்கட்டமைப்புகள் மற்றும் தூயநீர் வாவிகள் போன்ற வனாந்தர ஈரநிலங்களைக் கொண்டுள்ளதுடன், ஆபத்தை எதிர்கொண்டிருக்கும் பல இன மீன்கள், ஈரூடக உயிரினங்கள், பாலூட்டிகள், ஊர்வன மற்றும் பறவைகளின் இருப்பிடமாகவும் உள்ளது.

# மூக்குக் கண்ணாடிகள் மற்றும் சன்கிளாஸ்களுக்கு Vision Care வழங்கிடும் இலகு கொடுப்பனவு சலுகைகள்



பார்வை மற்றும் கண் சார்ந்த அணிகலன்களுக்கு தீர்வுகளை வழங்கிடும் இலங்கையின் மிகப்பெரிய நிறுவனமான Vision Care, பல முன்னணி வங்கிகள் மற்றும் பணம் செலுத்தும் தளங்கள் மூலம் இலகு கட்டணதிட்டங்களை வழங்குவதன் மூலம் தற்போதைய பொருளாதார நெருக்கடிமிக்க சூழ்நிலையில் அதன் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் நிதிச்சுமையை குறைக்கும் வாய்ப்பினை வழங்குகிறது.

வங்கிகளுடனான ஏளைமை ஹெயசநஇன் இந்த கூட்டிணைவானது வாடிக்கையாளர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் மற்றும் சன்கிளாஸ்களை வாங்குவதற்கான வழிகளை வழங்குகின்றது. இதன் மூலம் மாதாந்த கொடுப்பனவுகள் சாதாரண தொகையில் வரும் வகையில் 3, 6 மற்றும் 12 ஆகிய மாதகாலங்களில் கொடுப்பனவுகளை செய்யக்கூடிய வசதிகளை வழங்குகிறது. இந்த விஷேட கடனட்டைச் சலுகைகள் ஜூன் 30ஆம் திகதி வரை செல்லுபடியாகும் என்பதுடன் நாடு முழுவதும் உள்ள அனைத்து Vision Care கிளைகளிலும் கிடைக்கப்பெறும்.

அனைத்து கிளைகளும் மூக்குக் கண்ணாடிகள், சன்கிளாஸ்கள் மற்றும் கண்டாக்ட் லென்ஸ்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய தயாரிப்புகளின் பாரிய தெரிவுகளை வழங்குகின்றன. எந்தவொரு கண் அணிகலன்களையும் கொள்வனவு செய்வதற்கு முன்னர் Vision Care வாடிக்கையாளர்கள், இத்துறையில் பல்லாண்டு கால அனுபவமுள்ள, கண் பராமரிப்பு நிபுணர்களால் அதிநவீன உபகரணங்களைக் கொண்டு தங்கள் கண்களை பரிசோதனை செய்து கொள்ள முடியும். வாடிக்கையாளர்களுக்கு நவீன கண் பராமரிப்பு தீர்வுகளை மற்றும் உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாமங்களைக் கொண்ட, அழகிய சன்கிளாஸ்கள் மற்றும் பிரேம்களின் பாரிய தெரிவுகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

# அதிநவீன optic fibre தொழில்நுட்பத்துடன் Capital Heights நிர்மாணச் செயற்திட்டத்திற்கு வலுவூட்டும் Dialog Fibre

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் நிறுவனத் தீர்வுகள் அங்கமான Dialog Enterprise, கொழும்பின் புதிய, உயர் ரக அடுக்குமனை குடியிருப்பு வளாகமான Capital Heights உடன் உடன்படிக்கையொன்றை ஏற்படுத்தியுள்ளது.

இதன் பிரகாரம், ஒட்டுமொத்த நிர்மாணச் செயற்திட்டத்தையும் அதன் அதிவேக, fibre optic வலையமைப்புடன் இணைத்து, குடியிருப்பாளர்களுக்கு தாமதங்களைக் குறைக்கின்ற, வேக உத்தரவாதத்துடனான மற்றும் தங்குதடையற்ற அனுபவங்களை வழங்கும். 242 அடுக்குமனை குடியிருப்புகளைக் கொண்டுள்ள, Capital Heights ஆனது அதன் தனித்துவமான வளைவு கொண்ட வடிவமைப்புடன், அதன் முதன்மையான அமைவிடம், கட்டுமானச் சிறப்பு மற்றும் நவீன, நவநாகரிகமான கட்டிடக்கலை ஆகியவற்றின் காரணமாக ஆடம்பர வாழ்க்கைக்கான மிகவும் உயர் ரக முகவரிகளில் ஒன்றாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் குடிசார் பொறியியல் மற்றும் கட்டுமானத் துறையில் முதன்மையான நிறுவனங்களில் ஒன்றான Access குழுமத்தின் அங்கத்துவ நிறுவனமான Blue Star Realties இந்த குடியிருப்புத் திட்டத்தை நிர்மாணித்து வருகிறது.

Dialog Fibre வலையமைப்பானது பிரத்தியேக இணைப்புகள், சமச்சீர் இணைப்பு மற்றும் பல பயன்பாடுகள் மற்றும் செயல்முறைகளை தங்குதடையற்ற முறையில் இயக்க தேவையான அலைவரிசையை



வழங்குகிறது. இதன் மூலம் ஆடம்பர, சௌகரிய மற்றும் உயர்ந்த வாழ்க்கை முறையை முன்னெடுக்க Capital Heights உதவுவதாக Dialog Enterprise, குழும தலைமை அதிகாரி நவீன் பீரிஸ் குறிப்பிட்டார்.

# 2022 உலக சுற்றாடல் தினத்தில் CocaCola Eco Spindles இணைந்து பிளாஸ்டிக் மறுசுழற்சி வசதி அறிமுகம்

## புதிய MRF வசதி சுற்றாடல் அமைச்சின் செயலாளர் அனில் ஜாசிங்கவினால் ஆரம்பித்து வைப்பு



உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு, CocaCola Beverages Sri Lanka Ltd (CCBSL) மற்றும் Eco Spindles Pvt Ltd ஆகியன இணைந்து, புதிய Eko Plasco மூலப்பொருட்களை மீட்டெடுக்கும் ஆலையான, Material Recovery Facility (MRF) இனை அண்மையில் (08) வாதுவையில் ஆரம்பித்து வைத்துள்ளது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சுற்றாடல் அமைச்சின் செயலாளர் வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தலைமையில் இந்த அறிமுக நிகழ்வு இடம்பெற்றது.

கழிவு முகாமைத்துவத்திற்கு ஆதரவளித்தல், மறுசுழற்சி மூலம் பிளாஸ்டிக் கழிவுகளுக்கு அர்த்தமுள்ள மறுவாழ்வை வழங்குதல், பொறுப்பான வகையில் சூழலிலிருந்து பிளாஸ்டிக்கை அகற்றுவது குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த MRF திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

MRF என்பது ஒரு திண்மக்கழிவு முகாமைத்துவ வசதியாகும். இது PET பிளாஸ்டிக் போன்ற மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களை பயன்படுத்துவதோடு, அவற்றை மீண்டும் புதிய தயாரிப்புகளை உருவாக்குவதற்கான மூலப்பொருட்களாக உற்பத்தியாளர்களுக்கு விற்பனை செய்கிறது. இந்த பிளாஸ்டிக் கழிவுகள், ஒரு பாரிய தொட்டி மற்றும் பைகள் மூலமான சேகரிப்பு வலையமைப்பு மூலம் சேகரிக்கப்பட்டு, பின்னர் MRF இற்கு அனுப்பப்படுகின்றன.

# வெசாக் காலத்தில் சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்ட DFCC வங்கி




அனைவருக்கும் ஏற்ற வங்கியான DFCC வங்கி, வெசாக் காலத்தில் அதன் நிலைபேண்தகு முயற்சிகளின் ஒரு பகுதியாக, இலங்கை முழுவதும் உள்ள உதவி தேவைப்படும் குடும்பங்களுக்கு உலர் உணவுகளை விநியோகித்துள்ளது. இந்த ஆண்டில், அனைத்து இலங்கையர்களும் முகங்கொடுக்கும் சிரமங்களைப் புரிந்துகொண்டு, DFCC வங்கி இந்த முயற்சிக்காக தனது வெசாக் அலங்கார ஒதுக்கீட்டுத் தொகையைப் பயன்படுத்த முடிவு செய்தது. அதன்படி, வங்கியின் நிலைபேண்தகைமை மூலோபாய வழிகாட்டல் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில், ஒவ்வொரு பிராந்தியத்தின் முக்கிய பகுதிகளிலும் 25 கிளைகள் இந்த முயற்சியின் அங்கமாகத் தெரிவு செய்யப்பட்டன. இதன் மூலமாக வெசாக் காலத்தில், 250 பின்தங்கிய மற்றும் உதவிகள் தேவைப்படும் குடும்பங்களின் வாழ்வுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட 25 கிளைகள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு கிளைக்கும் அருகாமையில் உள்ள 10 குடும்பங்களுக்கு உலர் உணவுகளை ஒதுக்கீடு செய்தன. உள்ளூராட்சி அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, DFCC வங்கியினால் பயனாளர் குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு, வெசாக் காலத்தில் அந்தந்த குடும்பங்கள் தத்தமது உலர் உணவுப் பொதிகளைப் பெற்றுக்கொண்டனர். இதன் விளைவாக, இந்த முயற்சியின் கவனம் வாடிக்கையாளர்களுக்கு அப்பால் நீட்டிக்கப்பட்டு, இந்த நேரத்தில் மிகவும் உதவி தேவைப்படுபவர்களுக்கு ஆதரவளிக்கிறது. நிலைபேண்தகு வங்கிச் சேவைக்கான அதன் உறுதிப்பாட்டைக் கடைப்பிடிக்கும் வகையில், DFCC வங்கி இந்த முயற்சியில் ஒரு படி மேலே சென்று, பிளாஸ்திக் மற்றும் பொலித்தீன் பைகள் அல்லது அட்டைப் பெட்டிகள் இந்த உலர் உணவுப் பொருட்களை நன்கொடையாக வழங்கும் போது பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதி செய்தது.

# கொழும்பு துறைமுக நகரத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்திக் கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகள்

கொழும்பு துறைமுக நகரத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கையின் முதலாவது விசாலமான நகர அபிவிருத்தி கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைகள் (DCR) சமீபத்தில் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு தற்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஒழுங்குமுறைகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி துறைமுக நகரில் 09.06.2022 அன்று கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவினால் நடத்தப்பட்டது.

DCR ஆனது, CHEC Port City Colombo என்ற திட்ட நிறுவனத்தால் கடந்த 2018 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆசியாவின் மிகப்பெரிய நகர்ப்புற, தொழில்துறை மற்றும் உட்கட்டமைப்பு ஆலோசனை நிறுவனங்களில் ஒன்றான சிங்கப்பூரை தளமாகக் கொண்ட Surbana Jurong இனால், இங்கிலாந்தை தளமாகக் கொண்ட முக்கிய பொறியியல் ஆலோசனை நிறுவனமான Atkins உடைய தொழில்நுட்ப உதவியுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. DCR ஆனது சுவீடனை தளமாகக் கொண்ட திட்டமிடல் ஆலோசகரான SWECO ஆல் வடிவமைக்கப்பட்ட Port City master plan இல் உள்ளடக்கப்பட்டுள்ளது. வர்த்தமானியில் வெளிடுவதற்கு முன்னர், இலங்கை நகர அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் அது தொடர்பான அரச நிறுவனங்களால் DCR மேலதிக மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட்டது.



கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் பதில் பணிப்பாளர் நாயகம் கலாநிதி பிரியத் பந்து விக்கிரம நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கியதுடன், இலங்கையின் ஏனைய நகர அபிவிருத்திகளுக்கு ஒரு அளவுகோலாக இருக்கக்கூடிய DCR ஐ அறிமுகப்படுத்தி அதன் முக்கியத்துவம் பற்றியும் விளக்கினார்.

# படித்ததும் பகர்வதும் 99



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### பொருளாதார வீழ்ச்சியும் உணவுத் தட்டுப்பாடும்

உலக அளவில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளதாக உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார். இரஷ்ய – உக்ரைன் போர் இதில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும், உணவு, எரிசக்தி, உரங்களின் விலைகள் கடுமையாக உயர்வதால் உலகப் பொருளாதாரச் சரிவு மேலும் அதிகரிக்கக்கூடும் எனவும், அவ்வாறானதொரு நிலைமையை தடுப்பது மிகவும் கடினமானது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.



இதேவேளை கடும் உணவுத் தட்டுப்பாடு மற்றும் அதிகரித்துச் செல்லும் விலையேற்றம் காரணமாக எதிர்வரும் மாதங்களில் இலங்கையில் உணவுப் பாதுகாப்பு மேலும் மோசமடையும் என உலக உணவுத் திட்டமும், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய ஸ்தாபனமும் எச்சரிக்கை விடுத்துள்ளன.

வருமானம் குறைந்துள்ளமை, உணவுத் தட்டுப்பாடு, பொருட்களின் விலையேற்றம் என்பன போதிய அளவு உணவு உட்கொள்வதில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அதிகரித்து வரும் உணவுப் பொருட்களுக்கான செலவுகள், டாலர் தட்டுப்பாடு, எண்ணெய், உட்பட இறக்குமதிப் பொருட்களின் விநியோக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளமை, நாணய மாற்று விகிதத்தில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி, இவற்றினால் ஏற்பட்டுள்ள பணவீக்கம் போன்றன இவற்றுக்கான காரணங்களாகக் கூறப்படுகின்றன.

இந்நிலையில், உலக உணவுத் திட்டமும், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பும் இலங்கையின் உணவுப் பாதுகாப்பு நெருக்கடியைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளைப் பரிந்துரைத்துள்ளன. ஜூலை மாதத்தில் இலங்கையின் நிலைமை குறித்து மதிப்பீடு செய்யவுள்ளதாகவும் அவை தெரிவித்துள்ளன.

எதிர் வரும் மாதங்களில் பொருளாதார நெருக்கடி மேலும் உக்கிரமடையும் நிலைமையே காணப்படுகிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் இவ்விடயத்தில் எச்சரிக்கை விடுத்துள்ளதுடன், நிலைமையை சீராக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு நல்குமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் மட்டுமல்லாது உலகின் பல நாடுகளையும் பெரிதாகப் பாதித்துள்ள இந்த பொருளாதார வீழ்ச்சியையும், அதனால் ஏற்பட்டிருக்கின்ற உணவுத் தட்டுப்பாடு உட்பட்ட பிரச்சனைகளையும் ஒவ்வொருவரும் கவனத்தில்கொண்டு, அதனை சமாளிக்கும் விதத்தில் தமது வாழ்க்கை முறையை மாற்றியமைத்துக் கொள்ள முன் வர வேண்டும்.

## நெஞ்சோடு நெஞ்சம்

### தந்தையரைக் கொண்டாடுவோம்!

குடும்பத்தின் முதல்வன் தந்தை என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். ஆயினும் தாயின் அளவுக்கு தந்தையின் சிறப்புகள் பேசப்படுவதில்லை. உலகில் தாயை போற்றி பாடப்பட்டுள்ள கவிதைகள், பாடல்களின் எண்ணிக்கையின் அளவுக்கு தந்தையரை பற்றி பாடப்பட்டவை இல்லை என்பதே நிதர்சனம்.

பிள்ளைகளின் வளர்ச்சியில், அவர்களது முன்னேற்றத்தில், அவர்களது அடைவுகளில் தாயின் பங்களிப்பு எந்த அளவுக்கு இருக்கின்றதோ அதே அளவுக்கு அல்லது அதைவிட அதிகமாக தந்தையின் பங்களிப்பு இருக்கவே செய்கின்றது. இதனை எவரும் மறுக்காவிட்டாலும் அது பற்றி பெரிதான அங்கீகாரம் இல்லை என்பதே உண்மை.

தந்தையரை கௌரவிப்பதற்கும், போற்றுவதற்கும் என 'தந்தையர் தினம்' உலகமெங்கும் வெவ்வேறு நாடுகளில், வெவ்வேறு தினங்களில் கொண்டாடப்படுகிறது. ஸ்பெயின், போர்த்துக்கல் உட்பட சில நாடுகளில் மார்ச் 19 ஆம் திகதியும், தாய்வானில் ஆகஸ்ட் 8ம் திகதியும், அவுஸ்திரேலியா, நியுசிலாந்தில் செப்டெம்பர் மாதத்து முதல் ஞாயிற்றுக்கிழமைகளிலும், மற்றும் சில நாடுகளில் ஜூன் மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையும் தந்தையர் தினம் கொண்டாடப்பட்டு வருவதனைக் காணலாம். இலங்கையில் இவ்வருடம் ஜூன் 19 ஆம் திகதி கொண்டாடப்படுகின்றது. இந்த விசேட தினத்திலேனும் தந்தையரின் சிறப்புகள் பற்றி பிள்ளைகள் சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.



தன்னலம் கருதாது தன் பிள்ளைகளுக்காகவும், குடும்பத்துக்காகவும் அல்லும் பகலும் அயராது உழைப்பவர் தந்தையே. தம் பிள்ளைகள் ஒழுங்காக, ஒழுக்க சீடர்களாக, வெற்றியாளர்களாக வரவேண்டும் என்பதற்காக தன் அன்பையும் பாசத்தையும் வெளிக்காட்டுவதை மறைத்துக் கொண்டு கண்டிப்போடு நடக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர் தந்தை.

தம் பிள்ளைகள் சமூகத்தில் பேரெடுக்கவும், நல்ல அந்தஸ்தை பெறவும், தந்தையின் நிலையே அடிப்படையாகிறது. 'இன்னாரின் பிள்ளை' என தந்தையையே குறிப்பிடுகின்றனர். பிள்ளையின் பெயரோடு தந்தையின் பெயரே சேர்க்கப்படுகிறது இவ்வாறு பிள்ளையின் எல்லா விடயங்களிலும் தந்தையே முக்கியத்துவம் பெறுகிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எல்லா சந்தர்ப்பங்களிலும், எல்லா விடயங்களிலும் வரும் கஷ்டங்களையும் துன்பங்களையும் சகித்துக்கொண்டு சமாளித்துக்கொண்டு பிள்ளைகளின் உயர்வுக்கான உழைப்பவர் தந்தை. எல்லா தாய்மார்களும் கூட இதனை அங்கீகரிக்கவே செய்கின்றனர். இவ்வாறு தந்தையின் சிறப்புகளையும், அர்ப்பணிப்புகளையும், தியாகங்களையும் அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

இத்தகைய சிறப்பு மிக்க, பிள்ளைகளின் ஹீரோவான தந்தையர் மீது எல்லையற்ற அன்பை செலுத்துவதும், அவர்களோடு கண்ணியமாக நடப்பதும், அவர்கள் கஷ்டத்தில் இருக்கும் போது துணை நிற்பதும், வயதாகும் போது தன் பிள்ளைகளை போன்றே தம் தந்தையரை பராமரிப்பதும் பிள்ளைகளினது கட்டாய கடமையாகும் என்பதோடு தந்தையருக்கு பிள்ளைகள் செலுத்த வேண்டிய காணிக்கையுமாகும். இதனை ஒவ்வொரு பிள்ளையும் கருத்திற் கொண்டு தம் தந்தையை எப்போதும் மகிழ்வோடு வைத்திருப்பது அவசியம்.

## நெஞ்சுக்கு நீதி

தந்தையன்றோ பிள்ளைகளின் மெய் ஹீரோ
தன்னலமின்றி உழைப்பாரவர் மறுப்பீரோ
சிந்தை நெகிழ்ந்தவர் வாழ்வினில் மகிழ்ந்திட
சித்தம் கொண்டுதான் செயற்பட மறப்பீரோ

## பிரிந்தார் பெருமை

### பாடகர் கே கே

இந்தியாவின் பிரபல பல்துறைப் பின்னணிப் பாடகர், “கே கே” என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட, கிருஷ்ணகுமார் குன்னத், கடந்த மே மதம் 31ம் திகியன்று (31.05.2022) தனது 53வது அகவையில் காலமானார். கொல்கத்தாவில் நடைபெற்ற ஒரு இசை நிகழ்ச்சிக்குப் பிறகு திடீரென உடல்நிலை சரியில்லாமல் மயங்கி விழுந்தவரை உடனடியாக அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்ற போதிலும், மாரடைப்பு காரணமாக அவர் இறந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.



இந்தி, தெலுங்கு, கன்னடம் பெங்காலி, தமிழ் உட்பட பல மொழிகளில் பாடி புகழ் பெற்றவர். தமிழ் திரைப்படங்களில் இவர் பாடிய பல பாடல்கள் மிகவும் பிரபல்யமாகி இன்றும் இரசிகர்களால் முனுமுனுக்கப் படுகின்றன. காக்க காக்க படத்தில் 'உயிரின் உயிரே...', மன்மதன் படத்தில் 'காதல் வளர்த்தேன்...', 'கில்லி'யில் 'அப்படி போடு போடு...' மின்சார கனவில் 'ஸ்ட்ராபெர்ரி கண்ணே...', 7ஜி ரெயின்போ காலனியில் 'நினைத்து நினைத்து...', ரெட் படத்தில் 'ஒல்லிக்குச்சி உடம்புக்காரி...' என்பன அவற்றில் சிலவாகும்.

கேகே சினிமா பாடகராக அறிமுகமாவதற்கு முன்னரேயே மூவாயிரத்து ஐநூறுக்கும் அதிகமான விளம்பரங்களுக்கு பாடல் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழில் இளையராஜா, ஏ.ஆர்.ரகுமான், தேவா, வித்யாசாகர், மணி சர்மா, ஹாரிஸ் ஜெயராஜ், யுவன் சங்கர் ராஜா போன்றவர்களின் இசையிலும் இவர் பாடியுள்ளார். பாடகராக இருந்ததோடு ஒருசில படங்களில் நடித்தும் மக்களை கவர்ந்துள்ளார்.

## சிந்தனை செய் மனமே

திருமணமான ஒரு வாலிபன் தன் அழகான மனைவியுடன் படகில் செல்கிறான். படகு செல்லும் கடலில் அலைகள் ஆர்ப்பரிக்கின்றன, கால நிலை இடியும் மின்னலுமாய் பயங்கரமாக இருக்கிறது. படகு இங்குமங்குமாக ஆடுகிறது.

அவன் மனைவி பயந்து நடுங்குகிறாள். ஆனால் எந்தவித பதட்டமுமின்றி அமைதியாக புன்னகையோடு படகை செலுத்தும் கணவனை பார்த்து அவள் ஆச்சரியத்தோடு கேட்கிறாள், "உங்களுக்கு பயமாக இல்லையா அத்தான்" என்று.



கணவன் ஒன்றுமே சொல்லாமல், மிக அமைதியாக தன் பையிலிருந்து ஒரு கத்தியை எடுத்து அவள் கழுத்தில் வைக்கிறான். அவளோ எந்தவித திகைப்புமின்றி, பயப்படாமல் சிரிக்கிறாள்.

உடனே கணவன் "இந்த கத்தி, மிகவும் கூர்மையானது. பயங்கரமானது, உன் கழுத்தையே வெட்டிவிடும், ஆனால் நீயோ சிரிக்கிறாயே?" என்று அமைதியாகக் கேட்கிறான்.

அதற்கு அவள் சொல்கிறாள் "கத்தி பயங்கரமானதுதான் அத்தான், கழுத்தையே வெட்டிவிடும் அளவுக்கு கூர்மையானதுதான். ஆனால் அதை என் கழுத்தில் வைத்திருக்கும் நீங்கள் என் அன்புக்குரியவரல்லவா? அதனால் எனக்கு எந்தவித பயமுமில்லை".

உடனே கணவன் புன்முறுவலோடு, "இந்த அலைகளும், இடிகளும், மின்னல்களும், மிகப் பயங்கரமானவைதாம். ஆனால் அவற்றை தன் வசம் வைத்திருக்கும் இறைவன், என் அன்புக்குரியவனல்லவா!. அதனால் எனக்கு எந்தவிதமான பயமில்லை” என்றான் மிக அமைதியாக!

## தகவல் களஞ்சியம்

### அழிக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய விமானம்

இரஷ்ய இராணுவம் உக்ரைன் நாட்டில் மேற்கொள்ளும் தாக்குதல்களினால் ஏற்பட்டுள்ள, ஏற்படுகின்ற சேதங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. யுத்தத்தின் ஆரம்ப காலத்தில், உக்ரைன் தலைநகர் கீவ் அருகேயுள்ள ஹோஸ்டோமல் விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த உலகிலேயே மிகப் பெரிய விமானத்தை இரஷ்ய இராணுவம் அழித்தது.



உலகிலேயே மிகப் பெரிய விமானமாக கருதப்பட்ட AN225 'Mriya', க்ரைன் ஏரோநாட்டிக்கல் நிறுவனமான அன்டோனோவ் நிறுவனத்தால் 1985ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது. 'Mriya' என்றால் உக்ரைன் மொழியில் 'கனவு' என்றே பொருள்படுகிறது.

இவ்விமானம், 30 சக்கரங்கள், 6 என்ஜின்கள், 290 அடி இறக்கைகளுடன் தயாரிக்கப்பட்ட உலகின் மிகப் பெரிய சரக்கு விமானம் என்ற சிறப்பை பெற்றது. சரக்கை ஏற்றிக் கொண்டு, இந்த விமானத்தால் 4,500 கிலோ மீட்டர் வரை செல்ல முடியும்.

இரஷ்ய ராணுவம் நடத்திய வான்வழித் தாக்குதலில் இந்த விமானம் முற்றிலும் எரிந்து சாம்பலானதாக உக்ரைன் அமைச்சர் டிமிட்ரோ குலேபா உறுதிப்படுத்தியுள்ளார்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# திருவள்ளுவத்தில் திட்டமிடல் எண்ணக்கருக்கள்



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 11



கே. பத்மானந்தன்

**திட்டமிடல் ( Planning)**

நிறுவனமொன்றின் முகாமைத்துவத்தின் மிக முக்கியமான முதல் நடவடிக்கை திட்டமிடலாகும். என்ன வேலை செய்ய வேண்டும், அவ்வேலையை ஏன்செய்ய வேண்டும், அவ் வேலையை எங்கே செய்ய வேண்டும், அவ்வேலையை எப்போது செய்ய வேண்டும், அவ்வேலை யாரால் செய்யப்பட வேண்டும், அவ் வேலையை செய்து முடிக்க என்னென்ன வளங்கள் தேவை , அவ்வளங்களை எங்கிருந்து எவ்வாறு பெறலாம் , அவ்வேலையினால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்கள் எவை , என்பவற்றை முன்கூட்டியே தீர்மானிக்கும் செயற்பாடு திட்டமிடலாகும். ஏனைய முகாமைத்துவ நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் முன்னோடியாக திட்டமிடல் அமைகின்றது.

கீழ்வரும் ஈரடியில் திரு வள்ளுவர் திட்டமிடலின் முகாமைத்துவ முக்கியத்துவத்தை விளக்குகின்றார் .

எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.
(குறள் 467)

ஒருவர் எந்தவொரு செயலையும் செய்ய முன் தான் செய்யத்தகுந்த செயலையும் அதனைச் செய்யும் வழிவகைகளையும் எண்ணியபின் அதாவது தீர்மானித்த பின்பே அச்செயலைச் செய்யத் துணிய வேண்டும். செயல் ஒன்றை செய்யத் துணிந்தபின் அதற்குரிய வழிவகைகளை எண்ணிப் பார்க்கலாம் என்பது குற்றமாகும் என்கிறார் திருவள்ளுவர். அதாவது ஒரு முகாமையாளர் நன்றாகச் சிந்தித்துத் திட்டமிட்ட பிறகே ஒரு செயலில் இறங்க வேண்டும். இறங்கிய பிறகு சிந்திக்கலாம் என்பது தவறு.அவ்வாறு செய்வாராயின் அவர் செய்ய முற்பட்ட செயல் தோல்வியில் முடிந்து நிறுவனத்திகு நட்டத்தை ஏற்படுத்திவிடும் . இது கண்ணைக்கட்டிக் கொண்டு கிணற்றில் விழுவது போலாகும் என்கிறார் திருவள்ளுவர்.

எனவே திட்டமிடும்போது எதையும் மிகத்தெளிவாக ஆராய்ந்து முடிவெடுப்பதென்பது முகாமைத்துவத்தின் முக்கிய கடமையாக இருக்க வேண்டும். இவ்வாறு திட்டமிடும்போது தேவைப்படும் பொருள், ஏற்ற கருவி, காலம், மேற்கொள்ளப் போகும் செயல் முறை, உகந்த இடம் ஆகிய விடயங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும். அவ்வாறு தந்திரோபாயங்களைத் திட்டமிட்ட பின் வேலையைத் தொடங்கவேண்டும். வேலையைத் தொடங்கிய பின் திட்டமிடுவதென்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல.அது நிறுவனத்தை தோல்வியை நோக்கி செலுத்திவிடும்.

ஒருசெயலை எவ்வாறு செய்து முடிக்க வேண்டும் என்ற எந்தத் தெளிவுமி ன்றித் தொடங்கும் முயற்சியானது துணையாகப் பலா் நின்று காப்பாற்றினாலும் சரிவராது என்ற கருத்தினை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாகச் சொல்கிறார் .

ஆற்றின் வருந்தா வருத்தம் பலா்நின்று
போற்றினும் பொத்துப் படும்.
(குறள் 468)

அதாவது தக்க தெளிவு எதுவும் இல்லாமல் ஒரு நிறுவனமொன்றின் முகாமையாளர் ஒரு செயலைச் செய்யத் தொடங்குவாராக இருந்தால் எத்தனை ஊழியர்கள் அந்த நிறுவனத்தில் இருந்தாலும் அந்தச் செயலை வெற்றிகரமாகச் செய்யமுடியாது என்று திட்டமிடலின் முக்கியத்துவத்தைத் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார் .



எனவே ஒரு நிறுவனத்தில் ஒரு செயலை எப்போது தொடங்க வேண்டும், யார் யாரை எல்லாம் அழைத்து ஆலோசனை பெற வேண்டும், எந்த இடத்தில் தொடங்க வேண்டும் அதற்கு என்னவெல்லாம் செய்யவேண்டும் என்று தெளிவான ஒரு முடிவிற்குப்பின் தொடங்கினால் மட்டுமே அந்தச் செயல் வெற்றிகரமானதாக அமையும். இல்லையேல் யார் வந்து எப்படி உதவி செய்தாலும் அந்த நிறுவனத்தை உயா்த்த இயலாது. எனவே தெளிவான முடிவிற்குப் பின் ஒரு செயலை தொடங்குவது நல்லது என்பதை திருவள்ளுவர் வலியுறுத்துகிறார்.

உதாரணமாக ஒரு நிறுவன முகாமையாளர் தனது நிறுவனத்தினை விஸ்தரிக்குமுகமாக அதன் கிளையினைத் திறக்கவேண்டும் என்று முடிவு செய்தால் அவர் தனது ஊழியர்களுடன் ஆலோசித்து துறைசார்ந்தவர்களின் கருத்துக்களைக்கேட்டு எங்கே, எப்போது , எவ்வாறு தொடங்குவது, என்னவிதமான தந்திரோபாயங்களைப் பயன்படுத்தவேண்டும் என்று தீர்மானித்து செய்வாராக இருந்தால் அந்த முயற்சி வெற்றிபெறும் நிறுவனமும் வெற்றிபெறும் என்பது திருவள்ளுவரின் ஆலோசனை.

உண்மையில் ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் ஒரு செயலைச் செய்ய முன்னர் அதனால் தனது நிறுவனத்திற்கு வரக்கூடிய நன்மை தீமைகள் இலாப நட்டங்கள் என்ன என்பதை அலசி ஆராய்ந்து அந்தச் செயலை ஆரம்பிக்க வேண்டும் என்ற கருத்தினை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி
வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்.
(குறள் 461)

எனவே எந்த ஒரு செயலையும் செய்யும்பொழுது அச்செயலால் அழிவது எது ? அடுத்து ஆவது எது ? அதனால் வரும் லாபம் எது ? என்பதை ஆராய்ந்து பார்த்து செய்தல் வேண்டும் என்கிறார் திருவள்ளுவர் . எனவே ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் தன் நிறுவனத்திற்கான திட்டங்களை நன்கு ஆராய்ந்து உருவாக்க வேண்டும். இவ்வாறு உருவாக்கிய திட்டத்தினை துறைசார்ந்த நிபுணர்களிடம் காட்டி அவர்களின் கருத்தையும் கேட்டு அந்தத் திட்டத்தை செம்மை செய்ய வேண்டும். அப்போதுதான் அநதத் திட்டம் வெற்றிபெறும் நிறுவனமும் வெற்றிபெறும் .

இக்கருத்துக்களை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் தெளிவு படுத்துகிறார் .

தெரிந்த இனத்தொடு
தேர்ந்துஎண்ணிச் செய்வார்க்கு
அரும்பொருள் யாதொன்றும் இல்.
(குறள் 462)

அதாவது முகாமையாளர் தான் வகுத்த திட்டத்தினைத் தேர்ந்தெடுத்த அறிஞர்களோடு கலந்து ஆராய்ந்து அவர்களின் கருத்துக்களைக் கேட்டுப் பின் தானும் தனித்திருந்து மீளவும் அந்தத் திட்டத்தினை எண்ணி செய்ய வேண்டிய திருத்தங்களைச் செய்து அதனைச் செயல்படுத்த வேண்டும். இத்தகைய திறமைபடைத்த ஒரு முகாமையாளரினால் அடைய முடியாத அரும்பொருள் எதுவும் இல்லைஅவருக்கும் அவர் சார்ந்த நிறுவனத்திற்கும் வெற்றி உறுதி என்பதைத் திருவள்ளுவர் உணர்த்துகின்றார்.

இவ்வாறு அறிஞர்களோடு கலந்து ஆராய்ந்த பின்னர் அந்தத் திட்டத்தினை அல்லது செயலினை செய்வதற்குக் கிடைத்திருக்கும் காலம், தேவையான பொருட்கள், இதர வசதிகள், முயற்சிகள், ஊழியர்கள் எல்லாவற்றையும் வைத்து எவ்வாறு எவ்வாறு எல்லாம் செய்யப்போகிறோம் என்பதையும் திட்டமிட்டு அதனை யார், எதை, எவ்வாறு, எவ்வளவு காலத்தில்,எங்கே செய்து முடிப்பார்கள் என்பதை எல்லாம் கணக்கிட்டு செய்ய வேண்டும் . இக்கருத்துக்களைத் திருவள்ளுவர்

பொருள்கருவி காலம் வினைஇட
னொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்.
( குறள் 675)

என்ற ஈரடியில் தெளிவுபடுத்துகிறார் .அதாவது ஒரு செயலைச் செய்ய முன்பு அதனைச் செய்வதற்குத் தேவையான பொருள், தேவையான கருவிகள், செய்வதற்குரிய காலம், அந்தச் செயலின் இயல்பு, செய்ய வேண்டிய இடம் ஆகிய ஐந்து விடயங்களையும் தெளிவாக ஆராய்ந்து செயல்பட வேண்டும் என்றார் திருவள்ளுவர் .

இவ்வாறு ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் ஒரு செயலினைத் திட்டமிடும்போது தமது போட்டி நிறுவனங்களையும் அந்த நிறுவனங்களால் வரக்கூடிய போட்டி, பகை மற்றும் இடையூறுகளையும் அவற்றை எல்லாம் எவ்வாறு சமாளிப்பது என்பவற்றையும் கருத்தில் கொள்ளவேண்டும்.இதனைத் திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் தெளிவு படுத்துகிறார் .

வகையறச் சூழாது
எழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பது ஓராறு
(குறள் 465)

அதாவது முகாமையாளர் எச்செயலையும் செய்யும்முன் அதன் வகை தொகைகளை நல்லது கெட்டதுகளை எல்லாம் ஆழமாக ஆராய்ந்த பின்னரே தொடங்க வேண்டும் இல்லாவிட்டால் அவரின் முயற்சி தோல்வியில் முடிவடையும். இத்தகைய முயற்சி பாத்தி வகுத்து அதில் பகைவர்களை நிலைபெறச் செய்வது போலாகும் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறார். திருவள்ளுவரின் திட்டமிடல் தொடர்பான கருத்துக்கள் கூன்ஸ் ரூ ஓடோனல் (Koontz and O' Donnell) போன்றவர்கள் குறிப்பிடும் முகாமைத்துவத்தில் திட்டமிடல் தொடர்பான கொள்கைகளுடன் மிகவும் ஒத்துபோவதைக் காணலாம்.

# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

0777 438169 அபிவிருத்தி செய்யப்பட்ட பல தோட்டங்கள் A9 வீதி தம்புள்ள மாத்தளை, மத்தளபிட்டிய வீதி, தெங்கு, கித்துல், இ டைப்பயி ர் 12 மில்லி யன், பதம்பிட்டிய 6 1/2 ஏக்கர், தெங்கு, மா, வயல், குடியிருப்புக்கு வீடு. 25 மில்லியன், பொக்காவல 20 ஏ க்க ர் பலா, தெங்கு, இடைப்பயிர் ஓர்கல் ( 2 ஏக்கர்) 35 மில்லியன் உல்பத் மடவல 16 ஏக்கர் தேக்கு 4000 மிளகு கொடிகள் 2000, வயலுடன் வீடு 80 மில்லியன், கலகெதர காபட் பாதை க்கு முகப்பாக 350 மீட்டர் 16 ஏக்கர் இறப்பர் தோட்டம் 1400 மில். 0777 282147. 036041

## வேலைவாய்ப்பு

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

பயிற்சிபெற்ற, பயிற்சி பெறாத, தொலைக்காட்சி, ரேடியோ உட்பட இலக்ரோனிக் CCTV, Wash ing Machine மின் தொழில்நுட்பவியலாளர்கள் தேவை. தங்குமிடம், உணவு 0769496272 036831

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

30 வருட நம்பிக்கையைவென்றுள்ள எமது நெஸ்கோ நிறுவனத்திற்கு வயது 20 60 இரத்மலானை, களுத்துறை, பாணந் துறை, தெஹிவ ளை, நீர்கொழும்பு மற்றும் வென்னப்புவ பிரதேசங்களிலிருந்து கனரக மற்றும் இல குரக வாகன சாரதிகள் தேவை. சம்பளம் ரூபா 40, 000/ இற்கு மேல் அழைக்கவும். 0777263954, 076 7639155 விண்ணப்பிக்க வேண்டிய முகவரி 29/ 5, 4ஆம் ஒழுங்கை, இரத்மலானை. 036744

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

பிலியந்தலையில் வீடொன்றில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு 45 55 வயது பெண்ணொன்று தேவை. சுத்தமாக இருத்தல் வேண்டும். தொடர்பு இலக்கங்கள். 0774450684 மற்றும் 0112609612 037211

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

04 ஏக்கர் காணியை கவனித்துக்கொள்ள 50 55 வயதிற்கிடைப்பட்ட ஆரோக்கியமான ஆண் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். 077 7880278, 0702696557 036836

### 325 தொழில்துறை பொது

கொழும்பு சுத்திகரிப்பு நிறுவனத்திற்கு ஆண், பெண் பொலிஷர், இயந்திர இயக்குநர்கள் தேவை. கூடுதல் சம்பளம் EPF/ ETF அழையுங்கள். 0772771022 037058

## சொந்த விடயம்

### 528 தங்குமிட வசதிகள்

கொழும்பு 6, வெள்ளவத்த, பெண்களுக்கான தளபாடங்க ளுடனான அறைகள் இணைந்த குளியலறைகள், ஓய்வு அறை, சமையலறை, குக்கர், வொஷர், குளிர்சாதனம். 75/ 1, W.A. சில்வா மாவத்தை, தொ.பே . 01 125911 69, 0755 0 9 13 79 , 0777452447 037140

## காணி/தோட்டம்

### 634 வீடு சொத்து மட்டக்களப்பு மாவட்டம் விற்பனைக்கு

மட்டக்களப்பு திருமலை பிரதான வீதியில் (பிள்ளையாரடி பாட சாலைக்கு முன்பாக) Road Reservation கழித்து 56 பேர்ச் வியாபார நோக்கத்திற்கான காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும் தொடர்புக்கு 0778852009/ 0762911105 036834

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 150/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இதழியல் டிப்ளோமா கற்கை நெறியை நிறைவு செய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பல்கலைக் கழகத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் உபவேந்தர் றமீஸ் அபூபக்கரிடமிருந்து சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.எப்.றிபாஸ் (ஜே பி) சான்றிதழ் பெற்றுக்கொள்வதையும் பதிவாளர் அப்துல் சத்தார் மத்தியில் நிற்பதையும் காணலாம். படம்: திராய்க்கேணி நிருபர்)

## யுக தர்மம்: இலங்கை தமிழ் நவீன... (22 ஆம் பக்கத் தொடர்)

1988 – 1998 காலப் பிரிவில் இந்நாடகம் லண்டன், பாரிஸ் போன்ற ஐரோப்பிய நகரங்களிலும் கனடாவிலும் பல தடவைகள் மேடையேற்றப்பட்டது. 1998 இல் சிறுவர்களைக் கொண்டு 'ஒரு பயணத்தின் கதை' என்ற பெயரில் 'யுக தர்மத்தின்' ஒரு புதிய தயாரிப்பையும் பாலேந்திரா மேடையேற்றினார். யுக தர்மம் தவிர 'கண்ணாடி வார்ப்புக்கள்', 'ஒரு பாலை வீடு', 'முகமில்லாத மனிதர்கள்' மற்றும் 'துக்ளக்' போன்ற பல முக்கிய ஐரோப்பிய, இந்திய நாடகங்களையும் தமிழ் மேடைக்குக் கொண்டு வந்தவர் பாலேந்திரா. ரூபவாஹினியில் முதன் முதலில் ஒளிபரப்பப்பட்ட தமிழ் நாடகம் 'கண்ணாடி வார்ப்புக்கள்' (பி. விக்னேஸ்வரன் 1982 இல் தயாரித்தது). ஈழத்து நவீன தமிழ் நாடகத்துறைக்கு கிட்டத்தட்ட 45 வருட காலமாக தயாரிப்பாளராக, நெறியாளராக, நடிகராக, அரங்கியல் துறை மாணவர்களின் ஆசானாக கனகரத்தினம் பாலேந்திரா வழங்கி வந்திருக்கும் பங்களிப்பு உரிய விதத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்; அவருடைய கலைப் பணிக்கு உரிய அங்கீகாரம் அளிக்கப்படுதல் வேண்டும்.

INTERNATIONAL DRIVING LICENCE
Obtain Your International Driving Licence to Drive Overseas.
AA CEYLON Estd. 1904
Contact :
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Markar Mawatha,
Colombo 03
Tel: 011 2421528 - Ext 200/201
WEB : www.aaceylon.lk

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

வெல்லம்பிட்டியவில்
களஞ்சியசாலையுடனான
காணி விற்பனைக்கு



20 பேர்ச்சுக்கள், உயரமான கூரை, மூன்று வழி மின்சாரம், இரட்டை கேட்டுக்கள், முழுமையான சதுரமான கட்டிடத் தொகுதி, 20 அடி கொள்கலன் வாகனங்களுக்கான அணுகுவழி உண்டு.
தரகர் தேவையில்லை. 60 மில்லியன் ரூபா. பேசித் தீர்க்கலாம்.
தொடர்புகளுக்கு : 077 7 569 490

LAND FOR RENT
KATUNAYAKA
Ideal for :-
Warehouse, Commercial building, Factory building, Factory etc
Location : Next to Katunayaka BOI area, 20 minutes to Colombo / 5 minutes to Airport
Land extent : 160 Perches (1 acre) / 640 Perches (4 acre) 240 Perches (1.5 acre)
Monthly Rent : Rs.750,000/- per acre
077 7 258 280 / donandsato@gmail.com














Advertise Here
5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
-ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 / பியுமி - 011 2 429 383 /
ரமணி - 011 2 129 347 / கயனி - 011 2 429 342




## மேஷம்

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் செவ்வாய் விரையாதிபதி குருவுடன் இணைந்து விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே எதிர்பாராத விரயம் அதிகரிக்கும். எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. ஆனி 4ஆம் திகதி (18/06/2022) ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். 2,7ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன், வாக்கு, தனம், குடும்பம் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் இடமான தன ஸ்தானத்தில் உலாவரும் பொழுது நல்ல யோகங்களை கொடுப்பார். குறிப்பாக குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். தனவரவு தாராளமாக வந்து கொண்டே இருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள் .

## ரிஷபம்

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சுக்கிரன் விரய ஸ்தானத்தில் இருக்கிறார். உங்கள் ராசியிலேயே தனாதிபதி புதன் சஞ்சரிக்கிறார். எனவே விரத்திற்கேற்ற வருமானம் வந்துகொண்டே இருக்கும். ஆனி 4ம் திகதி (18/06/2022) உங்கள் ராசிநாதனான சுக்கிரன் உங்கள் ராசியிலே சஞ்சரித்துள்ளார். அவர் உங்கள் இராசிக்கு 6ம் இடத்திற்கு அதிபதியானவர். உங்கள் ராசியில் இருக்கும் புதனோடு சுக்கிரன் இணைவதால் புத சுக்ர யோகம் ஏற்படுகிறது. எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொகை வரவு உண்டு தொழில் ரீதியாக எடுத்த முயற்சியில் அனுகூலமும் ஆதாயமும் கிடைக்கும். வீடு, இடம் வாங்கும் யோகம் உண்டு.

## மிதுனம்

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் புதன் விரய ஸ்தானத்தில் இருக்கிறார். சகாய ஸ்தானாதிபதி சூரியன் உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கிறார். எனவே திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்டபடியே நடந்தாலும் விழிப்புணர்ச்சியோடு செயல்பட வேண்டிய மாதம் இது. ஆனி 4ம் திகதி (18/06/2022) ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். விரயாதிபதி சுக்கிரன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த வேளையில் எதிர்பாராத விரயங்கள் உண்டாகும். முயற்சிகளில் தடை, முன்னேற்றத்தில் குறுக்கீடு ஏற்படும். சஞ்சலம், சந்தேகம் காரணமாக பல காரியங்களைச் செயற்படுத்த இயலாமல் போகலாம். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு வீண் பழிகள் ஏற்படலாம்.

## கடகம்

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். எனவே தடைகளும் தாமதங்களும் அதிகரிக்கும். எதையும் தீர்க்கமாக முடிவெடுத்து செய்ய இயலாது. ஆனி 4ம் திகதி (18/06/2022) ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். லாபாதிபதி சுக்கிர லாப ஸ்தானத்திற்கு வரும் இந்த நேரம் புது முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பொருளாதார விருத்தி ஏற்படும். சுக தானாதிபதியாகவும் சுக்ரன் விளங்குவதால் வாகனம் வாங்கும் யோகம் உண்டு. பூமி பிரச்சினை அகலும். குடும்ப முன்னேற்றம் கருதி எடுத்த செயல்களில் வெற்றி கிடைக்கும். இந்த நேரத்தில் புதிய தொழில் வாய்ப்புகளும் வந்து சேரும்.

## சிம்மம்

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சூரியன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். குருவின் பார்வையால் சுபகாரியங்கள் நடை பெறலாம். ஆனி 4ம் திகதி (18/06/2022)ரிஷப ராசியில் சுக்ரன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் 10ம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளம் சிறப்பாக இருக்கும். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். வாடகை கட்டடத்தில் நடைபெற்ற தொழில் சொந்த கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும்.

## கன்னி

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் புதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் பரிபூரண பார்வை கிடைக்கிறது. எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொழில் ரீதியாக எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். ஆனி 4ம் திகதி (18/06/2022) ரிஷப ராசியில் சுக்ரன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 2 ,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். புதிய திருப்பங்களும் தொழில் முன்னேற்றமும் ஏற்படும். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் மற்றும் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதில் இருந்த தடைகள் அகலும். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்கும். முன்னோர் சொத்துக்களில் ஆதாயமும் முறையான பங்குகளும் வந்து சேரும்.

## துலாம்

ஆடி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசியிலேயே கேதுவும் சப்தம ஸ்தானத்தில் ராகுவும் வீற்றிருந்து சர்ப்ப தோஷத்தை உருவாக்குகிறார்கள். அர்த்தாஷ்டம சனி வக்ரம் பெற்று செவ்வாயை பார்க்கிறார். மனக்குழப்பம் அதிகரிக்கும். ஆனி 4ம் திகதி (18/06/2022)ரிஷப ராசிக்கு சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிநாதன் அட்டம ஸ்தானத்தில் தன் சொந்த வீட்டில் சஞ்சரிக்கும் பொழுது கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கு ஏற்ப நல்ல முன்னேற்றங்கள் வந்து சேரும். தடைபட்ட காரியங்கள் தானாக நடைபெறும் பொழுது ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய வாய்ப்புகள் உருவாகும்.

## விருச்சிகம்

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் செவ்வாய் குருவோடு இணைந்து குரு மங்கள யோகத்தை உருவாக்குகிறார். மேலும் குருவின் பரிபூரண பார்வை விருச்சிக ராசியில் பதிகிறது. எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். ஆனி 4ஆம் (18/06/2022) திகதி ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் சப்தம ஸ்தானத்தில் தன் சொந்த வீட்டில் இருந்து கொண்டு உங்கள் ராசியைப் பார்ப்பது யோகம்தான். சுபகாரியங்கள் நடைபெறும். அக்கறை செலுத்தாத காரியத்தில் கூட ஆதாயம் கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம் உண்டு.

## தனுசு

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் குரு பகவானோடு விரையாதிபதி செவ்வாய் இணைந்து சஞ்சரிப்பதால் விரயங்கள் கூடுதலாக இருக்கும். ஆனி4ம் திகதி (18/06/2022) ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 6,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது உத்தியோகம் மற்றும் தொழிலில் நன்மைகள் ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். இதுவரை போராடியும் வராத பாக்கிகள் இப்பொழுது வசூலாகும். உடல் நலத்தில் கூடுதல் கவனம் தேவை. சிறுசிறு தொல்லைகள் அடிக்கடி தலைதூக்கும்.

## மகரம்

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். சுகாதிபதி செவ்வாயை சனி பார்க்கிறார். எனவே ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கும். ஆனி 4ம் திகதி (18/06/2022) ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் பூர்வபுண்ணிய ஸ்தானத்தில் பலம் பெறும் பொழுது ஓரளவு நன்மைகள் கிடைக்கும். குறிப்பாக செய்தொழிலில் போதுமான வருமானம் கிடைக்கும். ஜென்ம சனி வக்ரம் பெற்றிருப்பதால் எதையும் திட்டமிட்டு செய்ய இயலாது. திடீர் திடீரென மாற்றங்கள் உருவாகும். உறவினர்களின் யோசனை மறு குழப்பத்தை ஏற்படுத்தும்.

## கும்பம்

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசிநாதன் சனி வக்ர இயக்கத்தில் விரய ஸ்தானத்தில் இருக்கிறார். விரயாதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான். விரயத்திற்கேற்ற வருமானம் வந்துகொண்டே இருக்கும். ஆணி 4ம் திகதி (18/06/2022)ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 4 ,9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரம் நல்ல நேரம் ஆகும். தாய்வழி ஆதரவு உண்டு. வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். பொருளாதாரம் திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு நீண்ட தூரத்திற்கான மாறுதல்கள் வந்து சேரலாம்.

## மீனம்

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் குரு செவ்வாயோடு இணைந்து சனியால் பார்க்கப் படுகிறார். எனவே ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும்.வீண் விரயங்கள் உண்டு. அணி 4ம் திகதி (18/06/2022) ரிஷப ராசியில் சுக்கிரன் சஞ்சரித்துள்ளார். உங்கள் ராசிக்கு 3 ,8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் ,உங்கள் ராசிநாதன் குருவிற்கு சுக்கிரன் பகை கிரகம். எனவே அவர் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பிரச்சினைகள் அதிகரிக்கலாம். மன அமைதி குறையும். கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது. தொழிலில் சில இழப்புகளை சந்திக்க நேரிடும். விழிப்புணர்ச்சியுடன் செயல்பட வேண்டிய நேரம் இது.

# சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சியால் படுத்துவிட்ட மீன் வியாபாரம்

## கவலையில் மீன் வியாபாரி இனோக்கா

தற்போது எமது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து, உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்துள்ளதால், எமது மீன் வியாபாரத் தொழிலிலும் பாரிய பின்னடைவைச் சந்தித்து வருவதாக, பெண் மீன் வியாபாரியான திருமதி இனோக்கா சந்தமாலி செம்பலிங்கம் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சுமூகமான நிலைமை நிலவிய காலப்பகுதியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை சிறந்த முறையில் காணப்பட்டதால், அவ்வேளையில் ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு அதிகளவில் மீன்களை ஏற்றுமதி செய்ததோடு மாத்திரமின்றி, ஒவ்வொரு வீடுகளுக்கும்; சென்று அதிகளவில் மீன்களை நான் விற்பனை செய்து வந்தேன். ஆனால், தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை வீழ்ச்சியடையத் தொடங்கியதைத் தொடர்ந்து, ஹோட்டல்கள் மற்றும் உணவக உரிமையாளர்கள் எம்மிடம் மீன்களைக் குறைந்தளவிலேயே கொள்வனவு செய்து வருகின்றார்கள்.

அது மாத்திரமின்றி, மின்வெட்டு இல்லாத காலத்தில் தொகையாக மீன்களைக் கொள்வனவு செய்து வந்த வாடிக்கையாளர்களும், தற்போதைய மின்வெட்டுக் காரணமாக தத்தமது தேவைக்கேற்ப அவ்வப்போது குறைந்தளவில் மீன்களை என்னிடம் கொள்வனவு செய்து வருகின்றார்கள். மின்வெட்டுக் காரணமாக குளிர்சாதனப்பெட்டியில்; மீன்களை அவர்களினால் பதப்படுத்தி வைக்க முடியாத நிலைமை காணப்படுகின்றது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மின்வெட்டு, எரிபொருள் தட்டுப்பாடு ஆகியனவும் எனது தொழிலில் பின்னடைவைச் சந்திப்பதற்கு ஏனைய காரணிகளாக அமைந்துள்ளதாகவும், அவர் சுட்டிக்காட்டியுள்ளார். திருக்கோணமலை மாவட்டத்தின் குச்சவெளிப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மிகவும் பின்தங்கிய கிராமமான கல்லாறாவைச்; சேர்ந்த 34 வயதுடைய இனோக்கா சந்தமாலி என்பவர், கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் தனது கணவருக்கு ஒத்தாசையாக மீன் வியாபாரத்தை கடந்த 8 வருடங்களாக கவனித்து வருகின்றார்.

தனது மீன் வியாபாரத் தொழில்; பற்றியும், தனது குடும்ப நிலைமை பற்றியும் தினகரன் வாரமஞ்சரி வாசகர்களுடன் அவர் பகிர்ந்துகொள்கின்றார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது குடும்பமானது, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பமாகும். அவ்வாறான குடும்பத்தைச் சேர்ந்த எனக்கு, 3ஆம் வகுப்பு வரையே பாடசாலைக் கல்வியைத் தொடர முடிந்ததோடு, மேற்கொண்டு எனது கல்வியைத் தொடராத முடியாத நிலைமை காணப்பட்டது.

பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திவிட்டு, வீட்டில் ஒன்றியிருந்த நான், உரிய வயதில் கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் ஒருவருடன் திருமண பந்தத்தில் இணைந்தேன். இந்நிலையில், எமக்கு 3 ஆண் பிள்ளைகள் உள்ளனர். மூத்த புதல்வர் தனது பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு தற்போது தொழில் பழகச்; செல்கின்றார். ஏனைய இரு பிள்ளைகளும் பாடசாலைக் கல்வியைத் தொடர்கின்றார்கள் என்கின்றார் அவர்.

வறுமையில் வாழும் எம்மிடம் கடற்றொழில் செய்வதற்கு சொந்தமாக மீன்பிடிப் படகோ அல்லது மீன் வலையோ இல்லை. ஆகையால், எனது கணவர் மீனவ முதலாளி ஒருவருக்கு கீழேயே வேலை செய்கின்றார். அம்முதலாளியின் படகில் எனது கணவர் கடலுக்குச் சென்று கரைவலை வீசி மீன்பிடியில் ஈடுபடுகின்றார். இந்நிலையில், வலையில் அகப்படும் மீன்களின் அளவைப் பொறுத்து, எனது கணவருக்கு ஒரு பங்கு மீன், முதலாளியினால் பகிரப்படும். அவ்வாறு பகிரப்படும் மீன்களின் அளவைப் பொறுத்து, அம்மீன்களை ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு கிடைக்கும் வகையில், முதலாளியின் உதவியுடன் அவ்வப்போது நாம் கொழும்புக்கு லொறியில் ஏற்றுமதி செய்து வந்திருந்ததோடு, எனது மீன் வியாபாரத்திற்கும் தேவையான மீன்களை பெற்றுக்கொள்வேன். எனது மீன் வியாபாரத்தினாலும், மீன் ஏற்றுமதியினாலும் கிடைக்கும் வருமானத்தில் எமது குடும்ப வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வோம்.



சிலவேளைகளில் வலையில் ஒரு மீனும் அகப்படாத சந்தர்ப்பங்களும் எமக்கு ஏற்பட்டிருந்தன. அவ்வாறான வேளைகளில் வருமானமின்றி மிகவும் கஷ்டப்படுவோம்; என்கின்றார் அவர்.

எமது வாழ்வாதாரத்திற்கான வருமானத்தை ஈட்டும் வகையில், எனது கணவருக்கு ஒத்தாசையாக தினமும் மீன் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் நான், ஒரு குடும்பப் பெண்ணாக இருக்கும் நிலையில் கூட, தினமும் அதிகாலையில் எழுந்து வீட்டு வேலைகளைக் கவனித்துவிட்டு மீன் வியாபாரத்திற்கு செல்வேன். காலை 6.00 மணிக்கு எனது வீட்டிலிருந்து ரி.வி.எஸ் மோட்டார் சைக்கிளில் மீன்களுடன் புறப்படும் நான், ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று மீன்களை விற்பனை செய்துவிட்டு 8.30 மணிக்கு எனது வீடு திரும்புவேன். இதன் பின்னர் எஞ்சியிருக்கும் எனது வீட்டுக் கடமைகளைக் கவனிப்பேன் என்கின்றார் அவர்.

கணவாய், நண்டு, இறால், திருக்கை உள்ளிட்ட சகல வகையான மீன்களையும் நான்; வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்து வருகின்றேன். கணவாய், நண்டு, இறால் போன்றவை அதன் பருவகாலத்தில் மாத்திரமே கிடைக்கும்.

நாட்டில் சுமூகமான நிலைமை நிலவிய காலப்பகுதியில் கூட, அன்றறைக்கு கடற்றொழிலுக்கு எனது கணவர் செல்லும் பட்சத்தில் மாத்திரமே எமது வாழ்வாதாரத்திற்கான வருமானம் கிடைக்கும் என்கின்றார் அவர்.

இவ்வாறாக எமது தொழில் மற்றும் குடும்பச்; செலவை சமாளித்து வருகையில், தற்போது எமது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையானது, எமது மீன்; வியாபாரத்திலும் பாரிய பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதோடு, வருமானமும் குன்றியுள்ளது. அதாவது, தற்போதைய எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருளின் விலையேற்றம், காரணமாக மீனவர்கள் கடற்றொழிலுக்குச் செல்வது குறைந்துள்ளதால், அவர்கள் மீன்களை பிடிப்பதும் குறைவாகவுள்ளது. இச்சூழ்நிலையானது எமது மீன் வியாபார ஏற்றுமதி மற்றும் எனது மீன் வியாபாரத்திலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

எரிபொருள் விலையேற்றத்தை முன்வைத்து நாம் சற்றுக் கூடிய விலைக்கு மீன்களை விற்பனை செய்யும்போது, அதனை வாங்குவோர் குறைவாகவுள்ளார்கள்.

இந்நிலையில், எஞ்சிய மீன்களை கருவாடாக்கி விற்பனை செய்கின்றேன். மீன்களைக் கருவாடாக்குவதற்கு எமக்கு நேரம் விரையமாகுவதோடு, செலவும் ஏற்படுகின்றது. அத்தோடு, கருவாடும் அதிக நிறையை பிடிக்கின்றது. இதனால் கருவாட்டு விற்பனையில் எமக்கு நட்டமே காணப்படுகின்றது என்கின்றார் அவர்.



என்னிடம் பலதரப்பட்டவர்களும் மீன்களைக் கொள்வனவு செய்யும் பட்சத்தில் வாடிக்கையாளர்களையும் தக்க வைத்துக்கொண்டு, பிரச்சினைகளையும் சமாளித்துக்கொண்டு, மீன் வியாபாரத் தொழிலை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு செய்து வருகின்றேன் என்கின்றார் அவர்.

மீன் வியாபாரத் தொழிலை ஆண்கள் செய்யும் தொழில், பெண்கள் செய்யும் தொழில் என்று நான் பிரித்துப் பார்க்கவில்லை. எனது குறிக்கோளானது, சுய கௌரவத்தோடு ஆண்களுக்கு நிகராக நானும்; தொழில் செய்ய வேண்டுமென்பதேயாகும். இதுவே எனது குடும்பத்துடன் சுய கௌரவத்தோடு வாழ வழிவகுக்கின்றது. ஆகவே, என்னைப் போன்ற ஏனைய பெண்களும் தொழில்களில் வேறுபாடு காட்டாதீர்கள். ஆண்களுக்கு நிகரான தொழில்களை உங்களினால் செய்ய முடியுமென்றால், நீங்கள் அத்தொழிலை செய்யுங்கள் என்றே நான் கூறுகின்றேன். உங்களுக்கு வெற்றி கிட்டும் என்கின்றார் அவர்.

எனது கணவரின் கடற்றொழில் நடவடிக்கைக்காக மீன்பிடிப் படகு மற்றும் மீன் வலையை கொள்வனவு செய்து, எனது மீன் வியாபாரத்தை பெருப்பிக்க வேண்டுமென்பதே எனது தற்போதைய எதிர்பார்ப்பாகும். அத்தோடு பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்துகொண்டிருக்கும் எனது இரு பிள்ளைகளையும் கல்வியில் முன்னேற்ற வேண்டும். இவையே தற்போது என் கண் முன்னால் காணப்படும் இருபெரும் சவால்களாகும் என்கின்றார் அவர்.



ஆர்.சுகந்தினி




என். சரவணன்

# நூற்றாண்டை நெருங்கும் கொழும்பு பொது நூலகம்

இலங்கையின் பௌத்த பாரம்பரிய மரபு என்பது பிக்குகளின் அறிவுத்தேடல், ஞானத் தேடல் என்பவற்றை உள்ளடக்கிய பாரம்பரியத்தைக் கொண்டிருக்கிறது. பிக்குமார் தமது தியானத்துக்கும், உபதேசத்துக்கும் அடுத்ததாக வாசிப்புக்கும், தேடலுக்கும், அதை பதிவு செய்து வைத்தலுக்கும் அதிக நேரத்தை செலவிட்டிருப்பதை தொல்லியல் ஆதாரங்கள் நிரூபித்துள்ளன.

இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட ஓலைச்சுவடிகள், கல்வெட்டுக்கள் மற்றும் செப்பேடுகளை; எழுத்தில் பதிந்து, சேகரித்து, பாதுகாக்கும் மரபு இரண்டாயிரம் ஆண்டுகளாகவே இருந்து வந்துள்ளது. இன்னொரு வகையில் சொல்லப்போனால் இலங்கையில் நூலக பண்பாட்டு வடிவம் ஏதோ ஒரு வடிவத்தில் இருந்தே வந்திருக்கிறது.

இலங்கையில் கி.மு முதலாம் நூற்றாண்டில் எழுதப்பட்டுள்ள பௌத்த திரிபிடக நூல்கள்; அந்த மரபை எடுத்துக் காட்டுகின்றன. கி.மு மூன்றாம் நூற்றாண்டிலேயே “ஹெலடுவா” என்கிற நூல் எழுதப்பட்டிருக்கிறது. அதுபோல “மகாவம்சம்” என்பது வரலாற்று நூல். பல நூற்றாண்டுகளாக வரலாற்று தகவல்களை பதிவு செய்து வைத்திருக்கும் ஒரே நாடு இலங்கை என்பதற்கு இந்நூல் ஒரு சான்று. விமர்சனங்களுக்கு அப்பால் பதிவு மரபொன்றும், பிரதி செய்து பல்வேறு இடங்களில் பாதுகாக்கும் நூலக மரபொன்றும், வாசிப்பு, தேடல் போன்ற பண்பாட்டு தொடர்ச்சியும் இருந்து வந்துள்ளதை நமக்கு புலப்படுத்தியுள்ளன. மகாவம்சம் உள்ளிட்ட பல ஓலைச்சுவடிகள் கண்டெடுக்கப்பட்ட “பொத்குல்” விகாரை பழைய நூலகத்துக்கு சிறந்த எடுத்துக் காட்டு என்று கூற முடியும்.

அனுராதபுர யுகத்தில் மகாவிகாரை, அபயகிரி விகாரை என்பவற்றை மையமாகக் கொண்டு பிக்கு கல்விச் சாலைகள் (ஆராமய) இயங்கியிருக்கின்றன. அந்த மையங்களில் நூலகங்கள் அமைக்கப்பட்டிருந்ததை வம்சக் கதைகள் குறிப்பிட்டுள்ளது.

சூளவம்சத்தின்படி 10ஆம் நூற்றாண்டில் ஐந்தாவது காசியப்பனால் நூலகம் இயக்கப்பட்டுள்ளதைக் விபரித்துள்ளன.

இலங்கையில் நூலக வரலாற்றை ஆராய்பவர்கள் இதையும் சேர்த்தே அறிதல் அவசியம். எனினும் இலங்கையில் நமக்கு பொது நூலகத்தை அறிமுகப்படுத்தியவர்கள் ஆங்கிலேயர்களே தான்.

இலங்கையில் பொது நூலக வரலாற்றை பதிபவர்கள் 'ஐக்கிய சேவை நூலகம்', 'கொழும்பு புறக்கோட்டை நூலகத்தை' ஆகிய இரண்டையும் தான் குறிப்பிடுவது வழக்கம். ஆனால் The Ceylon Blue Book', GovernmentAdministration Report', 'The Ceylon Calendar' (The Ceylon Almanac), Ferguson's Directory போன்றவற்றில் இன்னொரு தகவலையும் நாம் அறிய முடிகிறது. அதாவது கொழும்பு நூலகம் (The Colombo Library) என்கிற பெயரில் 1812 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 13ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. (Ferguson's Ceylon Directory 1863, 1864). இதன் முதலாவது நூலகராக டியோனிசீஸ் டி நீஸ் (Dionisiuse De Neys) என்பவர் 1846 வரை கடமை புரிந்திருக்கிறார்.



இலங்கையின் பொதுநூலகம் 1813 இல் 'ஐக்கிய சேவை நூலகம்' (The United Service Library) என்கிற பெயரில் முதற்தடவை நிறுவப்பட்டது. இது அன்று கொழும்பில் நிலை கொண்டிருந்த அரசாங்கத்தின் சிவில், இராணுவ அதிகாரிகளால் பிரத்தியேகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. இது ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஜனாதிபதி மாவத்தையில் (முன்னர் இராணி வீதி) உள்ள ஜனாதிபதி மாளிகைக்கு (அன்றைய இராணி மாளிகை) எதிரே உள்ள கட்டிடத்தில் இயங்கியது. பின்னர் அந்தக் கட்டடம் தான் நாட்டின் பிரதான தபால் தலைமையகமாக இயங்கியது.



முதலியார் முதுதந்த்ரிகே சைமன் பெர்ணான்டோ

1829 இல்பறங்கியர் சமூகத்தினர் புறக்கோட்டையில் “கொழும்பு புறக்கோட்டை நூலகம்” என்ற பெயரில் (Colombo Pettah Library)திறந்தனர். 1924 ஆம் ஆண்டு ஒக்டோபர் 1 ஆம் திகதி ஈ.டபிள்யூ. ஜெயவர்தன கொழும்பு நூலகத்தை நிறுவுவதற்கான தீர்மானத்தை கொழும்பு மாநகரசபையில் முன்வைத்தார். அன்றைய காலனித்துவ செயலாளர் சேர் சிசில் கிளெமெண்டி (Sir Cecil Clementi) இந்த மூன்று நூலகங்களின் சந்தாதாரர்களையும் அழைத்து ஒரு கூட்டமொன்றை நடத்தினார். அந்தக் கூட்டத்தில் கண்ட உடன்பாடுகளுக்கு அமைய கொழும்புசபை திணைக்களத்தினால் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட புதிய நூலகத்திற்கு அவர்களின் புத்தகங்களை வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கொழும்பு நூலகம், சேர்மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தையில் (முன்னர் எடின் பர்க் கிரசன்ட்) முதலியார் சைமன்பெர்னாண்டோ ஸ்ரீ சந்திரசேகர (Mudaliar Mututantrige Simon Fernando Sri Chandrasekera (1829–1908) அவர்களால் கட்டப்பட்ட 'சிறினிவாசா' என்ற மாளிகையில் 10 ஆகஸ்ட் 1925 அன்று திறக்கப்பட்டது. இன்றைய புதிய பொது நூலகத்திற்கு அருகாமையில் பாதையின் மறு புறத்தில் ஆனந்தகுமார சுவாமி மாவத்தையின் மூலையில் அது இருக்கிறது. அவர் தான் அரசாங்கத்திற்கு அக் கட்டிடத்தைக் கொடுத்தவர். அதுமட்டு மன்றி இலங்கையின் பிரதான கண் ஆஸ்பத்திரியான கொழும்பு விக்டோரியா கண் ஆஸ்பத்திரி, கொழும்பின் பிரதான சிறுவர் ஆஸ்பத்திரியான லேடி ரிஜ்வே சிறுவர் ஆஸ்பத்திரி மட்டுமன்றி இன்னும் சில முக்கிய ஆஸ்பத்திரிகளும் அவரால் அன்பளிப்பு செய்யப்பட்டவை தான். அவர் செய்த எண்ணற்ற சேவைகள் நீண்ட பட்டியலைக் கொண்டது. இக்கட்டுரை அந்தப் பட்டியலுக்கு உரிய இடமல்ல.

ஆங்கிலேயர் காலத்தில் அவர் ஒரு பெரும் தனவந்தர். அவர் காரீய (plumbago) வர்த்தகத்தில் ஒரு முன்னோடியாக திகழ்ந்தார். மேலும் 1856 ஆம் ஆண்டில் சுரங்க உரிமையாளராக ஆகிவிட்டார். ஏற்றுமதி வணிகத்தை நிறுவி செல்வம் குவித்தவர். ஐரோப்பியர்களுக்குப் போட்டியாக சுரங்கத் தொழிலை ஏலத்தில் எடுப்பதில் வின்னராக இருந்தார். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவருக்கு 4,438 ஏக்கர் காணி சொந்தமாக இருந்தது. அவரின் பொதுத்தொண்டின் காரணமாக ஆங்கிலேய அரசு அவருக்கு முதலியார் பட்டத்தை வழங்கியது. மொறட்டுவவில் உள்ள பெரிய திகாறொல்ல (Digarolla Bridge) பாலத்தை சந்திரசேகர முதலியார் கொடுத்த நிதியில் கட்டப்பட்டது தான்.

இந்த நூலகம் ஆரம்பிக்கப்பட்டபோது நூலகம் மூன்று துறைகளைக் கொண்டிருந்தது, வாசிகசாலை, இரவல் நூலக பகுதி, குறிப்பெடுக்கும் பகுதி. சிங்களம், தமிழ், ஆங்கில நூல்கள் அப்போதே இருந்தன. அப்போது தோராயமாக 16,000 புத்தகங்களைக் கொண்டிருந்தது, 94 பயன்பாட்டு உறுப்பினர்களையும், ஏழு பணியாளர்களையும் கொண்டிருந்தது. எஸ்.சி.புளொக் (S. C. Blok) என்பவர் முதன்மை நூலகராக பணியாற்றினார். 1980 இல் நூலகம் விகாரமஹா தேவி பூங்காவை ஒட்டி (முன்னர் விக்டோரியா பூங்கா) புதிதாக கட்டப்பட்ட கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. அதுவரை நூலகம் இயங்கி வந்த 'சிறினிவாசா' இல்லம். கொழும்பு மேயரின் வாசஸ்தலமாக மாற்றப்பட்டது. இன்று வரை மேயரின் இல்லம் அது தான்.



இன்றைய கொழும்பு பொது நூலகமானது நாட்டிலேயே பெரிய நூலகமாக திகழ்கிறது. இலங்கையின் பொது நூலகங்கள் உள்ளூராட்சி மன்றங்களின் கீழேயே நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் அருங்காட்சியகம் 1870 இல் ஆரம்பிக்கப்பட்ட அதே வேளையில் அங்கே ஒரு பொது நூலகமும் ஆரம்பிக்கப்பட்டது. அருங்காட்சியக நூலகம் என்று இன்றும் அது அழைக்கப்படுகிறது. கீழைத்தேய, மேற்கத்தேய ஆய்வு சம்பந்தப்பட்ட அரிய ஆவணங்களையும், நூல்களையும், பத்திரிகைகளையும் கொண்டு அந்த நூலகம் அப்போது ஆரம்பிக்கப்பட்டது. 1885 இலிருந்து வெளியான அத்தனை நூல்களின் பிரதிகளும் அங்கே சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. 3500 க்கும் மேற்பட்ட சிங்கள பாளி ஓலைச் சுவடிகளும், செப்பேடுகளும் உள்ளன. ஆரம்பகால மகாவம்சத்தின் பழமையான பாளி மொழி ஓலைச்சுவடியும் அங்கே உள்ளது. அத்துடன் 1900 ஆம் ஆண்டு பர்மிய அரசர் இலங்கைக்கு வழங்கிய ஓலைச்சுவடிகளும் அங்கே உள்ளன. எச்.சே.பி.பெல், ஹியூ நெவில் போன்ற ஓலைச்சுவடி சேகரிப்பாளர்களின் தனிப்பட்ட சேகரிப்புகளும், எஸ்.டபிள்யு பண்டாரநாயக்க, ஹென்றி பிளேக், டபிள்யூ, டி சில்வா போன்றோரின் சேகரிப்புகளும் அங்கே உள்ளன. மேலும் 6 லட்சத்துக்கும் அதிகமான நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளும் உள்ளன.

கொழும்பு விக்டோரியா பூங்காவானது இலங்கையின் மிகப் பழமையான பூங்கா. அந்தப் பூங்காவையும் அதையொட்டி இன்றைய கொழும்பு 7இல் இருந்த பல காணிகளுக்கும் சொந்தக் காரராக இருந்தவர் சீ.எச். டி சொய்சா (Charles Henry de Soysa). 1865 – 1872 வரை இலங்கையை ஆண்ட அன்றைய ஆளுநர் ஹெர்கியூலிஸ் ரொபின்சன் காலத்தில் நூறு ஏக்கர் காணியை கொழும்பு நகருக்காக பரிசாக அளித்தார் சொய்சா. இந்தத் தகவலை இன்றைய கொழும்பு மாநகர சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமும் உறுதி செய்கிறது.

இந்தப் பெரிய பூங்காவின் காணி பல்வேறு தேவைகளுக்காக சிறிது சிறிதாக விழுங்கப்பட்டது. கொழும்பு அருங்காட்சியகம், Nomads கிரிக்கெட் மைதானம் (இப்போது நெலும் பொக்குண), ஜோன்டிசில்வா அரங்கம், கொழும்புகலாபவனம், கொழும்பு மாநகர சபைக் கட்டடம் (Town Hall),SLLTA, பொது நூலகம், போர்நினைவுத்தூபி, கறுவாக்காடு அஞ்சல் அலுவலகம், திறந்த வெளியரங்கு ஆகியவை அக் காணியில் அமைக்கப்பட்ட கட்டடங்களே.

இந்த விக்டோரியா பூங்காவைச் சூழ அன்று கறுவா உற்பத்தியில் கொடிகட்டிப் பறந்த கராவ சாதியைச் சேர்ந்த தனவந்தர்கள் பலரின் பெரிய ஆடம்பர பங்களாக்கள் இருந்தன. இவற்றில் பெரும்பாலானவை பொதுத் தேவைக்காக எழுதிக் கொடுக்கப்பட்டுவிட்டன. புனித ப்ரிஜெட் மடம் கூட லிந்தமூலகே டேவிட் டி சில்வா (Thakurartha DevadithyaGardiyavasam Lindamulage David de Silva) என்கிற தனவந்தரின் (Henley House) என்று அழைக்கப்பட்ட மாளிகை தான்.

சொய்சாவுக்குச் சொந்தமான காணியில் தான் இன்றைய பெரிய பொது நூலகம் இருக்கிறது.

கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் (முன்னர் இந்த சுற்று வட்டத்துக்கு டி சொய்சா சுற்றுவட்ட சந்தி என்பது தான் பெயர்.) சீ.எச். டிசொய்சாவின் சிலை நூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே நிறுவப்பட்டுவிட்டது. இலங்கையில் சுதேசியர் ஒருவரின் பழமையான சிலை அதுவென்று கூறலாம்.



சீ.எச். டி சொய்சா

முன்னால் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச கொழும்பு மாநகர சபையில் கறுவாத்தோட்ட தொகுதியின் உறுப்பினராக இருந்த போது அங்கே நல்லதொரு நூலகத்தை நிறுவும் யோசனையை முன்வைத்தார். அவரின் அதே ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த வின்சன்ட் பெரேரா அப்போது மேயராக இருந்தார். 1965ஆம் ஆண்டு ஒக்டோபர் 30ஆம் திகதி மேயர் வின்சன்ட் பெரேரா நூலகத்தைக் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டினார். ஆனால் பல்வேறு காரணங்களால் இந்தக் கட்டடப்பணி ஒன்றரை தசாப்தமாக இழுபறிபட்டது. இறுதியில் 1980ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி தற்போதைய கொழும்பு பொது நூலகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

புதிய நூலகம் ஒரு லட்சம் சதுர அடி பரப்பில் கட்டப்பட்டிருக்கிறது. அதன் மண்டபத்தில் 500 பேருக்கான இருக்கை இடக்கூடிய மண்டபம் அத்துடன் கட்டப்பட்டிருக்கிறது. பல அரசியல் கூட்டங்கள் உட்பட நூல் கண்காட்சிகளும், கூட்டங்களும் அங்கே நடத்தப்படுகின்றன. மேலும் நூலகத்தில் 750 பேருக்கான இருக்கைகளுடன் கூடிய வாசிகசாலையும் உள்ளது.

கொழும்பு பொது நூலகம் இன்று கொழும்பின் குறிப்பிடத்தக்க அடையாளமாக திகழ்கிறது. வாசகத்தனத்துக்காக மாத்திரமன்றி அறிவார்ந்தோர் கூடும் இடமாகவும் அது ஆகியிருப்பதை அதனை அனுபவித்தவர்களே அறிவர்.

உசாத்துணை
1. Wright Arnold, TCIC pg. 609,
2. Kaurava Vansa Kathava, pg. 204 207,
3. Jayawardena Kumari, Nobodies to Somebodies, page 185,

# யுக தர்மம்: இலங்கை தமிழ் நவீன நாடகத் துறையின் முன்னோடி முயற்சி!

எம்.எல்.எம். மன்சூர்

1970 கள் மற்றும் 1980 கள் சிங்கள மேடை நாடகங்களில் இடதுசாரி கலைஞர்களின் ஆதிக்கம் அதிகமாய் நிலவி வந்த கால கட்டம். ஒரு விதத்தில் அதனை சிங்கள அரங்கக் கலைகளின் பொற்காலம் என்றும் சொல்லலாம். சுகதபால சில்வாவின் ‘துன்ன துனு கமுவே’, ஆர்.ஆர். சமரக்கோனின் ‘களனி பாலம’, சோமலதா சுபசிங்கவின் ‘விகுர்த்தி’ போன்ற நாடகங்கள் இலங்கை சமூகத்தில் அப்பொழுது எழுச்சியடைந்து கொண்டு வந்த முக்கியமான சில பிரச்சினைகளை பேசு பொருளாகக் கொண்டிருந்தன. ஒரு நாடகத்துக்கு இருக்க வேண்டிய அத்தியாவசியமான கலையம்சங்களை சமரசம் செய்து கொள்ளாமலேயே அவை பல்லாயிரக்கணக்கான பார்வையாளர்களைக் கவர்ந்திழுத்த நாடகங்களாக இருந்து வந்தன. அதேபோல ஜேர்மன், ரஷ்ய நாடகங்களின் தழுவல்களும் சிங்கள நாடக ரசிகர்களின் பெரு விருப்புக்குரிய மேடை நிகழ்வுகளாக இருந்து வந்தன. Bertolt Brecht இன் ‘The Caucusian Chalk Circle’ நாடகத்தைத் தழுவி ஹென்றி ஜயசேன தயாரித்த ‘ஹுணுவட்டயே கதாவ’, Aleksvi Arbuzov வின் ‘Irkutsk Story’ நாடகத்தைத் தழுவி ரஞ்சித் தர்ம கீர்த்தி தயாரித்த ‘அங்காரா கங்க களா பசீ’ (அங்காரா நதி பெருக்கெடுத்தோடுகிறது) போன்ற மொழியாக்க நாடகங்கள் 1980 கள் நெடுகிலும் சிங்கள ரசிகர்கள் விரும்பி ரசித்த படைப்புக்கள். ஒரு விதத்தில் அவற்றை இசை நாடகங்கள் என்றும் சொல்லலாம். குறிப்பிட்டுச் சொல்லும்படியான விஷேசம் மொழிபெயர்ப்புகள் என்ற உணர்வு பார்வையாளர்களிடம் ஏற்படாத விதத்தில் இந்நாடகங்கள் மேடையில் நிகழ்த்தி காட்டப்பட்ட கலை நேர்த்தி, பாத்திரங்கள் பேசிய வெகுஜன சிங்கள மொழி, மூன்று தலைமுறை சிங்கள ரசிகர்கள் மீண்டும் மீண்டும் விரும்பிக் கேட்டு, மனனம் செய்து, இன்றும் பரவசத்துடன் பாடிக் காட்டும் அவற்றின் பாடல்கள். அந்நாடகங்களின் பாத்திரங்களில் பெரும்பாலானவை சிங்கள பொதுப் பிரக்ஞையில் வேரூன்றியிருப்பவை. அந்த பின்புலத்தைக் கருத்திற் கொண்டே அண்மையில் பிரதம மந்திரி தனது பாராளுமன்ற உரையொன்றில் ‘ஹுணுவட்டயே கதாவ’ கதாநாயகி கரூஷாவின் பாத்திரத்துடன் தன்னை ஒப்பிட்டுக் காட்டியிருந்தார். இந்த மாற்றத்தை இலங்கை தமிழ் நாடக மேடைக்குக் கொண்டு வந்தவர் க. பாலேந்திரா.



அப்பொழுது அவர் இலங்கை மின்சார சபையில் பொறியியலாளராக பணிபுரிந்து வந்தார். தகவல் யுகம் இன்னமும் உருவாகியிருக்கவில்லை. எந்தவொரு புதிய விடயம் தொடர்பாக தெரிந்து கொள்ள வேண்டுமானாலும் நூல் நிலையங்களில் அலைந்து கடும் முயற்சிகளுக்குப் பின்னரேயே அது தொடர்பான தகவல்களை சேகரிக்க முடியும். அந்த அனுபவத்தை இப்படி பதிவு செய்கிறார் பாலேந்திரா:“மொரட்டுவை (கட்டுபெத்த) பல்கலைக் கழகத்தில் நான் பொறியியல் துறை மாணவனாக இருந்த பொழுது பிரபல நாடக நெறியாளர் ஹென்றி ஜயசேன நெறிப்படுத்திய ஜேர்மன் நாடக ஆசிரியர் பேர்டோல்ட் ப்ரெக்டின் ‘The Caucusian Chalk Circle’ (ஹுணுவட்டயே கதாவ) நாடகத்தை கொழும்பில் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. தீவிரமான நாடகத் தேடலில் நான் ஈடுபட்டிருந்த காலமது. அந்த நாடகம் என்னில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அதன் தயாரிப்பு என்னை பிரமிக்க வைத்தது. ப்ரெக்டின் நாடகமொன்றை தமிழில் செய்ய விரும்பினேன். கொழும்பில் பிரிட்டிஷ் கவுன்சில், அமெரிக்கன் சென்டர் போன்ற நூல் நிலையங்களில் அவருடைய நாடக நூல்களைத் தேட ஆரம்பித்தேன். ‘The Exception and the Rule’ நாடகத்தின் ஆங்கிலப் பிரதி 1979 இல் கண்ணில் பட்டது.” இந்நாடகத்தை ‘யுக தர்மம்’ என்ற பெயரில் பாலேந்திரா தமிழில் உருவாக்கினார். அது முதலில் 1979 டிசம்பர் மாதம் தமிழ் அவைக்காற்று கலைக் கழகத்தின் சார்பில் யாழ்ப்பாணத்தில் மேடையேற்றப்பட்டது. பங்கேற்ற நடிகர்கள் அனைவரும் மொரட்டுவை பல்கலைக்கழக மாணவர்கள். அதன் பின்னர் 1982 வரையில் அந்நாடகம் இலங்கையின் பல்வேறு இடங்களில் 28 தடவைகள் மேடையேற்றப்பட்டது. தமிழ் நாடகப் பிரியர்களுக்கு பிரமிப்பையும், இன்ப அதிர்ச்சியையும் ஊட்டிய ஒரு ‘Visual Treat’.‘நாட்டவரே, உங்களுக்கு நல்ல கதை சொல்ல வந்தோம் நீண்ட ஒரு பயணத்தில் நடந்த கதை சொல்ல வந்தோம் சுரண்டும் ஒருவரதும், சுரண்டப்படும் இருவரதும் நீண்ட பயணத்தில் நடந்த கதை சொல்ல வந்தோம்’ என்ற பாடல் வரிகளுடன் ஆரம்பமாகிறது ‘யுக தர்மம்’. ச.வாசுதேவனின் கவித்துவமான மொழியாக்கம். உரையாடல்களிலும் பார்க்க பாடல்களுக்கூடாக காட்சிகள் நகர்த்திச்செல்லப்படுகின்றன. ஒவ்வொரு காட்சியின் முடிவிலும் நடிகர்கள் பார்வையாளர்களுடன் நேரடியாக உரையாடுகிறார்கள். இது ப்ரெக்டின் ‘கற்பித்தல் வகை நாடகம்’ ஒன்றாகக் கருதப்பட்டது. 1930 களில் ஜேர்மனி நெடுகிலும் பயணித்த நாடகக் குழுவினர் பாடசாலைகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் சென்று மாணவர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் சோசலிச விழுமியங்களைப் போதிக்கும் நோக்கத்துடன் இந்நாடகத்தை அரங்கேற்றினோர்கள். நவீன முதலாளித்துவ சமூகம் அடிப்படை மனித மாண்புகளை எவ்வாறு சிதைத்து, சீர்குலைக்கிறது என்பது நாடகத்தின் கரு. ஆபத்துக்கள் நிறைந்த கொடிய பாலைவனம் ஒன்றுக்கு ஊடாக மூவர் மேற்கொள்ளும் ஒரு பயணம். பொருளீட்டும் நோக்கத்துடன் அந்த நீண்ட பயணத்தில் பங்



கேற்கும் பேராசை பிடித்த வியாபாரி. அவனுடைய சாமான்களைத் தூக்கிச் செல்லும் கூலித் தொழிலாளி; மற்றும் ஒரு வழிகாட்டி. இவர்களுக்கிடையிலான பரஸ்பர சந்தேகம், அச்சம் மற்றும் பதற்றங்கள் சூழ்ந்த தருணங்கள் பயணம் நெடுகிலும் வியாபாரியின் கொடூரமான சித்திரவதைகளை எதிர்கொள்கின்றான் கூலித் தொழிலாளி. ஒரு கட்டத்தில் வியாபாரியிடமிருந்த தண்ணீர் முழுவதும் தீர்ந்து விடுகிறது. அவன் தாகத்தில் தவிப்பதைப் பார்த்து கூலித் தொழிலாளியின் மனம் இரங்குகிறது. மனிதநேய உணர்வு மேலிட, தன்னிடமிருக்கும் தண்ணீரை வியாபாரிக்கு கொடுப்பதற்காக நீட்டுகிறான் கூலித் தொழிலாளி. அவன் தன்னை கொல்ல வருவதாக தவறுதலாக புரிந்து கொண்ட வியாபாரி தொழிலாளியை கொலை செய்து விடுகின்றாரன். வழக்கு விசாரணைக்கு வருகின்றது. பிரதிவாதி தரப்பில் முன்வைக்கப்படும் வாதம், வியாபாரியின் துன்பத்தை பார்த்து சகிக்க முடியாமல் அக்கூலித் தொழிலாளி மனித நேயத்துடன் அவனுக்கு தன்னிடமிருந்த தண்ணீரை கொடுப்பதற்காக நீட்டினான் என்பது.ஆனால், அந்த வாதத்தை ஏற்க மறுக்கிறது நீதிமன்றம். பயணம் நெடுகிலும் தன்னை துன்புறுத்தி, சித்திரவதை செய்து வந்த அந்த வியாபாரியின் மீது தொழிலாளிக்கு எந்த விதத்திலும் மனிதநேய உணர்வு தோன்ற முடியாதென்றும், அப்படியான சூழ்நிலையில் ஒருவனுக்குத் தோன்றும் மனித நேயம் விதிவிலக்கானது என்றும் சொல்கிறது.

எனவே, தண்ணீர் போத்தலை நீட்டிய கூலித் தொழிலாளியின் சைகையை, அவன் தன்னை கொல்ல வருவதாக வியாபாரி தவறாகப் புரிந்து கொண்டது நியாயமானது, என்றும் அப்படியான ஒரு இக்கட்டான தருணத்தில் ஒருவர் மற்றவர் மீது மனித நேயம் காட்டுவார் என எதிர்பார்க்க முடியாதென்றும், அதனால் வியாபாரி தற்காப்பு நோக்கில் கூலித் தொழிலாளியை கொலை செய்ததில் எவ்வித தவறுமில்லை என்றும் தீர்ப்பளிக்கிறது. “யுக தர்மத்தை மாற்றுவது சாத்தியமில்லை எனில் வழமை இதுவாகும்' வழக்கமும் இதுவாகும்' இதுவோ யுக தர்மம்' இதுவோ யுக தர்மம்' இல்லை என்பீரேல் புது விதி செய்யுங்கள்' புது விதி செய்யுங்கள்' “ என அதில் பங்கேற்ற நடிகர்கள் அனைவரும் பார்வையாளர்களை பார்த்து வலுவான வித்தில் குரலெழுப்புவதுடன் நிறைவுறுகிறது ‘யுக தர்மம்’.1980 களின் நடுப்பகுதியில் பாலேந்திரா – ஆனந்தராணி தம்பதி இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்த பின்னரும் தமது நாடகச் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுத்து வருகிறார்கள். (20ஆம் பக்கம் பார்க்க)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 16

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 04 | 05 |
| 06 | | 07 | 08 | 09 | |
| 10 | 11 | 12 | | | 13 |
| | | | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | |
| 22 | | 23 | | 24 | 25 |

பெயர் ........................................................
வகுப்பு ........................................................
தொலைபேசி இல ........................................................
பாடசாலை பெயர் ........................................................
வதிவிட முகவரி ........................................................
........................................................

.............................. ........................................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) இந்தியாவின் தேசியப் பறவை. ஆண் பறவை தோகை விரித்தால் அழகுதான்.
(4) செல்வம் என்னும் பொருள் தரும் சொல். ஆண்களின் பெயருக்கு முன்பாக மரியாதைக்காக, சுருக்கமாக இச் சொல்லை இடுதல் வழக்கம்.
(7) தசரதச் சக்கரவர்த்தியின் மனைவியருள் ஒருத்தி. (தலைகீழான சொல்)
(10) உணவுக்கு சுவையூட்டியாகப் பயன்படுத்தப்படுவது. கொடியில் விளைகின்ற இவ்வித்து உறைப்புச் சுவை கொண்டது.
(14) மனித வாழ்வில் ஒரு பருவம் இது. இளமைப் பருவத்திலேயே எக்காலமும் மனிதன் தொடர்ந்து இருக்க முடியாது. இறுதியில் இப்பருவத்தைச் சந்தித்தே ஆக வேண்டும்.
(17) அவித்தும், கறி சமைத்தும் உண்ணக் கூடிய கிழங்கைத் தருகின்ற தாவரம்.
(24) அக்கால மன்னர்கள் தங்களது போக்குவரத்துக்காகப் பயன்படுத்திய வாகனம். குதிரை பூட்டிய வாகனம். (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) எகிப்து நாட்டில் அக்கால பிரமிட்டுகளைக் காணலாம். அதனுள்ளே பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள இறந்த மனித உடல்களை இப்பெயரில்தான் குறிப்பிடுவர்.
(3) சித்திரை மாதம் பிறக்கப் போகும் வேளையில் இப்பறவையின் இனிய ஒலியை எங்களால் தாராளமாகக் கேட்க முடியும். இப்பறவை கூவுகின்ற சத்தம் அதிகாலையில் எங்களை துயில் எழுப்பி விடும். (தலைகீழான சொல்)
(4) தடுத்து வைக்கப்பட்டிருப்பவரைக் குறிப்பிடும் சொல். (தலைகீழான சொல்)
(13) மிகவும் மெதுவாக நகர்ந்து செல்கின்ற நகருயிரி. முதுகில் பாதுகாப்பான புறஓடு கொண்ட உயிரினம்.
(14) ஊசி போல் கூர்மையானது. தரையில் நடக்கும் போது அவதானம் தேவை. இல்லையேல் பாதத்தில் குத்தி விடும்.
(15) இலையின் மிகவும் மென்மையான பிஞ்சுப் பருவத்தை இவ்வாறு கூறலாம்.
(17) வீடு, அகம், இல்லம் என்றெல்லாம் சொல்லக் கூடிய மற்றொரு சொல்.
(19) மாங்காயின் பிஞ்சுப் பருவத்துக்குரிய மரபுச் சொல்.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 15

### விடைகள்

**இடமிருந்து வலம்**

(1) தாமரை (04) நான் (6) வலை (11) மாதுளை (14) தாகம் (19) கோபம் (22) வல்லாரை

**மேலிருந்து கீழ்**

(1) தாவரம் (2) மலை (5) நாளை (8) காது (11) மாதா (13) பதுளை (15) கடல் (19) கோரை

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 14

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**
**கே. பவித்ரா,**
தரம் 11F,கொ/வொல்பெண்டால் மகளிர் வித்தியாலயம்,
134/9, தெற்கு குறுக்கு வீதி, கலுதுபிட்ட, ராகம.

**இரண்டாம் பரிசு**
**எம்.ஏ. ஆயிஷா ஸைனப்,**
மே/மா மது/றஹ்மானிய்யா ம.வி (தே.பா)
41B, முஸ்லிம் வீதி, வெலிப்பன்னை.

**மூன்றாம் பரிசு**
**கே. அபிஷேக்,**
தரம் 06, கே/தெஹி/எகலியகொட த.வி.,
எகலியகொட தோட்டம், எகலியகொட.

### பாராட்டு பெறுவோர்

1. **எம்.இசட்.எப். ரம்லா,**
தரம் 10A, கொ/ பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரி,
பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 12.
2. **இப்திகார் ஸைனப்,**
தரம் 09, கே/ மா/சாஹிரா தேசியக் கல்லூரி,
மாவனல்ல.
3. **எம்.வை.எப். அம்ரா,**
தரம் 09T, விஹாரமகாதேவி மகளிர் கல்லூரி,
3A, 'பர்வின் மன்ஸில்'
உடத்தலவின்ன மடிகே, கண்டி.
4. **ச. கபிதூரிகா,**
தரம் 08, மட்/வின்சன்ட் தேசிய பாடசாலை,
435/36 2ம் குறுக்கு, பூம்புகார், மட்டக்களப்பு.
5. **எம்.ஏ. இஸ்லாம்**
தரம் 07C, அலிகார் மத்திய கல்லூரி,
390, ஏ.கே.எம். வீதி, ஏறாவூர்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 16
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



### குறளமுதம் :

ஆற்றாரும் ஆற்றி அடுப, இடன்அறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

**தெளிவுரை :**

*தக்க இடத்தை அறிந்து தம்மைக் காத்துக்கொண்டு பகைவரிடத்திற் சென்று தம் செயலைச் செய்தால், வலிமை இல்லாதவரும் வலிமை உடையவராய் வெல்வர்.*



## வீடெல்லாம் தோட்டம்..!

வெற்றுத் தரைகளெல்லாம்
வீட்டுத் தோட்டம் நாம் செய்வோம்
பற்றைக் காட கற்றி
பாடு பட்டு பயிர்நடுவோம்.

அன்றாடம் சமையல் செய்ய
ஆன வகைக் காய்கறியின்
விலைகள் அதிக மானால் பாவம்
அம்மாவும் என்ன செய்வா?

கத்தரி வெண்டி முதல்
தக்காளி பயித்தை யென
நட்டு நாம் வளர்த்தால்
நமக்கு நாலு காசுமிச்சம்.

இயற்கைப் பசளை யிட்டு
இயற்கை யான மருந்தடித்து
நல்லபடி பயிரும் செய்வோம்
நலமாய் நாங்கள் வாழ்வதற்கு.

இருக்கும் தரைகளெல்லாம் நாம்
எல்லோரும் ஒன்றி ணைந்து
பயிர்கள் பல வளர்த்து நாளை
பசியற்ற நாடு காண்போம்....!

**ஷெல்லிதாசன்,**
திருகோணமலை

## நிலநடுக்கத்தை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் எறும்புகள்

பல ஆயிரம் உயிர்களுக்கு சேதம் ஏற்படுத்தும் நிலநடுக்கத்தை முன்கூட்டியே அறியும் திறன் மிகச்சிறிய எறும்புகளுக்கு உள்ளது என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். செம்மர எறும்புகள் நிலநடுக்கத்தை முன் கூட்டியே அறிவதாக துய்ஸ்பர்க் சென் பல்கலைகழக புவியியல் நிபுணர் உல்ரிச் ஸ்கர்பர் தெரிவித்துள்ளார்.

உல்ரிச்சும் அவரது ஆய்வுக் குழுவினரும் மேற்கு ஜேர்மனியின் எபல் பிராந்தியத்தில் 2 ஆண்டுகளாக எறும்பு மலைப்பகுதிகளை ஆய்வு செய்து வருகின்றனர்.

அருகாமையில் ஏற்படும் சிறு நிலநடுக்கத்தின் போது இந்த எறும்புகள் விநோதமாக நடந்து கொள்வதை அவர்கள் கண்டறிந்துள்ளனர். உல்ரிச் ஸ்கர்பர் 2 ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய இத்தாலியில் உள்ள அப்ருசோ பகுதிக்கு சென்றிருந்தார். எல் அகுய்லா பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்ட பின்னர் உல்ரிச் அந்தப் பகுதிக்கு சென்றார். அப்போது புவியியல் கோட்டு பகுதியில் எறும்புக் கூடுகள் இருப்பதை கண்டார். ஆய்வாளர் உல்ரிச் இஸ்தான்புல் பகுதிக்கு சென்று இந்த ஆய்வை தொடரத் திட்டமிட்டுள்ளார். மிக விரைவில் அங்கு நிலநடுக்கம் ஏற்படும் என விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள். தமது ஆய்வு துவக்க நிலையிலேயே இருப்பதாக கூறும் உல்ரிச் வருங்காலத்தில் மனித உயிர்களை காக்கும் வகையில் நிலநடுக்கத்தை முன்கூட்டியே தெரிவிக்கும் சிற்றினமாக எறும்புகள் இருக்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.



## இவ்வார மழலை

**ஏ.எச். சபீஹா சம்ரூத்,**
அமானுல் ஹுதா – சரபா
நிந்தவூர்

## தெரிந்துகொள்வோம்!

| | |
|---|---|
| உடலில் இரத்தோட்டம் இல்லாத பூச்சி | – **கரப்பான் பூச்சி** |
| தலைகுனிந்து தண்ணீர் குடிக்கக்கூடிய பறவை | – **புறா** |
| காது இல்லாத உயிரினம் | – **பாம்பு** |
| வயிறு இல்லாத உயிரினம் | – **ஈசல்** |
| தலை இல்லாத உயிரினம் | – **நண்டு** |
| வாய் இல்லாத உயிரினம் | – **வண்ணத்துப்பூச்சி** |
| முட்டையிட்டவுடன் இறக்கும் உயிரினம் | – **நண்டு** |
| சிறிய இதயமுள்ள மிருகம் | – **சிங்கம்** |
| நீலநிறக்குருதி உள்ள நீர்வாழ் உயிரினம் | – **நண்டு, இறால்** |
| கீழ் தாடையை அசைக்கமுடியாத ஊர்வன மிருகம் | – **முதலை** |

**கே.எல். ஹில்மி,**
தேசிய பாடசாலை,
சம்மாந்துறை.

## சேர் ஐசக் நியூட்டன்



உலகில் வாழ்ந்த விஞ்ஞானிகளில் மிகவும் செல்வாக்கு பெற்றவரும், அறிவியல் புரட்சியில் முக்கிய பங்காற்றிய ஒருவராகவும், விஞ்ஞானிகளுக்கு எல்லாம் விஞ்ஞானியாகவும் திகழ்ந்தவர் சேர் ஐசக் நியூட்டன்.

விவசாய குடும்பத்தில் பிறந்த நியூட்டன் தனது கல்வியை கற்பதற்கு மிகவும் சிரமப்பட்டார். சிறுவயதில் இருந்தே அறிவியல் ஆர்வம் கொண்டவரான நியூட்டன், தண்ணீரில் வேலை செய்யும் கடிகாரத்தை அப்போதே கண்டுபிடித்தார். விடாது துரத்திய ஏழ்மையின் காரணமாக 14 வயதிலேயே பள்ளி படிப்பை தொடர முடியாத நிலை ஏற்பட்டது. அப்போது அவருடைய மாமா நியூட்டனின் கல்வி ஆசை நிறைவேற உறுதுணையாக இருந்து உதவினார். அதன் மூலம் பள்ளி படிப்பை முடித்து கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் உள்ள டிரினிட்டி கல்லூரியில் இளங்கலை பட்டம் பெற்றார். இளங்கலை பட்டம் பெற்ற இரண்டு ஆண்டுகளில் அவரது அறிவியல் மூளை பல கோணங்களில் சிந்திக்க வைத்தது. நவீன கணிதத்தின் பல்வேறு பிரிவுகளை அவர் கண்டுபிடித்தார். பைனாமியல் தியரம் மற்றும் கால்க்குலஸ் எனும் நவீன கணிதத்தின் பிரிவுகளை கண்டறிந்தார்.

ஒரு முறை தோட்டத்தில் நடந்து செல்லும்போது ஆப்பிள் பழம் மரத்தில் இருந்து விழுவதை கண்டார். எல்லா காலகட்டத்திலும் வாழ்ந்த மனிதர்கள் பார்த்திருக்கும் காட்சிதான் அது. ஆனால் அது இயற்கை என்று எண்ணிவிட்டு செல்வார்கள். ஆனால் நியூட்டனோ அதை பற்றி சிந்தித்தார்.

ஏதோ ஒரு கண்ணுக்கு தெரியாத சக்திதான் ஆப்பிள் பழத்தை புவியை நோக்கி விழச்செய்கிறது என்று கருதினார். விளைவு, புவி ஈர்ப்பு சக்தி என்ற ஒன்று இருப்பதால் தான், பொருட்கள் அனைத்தும் கீழே விழுகிறது என்பதை கண்டுபிடித்தார். இது அவருடைய கண்டுபிடிப்புகளில் மகத்தான சாதனையாகும்.

அதன் பின்னர் நியூட்டனுக்கு டிரினிட்டி கல்லூரியில் கௌரவப் பட்டம் வழங்கப்பட்டது. பல்வேறு ஆராய்ச்சிகளில் ஈடுபட்ட அவர் தொலைநோக்கிகளை கண்டுபிடித்தார். இன்று பயன்படுத்தப்படும் பல்வேறு நவீன தொலைநோக்கிகள் அனைத்துமே நியூட்டனின் தொலைநோக்கியை அடிப்படையாக கொண்டவையாகும். 21 முதல் 27 வயது வரை நிறைய கண்டுபிடிப்புகளை உருவாக்கினார். அதன் பிறகு 1703ல் ராயல் சொசைட்டியின் தலைவராக நியூட்டன் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1705ம் ஆண்டு இங்கிலாந்து ராணி, நியூட்டனின் ஆராய்ச்சிகளை அறிந்து வியந்தார். அவருக்கு, 'சேர்' பட்டம் வழங்கி கௌரவித்தார். அதன் பிறகு தொடர்ந்து ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்த நியூட்டன், தூக்கமின்மை, நரம்பு தளர்ச்சி போன்ற நோய்களால் அவதிப்பட்டார். 1727 ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி நியூட்டன் இறந்தார். நியூட்டன் பிறவியில் ஒரு மேதை. அதனால்தான் அவரால் இயற்கையின் விதிகளை கண்டுபிடித்து சொல்ல முடிந்தது. அத்தகைய மாமேதையின் சாதனைகள் மகத்தானவை, போற்றத்தக்கவை.

**ஆர்.ராஹினி**
வெளிமடை




மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரியும் மலையகத்தைச் சேர்ந்த தன்னார்வமிக்க இளைஞர், யுவதிகளால் நடத்தப்படும் 'நேர்கொண்ட பார்வை' அமைப்பின் 98ஆவது சமூகப்பணி அண்மையில் களுத்துறை, மத்துகம வலய அண்ணாசிகல தமிழ் வித்தியாலய அதிபர் ஏ.ஸீ.எம். றிப்கான் தலைமையில் நடைபெற்றது. நேர்கொண்ட பார்வை அமைப்பின் இந்த செயற்திட்டம் சமூக தன்னார்வலர் கரு. கனகரின் பரிந்துரைக்கு அமைவாக நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளுடன், புதிய மாணவர் தலைவர்களுக்கு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டது. பல்வேறு துறைகளில் சிறப்பாக பணியாற்றிவரும் மாணவர்களை பாராட்டி பரிசில்களும் வழங்கப்பட்டதுடன், பாடசாலையில் கற்கும் மாணவர்களின் பெற்றோருக்கு உலர் உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சமூக செயற்பாட்டாளர் தனலட்சுமி மாதவன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. தகவலும் படங்களும் : மணி ஸ்ரீகாந்தன்






**தில்ஷாத் சிப்னா,**
தரம் 05, மட்/ அரசடிப்பிள்ளையார் கனிஷ்ட வித்தியாலயம், மட்டக்களப்பு.



**கோவிசங்கர் சுஜய்,**
தரம் 04, மட்/ அரசடிப்பிள்ளையார் கனிஷ்ட வித்தியாலயம், மட்டக்களப்பு.



**ஹன்சிகா**
தரம் 02, ப/இதல்கஸ்ஹின்ன தமிழ் வித்தியாலயம், அப்புத்தளை.



**பூ. ஷேன்முரளி,**
தரம் 06, இரத்தினபுரி கலைமகள் தமிழ் வித்தியாலயம், இரத்தினபுரி.



**க. கிஷாலன்,**
தரம் 07, லசாலி ஆங்கில பாடசாலை, கொட்டாஞ்சேனை.

# விளையாட்டு



## ஐசிசியின் சிறந்த வீரராக மெத்தியூஸ்

இலங்கை அணியின் அனுபவ வீரர் அஞ்சலோ மெத்திவ்ஸ், மே மாதத்திற்கான ஐசிசியின் சிறந்த வீரராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

ஒவ்வொரு மாதமும் சர்வதேச கிரிக்கெட்டில் சிறந்த பிரகாசிப்புகளை வழங்கிவரும் வீரர்களை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐசிசி) கௌரவித்து வருகின்றது.

அதன்படி கடந்த மே மாதத்திற்கான சிறந்த வீரர்களாக இலங்கை அணியின் அஞ்செலோ மெதிவ்ஸ், அசித பெர்னாண்டோ மற்றும் பங்களாதேஷ் அணியின் முஷ்பிகூர் ரஹீம் ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டிருந்தனர். இதில் வாக்குகள் மூலம் ஒருவர் சிறந்த வீரராக அறிவிக்கப்படுவார். அஞ்சலோ மெத்திவ்ஸ் மே மாதத்திற்காக சிறந்த வீரராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார். அஞ்சலோ மெத்திவ்ஸ் பங்களாதேஷ் அணிக்கு எதிராக நடைபெற்ற இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2 சதங்களை விளாசியிருந்தார். குறிப்பாக முதல் டெஸ்ட் போட்டியில் 199 ஓட்டங்களையும், இரண்டாவது டெஸ்டில் ஆட்டமிழக்காமல் 145 ஓட்டங்களையும் பெற்றிருந்தார்.

இவரின் இந்த ஓட்டக்குவிப்பு, அசித பெர்னாண்டோ மற்றும் கசுன் ராஜிதவின் அபார பந்துவீச்சுக்களின் உதவியுடன் இலங்கை அணி தொடரை 1-0 என கைப்பற்றி, ஐசிசி டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் 4வது இடத்துக்கும் முன்னேறியிருந்தது.

ஐசிசியின் இந்த கௌரவம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அஞ்சலோ மெத்திவ்ஸ், "இந்த வாய்ப்பை நினைத்து நான் பெருமைப்படுவதுடன், என் மீது நம்பிக்கை வைத்திருக்கும் அணி வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் இரசிகர்கள் அனைவருக்கும் நன்றியை கூறிக்கொள்கிறேன். அத்துடன் இந்த கௌரவத்தை எப்போதும் எம்மீது நம்பிக்கை வைத்திருக்கும் இலங்கை இரசிகர்களுக்காக அர்ப்பணிக்கிறேன்" என்றார்.

இதேவேளை மகளிர் அணிக்கான சிறந்த வீராங்கனையாக பாகிஸ்தான் மகளிர் அணி வீராங்கனை தூபா ஹாஸன் தெரிவுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### இலங்கை–அவுஸ்திரேலியா மோதும்

## மூன்றாவது போட்டி இன்று கொழும்பில்

இலங்கை – அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் மூன்றாவது போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை (19) கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நடைபெறுகிறது.முதலாவது போட்டியில் ஆஸி அணியும் இரண்டாவது போட்டியில் இலங்கை அணியும் வெற்றி பெற்றதால் தற்போது தொடர் 1-1 என சமன் அடைந்துள்ளது.இப்போட்டிகள் கண்டி பல்லேகல சர்வதேச மைதானத்தில் இடம்பெற்றது.

இலங்கை சுற்றுப்பயணத்தில் முதல் கட்டமாக நடைபெற்ற ரி 20 தொடரினை இலங்கை 1-2 எனப் பறிகொடுத்த போதும் ரி 20 போட்டிகள் வரலாற்றில் பதியப்பட்ட ஒரு சிறந்த துடுப்பாட்ட இன்னிங்ஸினை இலங்கை – அவுஸ்திரேலிய அணிகள் இடையிலான மூன்றாவது ரி 20 போட்டியில் தசுன் ஷானக்க வெளிப்படுத்தியிருந்தார்.

இப்போட்டியில் கிடைத்த அபார நம்பிக்கையுடன் இலங்கை அணியின் தலைவர் தசுன் ஷானக்க அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் தொடரிலும் இலங்கை வீரர்களை வழிநடாத்தவிருக்கின்றார்.

இலங்கையில் கஷ்டமான பொருளாதார சூழ்நிலை ஒன்று நிலவி வரும் நிலையில் அவுஸ்திரேலிய வீரர்களுடன் இலங்கை அணி மூன்றாவது ரி 20 போட்டியில் பெற்ற அபார வெற்றி இலங்கை கிரிக்கெட் இரசிகர்களுக்கும் புத்துணர்ச்சி தந்துள்ளது.

இலங்கை – அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் போட்டிகளை நோக்கும் போது எந்த சந்தேகமுமின்றி, அவுஸ்திரேலிய அணி இலங்கைக்கு எதிரான ஒருநாள் போட்டிகளில் ஆதிக்கம் காட்டி இருந்ததனை பார்க்க முடிகின்றது.

இரு அணிகளும் இதுவரை 99 ஒருநாள் போட்டிகளில் விளையாடியிருப்பதோடு அதில் அவுஸ்திரேலிய அணி 62 போட்டிகளில் வெற்றியையும் இலங்கை 33 போட்டிகளில் வெற்றியையும் பதிவு செய்திருப்பதனை காண முடியும். அதேநேரம் 4 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்திருக்கின்றன.

இலங்கை அணி கடைசியாக 2010ஆம் ஆண்டில் அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக ஒருநாள் தொடர் ஒன்றினை வெற்றி கொண்டிருந்ததோடு, கடைசியாக 2016ஆம் ஆண்டு இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவுஸ்திரேலிய அணி இங்கே ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரினை 4-1 எனக் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



கடந்த கால முடிவுகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நடக்கப் போகும் ஒருநாள் தொடரில் அவுஸ்திரேலிய அணியின் ஆதிக்கம் அதிகம் இருப்பதனை எதிர்பார்க்க முடியும்.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் போட்டிகள் உலகக் கிண்ணத்திற்கான அணிகளை தெரிவு செய்யும் ஐ.சி.சி. இன் ஒருநாள் சுபர் லீக்கிற்குள் அடங்காத நிலையில் இலங்கை அணிக்கு சற்று அழுத்தம் குறைந்ததாக அவுஸ்திரேலிய ஒருநாள் தொடர் அமைகின்றது.

திறமையை நிரூபிக்க எதிர்பார்த்திருக்கும் இலங்கையின் இளம் வீரர்களுக்கு பெருத்த சவாலாக இந்த ஒருநாள் தொடர் காணப்படுகின்றது. குறிப்பாக இலங்கை அணியில் நீண்ட இடைவேளைக்குப் பின்னர் இணைந்திருக்கும் பானுக்க ராஜபக்ஷ ரி 20 தொடரில் எதிர்பார்த்த ஆட்டத்தினை வெளிப்படுத்தாது போக, தனது இடத்தினை இலங்கை அணியில் நிரூபிக்க போராட வேண்டிய நிலையில் காணப்படுகின்றார்.

அத்துடன் குசல் மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல மற்றும் தனுஷ்க குணத்திலக்க போன்ற துடுப்பாட்ட வீரர்களுக்கும் இலங்கை ஒருநாள் அணியில் நிரந்தர இடம் பெற்றுக்கொள்வதற்கு பொன்னான வாய்ப்புக்களில் ஒன்றாக அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான ஒருநாள் தொடர் அமைகின்றது.

அவுஸ்திரேலிய ஏ அணிக்கு எதிரான உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் தொடரில் பிரகாசித்த இளம் சகலதுறை வீரரான துனித் வெல்லாலகே தனது அபார ஆட்டத்தின் மூலம் இலங்கை ஒருநாள் அணியில் முதல் முறையாக வாய்ப்பினை பெற்றிருப்பதோடு அவரும் தனக்கான சந்தர்ப்பத்தினை இந்த ஒருநாள் தொடரில் எதிர்பார்த்திருக்கின்றார். இது தவிர அனுபவ வீரரான தினேஷ் சந்திமாலும் தன்னுடைய திறமையை நிரூபிக்க காத்திருக்கின்றார்.

இலங்கை அணியின் துடுப்பாட்டத்துறையினை நோக்கும் போது பெதும் நிஸ்ஸங்க, சரித் அசலங்க மற்றும் தனன்ஞய டி சில்வா போன்ற வீரர்கள் முன்வரிசையினைப் பலப்படுத்த மத்திய வரிசையில் இலங்கை அணிக்கு அதன் தலைவர் தசுன் ஷானக்க, சாமிக்க கருணாரட்ன போன்ற வீரர்கள் பெறுமதி சேர்க்கின்றனர்.

இலங்கை அணியின் பந்துவீச்சுத்துறையினை நோக்கும் போது பிரதான வேகப்பந்துவீச்சாளராக துஷ்மந்த சமீர காணப்பட, அணியின் சுழல்பந்து வீச்சுத் துறையினை வனிந்து ஹஸரங்க மற்றும் மகீஷ் தீக்ஷன ஆகியோர் பலப்படுத்துகின்றனர்.

அவுஸ்திரேலிய அணியைப் பொறுத்தவரை ரி 20 போட்டிகளை விட சிறந்த ஒரு அணியுடன் இலங்கை அணியினை ஒருநாள் போட்டிகளில் எதிர்கொள்ளவிருக்கின்றது. அதாவது உபாதை காரணமாக இலங்கை அணிக்கு எதிரான ரி 20 தொடரில் ஆடாது போன மிச்சல் ஸ்டார்க், வேக நட்சத்திரம் பேட் கம்மின்ஸ் ஆகியோர் அவுஸ்திரேலிய ஒருநாள் அணிக்கு திரும்பியிருக்கின்றனர். இது மிகவும் முன்னேற்றகரமான பந்துவீச்சுத் துறையுடன் அவுஸ்திரேலிய அணி, இலங்கையை ஒருநாள் தொடரில் எதிர்கொள்வதனை குறிக்கின்றது.

அதிக அனுபவம் கொண்ட ஸ்டீவ் ஸ்மித், டேவிட் வோர்னர், அணித்தலைவர் ஆரோன் பின்ச் ஆகியோர் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் துடுப்பாட்டத்துறைக்கு பலம் சேர்க்கின்றனர். இன்னும் உதிரி வீரர்களாக காணப்படும் மார்னஸ் லபுஷேன், கிளென் மெக்ஸ்வெல், ட்ராவிஸ் ஹெட், அலெக்ஸ் கேரி ஆகியோர் அவுஸ்திரேலிய அணிக்கு துடுப்பாட்டத்தில் பெறுமதி சேர்க்கின்றனர்.

அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சுத்துறையானது முன்னர் குறிப்பிட்டதனைப் போன்று மிச்சல் ஸ்டார்க், பேட் கம்மின்ஸ் மற்றும் ஜோஸ் ஹேசல்வூட் போன்ற முன்னணி வேகப்பந்துவீச்சாளர்கள் மூலமும், அஷ்டன் அகார் மற்றும் மிச்சல் ஸ்வப்ஸன் ஆகியோரின் சுழல் மூலமும் பலம் பெறுகின்றது.



## எஸ்ரிஆர் கூல் டென்னிஸ் போட்டி யாழ். மாவட்ட வீரர்கள் வெற்றி

*யாழ். விசேட நிருபர்*

இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட STR Cool Tennis இன் 10 வயதிற்கு உட்பட்ட தனி நபர்களுக்கான டென்னிஸ் போட்டிகளில் யாழ்.மாவட்ட வீரர்கள் முதன் முறையாக தமது வெற்றிகளை பதிவு செய்துள்ளனர்.

கடந்த 10ஆம்,11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் இலங்கை டென்னிஸ் சம்மேளனத்தில் இப்போட்டிகள் நடைபெற்றன.





இதில் 8 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான ஒற்றையர் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் ஜெ.நர்ஸ்வின் காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளார்.

7 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான இரட்டையர் போட்டியில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் ரா.ஆரோன் இரண்டாம் இடத்தினை பெற்றுள்ளார்.

7 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான ஒற்றையர் போட்டியில் யாழ் இந்து ஆரம்பப்பாடசாலை மாணவி வி.அஸ்விதா இரண்டாம் இடத்தினை பெற்றுள்ளார்.

## ஆண்களுக்கான அஞ்சலோட்டத்தில் இலங்கைக்கு வெள்ளிப் பதக்கம்

இந்தியாவின் சென்னையில் நடைபெற்று வருகின்ற 61ஆவது இந்திய மாநிலங்களுக்கு இடையிலான தேசிய சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் ஆண்களுக்கான 4×400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் பங்குகொண்ட இலங்கை அணி வெள்ளிப் பதக்கம் வென்றது.

சென்னை நேரு விளையாட்டு அரங்கில் 61ஆவது தேசிய தேசிய சிரேஷ்ட மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடர் நடைபெற்றது. இந்த நிலையில், போட்டித் தொடரின் 5ஆவதும், கடைசியும் நாளான (14ம் திகதி ) நடைபெற்ற ஆண்களுக்கான 4×400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் அருண தர்ஷன தலைமையிலான இலங்கை அணி பங்குகொண்டது.

போட்டியில் வேகமான ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்ட இலங்கை அணி முதலிரண்டு கோல் பரிமாற்றங்களிலும் முன்னிலை பெற்றாலும், கடைசி இரண்டு கோல் பரிமாற்றங்களில் சற்று பின்னடைவை சந்தித்தது. குறிப்பாக இந்திய ஏ மற்றும் இந்தியபிஅணிகள் இலங்கைக்கு பலத்த போட்டியைக் கொடுத்தது.



அருண தர்ஷன, இசுரு லக்ஷான், தினுக தேஷான், பபசர நிகு ஆகியோர் அடங்கிய இலங்கை அணி வெள்ளிப் பதக்கம் சுவீகரித்தது. அவர்கள் போட்டித் தூரத்தை 3 நிமிடம் 06.05 செக்கன்களில் கடந்தனர்.

இதன்மூலம் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ஆண்களுக்கான 4×400 மீற்றர் அஞ்சலோட்டத்தில் இலங்கை அணி சிறந்த நேரப் பெறுமதியைப் பதிவு செய்தது.

முன்னதாக 2018 ஆசிய விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான 4×400 மீற்றர் அஞ்சலோட்டத்தை 3 நிமிடம் 02.74 செக்கன்களில் இலங்கை அணி நிறைவு செய்தமை குறிப்பிடத்தக்கது.

போட்டியை 3 நிமிடம் 05.34 செக்கன்களில் நிறைவு செய்த இந்திய ஏ அணி தங்கப் பதக்கத்தையும், இந்திய பி அணி போட்டியைய 3 நிமிடம் 15.78 செக்கன்களில் நிறைவு செய்து வெண்கலப் பதக்கத்தையும் சுவீகரித்தது.

இதற்கிடையில், முப்பாய்ச்சல் தேசிய சம்பியனான சமல் குமாரசிறி, இன்று மாலை நடைபெற்ற ஆண்களுக்கான முப்பாய்ச்சலில் 15.81 மீற்றர் தூரம் பாய்ந்து 8ஆவது இடத்தைப் பிடித்தார்.

கடந்த 5 நாட்களாக நடைபெற்று வந்த 61ஆவது இந்திய மாநிலங்களுக்கு இடையிலான தேசிய சிரேஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் பங்குகொண்ட இலங்கை அணி 2 வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

இதில் பெண்களுக்கான 4×100 மீற்றர் அஞ்சலோட்டம் மற்றும் ஆண்களுக்கான 4×400 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகிய போட்டி நிகழ்ச்சிகளில் இலங்கை அணி பதக்கங்களை வென்றமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

## அம்பாறை மாவட்ட கிரிக்கெட் நடுவர் சங்கத்தின் புதிய நிர்வாகிகள்

*அட்டாளைச்சேனை மத்திய நிருபர்*



அம்பாறை மாவட்ட கிரிக்கெட் நடுவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் மற்றும் 2022/2023 நடப்பாண்டிற்கான புதிய நிர்வாகிகள் தெரிவு நிகழ்வுகள் அம்பாறையில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், இலங்கை கிரிக்கெட் நடுவர்கள் சங்கத்தின் நிர்வாகிகளான சமன் ஹேவவிதாரண மற்றும் காமினி குணசேன ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

அம்பாறை மாவட்ட கிரிக்கெட் நடுவர் சங்கத்தின் கடந்தகால பணிகள், எதிர்கால த்திட்டங்கள் குறித்து இக்கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதுடன், நடப்பு வருட புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர: எஸ்.எம்.ஆரிப்.
உபதலைவர்கள்: எம்.எச்.எம்.அஸ்வத், கே.ஜி.சமன் பிரியந்த குமார.
செயலாளர்: ஏ.தமித் நாலக ரத்னவீர.
பொருளாளர்: எஸ்.எம்.நிலுகா ரன்மால்.
போட்டிகளுக்கான செயலாளர்: கே.டபிள்யூ.எம்.ருவான் சம்பத் பண்டார.
நிர்வாக சபை: ஐ.எல்.எம்.பாயிஸ், ஜே.பஸ்மிர், எம்.பி.இந்துனில் நந்திக, டீ.டபிள்யூ.சி. ஜயசேகர, எச்.ஏ.ஐ.எஸ்.கே.ஹெட்டியாராச்சி.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜுன் மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 ஜூன் 19 ஞாயிற்றுக்கிழமை

# கொலம்பஸுக்கு உதவிய சந்திர கிரகணம்



கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்தார் என்ற கதை கொடூரங்கள், ஏமாற்று வேலைகள், தந்திரங்கள் கொண்ட வரலாறு. 1492 ஒக்டோபர் 12 ஆம் திகதி கொலம்பஸ் அமெரிக்கா பக்கம் கரை ஒதுங்கினார்.

அடுத்த 10 ஆண்டுகளில் அவர் அந்தப் புதிய உலகத்துக்கு மேலும் மூன்று தடவைகள் போய் வந்தார். இதில் அவர் கடைசி முறையாக 1503 ஜூன் 25 ஆம் திகதி இப்போதைய ஜமைக்கா தீவில் கரை ஒதுங்கினார்.

புதிய மனிதர்களைக் கண்ட அங்கிருக்கும் பூர்வக் குடிகளான அரவாக் இந்தியர்கள் கொலம்பஸை வரவேற்று விருந்தளித்து வந்தார்கள். அந்த பூர்வ குடிகளிடம் உணவு பெறுவதற்கு தகர டப்பாக்கல், விசில்கள், மணிகள் போன்ற குப்பை பொருட்களை கொலம்பஸ் குழு கொடுத்து வந்தது.

என்றாலும் நாள் போகப் போக கொலம்பஸுடன் வந்தவர்களின் கொடுமை தாங்க முடியவில்லை. அரவாக் மக்களிடம் கொள்ளையிடுவது, அவர்களை கொலைசெய்வது என்று அட்டகாசம் எல்லை மீறியது.

எனவே, கொலம்பஸ் ஆட்களுக்கு உணவு அளிப்பதை பூர்வக் குடிகள் நிறுத்தியது நியாயம்தான். ஆனால், அவர்களை வழிக்குக் கொண்டுவர கொலம்பஸுக்கு ஒரு சந்திர கிரகணம் தான் உதவியது.

ஜெர்மனியின் வானியலாளர் ரெஜியோமொன்டனஸ் எழுதிய வானஷாஸ்திர கையேடு ஒன்றை வைத்திருந்த கொலம்பஸ் அதின்மூலம் 1504 ஆம் ஆண்டு பெப்ரவரி 29 ஆம் திகதி முழு சந்திர கிரகணம் வரும் என்பதை தெரிந்திருந்தார்.

எனவே அந்த சந்திர கிரகணத்துக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் அரவாக் இந்தியர்களை அழைத்த கொலம்பஸ், தமக்கு உணவு அளிக்காததால் கடவுள் கோபத்துக்கு உள்ளாகி இருப்பதாகவும் எண்ணி மூன்று நாட்களில் நிலவை இருள் சூழ்ந்துவிடும் என்றும் அந்த மக்களை எச்சரித்தார். கூறியது போல் மூன்று நாட்களில் சந்திர கிரகணம் வந்ததைப் பார்த்த அந்த பூர்வக் குடிகள், பயந்துபோய் கொலம்பஸுக்கு உணவு அளிக்க ஆரம்பித்தார்கள்.

## பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்



### முடிந்தால் உச்சரிக்கவும்

Llanfairpwllgwyngyllgogerychwyrndrobwllllantysiliogogogoch என்ற கிராமம் வேல்ஷ் நாட்டில் இருக்கிறது. இதை எப்படி உச்சரிப்பது என்பது வேல்ஷ் மக்களுக்கு மாத்திரம் தான் முடியும்.

ஆரம்பத்தில் ஊரின் பெயர் சற்று உச்சரிக்க முடியுமாக Llanfairpwllgwyngyll என்று தான் இருந்தது. ஆனால் 1880களில் சுற்றுலாப் பயணிகளை கவர வேண்டும் எனக் கூறி அங்கிருக்கும் தையல் காரர் ஒருவர் இந்த நீண்ட பெயரை வைத்தாராம். புதிய பெயரில் இடைவெளி இல்லாமல் 58 எழுத்துகள் இருக்கின்றன. ஓர் இடத்தில் தொடர்ச்சியாக 'எல்' என்ற ஆங்கில எழுத்து நான்கு தடவைகள் வரிசையில் வரும்.

இந்தப் பெயரின் அர்த்தம், 'சிவப்புக் குகைக்கு அருகில் விரைவான நீர்ச்சுழி மற்றும் புனித டைசிலியொ தேவாலயத்திற்கு அருகில் வெள்ளை ஹேசலின் பள்ளத்தில் உள்ள புனித மேரிஸ் தேவாலயம்' என்று பொருள்படுகிறது. அதாவது ஓர் ஊருக்கான வழி காட்டும் முகவரியை பெயராக வைத்திருக்கிறார்கள்.

எப்படியோ ஐரோப்பாவின் மிக நீண்ட பெயர் இதுதான். உலகில் ஓர் இடத்தை குறிக்கும் இரண்டாவது மிகப்பெரிய பெயரும் இது தான்.

## தந்தி பிறந்த கதை



ஓவியரான சாமுவேல் மோர்ஸுக்கு 1825 ஆம் ஆண்டு கடிதம் ஒன்று கிடைத்தது. அதில் மனைவிக்கு சுகமில்லை என்று எழுதி இருந்தது. அடுத்த நாள் மற்றொரு கடிதம் கிடைத்தது. அதில் மனைவி இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது. மனைவியின் முகத்தை கடைசியாக பார்க்கச் சென்றால் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டிருந்தது.

இத்தனை தாமதமாகவா செய்தி கிடைப்பது என்று கடிந்துகொண்டார். ஆனால் அதற்காக யார் மீதும் கோபப்பட முடியாது. அன்றைய தொடர்பாடல் வசதி அந்த வேகத்தில் தான் இருந்தது.

அதற்காக மோர்ஸ் காலத்தின் மீது குற்றம்சாட்டி சும்மா இருக்கவில்லை. விரைவாக தகவல்களை பரிமாறிக் கொள்ள முறை ஒன்றை கண்டுபிடித்தார். 26 ஆங்கில எழுத்துக்கள் மற்றும் 0–9 வரையிலான எண்களுக்கு நிகராக 'புள்ளி' மற்றும் 'கோடு' குறியீடுகளைப் பயன்படுத்தி தந்திக்குறிப்பு எழுத்துக்களை மோர்ஸ் உருவாக்கினார். இதனை மோர்ஸ் தந்திக்குறிப்பு என்று அழைத்தார்கள்.

இது தான் இன்றைய தொலைத்தொடர்பு முறைக்கு முன்னோடியாக இருந்தது.

## கறுப்பின சிறுமிக்குக் கிடைத்த அதிர்ஷ்டம்

சாரா ரெக்டெர் என்ற சிறுமி கறுப்பினத்தைச் சேர்ந்த உலகின் பெரும் செல்வந்த பெண்ணாக மாறிய கதை அமெரிக்காவையே அதிர்ச்சி அடையச் செய்தது. சாரா குடும்பத்துக்கு ஒக்லோஹாமா மாநிலம் இலவசமாக காணி ஒன்றை வழங்கியது.



ஆனால் அந்தக் காணி ஒரு சதத்துக்கு பெறுமதி இருக்கவில்லை. விவசாயம் செய்ய முடியாத நிலம் அது.

அதாவது வெள்ளை இனத்தவர்களுக்கு நல்ல விளைச்சல் தரும் நிலங்களை அரசு வழங்கும். கறுப்பினத்தவர்களுக்கு இப்படித்தான் பயனற்ற நிலங்களை கொடுக்கும். அந்த நிலத்துக்காக அரசுக்கு வரி செலுத்த வேண்டியும் இருக்கும். எனவே, சாராவின் தந்தை, இந்த நிலம் வேண்டாம் என்று அரசுக்கு திருப்பிக் கொடுத்தாலும் அரசு அதனை ஏற்க மறுத்துவிட்டது.

கடைசியில் அதனை அவர் எண்ணெய் அகழ்வு நிறுவனம் ஒன்றுக்குக் கொடுத்தார். தோண்டிப் பார்த்தால் எண்ணெய் பீறிட்டுப் பாய்ந்தது. பணம் கொட்டோகொட்டு என்று கொட்டியது.

சாரா அவரது 18ஆவது வயதை எட்டும்போதும் அவரது சொத்து மதிப்பு ஒரு மில்லியன் டொலரைத் தொட்டது. இன்றைய திகதியில் அது 28 மில்லியன் டொலர்கள் இருக்கும்.

எனவே அந்தக் காலத்தில் கறுப்பினத்தவர் யாரும் அனுபவிக்காத ஆடம்பர வாழ்வொன்றை சாரா வாழ்ந்தார் என்பது வரலாறு. பொறுக்க முடியாது வெள்ளை இனத்தவர்கள் அவரை வெள்ளை இனத்தைச் சேர்ந்தவர் என்று அறிவித்தது தான் கதையின் உச்சம்.

## எதிரிக்கு 'அபின்' கொடுத்த பிரிட்டிஷ் படை



1917 ஜெரூசலம் முற்றுகை பிரிட்டிஷ் படைக்கு பெரும் சவாலாக இருந்தது. உஸ்மானிப் படை எந்தக் தாக்குதலையும் எதிர்கொண்டு அசையாமல் தற்காத்து வந்தது. என்ன செய்வது என்று புரியவில்லை. அப்போதுதான் கர்னல் ரிச்சர்ட் மெய்னெர்ட்ஷாகன் தந்திரத் திட்டம் ஒன்றை வகுத்தார். வானில் இதுவரை காலமும் குண்டுகளை போட்டும் எதிரியை அசைக்க முடியவில்லை. எனவே, குண்டு போட்டு பயனில்லை என்று உணர்ந்த அவர் அதற்கு பதில் சிகரெட் கட்டுகளை போடும் படி உத்தரவிட்டார். ஆனால் அது வெறுமனே சிகரேட்டுகள் அல்ல அதற்குள், அபின் போதைப் பொருளையும் அதிக அளவில் சேர்த்தார். சிகரெட் கட்டில் "போரை அமைதியான வழியில் முடிப்போம்" என்று எழுதி இருந்தது. அதனைப் பார்த்த உஸ்மானிய வீரர்களும் நம்பி அந்த சிகரெட்டுகளை புகைக்க ஆரம்பித்தார்கள். போதையில் இருந்த எதிரிகளை வீழ்த்துவது பிரிட்டிஷ் படைக்கு கடினமாக இருக்கவில்லை.

அதாவது, அபின் தலைக்கேறிய உஸ்மானிய வீரர்கள் வானில் பறந்த பிரிட்டஷ் போர் விமானங்கள் மீது கல்லெறிய ஆரம்பித்தார்கள். கடைசியில் ஜெரூசலம் இலகுவாக வீழ்ந்தது.



## "How to murder your husband" என்ற நூலை எழுதியவர்

# 1.5 மில்லியன் டொலருக்காக கணவரைக் கொன்ற நவலாசிரியை



கொலையும் செய்வாள் அமெரிக்க பத்தினி.. அப்படித்தான் ஒரு சம்பவம் அங்கு நடந்து மொத்த பேரையும் வெலவெலக்க வைத்து விட்டது.

அமெரிக்காவின் ஓரிகான் மாகாணத்தைச் சேர்ந்தவர் நான்சி ப்ராபி. இவரது கணவர் டேனியல். நான்சி ஒரு எழுத்தாளர். நிறைய நாவல்களை எழுதியிருக்கிறார்.

டேனியல் ஒரு சமையல் கலைஞர். கடந்த 2018ம் ஆண்டு ஜூன் மாதம் கல்லூரி ஒன்றில் டேனியல் கொலை செய்யப்பட்டு கிடந்தார்.

அந்த கல்லூரியின் சமையலறையில் இவரது சடலம் கிடந்தது. யாரோ துப்பாக்கியால் சுட்டுள்ளனர். ஆனால், யார் சுட்டுக் கொன்றது என்று தெரியவில்லை. அதனால், பொலிஸார் விசாரணையை தொடக்கினர். கடைசியில் மனைவி நான்சிதான் டேனியலை கொன்றது தெரியவந்தது. இதற்கு காரணம், டேனியலுக்கு வரவேண்டிய 1.5 மில்லியன் டொலர் காப்புறுதிப் பணத்திற்காக அவரை கொலை செய்துவிட்டது தெரிய வந்தது.

எனவே அதற்கான ஆதாரங்களை திரட்ட பொலிஸார் முயன்றனர். அவர் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அந்த புத்தகத்தின் பெயர், *"How to murder your husband"* (உங்கள் கணவனை கொலை செய்வது எப்படி?). இதுதான் அந்த புத்தகம். இந்த புத்தகத்தை பார்த்ததும் பொலிஸார் அதிர்ந்து போனார்கள். பிறகு படித்து பார்த்தனர். அதில், துப்பாக்கி, குண்டுகள், கூர்மையான பொருட்கள், விஷம், போன்றவைகள் குறித்து தனித்தனியாக குறிப்பிட்டு, இவைகளை வைத்து எப்படி கொலை செய்வது என்றுதான் நான்சி அதில் விலாவரியாக எழுதியிருந்தார்.



**துப்பாக்கி, குண்டுகள், கூர்மையான பொருட்கள், விஷம், போன்றவைகள் குறித்து தனித்தனியாக நாவலில் குறிப்பிட்டிருந்த இவர், இவைகளை வைத்து எப்படி கொலை செய்வது என்றும் அதில் விலாவரியாக எழுதியிருந்தார்**



அதுமட்டுமல்ல, கொலை செய்வதைவிட இறப்பதுதான் எளிது. கொலை செய்வது ரொம்ப கடினமானது. அதனால், கொலையில் இருந்து என்னை விடுவிக்க வேண்டும், ஜெயிலில் இருக்க எனக்கு பிடிக்காது' என்று அதில் தெரிவித்திருந்தார். அதாவது, கணவனை கொலை செய்வதற்கு முன்பே, நான்சி இவ்வாறு எழுதி வைத்திருக்கிறார்..

எனினும், இந்தப் புத்தகத்தை பொலிஸார் நீதிமன்றத்தில் ஆதாரமாக கொண்டு போய் சமர்ப்பித்தனர்.



ஆனால், கொலைக்கு முன்னால் எழுதிய புத்தகம் இது. ஆதாரமாக எடுத்து கொள்ள முடியாது என்று நீதிமன்றத்தினர் சொல்லிவிட்டனர். இதனால் அதிர்ந்து போன சட்டத்தரணிகள் வேறு ஆதாரங்களும் தங்களிடம் இல்லாததால், நான்சிதான் கொலையாளி என்று திரும்ப திரும்பச் சொன்னார்கள். நான்சிக்கு பண தேவை இருந்திருக்கிறது. கணவனை கொன்றுவிட்டால் காப்புறுதிப் பணமாக 1.5 மில்லியன் டொலர்கள் கிடைக்கும் என்பதால்தான் இப்படி கொலை செய்துள்ளார் என்று நீதிபதியிடம் விளக்கினார்கள்.

அதுமட்டுமல்லாமல், கல்லூரியில் வைத்துதான், டேனியலை நான்சி கொன்றுள்ளார். கொலை நடப்பதற்கு முன்பாக வீட்டில் இருந்து கல்லூரிக்கு நான்சி காரில் சென்றதற்கான சிசிடிவி ஆதாரமும் உள்ளது என்றுகூறி அந்த ஆதாரத்தையும் நீதிபதியிடம், சட்டத்தரணிகள் தாக்கல் செய்தனர். கணவனை சுட்டுக் கொன்ற துப்பாக்கியை ஒன்லைனில் ஓடர் செய்து வாங்கியுள்ளார் என்றும் தெரிவித்தனர். அவரது பெயரில் இருந்த 9 கோடி ரூபாய் காப்புறுதிப் பணமும், இரண்டேகால் கோடி ரூபாய் வீடும் நான்சி வசம் சென்றதாகவும் கூறினர்.

இவ்வளவு ஆதாரங்களையும் கேட்ட 12 பேர் கொண்ட நடுவர் மன்றம், நான்சிதான் குற்றவாளி என்ற முடிவுக்கு வந்தது. இறுதியாக, கணவனை கொன்ற நான்சிக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. ஆனால், நான்சி விடுவாரா என்ன? மேன்முறையீடு செய்யப் போவதாக சொல்லி இருக்கிறார். நான்சிதான் கணவரை கொன்றார் என்ற தீர்ப்பு வெளியானதும், ஒட்டுமொத்த குடும்ப உறவுகளும், நண்பர்களும் அதிர்ந்து போனார்கள். காரணம், கணவன் மனைவி எப்போதுமே அந்நியோன்யமாகவே இருந்தார்களாம்.

அதிலும் டேனியலின் நண்பர்கள், நான்சியிடம் வந்து, "நீங்களா உங்கள் கணவரை கொன்றது? அவர் உங்களுக்கு தீவிரமான ரசிகர் ஆயிற்றே? நீங்கள் வசதியாக வாழ்வதற்காக, பொய் சொல்லி உங்களின் மிகப்பெரிய ரசிகராக இருந்தவரை கொன்றுவிட்டீர்களே" என்று திட்டித் தீர்த்தனர். கணவனை கொல்வது எப்படி என்ற புத்தகத்தை எழுதியதுடன், அதை செயல்படுத்தி கொலையும் செய்துவிட்டார் மனைவி. இப்போது அந்த தண்டனையில் இருந்து தப்பிக்கவும் முயன்று கொண்டிருக்கிறார். என்னாகுமோ?!

# கர்ப்ப காலத்தில் 'மேக்கப்' போடலாமா?



கர்ப்பகாலத்தில் சத்துள்ள உணவு மற்றும் பாதுகாப்பான உடைகளை கவனமாகத் தேர்ந்தெடுக்கும் கர்ப்பிணிகள், மேக்கப் போடுவதிலும் சற்றே எச்சரிக்கையாக செயல்பட வேண்டும். முக அழகை மேம்படுத்திக் காட்டுவதற்கு பலவிதமான மேக்கப் பொருட்களைப் பயன்படுத்தும்போது, அதில் உள்ள மூலப் பொருட்களைப் படித்து தெரிந்துகொள்ள வேண்டியது முக்கியம். சில பொருட்களில் உள்ள இரசாயனக் கலவைகள், வயிற்றில் இருக்கும் கருவுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்.

மேக்கப் பொருட்களில் இருக்கும் பாரா பென்ஸ், சோடியம் லாரில் சல்பேட், பித்தலேட்ஸ் போன்ற இரசாயனக் கலவைகள் உடல்நலத்துக்கு ஆபத்தானதாகும். எனவே இத்தகைய மேக்கப் சாதனங்கள் பயன்படுத்துவதை கர்ப்ப காலம் முடியும் வரை தவிர்க்கலாம். செயற்கை நிறங்கள் மற்றும் சாலிசிலிக் அமிலம் கொண்ட மேக்கப் பொருட்களையும் தவிர்ப்பது நல்லது. சரும பராமரிப்புக்கு 'வைட்டமின் ஏ' அவசியமானது. ஆனால் சில அழகு சாதனப் பொருட்களில் செயற்கை ரெட்டினாய்டுகள் எனப்படும் வைட்டமின் ஏவின் கலவை பயன்படுத்தப்படுகிறது. மேலும், சருமத்தை பொலிவாக்கும் கிரீம்களில் காணப்படும் 'வைட்டமின் கே' இரத்தத்தை உறைய வைப்பதற்கு பயன்படுகிறது. இவை கர்ப்பிணி பெண்களின் வயிற்றில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

இதுதவிர மேக்கப் பொருட்களில் கலக்கப்படும் காரீயம் மற்றும் பாதரசம் போன்ற பொருட்கள் கர்ப்பிணிகளுக்கும், கருவில் இருக்கும் குழந்தைக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை.

மேக்கப் பொருட்களும், பாதுகாப்பான பயன்பாடும்:

**லிப்ஸ்டிக் (உதட்டுச் சாயம்):**

கர்ப்பிணிகள் சாப்பிடும் போது அல்லது தண்ணீர் குடிக்கும் போது லிப்ஸ்டிக்கில் உள்ள இரசாயனக் கலவைகள் வயிற்றுக்குள்ளே சென்று பாதிப்பை ஏற்படுத்தலாம். இதற்கு மாறாக தேன், ரோஸ் எண்ணெய், பாதாம் எண்ணெய் முதலிய இயற்கை பொருட்களாலான லிப்ஸ்டிக்கை பயன்படுத்தலாம்.

**முக கிரீம்:**

முகத்துக்கு பூசும் கிரீம்களில் செயற்கையான பொருட்கள் அல்லது இரசாயனங்கள் எதுவும் பயன்படுத்தப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த, 'ஹைபோஅலர்ஜெனிக்', 'வாசனை இல்லாத', 'இயற்கையான' என்று குறிப்பிடப்பட்டிருக்கும் கிரீம்களை தேர்ந்தெடுக்கலாம்.

**நெயில் பாலிஷ்:**

நகச் சாயத்தில் 'டோலுயீன்' எனும் இரசாயனக் கலவை பயன்படுத்தப்படுகிறது. இது சாப்பிடும் போது உடலுக்குள் செல்ல வாய்ப்பிருக்கிறது. கர்ப்பிணி பெண்கள் கர்ப்ப காலம் முடியும் வரை நகச் சாயத்தை முழுமையாக தவிர்த்து விடலாம்.

**காஜல் (மை):**

மேக்கப் பொருட்களில் முக்கியமானது காஜல். 'கண் மை' பிடிக்காத பெண்களே இல்லை. இயற்கையான முறையில் கற்பூரம், ஆமணக்கு எண்ணெய் போன்றவற்றைக் கொண்டு தயாரிக்கப்பட்ட 'கண் மை' உபயோகிப்பது நல்லது. இது கண்களின் ஆரோக்கியத்துக்கு நல்லது. மேக்கப் இல்லாமலும் அழகாக இருக்கலாம்.

- ★ கர்ப்ப காலத்தில் ஹார்மோன் மாற்றத்தால் முகத்தில் பருக்கள், தடிப்புகள் ஏற்பட்டாலும், கர்ப்பிணி பெண்களுக்கு உரித்தான பொலிவு, அவர்களுக்கு தனி அழகை ஏற்படுத்தும்.
- ★ ஆரோக்கியமான உணவும், பழங்களும், பச்சை காய்கறிகளும் சாப்பிட்டால் உடல் ஆரோக்கியமும், அழகும் இயற்கையாகவே மேம்படும்.
- ★ கர்ப்ப காலத்தில் 100 சதவீதம் இயற்கையான மேக்கப் பொருட்களையே பயன்படுத்த வேண்டும்.

# சோளம் வெதக்கையிலே...! Sweet Corn

***சோளம்***
***வெதக்கையிலே...***
***சொல்லி புட்டு போன புள்ள***
***சோளம் வெதக்கையிலே...***
***சொல்லி புட்டு போன புள்ள***
***சோளம் வெலஞ்சு காத்து கிடக்கு***
***சோடிக்கிளி இங்கே இருக்கு...***

சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் பிடித்த சோளத்தை எளிய முறையில் வீட்டிலேயே பயிரிடலாம்.

சோள விதைகளை ஒரு இரவு முழுவதும் தண்ணீரில் ஊற வைக்க வேண்டும். எறும்பு அரிப்பில் இருந்து தடுப்பதற்காக ட்ரைகோடெர்மா விரிடி மற்றும் சூடோமோனஸ் உயிரி உரத்தில் தோய்த்து எடுத்து நிழலான பகுதியில் உலர்த்த வேண்டும்.

இதன் மூலம் விதையின் முளைப்புத் திறனும் அதிகரிக்கும். விதைகளை டிரேவில் நட்டு நாற்று வந்தபிறகு, நடவு செய்யலாம்.



வீட்டில் வீணாகும் காய், கனி கழிவுகளைக் கொண்டு உரம் தயாரித்து, அத்துடன் வேப்பம் புண்ணாக்கு, மக்கிய சாண எருவும் கலந்து மண் கலவையினைத் தயாரித்துப் பயன்படுத்தினால், செடி ஆரோக்கியமாக வளரும். சூரிய வெளிச்சமும், காற்றோட்டமும் நன்றாகக் கிடைக்கக்கூடிய பகுதியில் ஒரு அடி இடைவெளி விட்டு விதை நடவு செய்தால், மூன்றாவது வாரத்தில் ஒரு அடி உயரத்துக்கு செடி வளர்ந்துவிடும்.

நிலத்தில் செடி வளர்ப்பதற்கான சூழல் இல்லாதவர்கள் தொட்டிகளில் வளர்க்கலாம். செடி வளர, வளர வேர்ப் பகுதி மேலெழுந்து கொண்டே வரும் என்பதால், அவ்வப்போது செடிக்குத் தேவையான மண்ணை நிரப்பிக் கொண்டே வர வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம், காற்றின் அசைவால் செடி சாய்ந்து விடுவதையும் தடுக்கலாம்.

மகரந்தச் சேர்க்கை செடி நட்ட 2 மாதங்களில் கதிர் விடும். அப்போது, ஆண் பூவில் இருக்கும் துகள்கள், பெண் பூ மீது விழுந்து மகரந்தச் சேர்க்கை நடைபெற வேண்டும். காற்றின் அசைவினால் இயல்பாக மகரந்தச் சேர்க்கை நடைபெறாத சமயத்தில், செடியினை அசைத்து செயற்கையாக மகரந்தச் சேர்க்கையினை நடைபெறச் செய்ய வேண்டும். செடி நட்டு 80 முதல் 90 நாட்களில் சோளக் கதிரினைப் பறிக்கலாம்.

# தூக்கத்தில் உமிழ்நீர் வடியும் பிரச்சினைக்கு தீர்வு



இளம் வயதினர் முதல் வயதானவர்கள் வரை பலருக்கு இருக்கும் பொதுவான பிரச்சினைகளில் ஒன்று தூக்கத்தில் உமிழ்நீர் வடிதல். இதன் காரணமாக கேலி, கிண்டலுக்கு உள்ளாகுபவர்களும் உண்டு. மனிதனுக்கு தினமும் 1 முதல் 2 லிட்டர் வரை உமிழ்நீர் சுரக்கும்.


குழந்தைகளுக்கு தூக்கத்தில் வாயில் நீர் வழிதல் என்பது இயல்பான விஷயம். ஆனால், பெரியவர்களுக்கு அவ்வாறு ஏற்படுவது கவனம் செலுத்த வேண்டியதாகும். தூக்கத்தில் உமிழ்நீர் வழிவதற்கான காரணங்கள்: பலருக்கு, முதுகுப் பகுதி கீழே படும்படியாக உறங்குவதை விட பக்கவாட்டிலோ, குப்புறப் படுத்தோ உறங்கும் பழக்கம் இருக்கும். மல்லார்ந்துப் படுக்கும்போது, வாயில் சுரக்கும் எச்சிலை நம்மை அறியாமல் விழுங்கி விடுவோம். அதுவே பக்கவாட்டில் படுக்கும்போது, அது வாயின் ஒரு பகுதியில் சேர்ந்து கொள்ளும். குப்புறப் படுக்கும்போது, நம்மை அறியாமல் வாயில் இருந்து வெளியே வடியும். சிலருக்கு வாய் திறந்து தூங்குவதால் இவ்வாறு நேரும். குழந்தைகளுக்கு 2 வயது வரைக்கும் இந்தப் பழக்கம் அதிகமாக இருக்கும். அதன்பின், படிப்படியாகக் குறைந்துவிடும். Also Read வருமானம் தரும் சுய தொழில்கள் மன அழுத்தம் அதிகம் உள்ளவர்களுக்கு பக்கவிளைவாக தூக்கத்தில் உமிழ்நீர் வழியும் பிரச்சினை ஏற்படலாம்.

அஜீரணக் கோளாறு இருப்பவர்களுக்கு இயல்பாகவே, உமிழ் நீர் அதிகமாகச் சுரக்கும். இதைத் தூக்கத்தில் விழுங்கும் தன்மை இல்லாததால் வெளியே வடியக்கூடும். சளி, இருமல் போன்ற பாதிப்புகள் உள்ளவர்களுக்கு, வாயில் உமிழ்நீர் அதிகரிக்கும். மூச்சு விடுவதில் சிக்கல் ஏற்படும். எனவே வாய்வழியே வழியும். தொண்டையில் பிரச்சினை உள்ளவர்களும், வலியால் எச்சிலை விழுங்க முடியாமல் தவிப்பதுண்டு. இவர்களுக்கு வாயில் சுரக்கும் உமிழ்நீர் அப்படியே தேங்கி இருக்கும். இந்த நீர் தூக்கத்தில் வாய் வழியாக வெளியேறும். அதேபோல், தூக்க மாத்திரை சாப்பிடுபவர்களுக்கு ஆழ்ந்த உறக்கத்தில் இந்தப் பிரச்சினை ஏற்படும். நரம்பியல், மூளை சார்ந்த பாதிப்பு இருப்பவர்களுக்கும் தூக்கத்தில் உமிழ்நீர் வடிவது தவிர்க்க முடியாத ஒன்று. கட்டுப்படுத்தும் வழிகள்: மல்லார்ந்துப் படுக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால், இப்பிரச்சினைக்குப் படிப்படியாக முற்றுப்புள்ளி வைக்கலாம்.

இதன் மூலம் தூக்கத்தில், வாயில் சுரக்கும் உமிழ்நீரை இயல்பாகவே விழுங்கும் பழக்கம் ஏற்படும். உமிழ்நீர் வடிவதை தடுக்கும் உபகரணங்கள் சந்தையில் கிடைக்கின்றன. அவற்றை மருத்துவர்களின் ஆலோசனைப்படி வாங்கிப் பயன்படுத்தலாம்.

**பாட்டி வைத்தியம்:** இரவு உணவுக்குப் பின்பு, ஒரு டம்ளர் தண்ணீரில் ஒரு டீஸ்பூன் அளவு நெல்லிக்காய்ப் பொடியை கலந்து குடித்து வந்தால், தூக்கத்தில் உமிழ்நீர் வடியும் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். லவங்கப் பட்டையைத் தூளாக்கி அதை டீயாகத் தயாரித்து, தினமும் குடித்து வந்தால் உமிழ்நீர் வடிவதற்குத் தீர்வு கிடைக்கும். சிறிதளவு துளசி இலைகளை வாயில் போட்டு மென்று சாப்பிட்டு வந்தால் இப்பிரச்னைக்கு எளிதில் தீர்வு கிடைக்கும்.

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



உன்னை நாளைக்கு காலைல 5 மணிக்கு தூக்குல போடப்போறோம்.
ஹா ஹா ஹா எதுக்கு சிரிக்கற? நான் எழுந்துக்கறதே 9 மணிக்குத்தானே



எதுக்குடா சில்லறை பொருள் கணக்கு, லொண்டரி கணக்கெல்லாம் நோட்டு புக்கல எழுதிக்கிட்டு இருக்கே?
எங்க வாத்தியார்தான் வீட்டுக் கணக்கை எழுதி வரச் சொன்னாருப்பா...



மதுவுக்கும் விஷத்துக்கும் என்ன வித்தியாசம் தெரியுமா?
எனக்கு முதல் சமாசாரம் மட்டும்தான்டா தெரியும். ரெண்டாவதா சொன்னியே அதப்பத்தி தெரியாதுடா ...
மது குடிச்சா நாம ஆடுவோம் . விஷம் குடிச்சா நம்ம முன்னாடி மத்தவங்க ஆடுவாங்க ...



"வாங்க.. வாங்க..! நீங்க மாப்பிள்ளை வீட்டுக்காரரா? பொண்ணு வீட்டுக்காரரா..?" "ம்ம்.. நான் பொண்ணோட பழைய வீட்டுக்காரர்..!"

என்னோட காதலிக்கு எதாவது பரிசு தரணும். என்ன தரட்டும்?
ஒரு தங்க மோதிரம் வாங்கிக்கொடு.
வேற எதாவது பெரிசா சொல்லு.
ஒரு MRF டயர் வாங்கிக்கொடு.



மயிலே மயிலே, இறகு போடுன்னா அது போடாது!
ஏன் அப்படி சொல்றே?
மயிலுக்கு தமிழ் தெரியாதே!

காதலன்: எப்பவுமே உன்னோட நினைப்பாவே இருக்கு டார்லிங்.
காதலி : இப்போதானே நாம பேசி முடிச்சோம்?
காதலன் : அச்சச்சோ! மறுபடியும் உனக்கே போன் செய்துட்டேனா? ஸாரி!



விசில் அடிச்சிக்கிட்டே இருக்கேன், நீ பாட்டுக்க போய்க்கிட்டே இருக்கே?''
இங்கே மட்டும் என்னவாம்...? பிரேக் அடிச்சிக்கிட்டே இருக்கேன். வண்டி பாட்டுக்க போய்க்கிட்டே இருக்குதே!''



என் கணவர் எப்பவுமே டொக்டர் அட்வைஸ்படி தான் நடப்பாரு.
அட... நடக்கறதுக்குக் கூட டொக்டர் அட்வைஸ் கேட்பாரா என்ன?



**ஆண்:** சைக்கிளை ஏன் மரத்திற்கு கீழே நிறுத்துகிறோம்??
**பெண் :** தெரியலை?
**ஆண்:** ஏன்னா மரத்து மேல நிறுத்த முடியாதே...



எங்க தலைவர் தண்ணியை சிக்கனமா பயன்படுத்துவாரு...
எங்க தலைவரு 'சிக்கனோட' பயன்படுத்துவாரு.

# வாசிப்பின் மீதான ஈர்ப்பே எனது இலக்கிய ஆர்வத்துக்குக் காரணம்

## எழுத்தாளர் சூசை எட்வேட்

**உங்களைப் பற்றிய அறிமுகம், பாடசாலை வாழ்க்கை, தொழில் அனுபவம் பற்றிய தகவல்களை கூறுங்கள்?**

எனது சொந்தப் பெயரே சூசை எட்வேட் தான். சொந்த இடம் திருகோணமலை. விவாக சம்பந்தம் யாழ்ப்பாணம். அங்கும் சில காலம் வாழ்ந்திருக்கிறேன். திருமலை சென் சேவியர் பாடசாலையில் கல்வி கற்றேன். க.பொ.த. சாதாரண தரத்தில் திறமைச் சித்தியடைந்தேன். உயர் தரத்திலும் சேர்ந்து படித்தேன். மூன்று நான்கு புத்தகங்களையே உருப்போட்டுப் படிக்கும் கல்வி முறை எனக்கு அலுப்புத் தட்டியது. பின்னர் என் தந்தையாரின் சிகையலங்கரிப்பு நிலையத்தில் தொழில் பழகி நானுமொரு சிகையலங்கரிப்பாளன் ஆனேன்.

**உங்களுக்கு இலக்கியத் துறையில் ஆர்வம் வந்தது எப்படி?**

நான் சிறுவனாக இருந்தபோது அம்மாவின் சகோதரங்களின் குடும்பங்களும் அங்கு இருந்தனர். படித்தவர்கள், நூல்களை வாசிப்பவர்களும் அங்கிருந்தார்கள். பத்திரிகைகள், சஞ்சிகைகள், அம்புலி மாமாவிலிருந்து ஆனந்த விகடன், கல்கி, குமுதம் என்று இலக்கிய இதழ்கள் வந்து குவியும். வாசிகசாலைக்குப் போயும் வாசிக்கும் பழக்கமும் எனக்கு இருந்தது. அந்த வாசிப்புகளின் மீதான ஈர்ப்பே எனது இலக்கிய ஆர்வத்துக்குக் காரணமாக அமைந்தது.

**உங்களிடையே வாசிப்புப் பழக்கம் எப்படித் தொடங்கியது?**

எமக்குப் பிடித்த ஆசிரியர் தன் சுய முயற்சியால் நூல்களை சேகரித்து பாடசாலையில் நூல் நிலையத்தை சிறிதளவாக ஆரம்பித்தார். எம்மை வாசிக்கத் தூண்டினார். அவர் ஒரு நாள் படிப்பிக்கும் போது, ஒரு கதை சொன்னார். அப்போது அவர், பேரறிஞர் பேர்னாட்ஷா இளம் பராயத்திலேயே நாளாந்தம் ஐந்து பக்கம் எழுதிவிட்டுத்தான் சாப்பிட, தூங்கப் போவாராம். அப்படி எழுதி எழுதி பயிற்சி பெற்றுத்தான் அவர் உலகமே போற்றும் பேரறிஞர் ஆனார் என்ற தகவலைச் சொன்னார். இது என் நெஞ்சில் தடம் பதித்தது. அவ்வாறே நானும் எழுதிப் பயன் பெற்று வந்தேன். அந்தப் பழக்கமே இந்தளவாவது என்னை உயர்த்திவிட்டது.

**உங்களை இத்துறையில் ஊக்குவித்தவர்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

படிப்பை கைவிட்ட பிறகு நான் திருமலை நூல் நிலையத்தில் அதிக நேரத்தைச் செலவிட்டேன். நூல் நிலையத்தில் அங்கத்தவராக சேர்ந்து, புத்தகங்களை வீட்டுக்குக் கொண்டு வந்து வாசிப்பதிலும் ஆர்வமாயிருந்தேன். அப்போது அரியநாயகம் நூலகப் பொறுப்பாளராக இருந்தார். அந்தக் காலத்தில் அவரின் சிறுகதைகள் பத்திரிகைகளில் அடிக்கடி வரும்.

அவர் நன்கு பிரபலமாகியிருந்தார். நான் அடிக்கடி நூல் நிலையம் வருவதும் புத்தகங்கள் எடுப்பதும் படிப்பதுமாக இருப்பதால் என்னில் அவருக்கும், அவரில் எனக்கும் ஒரு ஈர்ப்பு, பிடிப்பு ஏற்பட்டு சினேகிதமாகியது. அவர்தான் எனக்கு நல்ல எழுத்தாளர்களை, கதாசிரியர்களை அறிமுகப்படுத்தி என்னை முதன் முதலில் ஊக்குவித்தார். என்னோடு பழகிய அனுபவத்தில் அவர் ஒரு நாள் என்னிடம், நீயும் ஒரு நாள் பெரிய எழுத்தாளனாவாய் என்று சொன்னார். அப்போது நான் கட்டைக் கால்ச் சட்டைதான் போட்டிருந்தேன்.

**இலக்கிய நூல்களை தீவிர வாசிப்புக்கு உட்படுத்தி வரும் நீங்கள், உங்களை மிகவும் கவர்ந்த நூலாக எந்த நூலைக் குறிப்பிடுவீர்கள்? அந்த நூலைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்?**

நான் வாசிக்கும் காலத்தில் கூடுதலாக டாக்டர். மு. வரதனாரின் கதைகளையே விரும்பி வாசிப்பேன். அவர் கருத்தில்லாமல் ஒரு கதையும் எழுத மாட்டார். நானும் கருத்தில்லாமல் ஒரு கதையும் எழுதுவதில்லை. அவருக்கு கருத்துப் பிரசாரம் செய்பவர் என்ற ஒரு குற்றச் சாட்டும் உண்டு.

**சிறுகதைகளை எழுதும் போது உங்கள் மனநிலை எப்படி இருக்கும்?**

கதைகள் எழுத ஆரம்பிக்கும் போது, "ஆண்டவா! மக்கள் நல் வாழ்வுக்காக நல்லதைச் சொல்ல எனக்கு அருள் தாரும்" என்று வேண்டிக் கொண்டே எழுத ஆரம்பிப்பேன். "மனம் ஒரு நிலைப்படும்" என்றும் உச்சரித்துக் கொள்வேன்.



**இதுவரை வெளிவந்த உங்கள் நூல் அறுவடைகள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**


"கருத்துக் கலசம்। (2010) இது ஈற்றிசை வெண்பாவில் (குறள் நடை) எழுதியது. இந்த நூலில் ஆயிரத்து நூறு பாக்கள் உள்ளன. வாழ்க்கை அனுபவத்தால் அவ்வப்போது தோன்றும் கருத்துக்களைக் குறித்து வைத்து எழுதியவை.

"இவன்தான் மனிதன்। (2013)" என்னும் சிறுகதைத் தொகுதியையும் "இங்கு வீசியது ஒரு சமாதான காற்று। (2019) எனும் தொகுதியையும் வெளியீடு செய்துள்ளேன். பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்த சிறுகதைகளே இந்த இரண்டு நூல்களிலும் இடம் பிடித்துள்ளன. இதுவரை நான் எழுதி வைத்துள்ள கதைகளில் கால் பகுதிக்கும் குறைவானவைதான் பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் பிரசுரமாகியிருக்கின்றன. அப்படிப் பிரசுரமானவற்றில் கால் பகுதிக்கும் குறைவானவையே நூலுருப் பெற்றுள்ளன. அச்சிடப்பட்ட எனது நூல்களும் தேங்கிக் கிடக்கின்றன. இதுவே என் பலவீனமான நிலையாகும்.










**சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உங்கள் சிறுகதை மூலம் குரல் கொடுப்பதாக அறிகின்றேன். அது பற்றியும் சொல்லலாமே?**

இனவாத அரசுகளால் சிறுபான்மை இனங்கள் பாதிப்புறுகின்றன. அதற்காகக் கிளர்த்தெழும் இயக்கங்கள், கட்சிகள் தமக்குள் ஒற்றுமையில்லாமல் பிளவுபட்டு அடிபட்டு பலவீனமாகின்றன. எந்தப் போராட்டமும் பயனின்றி போகின்றன. சமூகத்துக்கு விமோசனம் கிடைப்பதாயில்லை. எது எப்படி இருந்தாலும் சமூகத் தலைவர்களாயிருந்தாலென்ன, சாதாரண பொதுமகனாயிருந்தாலென்ன அவர்கள் ஒருவருக்கொருவர் நல்லெண்ணமாய், மனத் தூய்மையாய் இருந்தாலே போதும். இதனாலே மனிதர்கள் எல்லாம், சமூகங்கள் எல்லாம் சுவீட்சம் பெற முடியும். என் எழுத்தின் ஆதார சுருதியே இதுதான்.

**அதிகமான சிறுகதைகளை எழுதியுள்ள நீங்கள் நாவல்களையும் எழுதலாமே. இதுவரை ஏன் நாவல்கள் எழுதுவது பற்றி சிந்தித்துப் பார்க்கவில்லை?**

ஒவ்வொரு சிறுகதைகளிலுமே பல்வேறு விதமான வாழ்க்கைப் பிரச்சினைகளையும், அதற்கான தீர்வுகள் மற்றும் நல்லாலோசனைகளையும் சொல்லி வருகிறேன். இதுவே எனக்குத் திருப்தியாகிறது. ஆகையால் நாவல் எழுதுவது பற்றி நான் இதுவரை சிந்திக்கவில்லை. இனிமேல்த்தான் அதில் கவனம் எடுக்க வேண்டும். எதிர்காலத்தில் பார்க்கலாம்.

**இப்போதுள்ள சில இலக்கியக் குழுக்களின் செயற்பாடுகள் சமூக மாற்றத்திற்கு எந்தளவில் பங்களிப்புக்களைச் செய்து வருவதாக நினைக்கிறீர்கள்? இலக்கியக் குழுக்களின் மீதான உங்கள் மதிப்பீடு என்ன?**

இப்போதுள்ள இலக்கியக் குழுக்களானது கட்சி மற்றும் கொள்கைக் கோட்பாட்டு ரீதியில் தான் இயங்கி வருகின்றன. அவை பெரும்பாலும் தங்களைச் சார்ந்தவர்களை மட்டுமே வளர்த்து, புகழடையச் செய்கின்றன. இலக்கியவாதியாக இருந்தாலென்ன, குழுவாக இருந்தாலென்ன, அவை நடுநிலமையில் நின்று இயங்க வேண்டும். அதுவே ஆரோக்கியமான இலக்கியச் சேவையாகும் என்பதே எனது கருத்து.

**உங்களது தற்போதைய இலக்கிய முயற்சி பற்றி?**

எழுதிக் கொண்டே இருக்கின்றேன். ஆனால் எழுதிக் குவித்தவைகளை பிரசுரமாக்குவது, நூலுருவாக்குவது போன்ற விடயங்களில் பெரும் சிக்கலில், பலவீனத்தில் உள்ளேன். எந்தவிதமான இலக்கியக் குழுக்களிலும் எனக்கு உதவுவார் இல்லை. (தொடர் 07ஆம் பக்கம்)

நேர்கண்டவர்:
வெலிகம ரிம்ஸா முஹம்மத்




**நீங்கள் ஆக்கங்களை எழுதுவது, புத்தகங்களை வாசிப்பது இவற்றையெல்லாம் உங்களது வீட்டார்கள் எப்படி எடுத்துக் கொள்கிறார்கள்?**

வயதான காலத்தில் நானும் மனைவியும் வீட்டில் தனியாகத்தான் இருக்கிறோம். என் மனைவி ஆக்கிப் படைத்து, வேளா வேளைக்கு சாப்பாடு தந்து போசிப்பா. நான் நிம்மதியாக இருந்து வாசிக்கிறேன்;, எழுதுகிறேன், இலக்கியப் பணி புரிகிறேன்.

**மற்ற எழுத்தாளர்களோடு உங்களுக்குத் தோழமையான உறவுகள் இருக்கிறதா? அவர்களது படைப்புகளை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

மற்ற எழுத்தாளர்களோடும், படைப்பாளிகளோடும் எனக்குச் சுமூகமான உறவுண்டு. யாரையும் விரோதித்துக்கொள்ள நான் விரும்புவதில்லை. ஒரு படைப்பாளி எவ்வளவு பாடுபட்டு ஆக்கங்களை ஆக்கி அளிக்கிறான் என்று எனக்குத் தெரியும். குறை சொல்லி மனதைக் காயப்படுத்தலாகாது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்தில் எழுதுவார்கள். அதைக் குறை சொல்ல நமக்கென்ன தகுதி இருக்கிறது? நமக்கு மட்டும் எல்லாம் தெரிந்த மேதையென்ற நினைப்பா!

**உங்கள் இலக்கிய நண்பர்கள் பற்றி குறிப்பிடுங்கள்?**

நீங்களும் எழுதலாம்| கவிதை இதழாசிரியரோடு பதினைந்து வருடங்களுக்கும் மேலாக நல்லுறவுண்டு. அவர் இதழை ஆரம்பித்ததிலிருந்கே தெருக்குரல்| என்னும் தலைப்பில் என் ஈற்றிசை வெண்பாவை தவறாமல் வெளியீடு செய்து வருகிறார்.

அதுவே காலப்போக்கில் கருத்துக் கலசம் நூலாகியது. அவர்தான் என்னை முதல் முதலாக மேடையேற்றி கௌரவிப்புச் செய்திருக்கிறார். அடிக்கடி சந்தித்து கலந்துரையாடுவார்.

அடுத்ததாக கவிஞர் செ. ஞானராசாவைக் குறிப்பிட வேண்டும். அவர் அடிக்கடி என்னைத் தேடி வந்து இலக்கியம் பற்றியும் உலக நடப்புகள் பற்றியும் கலந்துரையாடிச் செல்வார். நல்லாலோசனைகளும் சொல்வார்.

அவரோடு சேர்ந்து நல்ல ஆராய்ச்சி நூல்கள் எழுதிய சரவணபவனும் வந்து கலந்துரையாடுவார். இந்த இருவரும் சேர்ந்து இங்கே அன்புவழிபுரம் வாசிகசாலையால் எனக்கு கௌரவிப்புச் செய்திருக்கிறார்கள்.

அத்துடன் ஞானம் ஆசிரியர் தி. ஞானசேகரன், தனது மாத வெளியீடான ஞானம் இதழில் எனது அதிகமான சிறுகதைகளைப் பிரசுரமாக்கியிருக்கிறார். அட்டைப் பட அதிதியாக்கி என்னை கௌரவித்திருக்கிறார். தொலைபேசியின் ஊடாக நல்லாலோசனைகளைச் சொல்வார்.

அடுத்ததாக பூங்காவனம்| சஞ்சிகை ஆசிரியர் ரிம்ஸா முஹம்மத், ஒவ்வொரு இதழிலும் எனது கதைகளைப் பிரசுரித்து, எனக்கு ஊக்கம் கொடுத்து வருகிறார். இப்போது இந்த நேர்காணலைச் செய்து என்னை வெளியுலகுக்கு அறிமுகமாக்கியிருக்கிறார். எப்படி நன்றி சொல்வதென்றே தெரியவில்லை.

**தற்காலத்தில் வெளிவரும் படைப்புகளின் தரம் பற்றி என்ன சொல்வீர்கள்?**

தற்கால வாழ்க்கையே நவீன சாதனங்களால் மற்றும் கருவிகளால் தான் இயங்கி வருகின்றது. இளம் மட்டங்கள் உல்லாச சல்லாபங்களைத் தேடி வாழ்கின்றார்கள். தற்கால படைப்பாளிகளும் அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்தே எழுதுகிறார்கள். காலத்துக்கேற்ற மாதிரியாகப் படைக்க வேண்டும்தான்.

ஆனால் நீதி, நியாயம், தர்மம் என்றும் வாழ வேண்டியது கட்டாயமான ஒரு விடயமாக இருக்கிறது.

அதன் வழியில் நின்று பிசகாமல் எழுதவும் வேண்டும். நம் பழந் தமிழ் இலக்கியங்களின் வழிகாட்டலை மறக்காமல் இருக்க வேண்டும்.

**கலை இலக்கியத் துறையில் இதுவரை உங்கள் படைப்புகளுக்குக் கிடைத்த பாராட்டுகள், பரிசுகள், விருதுகள் பற்றிக் குறிப்பிடுவீர்களா?**

எனக்கு வித்தகர் விருது, முதல்வர் விருது, கலாபூஷணம் விருது போன்றவை கிடைத்துள்ளன. இவைதவிர கௌரவிப்பு நிகழ்வுகள் நடந்துள்ளன.

விருதுகளைத் தேடி நான் ஒருபோதும் அலைவதில்லை. இலக்கிய உலகம் என்னை எங்கே வைக்குமோ அங்கே வைக்கட்டும்.

**உங்களது அடுத்த நூல் வெளியீட்டை விரைவில் எதிர்பார்க்க முடியுமா?**

நான் வயதான காலத்தில் தனித்திருந்து எழுதி வருகிறேன். எழுதியவற்றில் கால் பகுதி கூட ஊடகங்களில் பிரசுரமாகவில்லை. ஒரு கதையை பிரசுரமாக்கவே படாதபாடு படவேண்டியிருக்கிறது. இந்த இலட்சணத்தில் அடுத்த நூல் வெளியீட்டை இப்போது நினைத்துப் பார்க்கவியலாமல் இருக்கிறது. எதிர்காலத்தில் பார்க்கலாம்.

**இன்றைய இளந்தலைமுறைப் படைப்பாளிகளுக்கு கூற விரும்புவது?**

அவர்கள் நவீன காலத்துக்குரிய முறையில் எழுதி வருகிறார்கள். ஆனால் பழந்தமிழ் எழுத்தாளர்களை; வழிகாட்டியாய் கொள்ள மறவாதீர்கள். நீதியின் பக்கம் தர்மத்தின் பக்கம் சார்ந்து நிற்கட்டும் அவர்களது படைப்பு.

ஒரு கதையோ, கவிதையோ எழுதி அனுப்பி அது பிரசுரமான பின்னரே அடுத்ததை எழுதுவதாக இருந்தால் உங்கள் ஆற்றல் வளராது.

அதற்கு நாளாந்தம் பயிற்சி வேண்டும். அப்போது தான் ஆற்றல் வளரும். இது சம்பந்தமாக கருத்துக் கலசத்தில்| இருக்கும் ஒரு கவிதையைத் தருகிறேன்.

முயற்சி பயிற்சி அயர்ச்சியின்றி இருந்தால் உயர்ச்சி உச்சத்தில் இருக்கும்.

**இறுதியாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

வெறும் புகழுக்காக அதையும் இதையும் எழுதக் கூடாது. மக்கள் வாழ்வு மேம்பட தர்மம் நீதியின் அடிப்படையில் நின்று எழுத வேண்டும்.

எழுத்தாளர்கள் உட்பட சாதாரண மக்கள் வரை "மனம் போல வாழ்வு" என்ற பழமொழியைப் பின்பற்றினாலே போதும், சுபீட்சம் பெறலாம்.




நீங்கள், உங்கள் Phone களில் விதவிதமாக எடுத்துப் பார்த்து ரசிக்கும் Selfie படங்களை இந்த செந்துாரம் இதழில் பிரசுரிக்க உங்கள், பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு 0773124543 என்ற whatsappக்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.

## செந்துாரம் பிறந்தநாள் வாழ்த்து




நீங்கள், உங்கள் மழலைச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை இந்த செந்துாரம் இதழில் எந்தவித கட்டணமும் இன்றி இலவசமாக பிரசுரிக்க விரும்புகின்றீங்களா? அவ்வாறாயின் மழலையின் பெயர், முகவரி, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு 0773124543என்ற whats app க்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.

# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்



**எம்.ஆர்.சுதாகர். வத்தளை.**

**கேள்வி:-** ராதா மோகன் என்றொரு இயக்குநர் இருக்கிறார் அல்லவா ! அவர் இப்போது ஏதாவது படத்தை இயக்கிக் கொண்டிருக்கிறாரா?

**பதில்:-** 'மொழி' 'அபியும் நானும்' என அடுத்த தலையினருக்கான படைப்புகளை வழங்கி சிறந்த படைப்பாளி என அங்கீகாரமும் பெற்றவர் ராதா மோகன். இவர் சிறிய இடைவெளிக்குப் பின் 'மலேசிய டு அம்னீசியா' என்ற படத்தை இயக்கி தன் இருப்பை அறிவித்தவர்.



மீண்டும் புது' அவதாரத்தை எடுத்தவர். 'பொம்மை'எனும் 'படைப்பின் மூலம் பொம்மையை காதலிக்கும் கதா நாயகனை முதன்மையான கதாபாத்திரத்தில் நடிக்க வைத்து 'பொம்மை' என பெயரிட்டிருக்கிறார். இப்படத்தின் முன்னோட்டம் அண்மையில் வெளியானது.அதில் சிறந்த நடிகர் என பெயர் பெற்ற எஸ்.ஜே.சூர்யா பொம்மையை காதலிக்கும் மனம் பிறழ்ந்த காதலனாக நடித்து ரசிகர்களை கவர்ந்திருக்கிறார்.

கிரைம் திர்ல்லர் ஜேனரில் தயாராகி இருக்கும் இத்திரைப்படம், ராதா மோகனின் புதிய பரிமாணத்தை காட்டும் என் அவரது ரசிகர்கள் ஆவலுடன் எதிர் பார்த்திருக்கிறார்கள். இந்த திரைப்படத்தில் பிரியா பவானி சங்கர் மற்றும் சாந்தினி தமிழரசன் என இரண்டு நடிகைகள் கதாநாயகியாக நடித்திருக்கிறார்கள்.

**எம்.மாகிரட் எலபடகம.**

**கேள்வி:** - நீலாம்பரி ரம்யா கிருஷ்ணன் இப்போது படங்களில் நடிப்பதில்லையா. அவரைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன் ?

**பதில்:-** 'நீலாம்பரி'யாகவும் 'சிவகாமி'யாகவும் ரசிகர்கள் மனதில் நீக்கமற நிறைந்திருப்பவர் நடிகை ரம்யா கிருஷ்ணன். இவர் முதன் முதலில் டிஜிற்றல் தளத்தில் நடித்து வெளியான வலைதள தொடர் 'குயின்' மறைந்த முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாற்றை தழுவி உருவாக்கப்பட்ட இந்த வலைதள தொடரை முன்னணி இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன், அவருடைய உதவியாளரான பிரசாந் முருகேசனா என்பருடன் இணைந்து இயக்கி இருந்தார். இந்த தொடருக்கு பெரும் வரவேற்பு கிடைத்தது. இந்திலையில் இந்த தொடரின் இரண்டாம் பாகம் தற்போது தயாரகி வருவதாகவும் இதில் ரம்யா கிருஷ்ணன் முன்னாள் முதல்வர் ஜெயலிதாவின் வேடத்தில் நடித்து வருவதாகவும் தகவல் வெளியாகி இருக்கிறது. இந்தத் தொடரில் ஜெயலலிதாவின்அரசியல் வாழ்வை விவரிக்கும் வகையில் திரைக்கதை அமைக்கப் பட்டிருக்கிறது.

**எம்.எம்.இர்பான். கல்முனை.**

**கேள்வி:-** நடிகை நயன் தாரா, இயக்குநர் விக்னேஷ் சிவனின் திருமணம் நடந்து விட்டதே...ம்..?

**பதில்:-** அது சரி..அவர் திருமணம் செய்து கொண்டதற்காக நீங்கள் ஏன் பெருமூச்சி விடுறீங்க..இதெல்லாம் அப்படித்தான் ...நினைப்பதெல்லாம் நடப்பதில்லை...!

**எம்.மலர்ராணி கொழும்பு13**

**கேள்வி:-** கடந்த வாரம் திருமணம் செய்து கொண்ட. நடிகை. நயன்தாரா நடித்த முதல் திரைப் படம் எது?



**பதில்:-** கேரளா மாநிலத்தைச் சேர்ந்த நயன் தாரா 2004ஆம் ஆண்டு இயக்குநர் ஹரி இயக்கத்தில் வெளியான 'ஐயா'. திரைப்படம் மூலம் தமிழ் திரையுலகில் கதாநாயகியாக அறிமுகமானார்.

**சினி பஜார் கேள்வி பதில்,**
**தினகரன் வார மஞ்சரி,**
**லேக் ஹவுஸ், கொழும்பு-10.**

# தலைவர் 169 இளம் ரஜினியாக சிவகார்த்திகேயன்



ரஜினிகாந்த் தமிழ் சினிமாவில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக சூப்பர்ஸ்டாராக திகழ்ந்து வருகின்றார. இவர் கொடுத்த தோல்வி படங்களை நாம் விரல் விட்டு எண்ணி விடலாம். அந்த அளவிற்கு வெற்றிக்கு மேல் வெற்றி படங்களை கொடுத்துள்ளார் ரஜினி. இருப்பினும் இவரது சமீபத்திய சில படங்கள் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு வெற்றி பெறவில்லை. இதனால் ரஜினி ரசிகர்கள் உட்பட சினிமா வட்டாரங்களை சார்ந்தவர்கள் வரை சற்று வருத்தத்தில் இருக்கின்றனர்.குறிப்பாக சிறுத்தை சிவா இயக்கத்தில் ரஜனி நடிப்பில் கடைசியாக வெளியான அண்ணாத்த திரைப்படம் கடுமையான விமர்சனங்களை சந்தித்தது. மேலும் இப்படத்தினால் ரஜினியும் சற்று விமர்சிக்கப் பட்டார்.ரஜினிக்கு வயதாகிவிட்டது, இனி அவர் படங்களில் நடிக்காமல் இருந்தாலே நல்லது என்றெல்லாம் சிலர் கடுமையாக விமர்சித்தனர்.

ஆனால் இதற்கெல்லாம் பதிலடி கொடுக்கும் வகையில் ரஜினி தன் அடுத்த பட அறிவிப்பை வெளியிட்டார். இளம் இயக்குனரான நெல்சனின் இயக்கத்தில் ரஜினி நடிப்பதாக சில மாதங்களுக்கு முன்பு அறிவிப்பு வெளியானது.

அனிருத் இசையமைக்க இப்படத்தை சன் பிக்சர்ஸ் தயாரிக்கின்றது. இந்நிலையில் இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் நடிகை ரம்யா கிருஷ்ணன் நடிப்பதாகவும், இப்படத்தின் திரைக்கதையை கே.எஸ்.ரவிக்குமார் எழுதுவதாகவும் தகவல்கள் வந்தன.

இதைத்தொடர்ந்து மிக விரைவில் இப்படத்தின் படப்பிடிப்பு துவங்கவுள்ளது. இந்நிலையில் இப்படத்தின் அறிவிப்பு வந்தவுடன் இப்படத்தில் ரஜினியுடன் சிவகார்த்திகேயன் நடிப்பதாக பரவலாக பேசப்பட்டது. அதற்கு காரணம் நெல்சன் சிவகார்த்திகேயனின் நெருங்கிய நண்பர் என்பதாலும், ரஜினியின் தீவிர ரசிகர் என்பதாலும் இப்படத்தில் சிவகார்த்திகேயன் கண்டிப்பாக நடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து தற்போது வந்த தகவல் என்னவென்றால் தலைவர் 169 படத்தில் சிவகார்த்திகேயன் இளம் ரஜினியாக நடிப்பதாக பேசப்பட்டு வருகின்றது. flashback காட்சிகளில் ரஜினியாக சிவகார்த்திகேயன் நடிப்பதாக தகவல்கள் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# இனி 'அந்த' காட்சிகளில் நடிக்க மாட்டேன் - நயன்



நயன்தாராவுக்கும் இயக்குநர் விக்னேஷ் சிவனுக்கும் மகாபலிபுரத்தில் இருக்கும் ரிசார்ட் ஒன்றில் ஜுன் 9ம் திகதி திருமணம் நடந்தது. சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தான் தாலியை எடுத்துக் கொடுத்திருக்கிறார்.

திருமணத்தில் திரையுலக பிரபலங்கள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். திருமணம் முடிந்த மறுநாளே நயன்தாராவும் விக்னேஷ் சிவனும் திருப்பதி ஏழுமலையான் கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தனர்.

இந்நிலையில் திருமணம் முடிந்த கையோடு நயன்தாரா புது கன்டிஷன் போடுவதாக கூறப்படுகிறது. அதாவது இனி படங்களில் ஹீரோக்களுடன் நெருக்கமான காட்சிகளில் நடிக்க மாட்டேன் என்று நயன்தாரா தெரிவித்துள்ளதாக செய்தி வெளியாகியிருக்கிறது.

நடிகைகள் திருமணானதும் முத்தக் காட்சிகள், படுக்கையறை காட்சிகளில் நடிக்க மாட்டேன் என்று சொல்வது புதிது அல்ல. இந்நிலையில் தான் நயன்தாராவும் அதையே கூறியிருக்கிறார். நயன்தாரா தற்போது கேரளாவில் இருக்கிறார். தன் குடும்பத்தாருடன் நேரம் செலவிட்ட பிறகு அட்லி இயக்கத்தில் ஷாருக்கான் நடித்து வரும் ஜவான் இந்தி படத்தின் ஷுட்டிங்கில் கலந்து கொள்கிறார். அந்தப் படம் மூலம் பொலிவுட்டில் அறிமுகமாகிறார் நயன்தாரா. இதற்கிடையே நயன்தாராவின் திருமண நிகழ்ச்சியில் ஷாருக்கான் கலந்து கொண்டார்.

# திருமணத்துக்கு பின் நடிப்புக்குள் கயல்



''திருமணத்துக்கு பின் கொஞ்சம் ஓய்வு எடுத்துக்கொண்டு இப்போது நடிக்க வந்து இருக்கிறேன். அதற்கு காரணம், 'டைட்டானிக்' என்ற தமிழ் படம்தான்.

தயாரிப்பாளர் சி.வி.குமார், டைரக்டர் ஜானகிராமன் இருவரும் என்னிடம் 'டைட்டானிக்' படத்தின் கதையை சொன்னதுமே பிடித்து விட்டது.

மிக அருமையான கதை. படத்தில் எனக்கு ஜோடி கலையரசன்.

எங்களுடன் காளி வெங்கட்மதுமிதா, ராகவ் விஜய்ஆஸ்னா சவேரி என மேலும் 2 ஜோடிகளும் இருக்கிறார்கள். சிறப்பு தோற்றத்தில் டைரக்டர் பாலாஜி மோகன், காயத்ரி ஆகிய இருவரும் நடித்து இருக்கிறார்கள்.

இந்த படத்துடன் மேலும் 4 புதிய படங்களிலும் நடிக்க சம்மதித்து இருக்கிறேன்.'' இவ்வாறு 'கயல்' ஆனந்தி கூறினார்.

# வேற லெவலில் சிவாங்கி



சமீபத்தில் சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளியான டான் திரைப்படத்தில் ஒரு முக்கியமான கதாபாத்திரத்தில் நடித்து வெள்ளித்திரையில் நுழைந்துள்ளார் சிவாங்கி.

விஜய் தொலைக்காட்சியில் மூன்று வருடமாக ஒளிபரப்பாகி வரும் குக் வித் கோமாளி நிகழ்ச்சிக்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைத்துள்ளது.

அதற்கு முக்கிய காரணமே இந்த நிகழ்ச்சியில் வரும் கோமாளிகள் தான். முதலில் இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பாகும் போது சமையல் நிகழ்ச்சியில் கோமாளிக்கு என்ன வேலை என நினைக்க வைத்தது. ஆனால், இந்த நிகழ்ச்சி பலரின் கவலையை மறந்து சிரிக்கும் நிகழ்ச்சியாக மாறியுள்ளது. இந்த நிகழ்ச்சியில் கோமாளிக்கு இணையாக நிகழ்ச்சியின் நடுவர்களாக இருக்கும் வெங்கடேஷ் பட் மற்றும் தாமு கொமெடி செய்கிறார்கள். அதோடு இந்த நிகழ்ச்சியை ரக்ஷன் தொகுத்து வழங்கி வருகிறார்.

# கயிறு பிளவுஸில் அழகு பதுமையின் கவர்ச்சி



தர்ஷா குப்தா, சேலையில் பால்வண்ண மேனி தெரிய பின்னழகை காட்டி கவர்ச்சியாக போஸ் கொடுத்துள்ளார்.

சின்னத்திரை நடிகைகள் முதல் வெள்ளித்திரை நடிகைகள் வரை பட வாய்ப்பு தேடி, கவர்ச்சி புகைப்படங்களை வெளியிடுவதை வாடிக்கையாக கொண்டுள்ளனர்.

கோவையைச் சேர்ந்தவர் தர்ஷா குப்தா. கல்லூரியில் படிக்கும் போதே Modelling மற்றும் சினிமாவில் நடிப்பதில் ஆர்வம் ஏற்பட்டது. எனவே, சினிமாவில் நடிக்க வாய்ப்பு தேடினார். ஆனால், சீரியலில் நடிக்கத்தான் அவருக்கு வாய்ப்பு கிடைத்தது.

Model அழகியான தர்ஷா குப்தா, ஜீ தமிழ் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான முள்ளும் மலரும் தொடரின் மூலம் அறிமுகமானார். இந்த தொடரில் குடும்பத்தை காப்பாற்ற போராடும், தைரியமான பெண் கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். இந்த சீரியலில் தழைய தழைய புடவை கட்டிக்கொண்டு இல்லத்தரசிகளின் மனதில் இடம்பிடித்தார்.

முள்ளும் மலரும் சீரியலில் கிடைத்த வரவேற்பை அடுத்து விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான செந்தூரப்பூவே சீரியலில் நடித்தார். பின்னர் குக் வித் கோமாளி சீசன் 2 நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மிகவும் பிரபலமான தர்ஷா குப்தா. இயக்குனர் மோகன் ஜி. இயக்கத்தில் உருவான ருத்ரதாண்டவம் திரைப்படத்தில் ரிச்சர்டுக்கு ஜோடியாக நடித்திருந்தார். இந்த படம் சுமாரான வெற்றி பெற்றது.

பொலிவுட் நடிகை சன்னி லியோன் நடிக்கும், ஓ எம் ஜி என்னும் படத்தில் நடித்து வருகிறார். என்னத்தான் பார்ப்பதற்கு அழகு பதுமையாக இருந்தாலும் இவருக்கு எதிர்பார்த்த அளவுக்கு படவாய்ப்புகள் வராததால், படவாய்ப்புக்காக தொடர்ந்து கவர்ச்சியில் தாராளம் காட்டி வருகிறார்.

நடிகை தர்ஷா குப்தா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில், கவர்ச்சி தாண்டவமாடும் வகையில் ஆதீத கவர்ச்சி புகைப்படத்தை வெளியிட்டுள்ளார். அந்த புகைப்படத்தில், நீல நிற மெல்லிய புடவையில், முன்னழகை அப்பட்டமாக தெரியவிட்டு கலக்கலாக போஸ் கொடுத்துள்ளார். அந்த புகைப்படத்திற்கு லைக்குகள் மலைபோல் குவிந்து, சோஷியல் மீடியாவில் புகைப்படம் டிராண்டாகி உள்ளது.

அந்த புகைப்படத்தைப் பார்த்த ரசிகர்கள் கயிறு மட்டும் தான் இருக்கு.. இதுதான் பிளவுஸா? என்றும், அம்மணி என்னத்தான் கவர்ச்சி காட்டினாலும் படவாய்ப்பு வந்தமாதிரி தெரியவில்லை, கவர்ச்சியை விட்டுவிட்டு நடிப்பில் திறமையை காட்டுங்க என்றும் தர்ஷா குப்தாவை நெட்டிசன்ஸ் கிண்டலடித்து வருகின்றனர்.

டெக்சாஸ்ல் உள்ள அமரில்லோ நகரத்தின் அதிகாரபூர்வ பேஸ்புக் பக்கத்தில் புகைப்படம் ஒன்று பகிரப்பட்டுள்ளது. அது வித்தியாசமான உருவத்துடன் இரண்டு கால்களில் நடக்கும் மர்மமான உயிரினம் குறித்த புகைப்படம் ஆகும். அமரில்லோ நகரத்தின் அதிகாரபூர்வ பேஸ்புக்கில் பதிவிடப்பட்டுள்ள இந்த புகைப்படத்துக்கு நெட்டிசன்கள் கலவையான பதிலை அளித்து வருகின்றனர்.

அமெரிக்காவின் டெக்சாஸில் உள்ள உயிரியல் பூங்காவிற்கு வெளியே பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கெமராவில் ஒரு மர்ம உயிரினம் சிக்கியுள்ளது. இதையடுத்து டெக்ஸாசின் அமரில்லோ நகரத்தின் அதிகாரபூர்வ பேஸ்புக் பக்கத்தில், கெமராவில் பதிவான இந்த உயிரினத்தின் புகைப்படம் பகிரப்பட்டது. மே 21 அதிகாலை 1:25 மணியளவில் அமரில்லோ மிருகக்காட்சி சாலையில் பொருத்தப்பட்டுள்ள கெமராவில் இந்த உயிரி



# வந்துட்டாங்கய்யா வந்துட்டாங்க....

# ஏலியன்கள் பூமிக்கு!



**அமெரிக்காவின் டெக்சாஸில் உள்ள உயிரியல் பூங்காவிற்கு வெளியே பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கெமராவில் ஒரு மர்ம உயிரினம் சிக்கியுள்ளது. இதையடுத்து டெக்ஸாசின் அமரில்லோ நகரத்தின் அதிகாரபூர்வ பேஸ்புக் பக்கத்தில், கெமராவில் பதிவான இந்த உயிரினத்தின் புகைப்படம் பகிரப்பட்டது**

னத்தின் படம் பதிவாகியுள்ளதாக அந்த பேஸ்புக் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"விசித்திரமான தொப்பி அணிந்த யாரும் இரவில் நடக்க விரும்புகிறாரோ? மே 21 அதிகாலை 1:25 மணியளவில் அமரில்லோ மிருகக்காட்சி சாலையில் பொருத்தப்பட்டுள்ள கெமராவில் இந்த படம் பதிவாகியுள்ளது. அடையாளம் தெரியாத இந்த அமரில்லோ பொருள் என்னவாக இருக்கும்? இதுகுறித்து உங்களுக்கு ஏதேனும் யோசனைகள் உள்ளதா?" என்ற தலைப்பில் அமரில்லோ நகரின் அதிகாரபூர்வ பேஸ்புக் பக்கத்தில் இந்த புகைப்படம் பதிவிடப்பட்டுள்ளது.

பதிவிடப்பட்டுள்ள புகைப்படத்தில் மிருகக்காட்சி சாலையின் வேலிக்கு வெளியே இருட்டில் சந்தேகத்திற்கு இடமான தோற்றத்தில் ஒரு உருவம் காணப்படுகிறது. சற்று உயரமாக வித்தியாசமான தோற்றத்துடன் இரண்டு கால்களில் நிற்கிறது, அதன் காதுகள் வழக்கத்திற்கு மாறாக கூரானதாக இருக்கிறது. இந்த உயிரனம் என்ன என்பது அடையாளம் காண முடியாத காரணத்தால், அடையாளம் காணப்படாத அமரில்லோ பொருள் (UAO *Unidentified Amarillo Object*) என குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நகர வாசிகள் இந்த உயிரினம் குறித்து ஏதேனும் அறிந்துள்ளார்களா அல்லது வேறு யாருக்கும் இந்த உயிரினம் குறித்து தெரியுமா என்பதை அறியும் நோக்கில் அமரில்லோ நகரின் அதிகாரபூர்வ பேஸ்புக் பக்கத்தில் இந்த புகைப்படம் பகிரப்பட்டுள்ளது

சிட்டி ஓஃப் அமரில்லோ உயிரியல் பூங்காவின் இயக்குனர் மைக்கேல் கஷூபா இதுகுறித்து கூறுகையில், மிருகக்காட்சி சாலைக்கு வெளியே இந்த உயிரினம் காணப்பட்டதாகவும், மிருகக்காட்சி வளாகத்திற்குள் நுழைய இந்த உயிரினம் முயற்சி செய்ததற்கான எந்த ஆதாரமும் பதிவாகவில்லை எனவும் குறிப்பிட்டார். மேலும் உயிரினம் பதிவாகியுள்ள இடத்தில் எந்த விதமான அழிவோ அல்லது குற்றச் செயலோ நடந்ததற்கான அறிகுறிகள் காணப்படவில்லை, அதேபோல் மிருகக்காட்சிசாலையில் உள்ள எந்த விலங்குகளும் பாதிக்கப்படவில்லை என அவர் கூறினார்.

பேஸ்புக்கில் பதிவான இந்தப் புகைப்படத்துக்கு நெட்டிசன்கள் கலவையான விமர்சனங்களை வழங்கி வருகின்றனர். இது இருட்டில் பதுங்கியிருக்கும் வேற்றுகிரகவாசி அல்ல என நம்புவதாக ஒரு பயனர் குறிப்பிட்டுள்ளார். மற்றொரு பயனர் "சிங்கத்தோல் அணிந்த நபர் போல் தெரிகிறது" என குறிப்பிட்டுள்ளார். இது நரி அல்லது மான் போன்ற ஏதோ விலங்காக இருக்கலாம் என சிலரும் விலங்குகளால் முழங்கால்களை இப்படி வளைக்க முடியாது என சிலரும் தங்கள் கருத்துகளை பதிவிட்டு வருகின்றனர்.

இதேபோல் கடந்த ஏப்ரல் மாதம், அமெரிக்காவின் அலாஸ்கா லேசி எனும் மலைப் பகுதியில் மேகம் கீழே விழுவது போல் வானத்தில் தோன்றிய வித்தியாசமான காட்சியை பொது மக்கள் சுத்தி சுத்தி புகைப்படம் எடுத்தனர். புகைப்படங்கள் பல்வேறு தலைப்புகளின் கீழ் சமூகவலைதளங்களில் வைரலானது. UFO அதாவது *Unidentified Flying Object* (அடையாளம் காணப்படாத பொருள்) எனப்படும் ஏலியன்களின் விண்வெளி கப்பல் பூமிக்கு வந்ததால் ஏற்பட்ட நிகழ்வு தான் இது என அப்பகுதி மக்கள் பலர் நம்பியதோடு அதே தலைப்பில் புகைப்படங்களை சமூகவலைதளங்களிலும் பதிவிட்டனர்.

இதையடுத்து சம்பவ இடத்துக்கு வந்த மீட்புக் குழு அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர். அதில், இந்த நிகழ்வு நடந்த சமயத்தில் குறிப்பிடத்தக்க அளவு கொண்ட வணிக ஜெட் அங்கு பறந்துக் கொண்டிருந்ததாக தெரிவித்தனர். ஜெட் பயணித்தால் அதன் பாதை பளீர் வெள்ளை நிறத்தில் காட்சியளிக்கும் என்பது அறிந்ததே, சூரிய வெளிச்சத்தின் காரணமாக கூடுதல் வெளிச்சத்தோடு அலாஸ்கா பகுதியில் இந்த காட்சி தோன்றி இருக்கிறது என குறிப்பிட்டனர்.

# செல்ஃபி உலா


எம்.ஆர்.ஹாதி ஆதிப், அம்பேபுஸ்ஸ, வரகாபொல


கலைஞர் கலைஸ்ரீ


கிஷாந்தி, சௌமியா, நிவே, பவித்ரா


கிந்துசன், குருமண்வெளி


பிரேம் கணேஷ், கொழும்பு


Rihan


நடிகை ஆஷா, கொழும்பு


ஆர்.டி ஹரன், கொழும்பு



சமன் குமார்


Sutharsini, Jeyaraj, Sasi, Arulraj, Sasi Kumar, Dilan (Went Mannar)



Actress Margret,


பாடகர் அமரதாஸ்

## வழிகாட்டுங்கள்




## நிறம் தீட்டுங்கள்



## மறைந்திருக்கும் உருக்களை கண்டுபிடியுங்கள்



## Write the numbers

| | | | |
|---|---|---|---|
| eight | | two | |
| five | | ten | |
| three | | seven | |

## 10 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்








# மனித நேயமிக்க சமூக சேவையாளன் "முறுசலீன் காக்கா"

"முறுசலீன் காக்கா" என்றால் அக்கரைபற்றில் தெரியாதோர் யாருமில்லை என்றுதான் சொல்லவேண்டும். அந்தளவு பிரபல்யமானவர்தான் அவர். சிறுவர் முதல் பெரியோர் வரை அவரை நன்கு அறிவர். இத்தனைக்கும் காரணம் அவரிடம் இயற்கையாகவே அமைந்த நல்ல குணாவியல்புகளே.

சிறியோர்களிடம் அன்பு காட்டும் அவர் பெரியோர்களிடம் மிகவும் மரியாதையாக நடந்துகொள்வார். அக்கரைப்பற்று மூன்றாம் குறிச்சியில் வசித்துவரும் முறுசலீன் காக்காவுக்கு வயது எண்பத்தி ஐந்தாகும் (85). தூய்மையான வெள்ளை சேட்டும், வெண்மையான சாரமும்தான் அவர் எப்போதும் அணிவார். நான்கு பிள்ளைகளின் தந்தையான இவருக்கு பதினைந்து பேரப்பிள்ளைகளுண்டு. முறுசலீன் காக்கா ஒரு சிறந்த சமூக சேவையாளர். எங்கு பொதுவேலைகள் நடைபெறுகின்றதோ அங்கெல்லாம் முறுசலீன் காக்காவின் குரல் ஒலிக்கும். குறிப்பாக மரண வீடுகள் சுகவீனமுற்றோர் வீடுகளுக்கு போய் அவர்களது சுகம் விசாரிப்பதும் அவரது நாளந்த கடமைகளில் ஒன்றாகக்கருதி செயல் பட்டுவரும் இவர் ஜனாஸா நல்லடக்க வேலைகளை விரைவாகக் கவனிப்பதிலும், சுகயீன முற்றவர்களின் வீடுகளுக்கும் சென்று ஆலோசனைகள் வழங்குவதிலும் எப்போதுமே முன்னின்று பணியாற்றுவார்.

முறுசலீன் காக்கா மையத்து வீடுகளிலும் ஜனாஸா நல்லடக்கம் செய்யும் இடங்களிலும் மிகவும் கண்டிப்பாக இருப்பார். எல்லோரையும் பேசவிட மாட்டார். வீணான தேவையில்லாத பேச்சுகளுக்கு அங்கு இடம் இருக்காது. மையத்தை குளிப்பாட்டுதல், கபனிடுதல், மச்சுப் பலகையில் முறையாக மையத்தை வைத்தல் என அனைத்தையும் அவர் கண்காணிப்பார். இதனால் ஜனாசா நல்லடக்க கடமைகளுக்கு வரும் கத்தீப், மௌலவிமார்களுக்கு தமது கடமைகளை மேற்கொள்ள மிகவும் வசதியாக இருக்கும். ஒரு மையத்தை எவ்வளவு விரைவாக அடக்கமுடியுமோ அவ்வளவு விரைவாக அடக்கம்செய்ய எல்லா ஒழுங்குகளையும் மேற்கொள்வார். ஒரு ஜனாஸா வீட்டிலிருந்து அடக்க ஸ்தலத்திற்குச்சென்று ஜனாசாவை அடக்கும் வரை அவர் இயந்திரம் போன்று செயற்படுவார்.

யாருமே அருகில் நெருங்க முடியாதளவு அவர் வேகம் இருக்கும். இதே வேளை மையத்தின் நெருங்கிய உடன் பிறப்புகளை உற்சாகப்படுத்துவதிலும் அவர்களுக்கு தைரியம் கொடுப்பதிலும் அவர் வகிக்கும் பங்கு மகத்தானது. இப்பேர்ப்பட்ட முறுசலீன் காக்காவை அக்கரைபற்று சமூகம் ஒரு முறை அவரது சேவைகளைப்பாராட்டி பொன்னாடை போர்த்தி,

**ஏதாவது ஒரு மையவீட்டில் அவர் இல்லை என்று சொன்னால் அவர் ஊரில் இல்லை என்று அர்த்தம் இல்லேயேல் அவர் சுகமில்லாது வீட்டில் இருக்கின்றார் என்பது பொருள்.**



பொற்கிளி வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

ஏதாவது ஒரு மையவீட்டில் அவர் இல்லைஎன்று சொன்னால் அவர் ஊரில் இல்லை என்று அர்த்தம் இல்லேயேல் அவர் சுகமில்லாது வீட்டில் இருக்கின்றார் என்பது பொருள்.

அவர் இல்லாத ஜனாசா வீடு அமர்க்களம் தான். வேலைகள் நேரத்துக்கு முடியாது, வீண் பேச்சுக்கள், அமர்க்களம் அல்லோல கல்லோலம் அங்கு தலைவிரித்தாடும்.

தனது இளம் பராயத்தில் சிறு சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுவந்த முறுசலீன் காக்கா தனது பிள்ளைகள் வளர்ந்ததும் இத்தொழிலுக்கு முற்றுப்புள்ளி வைத்தார். இதனையடுத்து இறைபணியில் இணைந்து கொண்டார்

முறுசலீன் காக்கா புனித ஹஜ்கடமையை மூன்று தடவைகளும், நான்கு முறை 'உம்ரா' கடமைகளையும் நிறைவேற்றியுள்ளார்.

சந்தர்ப்பம் வாய்ப்புகள் கிடைக்கும் பட்சத்தில் இன்சா அல்லாஹ் இன்னும் சில உம்ராக்களையும் ஹஜ்ஜையும் நிறைவேற்ற ஆயத்தமாகவுள்ளதாகவும் அவர் தனது ஆசையை வெளிப்படுத்தினார்.

வேளைக்கு தொழுவது அதுவும் பள்ளியில் தொழுவது அவரது நல்ல பண்பாக இருந்தது. பட்டினப்பள்ளி வீதி முதலியார் வீதி சந்தியில் அமைந்துள்ள இவரது வீட்டிலிருந்து இவர் பள்ளிக்குச்செல்ல வெளியில் வந்தால் இவரை காணும் யாரும் இவரை பள்ளிக்கு தமது வாகனங்களில் ஏற்றிச்செல்ல தவறுவதில்லை. பேரப்பிளைகளோடு விளையாடுவது இவரது பொழுது போக்காக இருந்தபோதிலும் சுகவீனமுற்றோரை விசாரிப்பதையும், ஜனாசா வீடுகளுக்கு செல்வதையும் தனது கடமையாகக்கருதினார்.


இதனால் தான் மிகுந்த திருப்தியடைவதாக அவர் தெரிவிக்கின்றார்.

தேவையற்ற வீணான கேளிக்கைகளில் கலந்து கொள்வது அவருக்குப்பிடிக்காதாத ஒரு விடயம். இவ்வாறான கேளிக்கைகளில் கலந்துகொள்வோரையும் அவருக்குப்பிடிக்காது. இறைபணியில் ஈடுபடுவோரோடு மிகவும் விரும்பி பழகுவார். குடும்ப உறவுகளைப்பேணுவது அவர்களது பணிவிடைகளை கிராமமாக நிறைவேற்றுவது, தன்னிடம் உதவிகோருவோரை திருப்திப்படுத்துவது போன்ற நல்ல பண்புகள் அவரிடம் நிறைய காணப்பட்டன.

கொரோனா அதிகரித்துவந்த காலகட்டத்தில் சம்பவிக்கும் ஜனாசா இறுதிச்சடங்குகளிலும் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகப் பங்கு கொண்டு வரும் அவர் பொதுமக்கள் இவ்வாறான இக்கட்டான கால கட்டங்களில் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டுமெனவும் அந்த ஒழுங்குமுறைகளை கடைப்பிடிக்கவேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துவார்.

முறுசலீன் காக்கா 'செந்தூரத்துக்கு' அளித்த விசேட செவ்வியில்தனது இந்த தூய்மையான தனது பணி இறுதிமூச்சுவரை தொடரும் எனவும் இதனை யாரும் தடுக்கமுடியாது என்றும் இந்தபணியைத்தொடர ஆண்டவன் எனக்கு நல்ல சக்தியையும் மனநிலையையும் தரவேண்டுமெனவும் ஆண்டவனை வேண்டிக்கொண்டார். தனது மற்றுறொரு ஆசையாக இருக்கும் மற்று மொரு "ஹஜ்" கடமையை நிறை வேற்ற வேண்டுமென்ற ஆசையையும் ஆண்டவன் நிறைவவே வேற்றவேண்டுமென்றும் இறைவனை வேண்டிக்கொண்டார்.

கலாபூஷணம்
எம்.எ.பகுர்டீன்...
(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)



# மறுகால்

முல்லை முஸ்ரிபா





## அரங்காற்றுகை கலை: காலத்தின் படிமம்

ஆற்றுகை வடிவம் எடுத்து வந்திருக்கின்ற பரிமாணம் உலக நெடுகிலும் மிகுந்த அவதானிப்புக்குரியது. நீண்ட வரலாறு கொண்ட ஆற்றுகைக் கலை காலத்தின் பிரதி விம்பமாக நின்றிலங்குவது. ஷேக்ஸ்பியர் காலத்திலிருந்தே இது சாத்தியமாயிற்று.

தமிழில் ஆற்றுகைக்கலை கூத்து வடிவத்திலிருந்து பின் பல பரிமாணங்களை அடைந்து நவீன பாணிக்கு வந்தமைந்த வரலாறு முக்கியமானது.


நவீன வடிவத்திற்கு வந்து சேர்ந்த ஆற்றுகை கொண்டிருக்கிற ஆற்றலென்பது, இன்று எதிர்த்தலின் அடையாளமாகவும் நிற்கிறது. தமிழில் இன்றைய வாழ்வியல் புலத்தை நவீன தன்மையோடு ஆற்றுகைகள் வெளிப்படுத்துகின்றன. இங்கும் இன்றைய எரிபிரச்சினைகளையும், வாழ்வியலின் கொதிநிலையையும் உட்பொதிந்த ஆற்றுகை வழி பெருந்திரளினை விழிப்புறச்செய்தல் அல்லது பங்குதாரராக்குதல் என்பது மிகவும் அவசியமாகவுள்ளது. உண்மையில் நவீன ஆற்றுகைக்கலை வாழ்வியக்கத்தின் படிமம்தான்.

## ஔவன் கவிதை

### ஞிஞ்ஞி

புகைக்கும் பெருங்காடு
திசையுத் தெரியாத் தனிச்சுவடொன்றின் அலைவு
முன்னமிருந்த மென் தழை கருகிற்றுச்
சாம்பலுதிர்வன குறித்த
விலங்காடல் காதைகளில் நீட்சியுறு காலம்...
வருங்காலத்தின் எரிவு
எடுக்க ஏதுமில்லா இருட்சி
புகைக்கும் அடர் வனத்துள்
நுழைதல் அலைதல் எரிதல் ஏமாறல்
வேருமற்றதான இழிவு
எல்லா விலங்கினங்களையும்
கூட்டியள்ளிப் புதைத்திடல் சாத்தியம் குறித்த
விலங்கரசர் இருநூற்றுச்சொச்சக் குரலதிகாரம்
ஞிஞ்ஞியென்றெழுதினேன்
பொருள் தேடத்தொடங்கிற்றுக் கால்கள்
இருகோடி இருபது லட்சம்
அர்த்தம் ஒன்றுமில்லையென்பதறியாக் கால்கள்
வரிசைகளில் இடறின
இப்போது

## அசன்பேயுடைய கதையைக் கதையாடல்



தமிழில் நாவல் முன்னோடியொருவரை நினைந்தலும் அசன்பேயுடைய கதையை மீள் கதையாடலும் இலக்கிய ஆய்வுக்கானது மட்டுமல்ல, ஒரு சமூகத்தின் இருப்பு நிலைக்கு மாற்று வரலாற்று மேலெழுச்சிக்குமானது. அறிஞர் பெருமகன் முஹம்மது காஸிம் சித்திலெப்பை என்கிற ஆளுமை இலங்கையின் சமூக, அரசியல், கல்வி, பொருளாதார, நல்லிணக்கம் சார் துறைகளில் செலுத்திய ஒளிர்மை குறித்து இன்றைய இருட்காலத்தில் மீள் கதையாடல் பிரதானமானது. அசன்பேயை வீரதீரசாகச கதை மரபிலிருந்து வெளியெடுத்து அதன் சமூகப் பெறுமானத்தை வெளிப்படுத்துவதுமான கதையாடலின் தொடர்ச்சியாகப் பேராசிரியர் எம்.எஸ்.எம்.அனஸ், அ.வா.முஹ்சீன் போன்றோர் கதையாடியுள்ளனர்.

இத்தகைய மீள் கதையாடல்கள் மேலும் மேற்கிளர்தல் என்பது சித்திலெப்பையைத் தேடலுக்குட்படுத்துகின்ற முயல்வுமாகும். யூன் 11 அவரது பிறந்த நாளிலாவது அசன்பே பேசப்படுகிறான் என்பது அந்நாவலின் பெறுமானத்தை வெளிச்சமிடுகிறது.

இதுபோலான இலங்கையின் முதுசங்களை மீள் வாசிப்பும் செய்தலென்பதும் காலத்தின் வரலாற்றுத் தேவையாகுமென்பதைப் புரிதலும் அவசியமாகும்.

அறிஞர் பெருமகன் எம்.சி.சித்திலெப்பை பன்முக ஆளுமை ஆவார். பலதுறைகளிலும் ஆளுமை ஒளி பாய்ச்சினார். சமயம், கல்வி, சட்டம், பொருளாதாரம், அரசியல், அறிவியல், பண்பாடு, இலக்கியம் என ஊடுபரவி நின்றார். இவற்றின் ஒட்டுமொத்தமான சமூக விடுதலைச் சிந்தனையின் தொகுப்புத்தான் அசன்பேயுடைய கதை. எனவே இது ஒருபோதும் வீரதீர சாகஸக் கதை என்கிற மட்டுப்பாட்டுக்குள் அடங்கிவிட முடியாது. இலங்கை முஸ்லிம்களின் சமூக வாழ்வியலின் ஒட்டுமொத்த பாத்திரமாக அசன் வினையாற்றுமாற்றை சித்திலெப்பை சித்திரிப்பதனூடாக மிகக்காத்திரமான சமூகக் கடமையை நிறைவேற்றுகிறார்.

அசன்பேயுடைய கதையை மீள் வாசிப்பதனூடாகப் பல புதிய வழிகளைக் கண்டடைய முடியும்.

## ஊமக்காச்சி 01

'ஒன்றுக்கும் உதவாததென்று ஒன்றுமில்லை'' என்று வாப்பா அடிக்கடி சொல்லுவார். சொல்லுவார் என்பதை விட அடிக்கடி செயலில் காட்டுவார். அவரைப் பொறுத்தவரை சக மனிதரிடம் காணப்படும் நல்லியல்புகள் அவருக்கு முக்கியம். தன்னைச் சுற்றிக் காணப்படும் சகல பொருட்களும் வாழ்தலின் ஆதாரம்தான். அவருக்குக் கழிவு என்பது கிடையாது. கழிவிலிருந்து உருவாக்கம் காணவல்ல ஆற்றல் அவரிடம் இயல்பாகக் காணக் கண்டிருக்கிறேன். என்னிடம் கூட சின்ன வயசிலேயே தேடலூக்கமும் திரட்டூக்கமும் வளர்ந்தமைக்கு வாப்பாவின் வாசகமும் காரணம்தான். இந்த வாசகத்தை முன்வைத்து சக மனிதர்களையும் வாசித்திருக்கிறேன். சராசரங்களையும் வாசித்திருக்கிறேன். ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொன்றுக்குள்ளும் ஏதோவொரு செயலாற்றல் இருக்கிறதென்பது என் அனுபவ வாசிப்பு.

எங்களூரில் உதவாக்கரைகளை ஊமக்காச்சியென்று சொல்லும் பழக்கமுண்டு. ஒன்றுக்கும் உதவாதவர்கள் தான் உதவாக்கரைகள், பிரயோசனமற்றவர்கள் அவர்கள். ஆனால் சின்ன வயசில் ஊமக்காச்சிகளைக்கூட பயனுள்ள பொருளாக நான் மாற்றியிருக்கிறேன். வாப்பாவும் இப்படித்தான். எந்தப் பொருளையும் ஒதுக்கியெறிந்திட மாட்டார். அது எப்போதாவது உதவுமென்று சேர்த்து வைப்பார். இந்தச் சேகரிப்பால் வீடு குப்பையாகிவிடுகிறது என்ற புலம்பல் அம்மாவிடமும் ராத்தாமாரிடமும் இருந்து வரும். என்றாலும் அதற்கு அப்புறம் பலரும் வாப்பா சேகரித்ததை புது உருவத்தில் தரும்போது மகிழ்ந்து போவார்கள்.

இதனால்தானோ என்னவோ வாப்பா பல்துறையாக்கியாக இருந்திருக்கிறார். தச்சனாக, மேசனாக, ரெயிலராக, ட்ரைவராக, கைத்தொழிலாளியாக எனப் பல்துறை சாமர்த்தியம் அவருக்கு வாய்த்திருந்தது.

ஊரில் நாங்கள் குடியிருந்த கல்வீடு அவரால் கட்டப்பட்டது.

மேற்படி ஒவ்வொரு பாத்திரத்திலும் அவர் இயங்கினார். வீட்டிலிருந்த மரத்திலான பொருள்கள் அவரது கை வண்ணம். காக்காவிலிருந்து நான் வரை உறங்க மரத்தொட்டில் ஒன்றே போதும் அவரது படைப்பாற்றலுக்கு. மாங்கொம்பு உடுப்பு ஹெங்கரானதும் பலகைத்துண்டுகள் ஆடுகுதிரையானதும் மரக்குற்றிகள் அழகிய சிம்மாசனமானதும் கழிவு இரும்புக்கம்பிகள் கேற்றாக மாறியதும் என ஒரு காலத்தில் எங்கள் வீட்டின் அலங்காரங்கள் வாப்பாவின் வியர்வையிலிருந்தது. இப்படித்தான் வாப்பா ஒரு வீட்டைக் கட்டி முடித்ததும் நாங்கள் ஆச்சரியப்பட்டோம்.

மனிதர்கள் குறித்தும் அவரது பார்வை அப்படித்தான். அவர் யாரையும் ஒதுக்கியதில்லை என்பதற்கு நிறையச் சான்றுகளை நான் கண்டிருக்கிறேன். எங்கள் வீட்டு வாசலால் புழங்கும் உடுப்பு வெளுக்கும் பூவண்ணர். எங்கள் வீட்டு மாலில் குடியிருந்த சலூன் கடை நவமண்ணர். எனச் சின்னக்காலத்தில் நான் கண்ட நல்ல மனிதர்களுடனான உறவும் சாட்சி.

வீட்டுப் பின்வளவில் பனையேறி நொங்கு பறிக்க வரும் நல்லன், பறித்த நொங்கைக் குடித்த பிறகெனக்கு நொங்கைவிட இனிமையாய் இருப்பது

கோம்பையில் செய்துருட்டும் வண்டி. இப்படித்தான் பனையில் எதுவும் கழிவு கிடையாது. அதன் ஒவ்வொன்றும் பயன் தரு வடிவம் தான். ஊமக்கச்சியும் அப்படித்தான்.

பனங்கொட்டைகளைப் பாத்தி போட்டால் அவற்றுள் கிழங்காக விளையாத கொட்டைகள் அவிந்தவை. அவற்றுள் பூரானும் இருக்காது. ஒதுக்கிப் போட பயனற்றுக் கிடக்கும். அதனையெடுத்து உள்ளேயுள்ள கழிவுகளை யகற்றி நிற மணிகளை உள்ளே இட்டு கிழுக்கான் பெட்டி செய்து விளையாடிய சின்னக்கால நினைவுகள் அழகானவை ஊமக்காச்சி போல.....





# இலக்கியச் செம்மல்
# அறிஞர் மு. கா. சித்திலெப்பை

இலக்கியச் செம்மல் அறிஞர் மு. கா. சித்திலெப்பையின் 184வது ஜனன தினம் ஜூன் 11ஆகும்.

முகம்மது காசிம் சித்திலெப்பை மரைக்காயர் 1838 ஜூன் 11 இல் பிறந்தார். 1898 பெப்ரவரி 5இல், தனது 59 வது அகவையில் அமரரானார். இவர் நவீன உரைநடை இலக்கியத்தில் முன்னோடிப் படைப்பாளிகளில் முக்கியமானவராவார். இவரது இயற்பெயர் முகம்மது காசிம். இலங்கை முஸ்லிம்களைக் குறிப்பாகக் கல்வித்துறையில் விழிப்புணர்ச்சியடையச் செய்ய அரும்பாடுபட்ட ஈழத்து எழுத்தாளர். மறுமலர்ச்சித் தந்தை என அழைக்கப்படுபவர்.

பாடசாலைகளை நிறுவியும், பாடநூல்களை எழுதியும் செயலாற்றினார். இவர் 1885 இல் எழுதிய அசன்பே சரித்திரம் தமிழில் வெளிவந்த இரண்டாவது புதினமும், ஈழத்தில் வெளிவந்த முதலாவது தமிழ்ப் புதின நூலும் ஆகும். இவர் ஈழ இஸ்லாமியர்களின் உரிமைக்காக வாதாடும் முஸ்லிம் நேசன் என்ற இதழை நடத்தியவர். இவர் சட்ட வல்லுனரும், பத்திரிகையாளரும், கல்வியாளரும், சமூக சேவையாளரும் ஆவார்.

முகம்மது காசிம் கண்டியில் பிறந்தார். இவரின் தந்தையார் முகம்மது லெப்பை .அறிஞர் சித்திலெப்பை பிரபலமிக்க அரேபிய வணிக சமூகமொன்றின் வழிவந்தவர். அரேபிய மண்ணிலிருந்து வணிக நோக்கில் இலங்கைக்குப் பொருள் தேடிவந்த முல்க் ரஹ்மதுல்லா பார்பரீன் என்பவர் முஸ்லிம்களின் இறங்கு துறையின் முக்கிய தளங்களிலொன்றான அளுத்காமம் எனும் பகுதியில் குடியேறி அங்கேயே திருமணம் புரிந்து வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தார். அவரது பரம்பரையைச் சேர்ந்தவரே சித்திலெப்பை. முல்க் ரஹ்மதுல்லாவின் புதல்வரான முகம்மது லெப்பையும் தந்தை வழியில் வர்த்தகம் புரிந்து வாழ்க்கை நடத்தியவராவார்.

ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் கண்டி இராச்சியத்தை ஆண்டு வந்த காலகட்டத்தில் வியாபார நடவடிக்கைகளுக்காக கண்டிக்கு வந்த இவர், இங்கேயே திருமணம் செய்து வாழ்ந்து வந்தார். அவருக்குப் பிறந்த ஆண் மகவு தான் முகம்மது லெப்பை சித்தி லெப்பை ஆவார். 1833ம் ஆண்டில் இந்நாட்டின் முதல் முஸ்லிம் வழக்கறிஞராக நியமனம் பெற்ற அவருக்கு மூன்றாவது குழந்தையாக 1838 ஜூன் 11ல் கண்டியில் பிறந்தவர் முகம்மது காசிம் சித்திலெப்பை. திண்ணைப் பள்ளிக் கூடத்தில் கல்வி பயின்ற காலகட்டத்தில் குர்ஆன் ஓதல், மார்க்க சட்ட திட்டங்கள் பற்றிய அறிவு பெற்றதோடு தமிழ் மொழியிலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றார். ஆங்கில மொழியையும் கற்றுத் தேறினார். அரபு, தமிழ், ஆங்கிலம் எனும் மும்மொழிகளிலும் அதிதிறமையாக விளங்கிய இவர் தந்தையைப் போன்றே சட்டக் கல்வியிலும் சிறந்து விளங்கினார்.

கண்டி மாவட்ட நீதி மன்றத்திலே 1862ல் வழக்கறிஞராக நியமனம் பெற்ற சித்திலெப்பை 1864ம் ஆண்டில் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக உயர் நியமனம் பெற்றார்.

சமகாலத்தில் பிரசித்த நொத்தாரிசாகவும் பணிபுரிந்த இவரால் எழுதப்பட்ட காணி உறுதிகள் பல இன்றும் பலரிடம் உள்ளதாக அறிய முடிகிறது. கண்டி மாநகர சபை நீதிமன்றத்தில் நீதிபதியாகவும் கடமையாற்றிய இவர், சிறிது காலம் மாநகர சபை உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். கல்வியை முன்னிருத்தி சமுதாயத்தை மேம்படச்செய்யும் முயற்சிகளில் தீவிரமாக அவர் ஈடுபட்டார்.

முஸ்லிம்கள் கல்வியில் முன்னேற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த 1882 ஆம் ஆண்டு டிசம்பர் 21 ஆம் திகதி "முஸ்லிம் நேசன்" என்ற பெயரில் அரபு தமிழ் வார இதழ் ஒன்றினை ஆரம்பித்தார். சித்திலெப்பை, தமது வாரப்பத்திரிகை மூலமாகத் தமது சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கு தாம் ஆற்ற விருந்த தொண்டு பற்றி விளக்கினார். தத்துவம், அறிவியல் சம்பந்தமான கட்டுரைகள், தேசிய, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த செய்திகள், வியாபாரம், விவசாயம், வாணிபம், குடியுரிமை முதலியன பற்றிய அறிக்கைகள் போன்றவற்றைத் தமது பத்திரிகையில் வெளியிடத் தீர்மானித்து இருந்தார். சமகால அரசியல் விவகாரங்களை அறிந்திருந்தமையால் தமது சமுதாயத்தை பீடித்த பீடைகள் யாவை என்பதை வெகு நுட்பமாக நாடி பிடித்து சொல்லும் திறமை பெற்று இருந்தார். சர் சயேத் அகமது கானின் தலைமையிலே இந்தியாவில் வெற்றி பெற்று வந்த அலிகார் இயக்கத்தை அவர் மிகுந்த அக்கறையுடன் கவனித்து வந்தார்.

இஸ்லாத்தின் மீது அவர் கொண்டிருந்த பக்தியானது தமது சமுதாயத்தின் மறுமலர்ச்சிக்கான பரிகாரங்களைத் தேட அவரைத் தூண்டியது. ஆகவே அவர் தமது சட்டத் தொழிலையும் கண்டி மாநகர சபையில் உறுப்பினர் என்ற வகையில் தமக்கிருந்த தகுதியையும் தூக்கி எறிந்தார்.

தமது பிற்கால வாழ்க்கை முழுவதையும் தமது சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், முன்னேற்றத்திற்கும் செலவிட்டார். இம்முயற்சியில் ஆறு ஆண்டுகளுக்கு மேலாகத் தாம் ஆசிரியராக இருந்து வெளியிட்ட வாரப் பத்திரிகை மூலமாகவும் இஸ்லாம் பற்றியும் கல்வி பற்றியும் எழுதியகட்டுரைகள், முஸ்லிம் பாடசாலைகளின் உபயோகதிற்கென்று பிரசுரம் செய்த பாடநூல்கள், பல்வேறு பகுதிகளில் நிகழ்த்திய சொற்பொழிவுகள், கொழும்பிலும் பிற இடங்களிலும் நிறுவிய பாடசாலைகள் ஆகியவற்றினாலும் பெரும் வெற்றி ஈட்டினார்.

சித்திலெப்பையின் சமகால சகாவான எகிப்து நாட்டிலிருந்து நாடு கடத்தப்பட்டு கண்டியில் வாழ்ந்த ஒறாபி பாஷாவின் சமூகப் பணிகளுக்கு உறுதுணை புரிந்தார். 1884 ஆம் ஆண்டில் கொழும்பு, புதிய சோனகத் தெருவிலே முதலாவது ஆங்கில முகமதிய பாடசாலையை அவர் தோற்றுவித்தார். இதற்கு முதன் முதலாக ஒறாபி பாஷா நூறு ரூபாவை நன்கொடையாக வழங்கி இதன் வளர்ச்சிக்கு வித்திட்டார்.

இப்பாடசாலை நெடுங்காலம் நிலைக்காவிட்டாலும் ஏழு வருடங்களுக்கு பின்னர், அவருடைய அயரா உழைப்பின் பயனாக "அல்மதரசதுல் கைரியா" என்னும் பெயரில் புத்துயிர் பெற்றது. இதுவே பிற்பாடும் கொழும்பு சாஹிரா கல்லூரியாக மலர்ந்தது. முஸ்லிம் நேசனை ' வெளியிட்டதன் மூலம் முதல் முஸ்லிம் பத்திரிகையாளர் என்ற பெருமைக்குப் பாத்திரமான இவர், 'அசன்பே சரித்திரம்' எனும் நூலை வெளிக்கொணர்ந்ததன் மூலம் ஈழத்தின் முதல் தமிழ் நாவலாசிரியர் என்ற பெருமையையும் அடைந்தார்.முஸ்லிம் பத்திரிகைத் துறை முன்னோடியான எம். சி. சித்திலெப்பை பதினைந்துக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார்.



ஆக்கம்: எஸ். கணேசன்
ஆச்சாரி சதீஷ் கம்பளை

# நாட்டியப் பேரொளி
# நடிகை பத்மினி

இந்திய சினிமா வரலாற்றில் தடம் பதித்த ஓர் கலைஞர் பத்மினி. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி ஆகிய மொழிப்படங்களில் நடித்தும் நாட்டியமாடியும் புகழ் பெற்றவர்.

நாட்டியப் பேரொளி எனப் பட்டம் கொண்டவர் பத்மினி. திருவனந்தபுரத்தில் பூஜாப்புர பகுதியில் பிறந்த பத்மினியின் பெற்றோர் தங்கப்பன், சரஸ்வதி ஆவர். இவரது மூத்த சகோதரி லலிதா, இளையவர் ராகினி இருவரும் புகழ் பெற்ற நாட்டிய நடிகைகள். இவர்கள் திருவாங்கூர் சகோதரிகள் என அழைக்கப்பட்டனர். இவர்களது பெரிய தாயாரின் கலை ஆர்வமே இவர்களை நடனத்தில் ஈடுபடச் செய்தது. பெரிய தாயாருக்கு மலாயாவில் இரப்பர் தோட்டங்கள் உள்ளன.


திருவாங்கூரில் பல தொழில் நிறுவனங்களில் இயக்குனராக இருந்தவர். மற்றொரு பெரிய தாயார் திருவாங்கூர் மகாராணியின் சகோதரரின் மனைவி. திருவாங்கூர் சகோதரிகளின் சகோதரர் பெயர் சந்திரசேகர் ஆகும். பத்மினி 1961 ஆம் ஆண்டு, டாக்டர் இராமச்சந்திரன் என்பவரை மணந்தார். பிறகு 1977இல் அமெரிக்காவில் நியூ ஜெர்சியில் குடியேறினார்.

அங்கு பத்மினி ஸ்கூல் ஒஃப் ஃபைன் ஆர்ட்ஸ் என்ற அமைப்பை நிறுவி நாட்டியம் பயிற்றுவித்தார். பத்மினி நான்கு வயதில் நாட்டியம் ஆடப்பயின்றார். முதலில் சகோதரிகள் திருவாங்கூர் நடன ஆசிரியர் கோபிநாத்திடம் பயிற்சி பெற்றனர். கதகளி, பரதம், மணிப்புரி ஆகிய மூன்று ஆடல் கலைகளிலும் பயிற்சி பெற்றனர். பத்து வயதில் அரங்கேறி, ஏறக்குறைய 64 ஆண்டுகள் நாட்டிய உலகில் புகழோச்சி நாட்டியப் பேரொளி என நடிகை பத்மினி அழைக்கப்பட்டார்.

குச்சிப்புடி, மோகினியாட்டத்திலும் வல்லவர். 17 வயதில் திரையுலகில் புகுந்தார். இயக்குனர் உதயசங்கர் தனது கல்பனா என்ற இந்தி மொழிப் படத்தில் முதலில் இவரை நடிக்க வைத்தார். ஆனாலும், இவர் நடனமாடி வெளிவந்த முதல் திரைப்படம் கன்னிகா (1947) என்பதாகும். இப்படத்தில் சிவ மோகினி வேடத்தில் நடனமாடினார். பின்னர் வேதாள உலகம் படத்தில் நடனமாடினார். என். எஸ். கிருஷ்ணன் தயாரித்த மணமகள் என்ற படத்தில் நடித்தார்.இவை தவிர சிலோன் தியேட்டர்சின் கபாடி அரட்சகாயா என்ற சிங்களப் படத்திலும் நடனமாடினார்கள். தமிழில் சிவாஜி கணேசன், எம். ஜி. இராமச்சந்திரன், ஜெமினி கணேசன் என அனைத்து முன்னணி நடிகர்களுடனும் இவர் நடித்திருக்கிறார்.

பத்மினி 250 படங்களுக்கு மேல் நடித்தார். சிவாஜியுடன் மட்டும் 59 படங்களில் நடித்துள்ளார். தில்லானா மோகனாம்பாள், இவரின் நடிப்புக்கு சிறந்த எடுத்துக்காட்டாக சொல்லத்தக்க திரைப்படம் ஆகும். இத்திரைப்படத்தில் சிக்கல் சண்முகசுந்தரமாக சிவாஜி கணேசனும், மோகனாங்கியாக பத்மினியும் நடித்தனர். வஞ்சிக்கோட்டை வாலிபனில் பத்மினிக்கும், வைஜயந்திமாலாவிற்கும் நடக்கும் நாட்டியப்போட்டிக் காட்சி புகழ் பெற்றது.






இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜூன் மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.